# Online Programmes

## இலக்கணம் நன்னூல் - எழுத்து
## 200134



## பிரிவு 1 : பாயிரம் - வரலாறு

### கூறு 1

### நன்னூல் - ஆசிரியர் வரலாறு – சிறப்புப் பாயிரம்

குறிப்பு

**சிறப்புப்பாயிரம்:**

மலர்தலை உலகின் மல்கு இருள் அகல
இலகு ஒளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியின் ஒருதான் ஆகி முதல் ஈறு
ஒப்பு அளவு ஆசை முனிவுஇகந்து உயர்ந்த
அற்புத மூர்த்திதன் அலர்தரு தன்மையின்
மன இருள் இரிய மாண்பொருள் முழுவதும்
முனிவுஅற அருளிய மூஅறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும் நான்கு எல்லையின் இருந் தமிழ்க் கடலுள்
அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்
தொகைவகை விரியின் தருகெனத் துன்னார்
இகல் அற நூறி இருநிலம் முழுவதும்
தனது எனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறும் நிறுவிய திறல் உறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோல் சீய கங்கன்
அருங்கலை வினோதன் அமரா பரணன்
மொழிந்தனன் ஆக முன்னோர் நூலின்
வழியே நன்னூல் பெயரின் வகுத்தனன்
பொன்மதில் சனகைச் சன்மதி முனி அருள்

**குறிப்பு**

பன்னருஞ் சிறப்பின் பவணந்தி

என்னும் நாமத்து இருந்தவத் தோனே

பரிதி தன் கிரகணங்களால் புற இருளை நீக்கிக் கண்ணிற்கு உருவங்களைக் காட்டுகிறது.அதுபோல போல இறைவன் தன் அருளினால் மன இருளை நீக்கி அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருளையும் விளக்கப்பெற்ற பதினெண் மொழிகளுள் கிழக்கே கீழ்கடலும் தெற்கே குமரியும் மேற்கே குடகநாடும் வடக்கே வேங்கடமும் எல்லையாகவுடைய நிலத்து மொழியாகிய தமிழ்மொழியுள்,எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தையும் இலக்கியப் பயிற்சியின் சிறந்தவரே அன்றி எளியவரும் அறியும் வண்ணம் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் செய்யப்படும் யாப்பினால் செய்து தருக! எனச் சீயகங்கன் வேண்ட பவணந்தி முனிவர் தொல்லாசிரியர் நூலின் வழியே நன்னூல் என்னும் பெயரினால் நூல் செய்தார்.

| | | |
|---|---|---|
| ஆக்கியோன் பெயர் | - | பவணந்தி முனிவன் |
| வழி | - | முன்னோர் நூலின் வழி |
| | | எல்லை குணகடல் குமரி குடகம் வங்கடம் என்னும் நான்கு எல்லை நூற்பெயர் நன்னூல் |
| யாப்பு | - | நிகண்டு கற்று இலக்கியப் பயிற்சி செய்தபின் இந்நூல் கேட்கத் தக்கது |
| நுதலிய பொருள் | - | அரும்பொருள் ஐந்து |
| கேட்போர் | - | இலக்கியப் பயிற்சி செய்தவர் |
| பயன் | - | மொழித்திறத்தின் முட்டறுத்தல் |
| காலம் | - | சீயகங்கன் காலம் |
| களம் | - | சீயகங்கன் சபை |
| காரணம் | - | சீயகங்கன் சொன்னமையும் யாவரிடத்தும் இரக்கமுடைமையும் |

**பயிற்சி வினாக்கள்:**

1.நன்னூலின் சிறப்புப் பாயிரம் எல்லைகளாக எவற்றைச் சுட்டுகிறது?

குணகடல் குமரி குடகம் வேங்கடம் என்பனவற்றை நான்கு எல்லைகளாக நன்னூலின் சிறப்புப் பாயிரம் சுட்டுகிறது.

2. நன்னூலின் பயன் யாது?

நன்னூலின் பயன் மொழித்திறத்தின் முட்டறுத்தல் ஆகும்.

குறிப்பு

## கூறு 2

## பொதுப்பாயிரம் - நூல் வரலாறு:

**பொதுப்பாயிரம்**

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூல்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்பன பாயிரத்திற்குப் பெயர்களாகும்.

**பாயிரம்** - வரலாறு.

**முகவுரை** - நூலின் தொடக்கத்தில் கூறப்படுவது.

**நூன்முகம்** - நூலுக்கு முன் சொல்லப்பெறுவது.

**பதிகம்** - பொதுப்பாயிரத்தின் ஐந்து கூறுகளையும் சிறப்புப் பாயிரத்தின் பதினொரு கூறுகளையும் தொகுத்துச் சொல்வது.

**அணிந்துரை** - நூலினது பெருமை முதலியன விளங்க அழகுபெறச் சொல்லப்பெறுவது.

**புனைந்துரை** – நூல் கூறாதவற்றைப் புனைந்துரைத்துக் கூறுவது

**புறவுரை** - நூல் சொல்லிய பொருள் அல்லாதவற்றைப் புறத்தே சொல்வது.

**தந்துரை** - நூலிலே சொல்லப்பட்ட பொருள் அல்லாதவைகளை பிறர் தந்து சொல்வது.

**பொதுப்பாயிரம் பாயிரவகை:**

பாயிரம் பொதுச்சிறப்பு எனவிரு பாற்றே.

குறிப்பு

பாயிரமானது பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிரமும் என இரு வகைப்படும்.

**பொதுப்பாயிரம்**

நூலே நுவல்வோன் நுவலுந் திறனே

கொள்வோன் கோடற் கூற்றாம் ஐந்தும்

எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்.

நூலினது இலக்கணம், ஆசிரியனது இலக்கணம், அவ் ஆசிரியன் மாணாக்கனுக்கு நூலைச் சொல்லுதலின் முறை, மாணாக்கனது இயல்பு, மாணவன் பாடம் கேட்டலின் முறை ஆகிய இவ் ஐந்தும் எல்லா நூல்களுக்கும் பொதுப்பாயிரம் ஆகும்.

**நூலின் இலக்கணம்:**

நூலின் இயல்பே நுவலின் ஓரிரு

பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்

நாற்பொருட் பயத்தோடு எழுமதந் தழுவி

ஐயிரு குற்றமும் அகற்றிஅம் மாட்சியோடு

எண்ணான்கு உத்தியின் ஓத்துப் படலம்

என்னும் உறுப்பினிற் சூத்திரங் காண்டிகை

விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

நூல் பொது சிறப்பு இருவகைப் பாயிரத்தையும் உடையதாய் இருத்தல். மூவகை நூலுள் ஒன்றாகி அமைதல். அறம் முதலான நான்கு பொருளாகிய பயன் உடைத்தாய் இருத்தல். எழுவகை மதத்தையுந் தழுவி பத்துக் குற்றத்தையும் ஒழித்து பத்தழகுடனே, முப்பத்திரண்டு உத்தியைக் கொண்டிருத்தல். மேற்கண்டவற்றுடன் ஓத்தும் படலம் என்று சொல்லப்படும் இருவகை உறுப்புகளோடு சூத்திரமும் காண்டிகையுரையும் விருத்தியுரையுமாகிய தன்மைகளைப் பெற்று வரும்.

**நூலின்வகை:**

முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.

முதனூல், வழி நூல், சார்பு நூல் என நூல் மூன்று வகையினை உடையதாகும்.

**முதல்நூல்:**

குறிப்பு

அவற்றுள்,

வினையின் நீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்

இயல்பாகவே நல்வினை,தீவினை எனப்பெறும் வினைகளின் நினின்று நீங்கித் தானே விளங்கிய அறிவினையுடையவனாகிய முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்.

**வழிநூல்:**

முன்னோர் நூலின் முடிபொருங்கு ஒத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்.

இறைவனும் அவன் அருளை உடையோருமாகிய தொல்லாசிரியர் நூல்களின் பொருண்முடிபினோடு ஒத்து, வழிநூல் செய்வோன் முதல் நூல் இருக்கவும் தான் வழிநூல் செய்தற்குக் காரணமாக வேண்டிய வேறுபாடுகளையும் உடன் சொல்லி, அவ் வேறுபாடுகள் அறிவுடையோர் பலராலும் ஒப்ப முடிந்தமையால் அழியாது நிலை பெற்று விளங்குந் தன்மையை உடையது வழி நூலாகும்.

பின்னோன் வேண்டும் விகல்பம் கூறல் என்பது பழைய இலக்கணங்களாகி இக்காலத்து வழங்காதவைகளை இறந்தது விலக்கல் என்னும் உத்தியினாலே விலக்கியும், புதிய இலக்கணங்களாகிய இக்காலத்து வழங்கும் அவைகளை எதிரது போற்றல் என்னும் உத்தியினாலே தழுவியும் கூறுதல் ஆகும்.

**சார்புநூல்:**

இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்.

முதனூல், வழிநூல் என்னும் இருவகை நூல்களுக்கும் பொருள் முடிபு ஒருபுடை ஒத்து, மற்றவைகள் எல்லாம் ஒவ்வாது இருப்பது சார்பு நூலாகும்.

முதல்நூல் - அகத்தியம், வழிநூல் - தொல்காப்பியம், சார்புநூல் - நன்னூல்

**நூலின் வரலாறு**

**வழிநூலுக்கும் சார்புநூலுக்கும் சிறப்புவிதி:**

முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்

பொன்னேபோற் போற்றுவம் என்பதற்கும் - முன்னோரின்

வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் என்பதற்குங்

கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்

முன்னோர் சொல்லிய பொருளையே அன்றி, அவரது சொல்லையும் பொன்னைப் போலவே போற்றுவோம் என்பதற்கும் முன்னோர் நூலையே சொல்லாது அந்நூலினின்றும் வழிநூல் சார்புநூல் என வேறு நூல் செய்தோம் ஆயினும், மேற்கோள் இல் என்பதற்கும் அவர் சொல்லிய பழஞ் சூத்திரங்களை ஓரோர் இடங்களில் எடுத்துச் சொல்வதாகும்.

**நாற்பொருட் பயன்:**

அறம்பொரு ளின்பம்வீடு அடைதல் நூற் பயனே.

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் என்பன நூல் பயன் ஆகும்.

**எழு மதம்:**

எழுவகை மதமே உடன்படன், மறுத்தல்

பிறர்தம் மதமேற் கொண்டு களைவே

தாஅ னாட்டித் தனாது நிறுப்பே

இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே

பிறர்நூற் குற்றங் காட்டல் ஏனைப்

பிறிதொடு படாஅன் தன்மதங் கொளலே .

எழு வகை மதம் எனப்படுவன பின்வருமாறு அமையும்.

**உடன் படல்** - பிறர் கொள்கைக்கு தான் உடன்படுதல்.

**மறுத்தல்** - பிறர் கொள்கையை மறுத்தல்

**பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவு** - பிறர் கொள்கைக்கு உடன்பட்டுப் பின்பு மறுத்தல்

தான் நாட்டித் தனது நிறுப்பு - தானே ஒரு பொருளை எடுத்து நாட்டி அதனை வரும் இடந்தோறும் நிறுத்துதல்.

**இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு** - இருவரால் விரோதமாகக் கொள்ளப்பட்ட இரண்டினுள் ஒன்றன் இடத்துத் துணிதல்.

**பிறர்நூல் குற்றங் காட்டல்** - அடுத்தவர் நூலிலுள்ள குற்றத்தை எடுத்துக் காட்டல்.

**பிறிதொடு படாஅன் தன் மதம் கொளல்** - பிறர் கொள்கைக்கு உடன்படான் ஆகித் தன் மதத்தையே கொள்ளுதல் என்பனவாகும்.

குறிப்பு

**பத்துவகைக் குற்றங்கள்:**

குன்றக் கூறன் மிகைபடக் கூறல்

கூறியது கூறன் மாறுகொளக் கூறல்

வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்

வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்

சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை

என்றிவை யீரைங் குற்ற நூற்கே

**குன்றக் கூறல்** - குறித்த பொருளை விளக்குதற்கு வேண்டிய சொற்களில் குறைவுபடாமல் கூறல்.

**மிகைபடக் கூறல்** - குறித்த பொருளை விளக்குதற்கு வேண்டும் சொற்களை விட அதிகமாகக் கூறல்.

**கூறியது கூறல்** - முன்னர் கூறிய பொருளையே மீண்டும் கூறல்.

**மாறுகொளக் கூறல்** - முன்னர் கூறிய பொருளுக்குப் பின்னர் சொல்லும் பொருள் முரண்படக் கூறல்.

**வழூஉச் சொற் புணர்த்தல்** - குற்றமுடைய சொற்களைக் பயன்படுத்தல்.

**மயங்க வைத்தல்** - இதற்குப் பொருள் இதுவோ அதுவோ என மயங்கவைத்தல்.

**வெற்றெனத் தொடுத்தல்** - பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சொற்களைக் கூறல்.

**மற்று ஒன்று விரித்தல்** - கூறத் தொடங்கிய பொருளை விடுத்து இடையிலே வேறொரு பொருளை விரித்தல்.

**சென்று தேய்ந்து இறுதல்** - செல்லச் செல்லச் சொல் நடை பொருள் நடை தேய்ந்து முடிதல்.

**நின்று பயன் இன்மை** - சொற்கள் இருந்தும் பயனில்லாமல் அமைதல்.

என்பவை பத்துக் குற்றங்கள் ஆகும்.



**பத்துவகை அழகு:**

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்

நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்

ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்

முறையின் வைப்பே உலகமலை யாமை

விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த

தாகுதல் நூலிற் கழகெனும் பத்தே.

நூலில் அமையும் பத்து வகையான அழகுகள் பின்வருவன ஆகும்.

**சுருங்கச் சொல்லல்** - சொற்கள் பயனின்றி விரிக்காது சுருங்கக் கூறல்.

**விளங்கவைத்தல்** - சுருங்கச் சொல்லினும் பொருளை ஐயத்திற்கு இடமாகாதவாறு விளங்க வைத்தல்.

**நவின்றோர்க்கு இனிமை** – நூலைப் கற்போருக்கு இனிமை தரல்.

**நன்மொழி புணர்த்தல்** - நல்ல சொற்களைக் கூறல்.

**ஓசை உடைமை** - சந்த இன்பம் உடையதாதல்.

**ஆழம் உடைத்து ஆதல்** - நூலைப் படிக்கப் படிக்க ஆழ்ந்த கருத்தை உடையது ஆதல்.

**முறையின் வைப்பு** - படலம், ஓத்து முதலியவைகளைக் காரண காரிய முறைப்படி அமைத்தல்.

**உலகம் மலையாமை** - உயர்ந்தோர் வழக்கத்தோடு மாறுபடாமை.

**விழுமியது பயத்தல்** - சிறப்பாகிய பொருளைத் தரல்.

**விளங்கு உதாரணத்தது ஆகுதல்** - விளங்கிய உதாரணத்தை உடையதாதல்.

இவை நூலினுக்கு அழகு என்று சொல்லப்படும் பத்து ஆகும்.

**முப்பத்திரண்டு உத்திகள்:**

நன்னூலாரால் நூலில் அமையும் உத்திகள் என உரைக்கப்படுபவை முப்பத்திரண்டு ஆகும். அவை முறையே,

நுதலிப் புகுதல் ஓத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டல் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொற் புணர்த்தல்
இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்
உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்
ஒருதலை துணிதல் எடுத்துக் காட்டல்
எடுத்த மொழியின் எய்த வைத்தல்
இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவின் அப்பொருண் முடித்தல்
ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்
உய்த்துணர வைப்பென உத்தியெண் ணான்கே.

என்பன ஆகும்.

## குறிப்பு

**நுதலிப் புகுதல்** - இதைச் சொல்லப்போகிறேன் எனக் கூறித் தொடங்குதல்.

**ஓத்து முறை வைப்பு** - இயல்களைக் காரண காரிய முறைப்படி அமைத்தல்.

குறிப்பு

**தொகுத்துச் சுட்டல்** - பலவற்றையும் ஓரிடத்தில் தொகுத்துக் சுட்டல்.

**வகுத்துக் காட்டல்** - அவ்வாறு தொகுத்துக் காட்டப்பட்டவற்றை வெவ்வேறாகக் வேறுபடுத்துக் காட்டல்.

**முடித்துக் காட்டல்** - தான் முன்னர் முடித்தவாறு முடித்துக் காட்டல்.

**முடிவு இடங்கூறல்** - தான் கூறும் இலக்கணத்திற்கு இலக்கியம் தோன்றுமிடத்தைச் சொல்லுதல்.

**தான் எடுத்து மொழிதல்** - பழைய சூத்திரத்தைத் தான் ஒரோ இடத்து எடுத்துக் காட்டல்.

**பிறன்கோட் கூறல்** - தன்நூலில் பிறரது கொள்கைளைக் கூறல்.

**சொற்பொருள் விரித்தல்** - சொல்லினது பொருள் விளங்குதற்கு உருபு முதலியவற்றை விரித்துக் கூறல்.

**தொடர்ச்சொற் புணர்த்தல்** - ஒன்றிற்கு ஒன்று தொடர்புடைய சொற்களைத் தொடுத்துக் கூறல்.

**இரட்டு உற மொழிதல்** - ஒரு சொற்றொடரை இரு பொருள்படக் கூறல்.

**ஏதுவின் முடித்தல்** - முன் காரணம் விளங்கப் பெறாது ஒன்றைப் பின் காரணம் கூறி முடித்தல்.

**ஒப்பின் முடித்தல்** - ஒன்றற்குச் கூறப்படும் இலக்கணம் வேறொன்றற்கும் ஒத்து வருமாயின் அதற்கு அதனையே இலக்கணமாக உடன் முடிவு செய்தல்.

**மாட்டெறிந்து ஒழுகல்** - ஒன்றற்குக் கூறப்பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்குரிய மற்றொன்றிற்கும் மாட்டெறிந்து கூறல்.

**இறந்தது விலக்கல்** - முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுள் பிற்காலத்து வழங்காது ஒழிந்தனவற்றை நீக்கல்.

**எதிரது போற்றல்** - முற்காலத்து வழங்காது பிற்காலத்து வழங்கி வரும் இலக்கணத்தை ஏற்றுத் தழுவிக் கொள்ளல்.

**முன் மொழிந்த கோடல்** - பின்னர் வேண்டும் இடங்களில் எடுத்துரைக்கும் பொருட்டு முன்னே ஒன்றினைச் கூறிக்கொள்ளல்.

**பின்னது நிறுத்தல்** - ஒரு பொருளுக்குக் கருவியாக முன்வைத்தற்கு உரிய ஒன்று அங்கே வைத்தற்கு இடம் பெறாதாயின் அப்பொருளின் பின் அதனை வைத்து விளக்குதல்.

**விகற்பத்தின் முடித்தல்** - வெவ்வேறாக முடித்தல்.

**முடிந்தது முடித்தல்** - வெவ்வேறாக முடிந்தவற்றைத் தெளிவுவேண்டித் தொகுத்து முடித்தல்.

**உரைத்தும் என்றல்** - பின்னே சொல்லப்படுவதை முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொல்ல நேரின் இதனைப் பின்னே சொல்வோம் என்பது தோன்ற அங்கே சுருக்கிச் சொல்லல்.

குறிப்பு

**உரைத்தாம் என்றல்** - முன்னே ஒரு காரணத்தினால் கூறப்பட்டதைப் பின்னே கூற வேண்டிய இடத்து இதனை முன்னே தானே கூறினோம் என்பது தோன்றச் சொல்லாது விடுத்தல்.

**ஒருதலை துணிதல்** - இருவரால் முரணாகக் கொள்ளப்பட்ட இரண்டு பக்கத்துள் ஒரு பக்கம் துணிந்து கூறல்.

**எடுத்துக்காட்டல்** - தான் சொல்லும் இலக்கணத்திற்குத் தானே இலக்கியத்தை எடுத்துக் காட்டல்.

**எடுத்த மொழியின் எய்த வைத்தல்** - தான் சொல்லும் இலக்கணத்தைத் தான் எடுத்துக் காட்டிய இலக்கியத்திலே பொருந்திக் காட்டல்.

**இன்னது அல்லது இது என மொழிதல்** -ஐயம் தோன்றிய இடத்து இப்படிப்பட்டது அல்லாதது இதுவெனச் சொல்லல்.

**எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்** - கூறாது விடப்பட்டவைக்குச் கூறப்பட்டதனைக் கொண்டு இலக்கணம் பொருந்தச் சொல்லுதல்.

**பிறநூல் முடிந்தது தான் உடன்படுதல்** - பிற நூலிலே முடிந்த முடிபைத் தான் ஏற்றுக்கொள்ளல்.

**தன் குறிவழக்கம் மிக எடுத்து உரைத்தல்** - தான் புதிதாகக் குறித்து வழங்குவதைப் பல இடங்களிலும் எடுத்துக் கூறல்.

**சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்** - ஒரு சொல்லின் முடிவிலே அதன் பொருளையும் முடித்தல்.

**ஒன்றினம் முடித்தல் தன் இனம் முடித்தல்** - விதியால் ஒற்றுமைப் பட்டவைகளை ஒருங்கு கூட்டி முடித்தல் ஒன்றைச் சொல்லும் இடத்து அதற்கு இனமாகிய மற்று ஒன்றையும் அதனோடு முடித்தலும் ,

**உய்த்து உணர வைப்பு** – சில நூற்பா விதிகளைக் கொண்டு ஆராய்ந்தறியும்படி ஒரு பொருளை வைத்தல் என்பதாய்த் தந்திர உத்திகள் முப்பத்திரண்டு வகையாகும்.

மேற்கூறப்பட்ட இம்முப்பத்திரண்டு உத்திகளே அன்றி உரை யிற்கோடல், மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாத அதனையும் முட்டின்று முடித்தல், உடம்பொடு புணர்த்தல், ஏற்புழிக் கோடல் எனப் பிறவும் உத்தி வகைகளுள் அடங்கும்.



**தந்திர உத்தி:**

நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி

ஏற்புழி அறிந்திதற் கிவ்வகை யாமெனத்

தகும்வகை செலுத்துதல் தந்திர வுத்தி .

நூலால் அறிவிக்கப்படும் பொருளை செய்யுள் வழக்கோடும், உலகியல் வழக்கோடும் பொருந்தக் காட்டி ஏற்கும் இடத்தை அறிந்து இவ் இடத்திற்கு இப்படியாகும் என்று நினைத்து அமைத்துச் சொல்வது தந்திர உத்தியாகும்.

**ஓத்து:**

நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு

ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது

ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர் .

ஒரு சாதி மணிகளை வரிசையாகப் வைத்தால் போல ஓரினப் பொருளை ஒரு வழி வைப்பது ஓத்து உறுப்பாம் என்று சொல்லுவர் உயர் மொழிப் புலவர்.

**படலம்:**

ஒருநெறி யின்றி விரவிய பொருளால்

பொதுமொழி தொடரின் அதுபடல மாகும்.

ஒரு வகையாய் அமையாது கலந்த பல பொருள்களினாலே பொது மொழி தொடரின் அது படலம் எனப்படும்.

**சூத்திரம்:**

சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்

செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்

திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம் .

பெரிய உருவங்களின் நிழல்களைத் தன்னுள்ளே செம்மையாக அடக்கிக் காட்டுவது சிறிய கண்ணாடியின் தன்மையாகும். அதுபோலச்

சிலவகை எழுத்துக்களால் பலவகைப் பொருள்களை செம்மையாக அடக்கி இனிதாகக் காட்டித் குற்றம் இல்லாமையால் சொல்லாலும் பொருளாலும் ஆழம் உடைமையாதாய் பொருள் நுணுக்கங்களும் சிறந்ததாய் வருவன சூத்திரங்களாகும்.

குறிப்பு

**சூத்திர நிலை:**

ஆற்றொழுக்கு அரிமா நோக்கந் தவளைப்

பாய்த்துப் பருந்தின் வீழ்வு அன்னசூத் திரநிலை

தொடர்ந்து ஓடுகின்ற ஆற்றின் நீரோட்டத்தையும் முன்னும் பின்னும் பார்க்கின்ற சிங்கத்தினது பார்வையையும் இடையிட்டுக் குதிக்கின்ற தவளையினது பாய்ச்சலையும் நெடுந் தொலைவிலிருந்தும் ஒன்றை வெளவிப் போதற்கு வீழ்கின்ற பருந்தினது வீழ்ச்சியையும் போன்றன சூத்திரநிலை ஆகும்.

பிண்டந் தொகைவகை குறியே செய்கை

கொண்டியல் புறனடை கூற்றென சூத்திரம்

மேற்கூறிய சூத்திரங்கள் பிண்ட சூத்திரம், தொகைச் சூத்திரம், வகைச் சூத்திரம், குறிச் சூத்திரம், செய்கைச் சூத்திரம், இவைகளின் புறனடையாய் வரும் புறனடைச் சூத்திரம் ஆகிய ஆறு பிரிவை உடையனவாம்.

**தொகைச் சூத்திரம்**: பல திறப்பட்ட பொருள்களையும் வேறு வேறாகத் தொகுத்துக் கூறுவன.

**வகைச் சூத்திரம்**: அவ்வாறு தொகுத்துச் கூறியவற்றை வேறு வேறாக வகுத்துக் கூறுவன.

**குறிச் சூத்திரம்:** இவை உயிர் இவை ஒற்று இவை பெயர் இவை வினை என்பது போன்ற தொடக்கத்து அறிதல் மாத்திரையாய் வருவன.

**செய்கைச் சூத்திரம்**: புணர்ச்சி விதி அறிந்து புணர்த்தலைச் செய்தலும் முடிபு விதி அறிந்து முடித்தலைச் செய்தலும் முதலியன ஆகும்.

**புறனடைச் சூத்திரம்**: கூறப்பட்ட இலக்கணங்களுக்கு எல்லாம் புறத்தே அடையாகி நிற்றல்.

**உரை:**

பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்

தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்

விரிவதி காரந் துணிவு பயனோடு

குறிப்பு

ஆசிரிய வசனமென்று ஈரே ழுரையே.

பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள், பொழிப்புரை, உதாரணம், வினா, விடை, வேண்டியவைகளைத் தந்துரைத்தல், விரிவு வேற்றுமை உருபு முதலியவை தொக்கு நிற்பின் அவற்றை விரித்துரைத்தல், எடுத்துக் கொண்ட அதிகாரம் இதுவாதலின் இச் சூத்திரத்து விரவி நின்ற பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைத்தல், ஐயமின்றி நின்றவிடத்து இதற்கு இதுவே பொருளெனத் துணிந்து உரைத்தல், இப்படிச் சொல்லியதனால் வந்த பயன் இது என உரைத்தல், ஆசிரிய வசனங்காட்டுதல், எனும் பதினான்கும் நூலுக்கு உரைக்கப்படும் உரையாகும்.

இவ்வாறு சூத்திரங்கள் ஆறு வகைப்பட்டனவாய்ச் சொல்லப்படினும் குறிச் சூத்திரம், செய்கைச் சூத்திரம் என்னும் இரண்டின் உள்ளே மற்றைய நான்கும் அடங்கும்.

**காண்டிகையுரை:**

கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்

அவற்றொடு வினாவிடை ஆக்க லானும்

சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை.

கருத்துரை, பதவுரை, உதாரணம் ஆகிய மூன்றனைச் சொல்லுதலும்,அம் மூன்றனோடு வினா விடை என்னும் இரண்டனையுங் கூட்டிச் சொல்லுதலும், சூத்திரத்துள் இருக்கின்ற பொருளை விளக்குவதும் காண்டிகை உரையாகும்.

**விருத்தி உரை:**

சூத்திரத் துட்பொருள் அன்றியும் ஆண்டைக்

இன்றி யமையா யாவையும் விளங்கத்

தன்னுரை யானும் பிறநூ லானும்

ஐயம் அகலவைங் காண்டிகை உறுப்பொடு

மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி.

சூத்திரத்துள் பொருள் விளக்கல். அவ் இடங்களுக்கு தேவையான பொருள்கள் எல்லாம் விளங்கும்படி தன் உரையானும் பிறர் நூலானும் மேற்கூறிய கருத்து,பதப்பொருள், எடுத்துக்காட்டு, வினா,விடை என்னும் காண்டிகை உறுப்பு ஐந்தினாலும், ஐயம் அகல சுருங்காது மெய்ப்பொருளை விரித்து உரைப்பது விருத்தியுரையாம்.

**நூல்:**

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.

சொற்கள் பஞ்சாகவும் செய்யுள் இழையாகவும் சிறந்த சொற்களை அறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும் வாய் கையாகவும் அறிவு கதிர் என்னும் கருவியாகவும் கொண்டு குற்றமில்லாத நூலானது முடியும் வழி இதுவாகும்.

**நூலின் மாண்பு:**

உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனங்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

அறிவின் வளம் பெருக்கி அறியாமையின் மிகுதியைக் கெடுத்து, மரத்தினது மிகுதியாகிய கோணலைப் போக்குகின்ற நூலின் அம்மாட்சிமை போல், மனிதருடைய மனத்தினது கோணலைப் போக்குவது கல்வி நூலினது மாட்சிமை ஆகும்.

**பயிற்சி வினாக்கள்:**

1.நூலிற்கு அமைய வேண்டிய பத்துவகை அழகுகள் யாவை?

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுதல் நூலிற் கழகெனும் பத்தே.

நூலில் அமையும் பத்து வகையான அழகுகள் பின்வருவன ஆகும்.

சுருங்கச் சொல்லல் - சொற்கள் பயனின்றி விரிக்காது சுருங்கக் கூறல்.

## குறிப்பு

குறிப்பு

விளங்கவைத்தல் - சுருங்கச் சொல்லினும் பொருளை ஐயத்திற்கு இடமாகா வண்ணம் விளங்க வைத்தல்.

நவின்றோர்க்கு இனிமை – நூலைப் படிப்போர்க்கு இனிமை தரல்.

நன்மொழி புணர்த்தல் - நல்ல சொற்களைக் கூறல்.

ஓசை உடைமை - சந்த இன்பம் உடைத்து ஆதல்.

ஆழம் உடைத்து ஆதல் - நூலைப் படிக்கப் படிக்க ஆழ்ந்த கருத்தை உடையது ஆதல்.

முறையின் வைப்பு - படலம், ஓத்து முதலியவைகளைக் காரண காரிய முறைப்படி அமைத்தல்.

உலகம் மலையாமை - உயர்ந்தோர் வழக்கத்தோடு மாறுபடாமை.

விழுமியது பயத்தல் - சிறப்பாகிய பொருளைத் தரல்.

விளங்கு உதாரணத்தது ஆகுதல் - விளங்கிய உதாரணத்தை உடையதாதல்.

இவை நூலினுக்கு அழகு என்று சொல்லப்படும் பத்து ஆகும்.

2.நூலில் அமையக்கூடாத பத்துவகைக் குற்றங்கள் குறித்து எழுதுக.

குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்ற நூற்கே

குன்றக் கூறல் - குறித்த பொருளை விளக்குதற்கு வேண்டிய சொற்களில் குறைவுபடாமல் கூறல்.

மிகைபடக் கூறல் - குறித்த பொருளை விளக்குதற்கு வேண்டும் சொற்களை விட அதிகமாகக் கூறல்.

கூறியது கூறல் - முன்னர் கூறிய பொருளையே பின்னும் கூறல்.

மாறுகொளக் கூறல் - முன்னர் கூறிய பொருளுக்குப் பின் சொல்லும் பொருள் முரண்படக் கூறல்.

வழூஉச் சொற் புணர்த்தல் - குற்றமுடைய சொற்களைக் கூறல்.

மயங்க வைத்தல் - இதற்குப் பொருள் இதுவோ அதுவோ என மயங்கவைத்தல்.

வெற்றெனத் தொடுத்தல் - பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சொற்களைக் கூறல்.

மற்று ஒன்று விரித்தல் - கூறத் தொடங்கிய பொருளை விடுத்து இடையிலே வேறொரு பொருளை விரித்தல்.

சென்று தேய்ந்து இறுதல் - செல்லச் செல்லச் சொல் நடை பொருள் நடை தேய்ந்து முடிதல்.

நின்று பயன் இன்மை - சொற்கள் இருந்தும் ஒரு பயனின்றி அமைதல்.

என்றிவை பத்துக் குற்றங்கள் ஆகும்.

3.எழு மதங்களைச் சுட்டியுரைக்க.

எழுவகை மதமே உடன்படன், மறுத்தல்

பிறர்தம் மதமேற் கொண்டு களைவே

தாஅ னாட்டித் தனாது நிறுப்பே

இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே

பிறர்நூற் குற்றங் காட்டல் ஏனைப்

பிறிதொடு படாஅன் தன்மதங் கொளலே .

எழு வகை மதம் எனப்படுவன பின்வருமாறு அமையும்.

உடன் படல் - பிறர் மதத்திற்குத் தான் உடன் படுதல்.

மறுத்தல் - பிறர் மதத்தை மறுத்தல்

பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவு - பிறர் மதத்திற்கு உடன்பட்டுப் பின்பு மறுத்தல்

தான் நாட்டித் தனது நிறுப்பு - தானே ஒரு பொருளை எடுத்து நாட்டி அதனை வரும் இடந்தோறும் நிறுத்துதல்.

இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு - இருவரால் விரோதமாகக் கொள்ளப்பட்ட இரண்டனுள்

ஒன்றனிடத்துத் துணிதல்.

குறிப்பு

*Self-Instructional Material*

பிறர்நூல் குற்றங் காட்டல் - பிறர் நூலிலுள்ள குற்றத்தை எடுத்துக் காட்டல்.

பிறிதொடு படாஅன் தன் மதம் கொளல் - பிறர் மதத்திற்கு உடன்படான் ஆகித் தன் மதத்தையே கொள்ளுதல் என்பனவாகும்.

**குறிப்பு**

4. சூத்திரம் என்றால் என்ன?

சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்

செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்

திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம் .

பெரிய உருவங்களின் நிழல்களைத் தன்னுள்ளே செம்மையாக அடக்கிக் காட்டும் சிறிய கண்ணாடி போலச் சிலவகை எழுத்துக்களாலாகிய வாக்கியத்திலே பலவகைப் பொருள்களைச் செம்மையாக அடக்கி இனிதாகக் காட்டித் குற்றம் இல்லாமையால் சொல்லாலும் பொருளாலும் ஆழம் உடைமையாதாய் பொருள் நுணுக்கங்களும் சிறந்ததாய் வருவன சூத்திரங்களாகும்.

5. நூலின் மாண்பு யாது?

உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்

புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்

கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்

மனங்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

உரத்தின் வளம் பெருக்கி நினைக்கப்பட்ட தீமையாகிய அஞ்ஞான வளத்தைக் கெடுத்து, மரத்தினது மிகுதியாகிய கோணலைப் போக்குகின்ற நூலின் அம்மாட்சிமை போல், மனிதருடைய மனத்தினது கோணலைப் போக்குவது கல்வி நூலினது மாட்சிமை ஆகும்.

## கூறு 3 : ஆசிரியர் வரலாறு – கற்பிக்கும் வரலாறு

### ஆசிரியனது வரலாறு:

குறிப்பு

**நல்லாசிரியன் இலக்கணம்:**

குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே.

நற்குடிப் பிறப்பு, அருள், இறைவழிபாடுமாகிய இவைகளால் பெற்ற மேன்மையும், பல நூல்களிலே பழகிய தெளிவும் நூல் பொருளை மாணவர் எளிதில் உணரும்படி தொடுத்துச் சொல்லும் வன்மையும் நிலத்தையும் மலையையும் துலாக்கோலையும் பூவையும் ஒத்த குணங்களும் உலக நடையை அறியும் அறிவும் உயர்வாகிய குணங்கள் இவை போல்வன பிறவும் நிறையப் பெற்றவன் நூல் கற்பிக்கும் ஆசிரியன் ஆவான்.

**நிலத்தின் மாண்பு:**

தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

பிறரால் அறியப்படாத உருவத்தின் பெருமையும் பெரிய பாரம் அமையினும் அவைகளால் தளர்வுறாத வன்மையும் தன்னை பிற மனிதர் தோண்டுதல் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும் பருவத்திலே உழவர் செய்யும் முயற்சி அளவிற்குத்தக்க அளவில் அவர்க்குப் பயனைத் தருதலும் நல்ல நிலத்தின் இடத்துப் பொருந்திய குணங்கள் ஆகும்.

பிறரால் அறியப்படாத கல்வி அறிவின் பெருமையும், **பெரியவாதம் செய்து தன் மேலே நெருங்கினவரால் கலங்காத வலிமையும்,** தன்னை அடுத்த மாணாக்கர் இகழ்தல் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும், பருவத்திலே மாணாக்கர் செய்யும் முயற்சி அளவிற்குத் தக்க அவர்க்குப் பயனைத் தருதலும் ஆசிரியன் இடத்துப் பொருந்திய குணங்கள் ஆதலால் நிலம் ஆசிரியனுக்கு உவமானம் ஆயிற்று.

**நிறைகோல்:**

ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்

மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே.

குறிப்பு

ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும் உண்மைபெறத் தான் நடுவே நிற்றலும், நிறைகோல் இடத்து உள்ள குணங்கள் ஆகும்.

ஐயம் தீர வினாவப்பட்ட சொல்பொருளின் இயல்பைக் காட்டலும், புலவர் இருவர் மாறுபட்டார்கள் எனில் உண்மை பெறத் தான் அவ் இருவருக்கும் நடுவாக நிற்றலும் ஆசிரியன் இடத்துக் குணங்களாக மிகும் ஆகையால், நிறைகோல் அவனுக்கு உவமானம் ஆயிற்று.

**மலரின் மாண்பு:**

மங்கல மாகி யின்றி யமையா

தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்

பொழுதின் முகமலர்வு உடையது பூவே.

மங்கலப் பொருள் ஆகி, தான் இன்றி அழகுபெறாத இன்றி அமையாப் பொருளும் ஆகி யாவரும் மகிழ்ந்து தன்னை அணிந்து கொள்ள மெல்லிய குணமுடையதாகி மலர்தற்கு உரிய காலத்திலே முகம் விரிதலை உடையது பூவாகும்.

மங்கலச் செயலுக்கு உரியவன் ஆகி யாதொரு செயலும் சிறப்பிக்கும் தான் இல்லாது முடியாது ஆகக் கண்டோர் யாவரும் மகிழ்ந்து மேலாகத் தன்னை வைத்துக் கொள்ள, மெல்லிய குணம் உடையவன் ஆகிப், பாடம் சொல்லுதற்கு உரிய காலத்திலே முக மலர்தலை உடையவன் ஆசிரியன். எனவே மலர் ஆசிரியனுக்கு உவமானம் ஆயிற்று.

**ஆசிரியர் ஆகாதவர்:**

மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்

அழுக்காறு அவாவஞ்சம் அச்ச மாடலுங்

கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை

முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்

உடையோர் இலர் ஆசிரியரா குதலே.

பாடம் சொல்லும் குணம் இல்லாமையையும், இழிகுண இயல்பும் அழுக்காறும் பொருளின் மேல் அதிகமாக வைக்கும் ஆசையையும் மெய்ப் பொருளை மறைத்துப் பொய்ப் பொருளைக் காட்டி வஞ்சித்தலையும் கேட்போருக்கு அச்சம் உண்டாகப் பேசுதலையும் கழற்

குடமும் மடல்பனையும் பருத்திக்குண்டிகையும், முடத்தெங்கும் ஆகிய நான்கனையும் ஒப்பு என்று சொல்ல மாறுபாடு கொண்ட கருத்தையும் தம்மிடத்தில் உடைவர் கற்பிக்கும் ஆசிரியர் ஆகுதல் இலர் ஆவர்.

குறிப்பு

**கழற்குடம்:**

பெய்தமுறை அன்றிப் பிறழ வுடன்றருஞ்

செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

தன் உள்ளே போட்ட முறையினால் அன்றி முன் போடப்பட்டவையும் பின்போடப்பட்டவையும் அம்முறை பிறழ்ந்து போக விரைவிலே தன் உள்ளே கொண்ட கழற் காய்களைக் கொடுக்கும் செய்கை ஆனது கழற்காய் போட்ட குடத்தினது இயல்பு ஆகும்.

தமக்குக் கற்பித்த முறையினால் அன்றி முன் கற்பிக்கப்பட்டவையும் பின் கற்பிக்கப்பட்டவையும் அம்முறை பிறழ்ந்து போக விரைவிலே தம் உடனே கொண்டநூல் பொருள்களைத் தரும்செய்கை ஆனது ஆசிரியர் ஆகாதவரது குற்றம் ஆதலால் கழற்குடம் அவருக்கு உவமானம் ஆயிற்று.

**மடற்பனை:**

தானே தரக்கொளின் அன்றித் தன்பான்

மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை

தன்னிடத்து உள்ள பழங்களைத் தானே தந்தால் மட்டுமே கொள்ளலாமே அன்றி, ஒருவர் தன்னிடத்து நெருங்கி வந்து பறித்துக் கொள்ள அப்பழங்களைக் கொடாத இடத்தையுடையது மடற்பனை ஆகும்.

தாமே தம்மிடத்தில் உள்ள நூல் பொருள்களைச் சொல்ல அறிந்துகொண்டால் கொள்ளலாமே அன்றி, ஒருவர் தம் இடத்து நெருங்கி வந்து வினாவி அறிந்துகொள்ள அந்நூற் பொருள்களைச் சொல்லாத இடத்தை உடையவர் ஆசிரியர் ஆகாதவர் ஆதலால் மடற்பனை ஆசிரியருக்கு உவமானமாய் அமைந்தது.

அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்கு

எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

பஞ்சை அடைக்கும் போதும் சிறிது சிறிதாக அடைக்கத் தன்னுள்ளே கொண்டு, அதனைத் திரும்பக் கொடுக்கும் போதும் தான் பிறர்க்கு எளிதில் கொடாத குற்றம் உடையது பருத்திக் குண்டிகை ஆகும்.

கல்வியைக் கற்றபோதும் வருத்தத்தோடு சிறிது சிறிதாகக் கற்பிக்கத் தம்முள்ளே கொண்டு, பாடம் சொல்லும் போதும் அக் கல்வியைத் தாம்

பிறர்க்கு எளிதில் கொடாத குற்றம் உடையவர் ஆசிரியர் ஆகாதவர் ஆதலால், பருத்திக் குண்டிகை அவருக்கு உவமானம் ஆயிற்று.

**முடத்தெங்கு:**

பல்வகை யுதவி வழிபடு பண்பின்

அல்லோர்க் களிக்கும் அதுமுடத் தெங்கே .

நீர் விடுதல் முதலாகிய பலவகை உதவிகளைச் செய்து தன்னைப் பாதுகாக்கும் தன்மை உடையோருக்கு அன்றி அக்குணம் இல்லாத பிறர்க்குத் தன் இடத்துள்ள காய்களைத் தரும் குற்றம் உடையது வேலிக்கு அப்புறம் வளைந்த முடத்தெங்கு ஆகும்.

பொருள் கொடுத்தல் முதலாகிய பல வகை உதவிகளையும் செய்து தமக்கு வழிபாடு செய்யும் குணம் அல்லாத மாணாக்கருக்குத் தம்மிடத்தில் உள்ள கல்விப் பொருளைத் தரும் குற்றம் உடையவர் ஆசிரியர் ஆகாதவர் ஆதலால், முடத்தெங்கு அவருக்கு உவமானம் ஆயிற்று.

**3. கற்பிக்கும் வரலாறு**

ஈத லியல்பே யியம்புங் காலைக்

காலமு மிடனும் வாலிதி னோக்கிச்

சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி

உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து

விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து

கொள்வோன் கொள்வகை யறிந்தவன் உளங்கொளக்

கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப .

பாடம் சொல்லுதலினது வரலாற்றைச் சொல்லும்போது உரிய காலத்தையும் உரிய இடத்தையும் சிறந்தனவாகப் பார்த்து சிறந்த இடத்திருத்தல் வேண்டும். பின் தான் வழிபடும் தெய்வத்தை வாழ்த்தல் வேண்டும். பாடம் சொல்லப்படும் பொருளைத் தன் கருத்தின்கண் நிறைத்து, விரையான் ஆகவும் கோபம் அடையான் ஆகவும் விரும்பி முகம் மலர்ச்சியை அடைந்து, கேட்பவனது கேட்கும் அறிவின் வகையை அறிந்து அவனது மனம் ஏற்றுக்கொள்ளுமாறு மாறுபாடு இல்லாத மனத்து உடனே நூலைக் கொடுத்தலாகும் என்று சொல்லுவர் புலவர்.

**பயிற்சி வினாக்கள்:**

**1.** நல்லாசிரியன் இலக்கணம் குறித்து எழுதுக.

குறிப்பு

குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை

கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை

நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்

உலகியல் அறிவோ டுயர்குணம் இனையவும்

அமைபவன் நூலுரை யாசிரி யன்னே.

உயர்குடிப் பிறப்பும் அருள் இறை வழிபாடுமாகிய இவைகளால் எய்திய மேன்மையும், பல நூல்களிலே பழகிய தேற்றமும் நூல் பொருளை மாணாக்கர் எளிதில் உணரும்படி தொடுத்துச் சொல்லும் வன்மையும் நிலத்தையும் மலையையும் துலாக்கோலையும் பூவையும் ஒத்த குணங்களும் உலக நடையை அறியும் அறிவும் உயர்வாகிய குணங்கள் இவை போல்வன பிறவும் நிறையப் பெற்றவன் நூல் கற்பிக்கும் ஆசிரியன் ஆவான்.

2. மலரின் மாண்பு ஆசிரியருக்குப் பொருந்துமாற்றை விளக்குக.

மங்கல மாகி யின்றி யமையா

தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்

பொழுதின் முகமலர்வு உடையது பூவே.

மங்கலப் பொருள் ஆகி, தான் இன்றி அழகுபெறாத இன்றி அமையாப் பொருளும் ஆகி யாவரும் மகிழ்ந்து தன்னை அணிந்து கொள்ள மெல்லிய குணமுடையதாகி மலர்தற்கு உரிய காலத்திலே முகம் விரிதலை உடையது பூவாகும்.

மங்கலச் செயலுக்கு உரியவன் ஆகி யாதொரு செயலும் சிறப்பிக்கும் தான் இல்லாது முடியாது ஆகக் கண்டோர் யாவரும் மகிழ்ந்து மேலாகத் தன்னை வைத்துக் கொள்ள, மெல்லிய குணம் உடையவன் ஆகிப், பாடம் சொல்லுதற்கு உரிய காலத்திலே முக மலர்தலை உடையவன் ஆசிரியன். எனவே மலர் ஆசிரியனுக்கு உவமானம் ஆயிற்று.

3. ஆசிரியர் ஆகாதவர் யாவர்?

மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்

அழுக்காறு அவாவஞ்சம் அச்ச மாடலுங்

கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை

முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்

உடையோர் இலர் ஆசிரியரா குதலே.

பாடம் சொல்லும் குணம் இல்லாமையையும், இழிகுண இயல்பும் அழுக்காறும் பொருளின் மேல் அதிகமாக வைக்கும் ஆசையையும் மெய்ப் பொருளை மறைத்துப் பொய்ப் பொருளைக் காட்டி வஞ்சித்தலையும் கேட்போருக்கு அச்சம் உண்டாகப் பேசுதலையும் கழற் குடமும் மடல்பனையும் பருத்திக்குண்டிகையும், முடத்தெங்கும் ஆகிய நான்கனையும் ஒப்பு என்று சொல்ல மாறுபாடு கொண்ட கருத்தையும் தம்மிடத்தில் உடைவர் கற்பிக்கும் ஆசிரியர் ஆகுதல் இலர் ஆவர்.

4. கழற்குடத்தின் இயல்பினைச் சுட்டியுரைக்க.

பெய்தமுறை அன்றிப் பிறழ வுடன்றருஞ்

செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

தன் உள்ளே போட்ட முறையினால் அன்றி முன் போடப்பட்டவையும் பின்போடப்பட்டவையும் அம்முறை பிறழ்ந்து போக விரைவிலே தன் உள்ளே கொண்ட கழற் காய்களைக் கொடுக்கும் செய்கை ஆனது கழற்காய் போட்ட குடத்தினது இயல்பு ஆகும்.

தமக்குக் கற்பித்த முறையினால் அன்றி முன் கற்பிக்கப்பட்டவையும் பின் கற்பிக்கப்பட்டவையும் அம்முறை பிறழ்ந்து போக விரைவிலே தம் உடனே கொண்டநூல் பொருள்களைத் தரும்செய்கை ஆனது ஆசிரியர் ஆகாதவரது குற்றம் ஆதலால் கழற்குடம் அவருக்கு உவமானம் ஆயிற்று.

5. முடத்தெங்கின் தன்மையை விளக்குக.

பல்வகை யுதவி வழிபடு பண்பின்

அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே .

நீர் விடுதல் முதலாகிய பலவகை உதவிகளைச் செய்து தன்னைப் பாதுகாக்கும் தன்மை உடையோருக்கு அன்றி அக்குணம் இல்லாத பிறர்க்குதத் தன் இடத்துள்ள காய்களைத் தரும் குற்றம் உடையது வேலிக்கு அப்புறம் வளைந்த முடத்தெங்கு ஆகும்.

பொருள் கொடுத்தல் முதலாகிய பல வகை உதவிகளையும் செய்து தமக்கு வழிபாடு செய்யும் குணம் அல்லாத மாணாக்கருக்குத் தம்மிடத்தில் உள்ள கல்விப் பொருளைத் தரும் குற்றம் உடையவர் ஆசிரியர் ஆகாதவர் ஆதலால், முடத்தெங்கு அவருக்கு உவமானம் ஆயிற்று.

# பிரிவு – 2

## பொது இலக்கணம் - எழுத்தியல்

### கூறு 4 : மாணாக்கர் வரலாறு – கற்கும் வரலாறு

குறிப்பு

**மாணாக்கர் வரலாறு**

**மாணாக்கர் இலக்கணம்**

தன்மகன் ஆசான் மகனே மன்மகன்

பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே

உரைகோ ளாளற் குரைப்பது நூலே.

தன்னுடைய மகன், தன் ஆசிரியன் மகன், அரசன் மகன், பொருளை மிகுதியாகக் கொடுப்போன் வழிபாடு செய்வோன் தன்னாற் சொல்லப்பட்ட உரையை விரைவிலே கற்கும் அறிவுடையோன் ஆகியோருக்கு உரைக்கப்படுவது நூலாகும்.

**மாணாக்கர் வகை:**

அன்ன மாவே மண்ணொடு கிளியே

இல்லிக் குடமா டெருமை நெய்யரி

அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

அன்னத்தையும் பசுவையும் போல்வார் முதன் மாணாக்கர். மண்ணையும் கிளியையும் போல்வார் நடு மாணாக்கர். பொள்ளல் குடத்தையும் ஆட்டையும் எருமையையும் பன்னாடையையும் போல்வார் கடை மாணாக்கர் ஆவர்.

அன்னம் பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரம் குடித்தல் போல, முதல் மாணாக்கர் குணத்தையும் குற்றத்தையும் வேறு பிரித்துக் குணத்தை மாத்திரம் கொள்ளுதலாலும் பசு மிகுந்த புல்லை உடைய இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்த பின்பு ஓரிடத்திற்குப் போய் இருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக்கொண்டு மென்று தின்றல் போல முதன் மாணாக்கர் மிகுந்த கல்வி உடைய ஆசிரியனைக் கண்டால் அக் கல்வியைத் தன்னுள்ளம் நிறையக் கேட்டுக்கொண்டு பின்பு ஓர் இடத்துப் போயிருந்து சிறிது

சிறிதாக நினைவில் கொண்டு வந்து சிந்தித்தலாலும், அவருக்கு அவ் இரண்டும் உவமானம் ஆயிற்று.

மண் உழவர் வருந்திப் பயிர்செய் முயற்சி அளவினதாகிய விளைவைத் தன்கண் காட்டல்போல, இடை மாணாக்கர் ஆசிரியன் வருந்திக் கற்பிக்கும் முயற்சி அளவினதாகிய கல்வி அறிவைத் தம்கண் காட்டுதலாலும், கிளி தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறு ஒன்றையும் சொல்ல மாட்டாமை போல, இடைமாணாக்கர் தமக்குக் கற்பித்த நூல் பொருளை அன்றி வேறொரு நூல் பொருளையும் சொல்ல மாட்டாமையாலும், அவருக்கு அவ்விரண்டும் உவமானம் ஆயிற்று.

குறிப்பு

பொள்ளற் குடம் நீரை வார்க்கும் தோறும் ஒழுக விடுதல் போலக் கடைமாணக்கர் நூல் பொருளைக் கற்பிக்கும் தோறும் மறந்து விடுதலாலும், ஆடு ஒரு செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாது செடிதோறும் போய் மேய்தல் போலக் கடைமாணாக்கர் ஓராசிரியன் இடத்து மிகுந்த கல்வி இருந்தாலும் புலமை நிறையக் கற்றுக்கொள்ளாது பலரிடத்தும் போய்ப் பாடங் கேட்டலாலும், எருமை குளத்து நீரைக் கலக்கிக் குடித்தல் போலக் கடைமாணாக்கர் ஆசிரியனை வருத்திப் பாடங்கேட்டலாலும், பன்னாடை தேன் முதலியவற்றைக் கீழே விட்டு அவற்றில் உள்ள குற்றங்களைப் பற்றிக் கொள்ளுதல் போலக் கடைமாணாக்கர் நல்ல பொருளை மறந்து விட்டுத், தீய பொருளைச் சிந்தித்துப் பற்றிக் கொள்ளுதலாலும், அவருக்கு அந் நான்கும் உவமானம் ஆயிற்று.

**மாணாக்கர் ஆகாதவர் :**

களிமடி மானி காமி கள்வன்

பிணிய னேழை பிணக்கன் சினத்தன்

துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்

தடுமா றுளத்தன் தறுகணன் பாவி

படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

கள்ளுண்டுகளிப்பவன்,சோம்பேறி,ஆணவம்உடையவன்,காமமுடையவன்,கள் வன், நோயாளி, அறிவு இல்லாதவன், மாறுபாடு உடையவன், கோபம் உடையவன், மிகத் தூங்குவோன், மதிநுட்பம் இல்லாதவன், பழைய நூல்களைக் கண்டு அஞ்சித் தடுமாறும் உள்ளத்தை உடையவன், அஞ்சத்தக்கவைகளை அஞ்சாதவன், பாவம் செய்வோன், பொய் பேசுவோன், ஆகிய இப்படிபட்ட வர்களுக்கு நூலைச் சொல்லார் ஆசிரியர்.

**5. பாடம் கேட்டலின் ( கற்றலின் ) வரலாறு**

கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன வார்வத் தனாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர் .

குறிப்பு

தக்க காலத்து பாடங் கேட்கச் செல்லல் வேண்டும். ஆசிரியரை வழிபாடு செய்தல் வேண்டும். வெறுப்பு இல்லாதவனாகி, ஆசிரியன் குணத்தோடு பொருந்தப் பயின்று, அவன் குறிப்பின் வழியிலே சார்ந்து இரு என்று சொன்னபின் இருந்து படி என்று சொன்னபின் படித்துப் பசித்து உண்பவனுக்கு உணவின் மேல் உள்ள ஆசை போலப் பாடங் கேட்டலில் ஆசையுடையவனாகிச் சித்திரப் பாவையைப் போல அவ் அசைவுஅறு குணத்தினோடு அடங்கி, செவி வாயாகவும் நெஞ்சு களன் ஆகவும், முன் கேட்கப்பட்டவற்றை மீண்டுங் கேட்டு அப்பொருள்களை மறந்துவிடாது உள்ளத்தின்கண் நிறைத்துக்கொண்டு போ என்ற பின் போகுதல் பாடம் கேட்டலின வரலாறு என்று சொல்லுவர் புலவர்.

நூல்பயி லியல்பே நுவலின்வழக் கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்.

நூலைக் கற்றலின் இயல்பானது பின்வருமாறு அமையும்.

**வழக்கு அறிதல்** - உலக வழக்கும் செய்யுள் வழக்கும் ஆகிய இருவகை நடையையும் ஆராய்ந்து அறிதல்.

**பாடம் போற்றல்** - மூலபாடங்களை மறவாது பாதுகாத்தல்

**குறிப்பு**

**கேட்டவை நினைத்தல்** - தான் கேட்ட பொருள்களைப் பலகால் சிந்தித்தல்.

**ஆசான் சார்ந்து அவை அமைவரக் கேட்டல்** - ஆசிரியனையடுத்து அவைகளைத் தன் மனத்துள் அமையும்படி மீட்டும் கேட்டல்.

**அம்மாண்பு உடையோர் தம்மொடு பயிறல்**- அக் கற்கும் தொழிலையுடையவரோடு பழகுதல்.

**வினாதல்** - தான் ஐயுற்ற பொருளை அவரிடத்து வினாவுதல்.

**வினாயவை விடுத்தல்** - அவர் வினாவியவைகளுக்குத் தான் உத்தரம்கொடுத்தல்.

என்று சொல்லப்பட்ட இச் செயல்களை முறையாக மாணாக்கன் கொண்டால் அறியாமையானது அவனை மிகுதியும் விட்டு விலகும்.

**பாடங் கேட்டலின் வரலாறு**

ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பிற்

பெருக நூலிற் பிழைபா டிலனே

ஒரு நூலைப் பாடங் கேட்பவன் ஒரு முறை கேட்ட அளவின் அமையாது இரண்டு முறை கேட்டானாயின் அந் நூலிலே மிகுதியும் பிழை படுதல் இலன் ஆவன்.

முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.

மூன்றுமுறை கேட்டான் ஆயின் ஆசிரியன் கற்பித்த முறையை உணர்ந்து பிறர்க்குச் சொல்லுவான்.

ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்

காற்கூ றல்லது பற்றல னாகும்.

ஆசிரியன் கற்பித்த பொருளைத் தன் அறிவினிடத்து நிறையக் கற்றான் ஆயினும் புலமைத் திறத்தில் கால் பங்கு அல்லது அதற்கு அதிகமாகப் பெறாதவன் ஆவன்.

அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்

செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்

மையறு புலமை மாண்புடைத் தாகும்.

அக் கற்கும் தொழிலை உடைய மாணவரோடு பழகும் வகையால் கால் கூறும் தன் மாணாக்கருக்குஞ் சபையாருக்கும் உணர விரித்துரைத்தலால் அரைக் கூறுமாகக் குற்றமற்ற புலமையானது நிரம்புதல் உடைத்தாகும்.

குறிப்பு

**வழிபாடு**

அழலின் நீங்கான் அணுகா னஞ்சி

நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோடு

எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்

அறத்தில் திரியாப் படர்ச்சி வழிபாடே.

குளிர் காய்வோன் விட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்ற நெருப்பைப் போல ஆசிரியனை நினைத்து, அச்சமுற்று விட்டு நீங்கான் ஆகியும் நெருங்கான் ஆகியும் இருந்து விடாது, பின் செல்லும் நிழலைப் போலத் தொடர்ந்து சென்று, அன்பு நிறைந்த சிந்தையுடன் கூடி எத்தன்மையினாலே ஆசிரியனானவன் மகிழ்வான் அத் தன்மையோடு பொருந்தி அறத்தினின்றும் வேறுபடாது நடத்தலானது மாணாக்கன் செய்யும் வழி பாடாகும்.

**சிறப்புப் பாயிரத்து இலக்கணம்**

**சிறப்புப்பாயிரத்துக்குப் பொதுவிதி**

ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை

நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே

கேட்போர் பயனோ டாயெண் பொருளும்

வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

நூல் செய்தோன் பெயரும், நூல் வந்த வழியும் நூல் வழங்கு நிலமும் நூலினது பெயரும் ,இந் நூல் முடிந்த பின்பு இந்நூல் கேட்கத் தகும் என்னும் இயையும் நூலிற் சொல்லப்பட்ட பொருளும் இந்நூல் கேட்டற்கு உரிய அதிகாரிகள் இவர் என்பதும் கேட்டலால் பெறப்படும் பயனும் ஆகிய எட்டுப் பொருளையும் விளங்க உணர்த்துதல் சிறப்புப்பாயிரத்தினது இலக்கணமாகும்.

சிறப்புப்பாயிரத்துக்குப் பொதுவிதி

காலங் களனே காரண மென்றிம்

மூவகை யேற்றி மொழிநரு முளரே.

நூல் செய்த காலமும் நூல் அரங்கேற்றிய சபையும் நூல் செய்தற்குக் காரணமும் என்று இம் மூன்றனையும் அவ் எட்டனோடு கூட்டிப் பதினொன்றாகச் சொல்லுவாரும் சிலர் உளர் .

**நூல் பெயருக்குச் சிறப்புவிதி**

குறிப்பு

முதனூல் கருத்த னளவு மிகுதி

பொருள்செய் வித்தோன் றன்மைமுத னிமித்தினும்

இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே.

ஒரு நூலுக்கு அந் நூலின் முதல் நூலும், அந்நூல் செய்தவனும், அந் நூலின் அளவும், அந்நூலிலே சொல்லப்படுவனவற்றுள் மிகுதியாகிய கூறும், அந் நூலிலே சொல்லப்பட்ட பொருளும், அந்நூல் செய்வோனுக்குப் பொருளுதவி செய்து அதனைச் செய்வித்தவனும், அந்நூலின் குணமும், முதலாகிய காரணங்களாலும்,இடுகுறியானும் பெயர் அமையும்.

முதல் நூலால் பெயர் பெற்றன பாரதம், இராமாயணம் முதலாயின.

கருத்தனால் பெயர் பெற்றன அகத்தியம், தொல்காப்பியம் முதலாயின.

அளவினால் பெயர் பெற்றன நாலடியார் பன்னிரு படலம் முதலாயின.

மிகுதியால் பெயர் பெற்றன களவியல் முதலாயின.

பொருளால் பெயர் பெற்றன அகப்பொருள், புறப்பொருள் முதலாயின.

செய்வித்தோனால் பெயர் பெற்றன சாதவாகனம் முதலாயின.

தன்மையால் பெயர் பெற்றன நன்னூல், சிந்தாமணி முதலாயின.

இடுகுறியால் பெயர் பெற்றன நிகண்டு. கலைக்கோட்டுத் தண்டு முதலாயின.

**நூல் யாப்பு:**

தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்ப்பு

எனத்தகு நூல்யாப்பு ஈரிரண் டென்ப.

விரிந்து கிடந்ததைத் தொகுத்துச் செய்தல். தொக்குக் கிடந்ததைத் விரித்துச் செய்தல். தொகுத்தும் விரித்தும் செய்தல். ஒரு பாடையில் உள்ள நூலை மற்றொரு பாடையிலே திருப்பிச் செய்தல் என்று தக்க நூல் யாப்பானது நால்வகைப்படும் என்று சொல்லுவர் புலவர்.

**குறிப்பு**

**சிறப்புப்பாயிரம் செய்தற்கு உரியார்**

தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்

தன்மா ணாக்கன் தகுமுரை காரனென்

றின்னோர் பாயிர மியம்புதல் கடனே.

தன்னுடைய ஆசிரியனும், தன்னோடு பாடம் கேட்டவனும், தன்னுடைய மாணாக்கனும், தன் நூலுக்குத் தகும் உரையைச் செய்தவனும், என்று சொல்லப்பட்ட இந் நால்வருள் ஒருவர் சிறப்புப் பாயிரத்தைச் சொல்லுதல் முறைமையாகும்.

**சிறப்புப் பாயிரம் பிறர் செய்தற்குக் காரணம்**

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்

தான்றற் புகழ்தல் தகுதி யன்றே.

தோன்றாத நுட்பங்கள் எல்லாம் காட்டிப் பல துறைப்பட்டு விரிந்த நூலைச் செய்து முடித்தாலும், தானே தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் தகுதி அன்றாம்.

**தற்புகழ்ச்சி குற்றம் ஆகா இடங்கள்:**

மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்

தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்

மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினுந்

தன்னை மறுதலை பழித்த காலையுந்

தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோற்கே.

அரசனது சபைக்கு எழுதுஞ் சீட்டுக் கவியிலும் தனது கல்வி வலிமையை அறியாதாரிடத்திலும், பெரிய அவையில் வாதம் செய்து வெல்லும் பொழுதும், தன்னை எதிரி பழித்த காலத்திலும், தன்னைத் தான் புகழ்ந்து கொள்ளலும் புலவனுக்குத் தகும்.

**பாயிரத்தின் இன்றியமையாமை:**

ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்

பாயிரம் இல்லது பனுவ லன்றே.

ஆயிரம் உறுப்புக்களால் விரிந்தது ஆயினும் பாயிரம் இல்லாதது நூல் அன்றாம்.

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்

ஆடமைத்தோ ணல்லார்க் கணியும்போல் - நாடிமுன்

ஐதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்

பெய்துரையா வைத்தார் பெரிது.



மாளிகைக்குச் சித்திரமும், மாநகர்க்குக் கோபுரமும் நடிக்கின்ற மூங்கில் போலும் தோள்களையுடைய மங்கையருக்கு ஆபரணமும் போல நினைத்து அழகிய பொருளைச் சொல்லுகின்ற பாயிரத்தையுரைத்து எவ் வகைப் பட்ட பெரிய நூலுக்கும் முதலிலே பெரும்பாலும் சேர்த்து வைத்தார் ஆசிரியர்.

**பயிற்சி வினாக்கள்:**

1. மாணாக்கரின் வகைகளை விளக்குக.

அன்ன மாவே மண்ணொடு கிளியே

இல்லிக் குடமா டெருமை நெய்யரி

அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

அன்னத்தையும் பசுவையும் போல்வார் முதன் மாணாக்கர். மண்ணையும் கிளியையும் போல்வார் நடு மாணாக்கர். பொள்ளற் குடத்தையும் ஆட்டையும் எருமையையும் பன்னாடையையும் போல்வார் கடை மாணாக்கர் ஆவர்.

அன்னம் பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரம் குடித்தல் போல, முதல் மாணாக்கர் குணத்தையும் குற்றத்தையும் வேறு பிரித்துக் குணத்தை மாத்திரம் கொள்ளுதலாலும் பசு மிகுந்த புல்லை உடைய இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்த பின்பு ஓரிடத்திற்குப் போய் இருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக்கொண்டு மென்று தின்றல் போல முதன் மாணாக்கர் மிகுந்த கல்வி உடைய ஆசிரியனைக் கண்டால் அக் கல்வியைத் தன்னுள்ளம் நிறையக் கேட்டுக்கொண்டு பின்பு ஓர் இடத்துப் போயிருந்து சிறிது சிறிதாக நினைவில் கொண்டு வந்து சிந்தித்தலாலும், அவருக்கு அவ் இரண்டும் உவமானம் ஆயிற்று.

மண் உழவர் வருந்திப் பயிர்செய் முயற்சி அளவினதாகிய விளைவைத் தன்கண் காட்டல்போல, இடை மாணாக்கர் ஆசிரியன் வருந்திக் கற்பிக்கும் முயற்சி அளவினதாகிய கல்வி அறிவைத் தம்கண் காட்டுதலாலும், கிளி தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறு ஒன்றையும் சொல்ல மாட்டாமை போல, இடைமாணாக்கர் தமக்குக்

கற்பித்த நூல் பொருளை அன்றி வேறொரு நூல் பொருளையும் சொல்ல மாட்டாமையாலும், அவருக்கு அவ்விரண்டும் உவமானம் ஆயிற்று.

பொள்ளற் குடம் நீரை வார்க்கும் தோறும் ஒழுக விடுதல் போலக் கடைமாணக்கர் நூல் பொருளைக் கற்பிக்கும் தோறும் மறந்து விடுதலாலும், ஆடு ஒரு செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாது செடிதோறும் போய் மேய்தல் போலக் கடைமாணாக்கர் ஓராசிரியன் இடத்து மிகுந்த கல்வி இருந்தாலும் புலமை நிறையக் கற்றுக்கொள்ளாது பலரிடத்தும் போய்ப் பாடங் கேட்டலாலும், எருமை குளத்து நீரைக் கலக்கிக் குடித்தல் போலக் கடைமாணாக்கர் ஆசிரியனை வருத்திப் பாடங்கேட்டலாலும், பன்னாடை, தேன் முதலியவற்றைக் கீழே விட்டு அவற்றில் உள்ள குற்றங்களைப் பற்றிக் கொள்ளுதல் போலக் கடைமாணாக்கர் நல்ல பொருளை மறந்து விட்டுத், தீய பொருளைச் சிந்தித்துப் பற்றிக் கொள்ளுதலாலும், அவருக்கு அந் நான்கும் உவமானம் ஆயிற்று.

**குறிப்பு**

2. மாணாக்கர் ஆகாதவர் யாவர்?

களிமடி மானி காமி கள்வன்

பிணிய னேழை பிணக்கன் சினத்தன்

துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்

தடுமா றுளத்தன் தறுகணன் பாவி

படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

கள்ளுண்டு களிப்பவன்,சோம்பேறி,ஆணவம் உடையவன்,காமமுடையவன்,கள்வன்,நோயாளி, அறிவில்லாதவன், மாறுபாடு உடையவன், கோபம் உடையவன், மிகத் தூங்குவோன், மதிநுட்பம் இல்லாதவன், பழைய நூல்களைக் கண்டு அஞ்சித் தடுமாறும் உள்ளத்தை உடையவன், அஞ்சத்தக்கவைகளை அஞ்சாதவன், பாவம் செய்வோன், பொய் பேசுவோன், ஆகிய இப்படிபட்ட வர்க்கு நூலைச் சொல்லார் ஆசிரியர்.

3. பாடம் கேட்டலின் ( கற்றலின் ) வரலாற்றினை விவரி?

கோடன் மரபே கூறுங் காலைப்

பொழுதொடு சென்று வழிபடன் முனியான்

குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்

திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்

பருகுவ னன்ன வார்வத் தனாகிச்

குறிப்பு

சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்

செவிவா யாக நெஞ்சுகள னாகக்

கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்

போவெனப் போத லென்மனார் புலவர் .

பாடங் கேட்டலினது வரலாற்றைச் சொல்லும் பொழுது, செல்லத்தகும் காலத்திலே போய், வழிபாடு செய்தலில் வெறுப்பு இல்லாதவனாகி, ஆசிரியன் குணத்தோடு பொருந்தப் பயின்று, அவன் குறிப்பின் வழியிலே சார்ந்து இரு என்று சொன்னபின் இருந்து படி என்று சொன்னபின் படித்துப் பசித்து உண்பவனுக்கு உணவின் மேல் உள்ள ஆசை போலப் பாடங் கேட்டலில் ஆசையுடையவனாகிச் சித்திரப் பாவையைப் போல அவ் அசைவு அறு குணத்தினோடு அடங்கி, செவி வாயாகவும் நெஞ்சு களன் ஆகவும், முன் கேட்கப்பட்டவற்றை மீண்டுங் கேட்டு அப்பொருள்களை மறந்துவிடாது உள்ளத்தின்கண் நிறைத்துக்கொண்டு போ என்ற பின் போகுதல் பாடம் கேட்டலின வரலாறு என்று சொல்லுவர் புலவர்.

4. சிறப்புப்பாயிரம் செய்தற்கு உரியார் யாவர்?

தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்

தன்மா ணாக்கன் தகுமுரை காரனென்

றின்னோர் பாயிர மியம்புதல் கடனே.

தன்னுடைய ஆசிரியனும், தன்னோடு பாடம் கேட்டவனும், தன்னுடைய மாணாக்கனும், தன் நூலுக்குத் தகும் உரையைச் செய்தவனும், என்று சொல்லப்பட்ட இந் நால்வருள் ஒருவர் சிறப்புப் பாயிரத்தைச் சொல்லுதல் முறைமையாகும்.

5.தற்புகழ்ச்சி குற்றம் ஆகா இடங்கள் யாவை?

மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்

தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்

மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினுந்

தன்னை மறுதலை பழித்த காலையுந்

தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோற்கே.

அரசனது சபைக்கு எழுதுஞ் சீட்டுக் கவியிலும் தனது கல்வி வலிமையை அறியாதாரிடத்திலும், பெரிய அவையில் வாதம் செய்து

வெல்லும் பொழுதும், தன்னை எதிரி பழித்த காலத்திலும், தன்னைத் தான் புகழ்ந்து கொள்ளலும் புலவனுக்குத் தகும்.

குறிப்பு

## கூறு 5 :

## நன்னூல் - எழுத்தியல் - எழுத்து – பொது இலக்கணம்

**எழுத்ததிகாரம் - எழுத்தியல்:**

**கடவுள் வணக்கமும் அதிகாரமும்:**

பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த

நான்முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே

பூக்கள் நிறைந்த அசோக மரத்தினது அலங்கரிக்கப்பட்ட நிழலின்கண் எழுந்தருளியிருந்த நான்கு திருமுகங்களை உடைய கடவுளை வணங்கி எழுத்திலக்கணத்தை நன்றாகச் சொல்வேன் யான்.

எல்லாம் வல்ல கடவுளை வணங்கலால் இனிது முடியும் என்பது கருதி நன்கு இயம்புவன் என்று புகுந்தமையின், இது நுதலிப் புகுதல் என்னும் உத்தி ஆகும்.

**எழுத்திலக்கணத்தின் பகுதி**

எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை

முதலீ றிடைநிலை போலி யென்றா

பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

எழுத்திலக்கணம் எழுத்தின் எண்ணும் பெயரும் முறையும், பிறப்பும்,வடிவமும், அளவும், முதல்நிலையும், கடை நிலையும் இடை நிலையும் போலியும் பதமும் புணர்ச்சியும் என்று பன்னிரு பகுதியினை உடைத்தாகும்.

இச் சூத்திரம் தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தி, மேல் வருவன எல்லாம் வகுத்துக் காட்டல்.

இப் பன்னிரு பகுதியுள்ளும், எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் . பதம் புணர்பு என்னும் இரண்டும் புறத்திலக்கணம் என்பது தோன்ற என்றா என்னும் எண்ணிடைச் சொல் கொடுத்துப் பிரித்து ஓதினார்.

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் எழுத்தியல் என ஓர் இயலாகவும் புறத்திலக்கணம் இரண்டனுள் அவ் எழுத்தாலாம் பதத்தைப்

பதவியல் என ஓர் இயலாகவும் அப் பதம் புணரும் புணர்ப்பை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என மூன்று இயலாகவும் ஒத்து முறைவைப் பென்னும் உத்தியால் வைத்தார்.

**எண்:**



**எழுத்தும் எழுத்தின் வகையும்:**

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி

எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

மொழிக்கு முதல் காரணமும் அணுத்திரளின் காரியமும் ஆகிய ஒலியாவது எழுத்து முதல் எழுத்தும் சார்பெழுத்தும் என இரு வகையினை உடைத்தாகும்.

அணுத் திரள் - அணுக்கூட்டம் இங்கே அணு என்றது செவிப்புலனாம் அணுவை, அது ஒலி நுட்பம். மொழிக்கு முதல்காரணம் எழுத்து ஆனாற்போல, எழுத்திற்கு முதல்காரணம் அணுக் கூட்டம் ஆம். அணுக்கூட்டத்தின் காரியம் எழுத்து ஆனாற்போல எழுத்தின் காரியம் மொழியாம்.

காரியமாவது ஆக்கப்பட்டது. காரணமாவது காரியத்திற்கு இன்றி அமையாததாய் அதற்கு முன் காலத்து இருப்பது. முதல் காரணமும் துணைக் காரணமும் எனக் காரணம் இருவகைப்படும். முதல்காரணமாவது காரியத்தோடு ஒற்றுமை உடையது. துணைக்காரணமாவது முதல் காரணத்திற்குத் துணையாய் அது காரியப்படும் அளவும் உடன்நிகழ்வது. குடம்காரியம், அதற்கு முதல்காரணம் மண். துணைக் காரணம் திரிகை. மொழி காரியம், அதனின் வேறு ஆகாது அதனோடு ஒற்றுமை உடையது எழுத்து ஆதலால், அதற்கு எழுத்து முதற்காரணம். எழுத்துக் காரியம், அதனின் வேறு ஆகாது அதனோடு ஒற்றுமை உடையது செவிப்புலனாம் அணு ஆதலால் அதற்கு அவ் அணு முதல் காரணம்.

**முதலெழுத்தின் விரி**

உயிரு முடம்புமா முப்பது முதலே

உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்தும் முதல் எழுத்தாம்.

**பயிற்சி வினாக்கள்:**

1.எழுத்திலக்கணத்தின் பகுதிகள் யாவை?

எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை

முதலீ றிடைநிலை போலி யென்றா

பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

எழுத்திலக்கணம் எழுத்தின் எண்ணும் பெயரும் முறையும், பிறப்பும்,வடிவமும், அளவும், முதல்நிலையும், கடை நிலையும் இடை நிலையும் போலியும் பதமும் புணர்ச்சியும் என்று பன்னிரு பகுதியினை உடைத்தாகும்

## குறிப்பு

இச் சூத்திரம் தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தி, மேல் வருவன எல்லாம் வகுத்துக் காட்டல்.

இப் பன்னிரு பகுதியுள்ளும், எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் . பதம் புணர்பு என்னும் இரண்டும் புறத்திலக்கணம் என்பது தோன்ற என்றா என்னும் எண்ணிடைச் சொல் கொடுத்துப் பிரித்து ஓதினார்.

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் எழுத்தியல் என ஓர் இயலாகவும் புறத்திலக்கணம் இரண்டனுள் அவ் எழுத்தாலாம் பதத்தைப் பதவியல் என ஓர் இயலாகவும் அப் பதம் புணரும் புணர்ப்பை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என மூன்று இயலாகவும் ஓத்து முறைவைப் பென்னும் உத்தியால் வைத்தார்.

2. எழுத்தும் எழுத்தின் வகையும் குறித்து எழுதுக.

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி

எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

மொழிக்கு முதல் காரணமும் அணுத்திரளின் காரியமும் ஆகிய ஒலியாவது எழுத்து முதல் எழுத்தும் சார்பெழுத்தும் என இரு வகையினை உடைத்தாகும்.

அணுத் திரள் - அணுக்கூட்டம் இங்கே அணு என்றது செவிப்புலனாம் அணுவை, அது ஒலி நுட்பம். மொழிக்கு முதல்காரணம் எழுத்து ஆனாற்போல, எழுத்திற்கு முதல்காரணம் அணுக் கூட்டம் ஆம். அணுக்கூட்டத்தின் காரியம் எழுத்து ஆனாற்போல எழுத்தின் காரியம் மொழியாம்.

காரியமாவது ஆக்கப்பட்டது. காரணமாவது காரியத்திற்கு இன்றி அமையாததாய் அதற்கு முன் காலத்து இருப்பது. முதல் காரணமும் துணைக் காரணமும் எனக் காரணம் இருவகைப்படும். முதல்காரணமாவது காரியத்தோடு ஒற்றுமை உடையது. துணைக்காரணமாவது முதல் காரணத்திற்குத் துணையாய் அது காரியப்படும் அளவும் உடன்நிகழ்வது. குடம்காரியம், அதற்கு

முதல்காரணம் மண். துணைக் காரணம் திரிகை. மொழி காரியம், அதனின் வேறு ஆகாது அதனோடு ஒற்றுமை உடையது எழுத்து ஆதலால், அதற்கு எழுத்து முதற்காரணம். எழுத்துக் காரியம், அதனின் வேறு ஆகாது அதனோடு ஒற்றுமை உடையது செவிப்புலனாம் அணு ஆதலால் அதற்கு அவ் அணு முதல் காரணம்.

**குறிப்பு**

3. முதலெழுத்தின் விரி யாது?

உயிரு முடம்புமா முப்பது முதலே

உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்தும் முதல் எழுத்தாம்.

## கூறு 6

## சார்பெழுத்து - இனவெழுத்து – வகைகள்

**சார்பு எழுத்தின் விரி**

உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றள

ப∴கிய இஉ ஐஔ ம∴கான்

உயிர்மெய், முற்றாய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம். ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் ஆகிய பத்தும் சார்பு எழுத்தாகும்.

**சார்பு எழுத்தின் விரி**

உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்

எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை

ஆறே ழ∴கு மிம்முப் பானேழ்

உகர மாறா றைகான் மூன்றே

ஔகா னொன்றே ம∴கான் மூன்றே

ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி

ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

உயிர்மெய் - 216

முற்று ஆய்தம் - 8

உயிர் அளபெடை - 21

ஒற்றளபெடை - 42

குற்றியலிகரம்- 37

குற்றியலுகரம் - 36

ஐகாரக் குறுக்கம் - 3

ஔகாரக் குறுக்கம் - 1

மகரக் குறுக்கம் - 3

ஆய்தக் குறுக்கம் - 2

ஆக டிமாத்தம் சார்பெழுத்தினது மிகுந்த விரி – 369 ஆகும்.

**பெயர்:**

**பெயர் - பொது இலக்கணம்**

இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின

இடுகுறிப் பெயரும் காரணப் பெயரும் ஆகிய இரண்டும் பல பொருளுக்குப் பொதுப்பெயராயும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப் பெயராயும் வருவனவாகும் .

**இடுகுறிப் பெயர்**: ஒரு காரணமும் இன்றி வழங்கி வரும் பெயர்.

**காரணப் பெயர்:** யாதேனும் ஒரு காரணம் காரணமாய் வழங்கிவரும் பெயர்.

மரம் என்பது ஒரு காரணமும் இன்றி வழங்கும் பெயராம்.இது மா, பலா முதலிய பல பொருள்களுக்கும் பொதுவாய் நிற்பதால், இடுகுறிப் பொதுப் பெயர்.

வாழை, தென்னை என்பன, ஒரு காரணமும் இன்றி வழங்கும் பெயராம்.இது ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்பதால், இடுகுறிச் சிறப்புப் பெயர்.

அணி என்பது அணியப்படுதல் ஆகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், இடுவன, தொடுவன கட்டுவன, கவிப்பன முதலிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாய் நிற்கையால் காரணப் பொதுப்பெயர்.

குறிப்பு

முடி - கழல் என்பன, முடியில் கவிக்கப்படுவதும் கழலில் கட்டப்படுவதும் ஆகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால் காரணச் சிறப்புப்பெயர்.

இனி இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் இச்சூத்திரத்திற்கு வேறும் ஒரு பொருள் உரைக்கப்படும். அது வருமாறு :-

குறிப்பு

இடுகுறி காரணப்பெயர் - இடுகுறி என்றும் காரணம் என்றும் சொல்லப்படும் இலக்கணங்களை உடைய பெயர்கள் , பொது - இடுகுறி காரணம் என்னும் இரண்டற்கும் பொதுவாயும் , சிறப்பின - இடுகுறிக்கே சிறப்பாயும் காரணத்திற்கே சிறப்பாயும் வருவனவாம் .

எனவே இடுகுறிப் பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப்பெயர் எனப் பெயர் மூவகைப்படும் என்றார் ஆயிற்று .

காரண இடுகுறிப் பெயராவது, காரணம் கருதிய பொழுது அக் காரணங்களை உடைய பல பொருள்களுக்கும் செல்வதாயும், காரணம்கருதாதபொழுது இடுகுறியளவாய் நின்று ஒவ்வொரு பொருட்கே செல்வதாய் உள்ள பெயராம்.

பொன் என்பது இடுகுறிப் பெயர் . „பொன்னன்' என்பது காரணப் பெயர். முக்கணன், அந்தணன், முள்ளி, கறங்கு என்பன காரண இடுகுறிப்பெயர். முக்கணன் என்பது காரணங்கருதிய பொழுது விநாயகக் கடவுள் முதலிய பலர்க்கும் செல்லுதலாலும், காரணம் கருதாதபொழுது இடுகுறி அளவாய்ச் சிவபெருமானுக்குச் செல்லுதலாலும், காரண இடுகுறிப் பெயர் ஆயிற்று

**எழுத்தின் பெயர்**

அம்முதல் ஈராறு ஆவி, கம்முதன்

மெய்ம்மூ வாறு என விளம்பினர் புலவர்.

நெடுங்கணக்கின் உள் அகரம்முதலிய பன்னிரண்டனையும் உயிர் எழுத்து என்றும் ககரம்முதலிய பதினெட்டனையும் மெய்யெழுத்தென்றும் சொன்னார் சான்றோர்.

**உயிர்:**

அகரம்முதலிய பன்னிரண்டும் உயிர் போலத் தனித்து இயங்கும் வன்மை உடைமையால் உயிர் எனப்பட்டன.

**மெய்:**

ககரம்முதலிய பதினெட்டும் உயிரோடு கூடி அல்லது இயங்கும் வன்மை இல்லாத மெய்போல அகரத்தோடு கூடி அல்லது இயங்கும் வன்மை

இல்லாமையால் மெய் எனவும் பெயர் பெற்றன. இவை உவம ஆகுபெயராய்க் காரணப் பொதுப் பெயராயின.

**குறில்:**

அவற்றுள்,

அ இ உ எ ஒக்குறி லைந்தே.

ஆவியும் மெய்யும் என்பதனுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்தாகும்.

**நெடில்:**

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.

ஆ , ஈ , ஊ , ஏ , ஐ , ஓ , ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்தாகும்.

**சுட்டு:**

அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே.

அ, இ, உ, என்னும் மூன்றும் மொழிக்கு முதலிலே தனித்துச் சுட்டுப் பொருளைக் காட்டவரின் சுட்டு எழுத்தாகும்.

முதல் எனப் பொதுப்படச் சொன்னதினால் அவை புறத்தும் அகத்தும் வரும்.

அக் கொற்றன், இக் கொற்றன் , உக்கொற்றன் - புறத்து வந்தன .

அவன், இவன், உவன் - அகத்து வந்தன .

அகரம் தொலைவில் உள்ள பொருளையும், இகரம் அண்மையில் உள்ள பொருளையும், உகரம் நடுவில் உள்ள பொருளையும் சுட்டுதற்கு வரும்.

**வினா எழுத்து:**

எ யா முதலும் ஆ ஓ வீற்றும்

ஏ யிரு வழியும் வினாவா கும்மே.

எகரமும் யாவும் மொழிக்கு முதலிலும், ஆகாரமும் ஓகாரமும் மொழிக்கு இறுதியிலும் ஏகாரம் இவ் இரண்டிடத்திலும் தனித்து வினாப் பொருளைக் காட்டவரின் வினா எழுத்தாகும்.

இவை புறத்தும் அகத்தும் வரும்.

எக் கொற்றன்? யாங்ஙனம்? - எகரமும் யாவும் முதலிலே புறத்து வந்தன.

## குறிப்பு

எவன்? யாவன்? - எகரமும் யாவும் முதலிலே அகத்து வந்தன.

கொற்றனா? கொற்றனோ? - ஆகாரமும் ஓகாரமும் ஈற்றிலே புறத்து வந்தன.

ஏவன்? கொற்றனே? - ஏகாரம் முதலில் அகத்தும் ஈற்றில் புறத்தும் வந்தது.

**மெய்யெழுத்துகள்:**

மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று வகைப்படும். அவை முறையே பினவருமாறு அமையும்.

**வல்லினம்:**

வல்லினங் க ச ட த ப ற வென வாறே.

க, ச, ட, த, ப, ற என்று ஆறும் வல்லெழுத்தாம். இவை வன்கணம் எனவும் பெயர்பெறும்.

**மெல்லினம்:**

மெல்லினம் ங ஞ ண ந ம ன வென வாறே.

ங, ஞ, ண, ந, ம, ன என்று ஆறும் மெல் எழுத்தாம். இவை மென்கணம் எனவும் பெயர் பெறும்.

**இடையினம்:**

இடையினம் ய ர ல வ ழ ள வென வாறே.

ய, ர, ல, வ, ழ, ள என்று ஆறும் இடை எழுத்தாம். இவை இடைக்கணம் எனவும் பெயர் பெறும்.

**இன எழுத்து**

ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்

திவ்விரண் டோரின மாய்வரன் முறையே.

இனமில்லாத ஐகார ஔகாரங்கள் ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்த முதல் எழுத்துக்கள் இவ் இரண்டு ஓரினமாய் வருதன் முறை, ஆதலால், அவை இன எழுத்தெனப் பெயர்பெறும்.

சுருங்கச் சொல்லல் என்னும் அழகு பற்றி முதல் எழுத்தெனப் பொதுப்படக் கூறினார் ஏற்புழிக் கோடல் என்பதனால், இவ்விரண்டு ஓர்

இனமாய் வருதல் இடையினம் ஒழிந்த மற்றவைகளுக்கே கொள்க என்பது உரையாசிரியரின் விளக்கம் ஆகும்.

அ-ஆ , இ-ஈ , உ-ஊ , எ-ஏ , ஐ-இ , ஒ-ஓ , ஔ-உ

க-ங , ச-ஞ , ட-ண , த-ந , ப-ம ற-ன எனவும் இவ்விரண்டு ஓரினமாய் வந்தன.

**குறிப்பு**

**இனம்:**

தான முயற்சி யளவு பொருள்வடி

வானவொன் றாதியோர் புடையொப் பினமே.

பிறப்பிடமும், தொழிலும், மாத்திரையும் பொருளும், உருவமும் ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக ஒரு புடை ஒத்தலால் இனமாகும்..

முன் காரணம் விளங்காமல் கூறப்பட்ட இனம் என்றதை இங்கே காரணம் காட்டி முடிவு செய்தலால், இச்சூத்திரம் ஏதுவின் முடித்தல் என்னும் உத்தி ஆகும்..

ஆய்தம் தனிநிலை ஆதலினாலும், மற்றைச் சார்பு எழுத்துக்களுக்கு அவ் அவற்றின் முதல் எழுத்துக்களின் பெயர்களே பெயர்களாய் அடங்குதலினாலும் சார்பு எழுத்துக்களுக்குப் பெயர் சொல்லாது அமைத்தார் நன்னூலார்.

**முறை**

சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண்டு அம்முதல்

நடத்தல் தானே முறையா கும்மே.

சிறப்பினாலும் இனத்தினாலும் எழுத்துகள் ஒன்றன் பின் ஒன்றாக நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றை அகரம் முதலாக வழங்குதலே, எழுத்துக்களது முறையாம்.

தனித்து இயங்கும் வன்மை உடைய உயிர் எழுத்துக்கள் அவ்வன்மை இல்லாத மெய் எழுத்துக்களுக்கு முன் நிற்பதும் குறிலினது விகாரமே நெடில் ஆதலால் குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களுக்கு முன் நிற்பதும், வலியவர் மெலியவருக்கு முன் நிற்றல் போல வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்களுக்கு முன் நிற்பதும் சிறப்பினால் எனவும், குற்றெழுத்துக்களுக்குப் பின் அவ் அவற்றிற்கு இனம் ஒத்த நெட்டெழுத்துக்கள் நிற்பதும் வல்லெழுத்துக்களுக்குப் பின் அவ் அவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துக்கள் நிற்பதும் இனத்தினால் எனவும் கொள்க என உரைவகுப்பார் உரையாசிரியர்.

**பயிற்சி வினாக்கள்:**

**1.**சார்பு எழுத்தின் விரி குறித்து எழுதுக.

உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழ:.கு மிம்முப் பானேழ்
உகர மாறா றைகான் மூன்றே
ஔகா னொன்றே ம:.கான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு. முற்று ஆய்தம் எட்டு, உயிர் அளபெடை இருபத்தொன்று , ஒற்று அளபெடை ஆறேழ் குற்றியல் இகரம் முப்பத்தேழு,குற்றியலுகரம் முப்பத்தாறு ஐகாரக் குறுக்கம் மூன்று, ஔகாரக் குறுக்கம் ஒன்று, மகரக் குறுக்கம் மூன்று, ஆய்தக் குறுக்கம் இரண்டுடனே சார்பெழுத்தினது மிகுந்த விரி முந்நூற்று அறுபத்து ஒன்பதாம் என்று சொல்லுவர் புலவர்.

2. பெயர் - பொது இலக்கணத்தை விவரி?

இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின

இடுகுறிப் பெயரும் காரணப் பெயரும் ஆகிய இரண்டும் பல பொருளுக்குப் பொதுப்பெயராயும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப் பெயராயும் வருவனவாம் .

**இடுகுறிப் பெயர்**: ஒரு காரணமும் பற்றாது வழங்கி வரும் பெயர்.

**காரணப் பெயர்:** யாதேனும் ஒரு காரணம் பற்றி வழங்கிவரும் பெயர்.

மரம் என்பது ஒரு காரணமும் பற்றாது வழங்கும் பெயராய் மா, பலா முதலிய பல பொருள்களுக்கும் பொதுவாய் நிற்பதால், இடுகுறிப் பொதுப் பெயர்.

வாழை, தென்னை என்பன, ஒரு காரணமும் பற்றாது வழங்கும் பெயராய், ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்பதால், இடுகுறிச் சிறப்புப் பெயர்.

அணி என்பது அணியப்படுதல் ஆகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், இடுவன, தொடுவன கட்டுவன, கவிப்பன முதலிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாய் நிற்கையால் காரணப் பொதுப்பெயர்.

முடி - கழல் என்பன, முடியில் கவிக்கப்படுவதும் கழலில் கட்டப்படுவதும் ஆகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால் காரணச் சிறப்புப்பெயர்.

இனி இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் இச்சூத்திரத்திற்கு வேறும் ஒரு பொருள் உரைக்கப்படும். அது வருமாறு :-

இடுகுறி காரணப்பெயர் - இடுகுறி என்றும் காரணம் என்றும் சொல்லப்படும் இலக்கணங்களை உடைய பெயர்கள் , பொது - இடுகுறி காரணம் என்னும் இரண்டற்கும் பொதுவாயும் , சிறப்பின - இடுகுறிக்கே சிறப்பாயும் காரணத்திற்கே சிறப்பாயும் வருவனவாம் .

எனவே இடுகுறிப் பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப்பெயர் எனப் பெயர் மூவகைப்படும் என்றார் ஆயிற்று .

காரண இடுகுறிப் பெயராவது, காரணம் கருதிய பொழுது அக் காரணங்களை உடைய பல பொருள்களுக்கும் செல்வதாயும், காரணம்கருதாதபொழுது இடுகுறியளவாய் நின்று ஒவ்வொரு பொருட்கே செல்வதாய் உள்ள பெயராம்.

பொன் என்பது இடுகுறிப் பெயர் . „பொன்னன்' என்பது காரணப் பெயர். முக்கணன், அந்தணன், முள்ளி, கறங்கு என்பன காரண இடுகுறிப்பெயர். முக்கணன் என்பது காரணங்கருதிய பொழுது விநாயகக் கடவுள் முதலிய பலர்க்கும் செல்லுதலாலும், காரணம் கருதாதபொழுது இடுகுறி அளவாய்ச் சிவபெருமானுக்குச் செல்லுதலாலும், காரண இடுகுறிப் பெயர் ஆயிற்று.

## குறிப்பு

3. வினா எழுத்துகள் என்பன யாவை?

எ யா முதலும் ஆ ஓ வீற்றும்

ஏ யிரு வழியும் வினாவா கும்மே.

எகரமும் யாவும் மொழிக்கு முதலிலும், ஆகாரமும் ஓகாரமும் மொழிக்கு இறுதியிலும் ஏகாரம் இவ் இரண்டிடத்திலும் தனித்து வினாப் பொருளைக் காட்டவரின் வினா எழுத்தாகும்.

இவை புறத்தும் அகத்தும் வரும்.

எக் கொற்றன்? யாங்ஙனம்? - எகரமும் யாவும் முதலிலே புறத்து வந்தன.

எவன்? யாவன்? - எகரமும் யாவும் முதலிலே அகத்து வந்தன.

கொற்றனா? கொற்றனோ? - ஆகாரமும் ஓகாரமும் ஈற்றிலே புறத்து வந்தன.

குறிப்பு

ஏவன்? கொற்றனே? - ஏகாரம் முதலில் அகத்தும் ஈற்றில் புறத்தும் வந்தது.

4. இனம் என்பதனை விளக்குக.

தான முயற்சி யளவு பொருள்வடி

வானவொன் றாதியோர் புடையொப் பினமே.

பிறப்பிடமும், தொழிலும், மாத்திரையும் பொருளும், உருவமும் ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக ஒரு புடை ஒத்தலால் இனமாகும்..

முன் காரணம் விளங்காமல் கூறப்பட்ட இனம் என்றதை இங்கே காரணம் காட்டி முடிவு செய்தலால், இச்சூத்திரம் ஏதுவின் முடித்தல் என்னும் உத்தி ஆகும்..

ஆய்தம் தனிநிலை ஆதலினாலும், மற்றைச் சார்பு எழுத்துக்களுக்கு அவ் அவற்றின் முதல் எழுத்துக்களின் பெயர்களே பெயர்களாய் அடங்குதலினாலும் சார்பு எழுத்துக்களுக்குப் பெயர் சொல்லாது அமைத்தார் நன்னூலார்.

5. முறை – விவரி.

சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்

நடத்த றானே முறையா கும்மே.

சிறப்பினாலும் இனத்தினாலும் பொருந்தி உலகத்தில் அகரம் முதலாக வழங்குதலே, எழுத்துக்களது முறையாம் .

தனித்து இயங்கும் வன்மை உடைய உயிர் எழுத்துக்கள் அவ்வன்மை இல்லாத மெய் எழுத்துக்களுக்கு முன் நிற்பதும் குறிலினது விகாரமே நெடில் ஆதலால் குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களுக்கு முன் நிற்பதும், வலியவர் மெலியவருக்கு முன் நிற்றல் போல வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்களுக்கு முன் நிற்பதும் சிறப்பினால் எனவும், குற்றெழுத்துக்களுக்குப் பின் அவ் அவற்றிற்கு இனம் ஒத்த நெட்டெழுத்துக்கள் நிற்பதும் வல்லெழுத்துக்களுக்குப் பின் அவ் அவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துக்கள் நிற்பதும் இனத்தினால் எனவும் கொள்க என உரைவகுப்பார் உரையாசிரியர்.

## கூறு 7 : பிறப்பு – பொது இலக்கணம்

குறிப்பு

**பிறப்பின் பொது விதி**

நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப

எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி

மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்

வெவ்வே றெழுத்தொலி யால்வரல் பிறப்பே.

குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியால், உள்ளே நின்ற ,உதானன்' என்னும் காற்றானது எழுப்ப எழுகின்ற செவிப்புலனாம் அணுக் கூட்டம் மார்பு, கழுத்து, தலை, மூக்கு என்னும் நான்கு இடத்தையும் பொருந்தி நிற்கும். பின் அது உதடு, நாக்கு, பல்லு, மேல் வாயும் ஆகிய நான்கனுடைய முயற்சிகளால் வேறு வேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல் அவற்றின் பிறப்பாம்.

**முதல் எழுத்துக்களின் இடப்பிறப்பு**

அவ்வழி,

ஆவி யிடைமை யிடமிட றாகும்

மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

முன் சொன்ன வழியால் பிறக்கும் இடத்து உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடம் கழுத்தாகும். மெல்லினம் மூக்கு இடமாகப் கொண்டு பிறக்கும். வல்லினம் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும்.

**அ, ஆ**

அவற்றுள்,

முயற்சியுள் அ ஆ வங்காப் புடைய.

உயிர் எழுத்துக்களுள் அ, ஆ இரண்டும் நால்வகை முயற்சியுள் அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலை ( வாயைத் திறத்தல் ) உடையனவாய்ப் பிறக்கும்.

**இ ஈ எ ஏ ஐ:**

இ ஈ எ ஏ ஐ அங் காப்போடு

அண்பன் முதனா விளிம்புற வருமே.

இ, ஈ, எ, ஏ, ஐ ஐந்தும் வாயைத்திறக்கும் முயற்சியோடு மேல்வாய்ப் பல்லை நாக்கு அடியினது ஓரமானது பொருந்தப் பிறக்கும்.

**உ ஊ ஒ ஓ ஔ:**

உ ஊ ஒ ஓ ஔவிதழ் குவிவே.

**குறிப்பு**

உ, ஊ, ஒ, ஓ, ஔ ஐந்தும் உதடுகள் குவிதலால் பிறக்கும்.

**க, ங, ச, ஞ, ட, ண:**

கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை

நுனிநா வண்ண முறமுறை வருமே.

கவ்வும் ஙவ்வும் நாக்கின் அடி மேல்வாய் அடியை பொருந்தப் பிறக்கும். சவ்வும் ஞவ்வும் நாக்கின் நடு மேல்வாய் நடுவைப் பொருந்தப் பிறக்கும். டவ்வும் ணவ்வும் நாக்கின் கடை மேல்வாய்க் கடையையும் பொருந்த இம்முறையே பிறக்கும்.

**த,ந:**

அண்பல் அடிநா முடியுறத் தநவரும்.

மேல்வாய்ப் பல்லினது அடியை நாக்கு நுனி பொருந்த தவ்வும் நவ்வும் பிறக்கும்.

**ப, ம:**

மீ கீழ் இதழுறப் பம்மப் பிறக்கும்.

மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த பவ்வும் மவ்வும் பிறக்கும்.

**ய:**

அடிநா அடியணம் உறயத் தோன்றும்.

நாக்கின் அடியானது மேல்வாய் அடியைப் பொருந்த யகரமானது பிறக்கும்.

**ர,ழ:**

அண்ண நுனிநா வருட ரழவரும்.

மேல்வாயை நாக்கு நுனியானது தடவ ரவ்வும் ழவ்வும் பிறக்கும்.

**ல,ள:**

அண்பன் முதலும் அண்ணமும் முறையின்

நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்

லகார எகாரம்ஆய் இரண்டும் பிறக்கும்

மேல்வாய்ப் பல்லடியை நா ஓரமானது தடித்து நெருங்க லகாரமாகியும் மேல்வாயை நா ஓரமானது தடித்துத் தடவ ளகாரமாகியும் இரண்டு எழுத்துக்களும் இம்முறையே பிறக்கும்.

குறிப்பு

**வ:**

மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

மேல்வாய்ப் பல்லைக் கீழ் உதடு பொருந்த வகரமானது பிறக்கும்.

**ற,ன:**

அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.

மேல்வாயை நாக்கு நுனி மிகப் பொருந்தின் றவ்வும் னவ்வும் பிறக்கும் .

**சார்பு எழுத்துக்கு இடமுயற்சி:**

ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி

சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய.

ஆய்தம் பிறத்தற்கு இடந்தலை தொழில் வாயைத் திறத்தலாம் ஆய்தம் ஒழிந்த மற்றைச் சார்பெழுத்துக்களும் இடப்பிறப்பு முயற்சிப் பிறப்புக்களினாலே தத்தம் முதல் எழுத்துக்களை ஒப்பனவாம்.

**பிறப்புக்குப் புறனடை:**

எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்

திரிபும் தத்தமில் சிறிதுள ஆகும்.

பல எழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டன. எனினும் உயர்த்திக் கூறுதலும் தாழ்த்திக் கூறுதலும், உயர்த்தியும் தாழ்த்தியும் கூறுதலும் ஆகிய எழுத்திற்குரிய ஒலி முயற்சியால், ஒன்றற்கு ஒன்று பிறப்பு வேறுபாடுகளும் அவ்வவற்றின் கண்ணே சிறிது சிறிது உள்ளனவாகும்.

**உயிர்மெய்**

புள்ளிவிட்டு அவ்வொடு முன்னுரு வாகியும்

ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்

உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்

பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்.

**குறிப்பு**

மெய்யெழுத்துகள் பதினெட்டும் அகரத்தொடுசேரும் போது புள்ளியை இழந்து முன்னைய வடிவையே தன் வடிவாகப்பெறும். அகரம் நீங்கலாகப் பிற எழுத்துகளுடன் கூடும் போது வடிவம் வேறுபடும். புள்ளியை விட்டு அகரத்தோடு கூடிய வழி அவ்விட்ட உருவே உருவாகியும் அஃது ஒழிந்த உயிர்களோடு கூடியவழி உருவு வேறுபட்டும் தன் மாத்திரை தோன்றாது உயிர் மாத்திரையே தன் மாத்திரையாய்க் கொள்ளும். தன்னைச் சார்ந்த உயிர் வடிவை ஒழித்து, தன் திரிந்த வடிவத்தையே வடிவமாகக் கொள்ளும்.உயிரும் மெய்யுமாகிய இரண்டு இடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயர் பெறும். சொல்லும்போது மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, உயிர்மெய் எழுத்து வரும்.

புள்ளி இழத்தல் - க் + அ = க

வடிவம் மாறுதல்:

ஆவோடு சேரப் பக்கத்தில் புள்ளி பெறும் - க் + ஆ = கா

இ, ஈ வொடு சேர மேல் விலங்கு பெறும் - க் + இ = கி, க் + ஈ = கீ

உ, ஊ வொடு சேர கீழ் விலங்கு பெறும் - க் + உ = கு, க் + ஊ = கூ

எ,ஏ வொடு சேர கொம்பு பெறும் - க் + ஏ = கெ, க் + ஏ = கே

ஒ, ஓ வொடு சேர கொம்பும் காலும் பெறும் - க் + ஒ = கொ, க் + ஓ = கோ

பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய் மேலும் தனித்தனி ஏறி வருதலால், உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு ஆகும்.

**முற்றாய்தம்**

ஆய்தம் அடுப்பின் கூட்டினைப் போல மூன்று புள்ளிகளை உடையதாய் வரும்.கேடயம் என்னும் ஆயுதத்தின் புற வடிவினை ஒத்து அமைந்துள்ளமையால் இது ஆய்த எழுத்து எனப்பட்டது.

குறியதன் முன்ன ராய்தப் புள்ளி

உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

புள்ளி வடிவினதாகிய ஆய்தம் குற்றெழுத்தின் முன்னதாய் உயிரோடு கூடிய வல்லெழுத்து ஆறனுள் ஒன்றன் மேலதாய் ஏறி வரும்.

எஃகு, கஃசு, கஃடு, அஃது, கஃபு, பஃறு என வரும்.

இச் சூத்திரம் மேற்கோள் ஆதலால், தான் எடுத்து மொழிதல் என்னும் உத்தி .

வல்லின வகையால் இயல்பாக வரும் ஆய்தம் ஆறு,

அவ் + கடிய, - அ∴கடிய எனத் திரிதல் என்னும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று,

**குறிப்பு**

ஆகான், அ∴கான் என விரித்தல் என்னும் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று,

ஆக முற்றாய்தம் எட்டாகும்.

**உயிரளபெடை**

இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்

அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

செய்யுளில் ஓசை குறையின் மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்து ஏழும் அவ் ஓசையை நிறைக்கத் தம்தம் மாத்திரையின் மிக்கு ஒலிக்கும் அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு. அவற்றின் பின் அது அதற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும் . இனமில்லாத ஐகாரம் இகரத்தையும் ஔகாரம் உகரத்தையும் இனமாகப் பெற்று வரும்.

**அசைநிறை ( இசைநிறை )**

செய்யுளில் சீரும் தளையும் சிதையாமல் இருக்க அளபெடுப்பது அசைநிறை அல்லது இசைநிறை அல்லது செய்யுளிசை அளபெடை எனப்படும்.

''ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை'' - “ஓதல்'' என்பதில் ஓ என்னும் நெட்டெழுத்து மொழிக்கு முதலில் அளபெடுத்தது.

''உறாஅர்க் குறுநோய் உரைப்பாய். - “உறார்'' என்பதில் ஆ என்னும் நெட்டெழுத்து இடையில் அளபெடுத்தது.

''அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப் பிற்கு நல்ல படாஅ பறை” -,,படா’ என்பதில் ஆ என்னும் நெட்டெழுத்துக் கடையிலும் அளபெடுத்தது.

''கடலைச் செறாஅஅய் வாழிய நெஞ்சு.” - “செறாய்'' என்பதில் ஆ என்னும் நெட்டெழுத்து ஈரளபெடுத்து வந்தது.

**குறிப்பு**

**இன்னிசை அளபெடை:**

செய்யுளோசை குன்றாவிடத்தும் இன்னிசை நிறைக்கவும் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு. இன்னிசை நிறைக்க வரும் அளபெடையாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இன்னிசை நிறைத்தற் பொருட்டு அளபெடுத்து வரும்.

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே

எடுப்பதூஉ மெல்லா மழை."இதனுள் ,

"கெடுப்பதும்'', "எடுப்பதும்'' என நிற்கும் இடத்தும் செய்யுள் ஓசை குன்றாது எனினும் இன்னிசை நிறைத்தல் பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்து வந்தது.

**சொல்லிசை அளபெடை:**

சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை ஆவது பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுத்து வபரும்.

உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்

வரனசைஇ யின்னு முளேன்."

''உரனசை'', ''வரனசை'' என நிற்பினும் செய்யுள் ஓசை குன்றாது ஆயினும், விருப்பம் எனப் பொருள்படும் நசை என்னும் பெயர்ச்சொல், விரும்பி என வினை எச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு ,,நசைஇ' என அளபெடுத்து அமைந்தது.

நெட்டெழுத்து ஏழும் மொழிக்கு முதல், இடை, கடை என்னும் மூன்றிடத்தும் அளபெடுக்கும் எனவே, உயிரளபெடை இருபத்தொன்று ஆகும். ஔகாரம் மொழிக்கு இடையிலும் இறுதியிலும் வாராமையால் அவ்விரண்டும் நீங்க நின்ற உயிரளபெடை பத்தொன்பது, அப்பத்தொன்பதோடு இன்னிசை நிறைக்க வரும் அளபெடை சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை என்னும் இரண்டும் கூட்ட, உயிரளபெடை இருபத்தொன்றாக அமையும்.

7 நெட்டெழுத்துகள் மொழிமுதல் இடை, கடை என்னும் மூன்று இடங்களில் அளபெடுக்கும் 7 x 3 = 21

ஔகாரம் மொழிக்கு இடையிலும் ஈற்றிலும் அளபெடுக்காது 2 – 2 =19

சொல்லிசை அளபெடை 1

இன்னிசை அளபெடை 1

மொத்தம் = 21----------

**ஒற்றளபெடை**

ஙஞண நமன வயலள வாய்தம்

அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை

மிகலே யவற்றின் குறியாம் வேறே.

இசை கெடின் குறில் இணையின் கீழும் குறிலின் கீழும் மொழிக்கு நடுவிலும் கடையிலும் நின்ற ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள என்னும் இப்பத்து ஆய்தமும் ஆகிய பதினோரெழுத்தும் அவ் ஓசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும் அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின் பின் அவ்வெழுத்துக்களே வரிவடிவில் வேறு அறிகுறியாய் வந்து நிற்கும்.

குறிப்பு

‘‘இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்

கலங்ங்கு நெஞ்சமிலை காண்.” - குறில் இணைக்கீழ் இடையில் ,,ங’ அளபெடுத்து.

எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா

னெங்ங் கெனத்திரிவா ரின். - எங்கு’ என்பதில் குறில்கீழ் இடையில் ஙகரம் அளபெடுத்தது.

‘‘மடங்ங் கலந்த மனனே களத்து

விடங்ங் கலந்தானை வேண்டு. - “மடம்’’ என்பதில் குறில் இணைக் கீழ்க் கடையில் அளபெடுத்தது.

‘‘அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து

நங்ங் களங்கறுப்பா நாம்.” ,,அம்’ என்பதில் குறில் கீழ்க் கடையில் மகரந் திரிந்த ஙகரம் அளபெடுத்தது.

“வில.ஃ.ஃ.கி வீங்கிரு ளோட்டுமே மாத

ரில.ஃ.ஃ.கு முத்தி னினம்.” “வில.ஃ.கி’’ என்பதில் குறில் இணைக்கீழ் இடையில் ஆய்தம் அளபெடுத்தது.

‘‘எ.ஃ.ஃ. கிலங்கிய கையரா யின்னுயிர்

குறிப்பு

வெ.ஃ.கு வார்க்கில்லை வீடு".“எ.ஃ.கு” என்பதில் குறில்கீழ் இடையில் ஆய்தம் அளபெடுத்தது.

பதினோர் ஒற்றும் குறிலிணைக் கீழ் இடை குறில் கீழ் இடை குறில் இணைக் கீழ்க்கடை குறில் கீழ்க்கடை என்னும் நான்கு இடத்தும் அளபெடுக்கும். எனவே ஒற்றளபெடை நாற்பத்து நான்காதல் பெறப்படும், ஆய்தம் ஙகரம் போல விதி ஈறாகவும் வாராமையால் அதற்குக் குறில் இணைக் கீழ்க்கடை குறில் கீழ்க்கடை என்னும் இரண்டு இடத்தைக் கழிக்க, ஒற்றளபெடை நாற்பத்திரண்டாகும்.

பத்து மெய்களும் குறில்கீழ், குறில்இணை கீழ்

மொழிக்கு இடையிலும் ஈற்றிலும் அளபெடுக்கும் 10 x 4 = 40

ஆய்தம் மொழி இடையில் மட்டும் வரும் 2

42

**குற்றியலிகரம்**

யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்

அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.

யகரத்தை முதலிலே உடைய சொல் வரக் குற்றியலுகரந் திரிந்த இகரமும் அசைச் சொல்லாகிய மியா என்பதின் மகரத்தின் மேல் இருக்கிற இகரமும் குற்றியலிகரங்களாம் .

நாகு + யாது = நாகி யாது

எ.ஃ.கு + யாது = எ.ஃ.கி யாது

வரகு + யாது = வரகி யாது

கொக்கு+ யாது = கொக்கி யாது

குரங்கு + யாது = குரங்கி யாது

தெள்கு + யாது = தெள்கியாது எனவும் ,

கேண் + மியா = கேண்மியா

சென் + மியா = சென்மியா எனவும் வரும்.

பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறு அசைச்சொல் மியாவினால் ஆகிய குற்றியலிகரம் ஒன்றும் சேர குற்றியலிகரம் முப்பத்து ஏழாய் அமையும்

குற்றிலுகரத்தால் வரும் குற்றிலிகரம் = 36

தனிமொழிக் குற்றியலிகரம் = 1

37

--------

குறிப்பு

**குற்றியலுகரம்**

நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடைத்

தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்

அ∴கும் பிறமேற் றொடரவும் பெறுமே.

தனி நெட.டெழுத்துகள் ஏழு, ஆய்தம் ஒன்று, சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஒளகாரம் நீங்கலாகிய உயிர் பதினொன்று, வல்லெழுத்து ஆறும் மெல்லெழுத்து ஆறும் வல்லெழுத்துக்களோடு தொடராத வகரம் நீங்கிய இடை எழுத்து ஐந்து ஆகிய முப்பத்தாறனுள் ஒன்றினானது ஈற்றுக்கு அயல் எழுத்தாக வர சொல்லின் இறுதியில் வல்லெழுத்துக்களுள் யதாயினும் ஒன்றன் மேல் ஏறி வரும் உகரமானது, தன் மாத்திரையில் குறுகும். இவற்றுள் ஆய்தத்தொடர் முதலிய ஐந்து தொடரும், வன்மை ஊர் உகரத்தை ஈற்று அயலெழுத்துத் தொடர்தலே அன்றிப் பிற எழுத்துக்களுள் ஒன்றும் பலவும் அவ் ஈற்று அயலெழுத்தின் மேலே தொடரவும் பெறும். பிறமேல் தொடரின் உயிர்த்தொடர் எனப்படும், உயிர் என்பது குறில் நெடில் இரண்டும் ஆகும்.

நாகு, காசு, நீறு - நெடில் தொடர்க் குற்றியலுகரம். - 7

எ∴கு, க∴சு, இருப∴து - ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம். 1

வரகு, பலாசு, கயிறு, போவது, ஒன்பது, இறும்பூது - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். – 11 ( ஔ இடையில் வாராது )

கொக்கு, கச்சு, பற்று, பிண்ணாக்கு, விளையாட்டு, குருத்து - வன்தொடர்க் குற்றியலுகரம். - 6

சங்கு, பஞ்சு, அம்பு, கன்று, பட்டாங்கு, சுண்ணாம்பு - மென்தொடர்க் குற்றியலுகரம். -6

வெய்து, சால்பு, தெள்கு - இடைத்தொடர்க் குற்றியலுகரம். 5 ( வகரம் வல்லினத்துடன் வாராது )

இங்கே ஈற்று அயலெழுத்தைக் கொண்டு குற்றியலுகரத்தை அறு வகையாகச் சொல்லியது, பின்னே புணரியலில் எடுத்து ஆளுதற் பொருட்டு ஆகும்.இது முன்மொழிந்து கோடல் என்னும் உத்தி.

மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால்,

நுந்தை என்னும் முறைப்பெயரின் முன் நின்ற நகர மெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரமும் குறுகும் என்பர் உரரையாசிரியர்.

குறிப்பு

மெல்லின மெய்யின் மேலும் இடையின மெய்யின் மேலும் ஏறி நிற்கும் உகரமும், தனிக் குற்றெழுத்தினாலே தொடரப் பட்ட வல்லின மெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரமும் முற்றியலுகரமாம்.

**ஐகார ஔகாரக் குறுக்கங்கள்**

தற்சுட்டளபொழி ஐம்மூ வழியும்

நையும் ஔவு முதலற் றாகும்.

ஐகாரம்,தன்னைக் குறித்துத் தன் பெயர் சொல்லும் அளவில் குறுகாது, சொல்லுக்கு முதல் இடை கடைகளிலே எங்கே நிற்பினும் தன் மாத்திரையிற் குறுகும், ஔகாரமும் தன் பெயர் சொல்லும் அளவில் குறுகாது சொல்லுக்கு முதலிலே தன் மாத்திரையில் குறுகும். எனவே இடவகையால் ஐகாரக் குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும் ஆக வரும்.

ஐப்பசி - ஐகாரம் மொழிக்கு முதலில் குறைந்தது.

இடையன் - ஐகாரம் மொழிக்கு இடையில் குறைந்தது

குவளை – ஐகாரம் மொழிக்கு இறுதியில் குறைந்தது.

மௌவல் - ஔகாரம் மொழிக்கு முதலில் குறைந்தது,

**மகரக் குறுக்கம்**

ண ன முன்னும் வ.ஃகான் மிசையுமக் குறுகும்.

ணகர னகரங்களில் பின் வரும் மகரமும் வகரத்தின் மேல் ஏறி நிற்கும் மகரமும் தன் மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும் எனவே மகரக் குறுக்கம் இடவகையால் மூன்றாகும்.

“வெருளினும் எல்லாம் வெருளும.ஃ. தன்றி

மருளினு மெல்லா மருண்ம்”

“திசையறி மீகானும் போன்ம்”

தரும் வளவன் - வருமொழியின் வகரத்தால் குறுகியது,

இவற்றுள், மருளும் என்பது “மருண்ம்” எனவும், போலும் என்பது “போன்ம்” எனவும் வருதலால், செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச்

சொல்லின் ஈற்றயலிலே உகரங் கெட நின்ற ளகர லகரந் திரிந்த ணகர னகரமே இங்கே சொல்லிய ணகர னகரம் ஆகும்.

மகரக் குறுக்கம் இடவகையால் மூன்றாகும்.

**ஆய்தக் குறுக்கம்**

லளவீற் றியைபினா மாய்த ம.ᐧ.கும்.

லகர ளகார ஈற்றுப் புணர்ச்சியில் ஆகின்ற ஆய்தம் தன் அரை மாத்திரையில் குறுகும். ஆய்தக் குறுக்கம் இட வகையால் இரண்டாகும்.

“குறில்வழி லளத்தவ் வணையி னாய்த

மாகவும் பெறூஉ மல்வழி யானே”

என்ற ஆய்தம், அ.ᐧ.கும் - தன் அரை மாத்திரையில் குறுகும்.

கல் + தீது - க.ᐧ.றீது,

முள் + தீது - மு.ᐧ.டீது என வரும்.

ஆய்தக் குறுக்கம் இட வகையால் இரண்டாகும்.

**உருவம்**

தொல்லை வடிவின எல்லா எழுத்துமாண்டு

எய்து எகர ஒகரமெய் புள்ளி.

எல்லா எழுத்துக்களும் பல்வேறு வகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவினை உடையனவாம் அவ் வடிவுடையனவாய் வரும் இடத்து எகரமும் ஒகரமும் பதினெட்டு மெய்களும் புள்ளியைப் பெறும்.

எ, ஒ எனவும் க், ங், ச், ஞ், ட், ண் , த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் எனவும் வரும்.

**மாத்திரை:**

**எழுத்துகளின் மாத்திரை**

மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே

குறிலோ டையெளக் குறுக்க மொற்றள

பரையொற்றிஉக் குறுக்க மாய்தம்

கால்குறண் ம.ᐧ.கா னாய்த மாத்திரை.

**குறிப்பு**

குறிப்பு

உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றாம்,நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டாம், குற்றெழுத்திற்கும் ஐகாரக் குறுக்கத்திற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும் ஒற்றளபெடைக்கும் தனித்தனி மாத்திரை ஒன்றாகும்.

மெய்யெழுத்திற்கும் குற்றியலிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் ஆய்தத்திற்கும் தனித்தனி மாத்திரை அரையாம்.

மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் தனித்தனி மாத்திரை.

மேலே "உயிர் அளவாய்" ( சூத். 89) என்றதனால், இங்கே உயிர்மெய்க்கு மாத்திரை கூறாதொழிந்தார். இது உரைத்தாம் என்னும் உத்தி.

''செறாஅ அய் வாழிய நெஞ்சு" என உயிரளபெடை சிறுபான்மை நான்கு மாத்திரையினதாய் வருதலும் உண்டு.

**மாத்திரை:**

இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை.

மனிதருடைய இயல்பாக உண்டாகுகின்ற கண் இமைக்கின்ற பொழுதும் கைந்நொடிக்கின்ற பொழுதும் ஒரு மாத்திரை எனப்படும்.

இவ் அளவுகருவியை முன்கூறாது பின்கூறியது பின்னது நிறுத்தல் என்னும் உத்தி.

**மாத்திரைக்குப் புறனடை**

ஆவியும் ஒற்றும் ஔவிறந்து இசைத்தலும்

மேவும் இசைவிளி பண்டமாற் றாதியின்.

முதலெழுத்தும் சார்புமாகிய உயிரெழுத்துக்களும் அவ்விருவகை மெய்யெழுத்துக்களும் முன் சொன்ன அளவை கடந்து இசைத்தல், அழைத்தல், பண்டமாற்றல் ஆகிய இடங்களில் மிக்கு ஒலிக்கும். ஆதி என்றதனால் முறையீடு , புலம்பல் முதலியவைகளும் கொள்க என்பார் உரையாசிரியர்

இராகத்தில் அளவிறந்து ஒலிக்கும் இடத்து, உயிர் பன்னிரண்டு மாத்திரை ஈறாகவும் ஒலிக்கும் என்றார் இசை நூலார் ; இது பிறநூல் முடிந்தது தான் உடன்படுதல் என்னும் உத்தி.

இச் சூத்திரம் ''இயல்பெழும்'' (சூ. 100) என்னும் சூத்திரத்தைத் தழுவாது அதற்கு முன் நின்ற "மூன்றுயிரளபு" (சூ.99) என்னும் சூத்திரத்தைத் தழுவி நின்றதனாலே, தவளைப்பாய்த்து.

**முதனிலை**

குறிப்பு

**மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்**

பன்னீ ருயிருங் க ச த ந ப ம வ ய

ஞ ங வீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்து உயிர் ஏறிய மெய்யெழுத்துக்களும் சொல்லுக்கு முதலாகும்

அடை, ஆடு, இசை, ஈதல், உடை, ஊசி, எறி, ஏணி, ஐவர், ஒதி, ஓந்தி, ஔவியம் - பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வந்தது. ( 1 X 12 = 12 )

களி சங்கம், தளி, நன்மை, பகை, மணம், வள்ளல், யவனர், ஞமலி, அங்ஙனம் - க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்து உயிர் ஏறிய மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வந்தன. ( 6 X 12 = 72 )

கடி, காடு. கிடை, கீற்று, குயில், கூண்டு, கெண்டை, கேள்வன்,கை, கொடி, கோலம்,கௌவை - இவ்வாறே ஏனையனவும் வரும்.உயிர் போலத் தனித்து முதலாக மாட்டாமையால், உயிர்மெய் என்றார் ஆசிரியர். இது இன்னது அல்லது இது என மொழிதல் என்னும் உத்தி .

**பொதுவிதியுட் சிறப்புவிதி**

**வகர மெய்:**

உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்.

உ, ஊ, ஒ, ஓ, என்னும் நான்குமல்லாத எட்டு உயிர்களோடும் வகரமெய் மொழிக்கு முதலாய் வரும்.

வளி, வாளி, விளி, வீறு, வெளி, வேளை, வைகல், வெளவு, என வரும்.

**யகர மெய்:**

அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்.

அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரோடும் யகர மெய் மொழிக்கு முதலாகும்.

யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம் எனவரும் .

**ஞகர மெய்:**

அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல்.

குறிப்பு

அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரோடும் ஞகர மெய் மொழிக்கு முதலாகும் .

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று என வரும்.

**ஙகர உயிர்மெய்:**

சுட்டு யா எகர வினாவழி யவ்வை

ஒட்டி ஙவ்வு முதலா கும்மே.

மூன்று சுட்டும் யா வினாவும் எகர வினாவுமாகிய இடைச்சொற்களின் பின், அகரத்தைச் சேர்ந்து ஙகர மெய்யும் மொழிக்கு முதலாகும்.

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் என வரும்.

ஙனம் என்பது இடத்தையும் தன்மையையும் உணர்த்தும் பல பொருள் ஒரு சொல்.

ஒரு விதத்தினாலே முதலாகையால், ஙவ்வும் என இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார் . முதல் ஆகாது என்பவருக்கு உடன்படுதலும் மறுத்தலும் ஆதலால், இது பிறர் தம் மதம் மேற் கொண்டு களைவு என்னும் மதம் ஆகும்.

**இறுதிநிலை**

**மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்:**

ஆவி ஞணநமன யரலவ ழளமெய்

சாயும் உகரநா லாறு மீறே.

தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு உயிர்களும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள எ உன்னும் பதினொரு மெய்களும் குற்றிய லுகரமும் ஆகிய இருபத்து நான்கு எழுத்தும் மொழிக்கு ஈறாகும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ - நெடில் தனித்து ஈறாதல்.

விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, கௌ – மெய்யுடன் கூடி ஈறாயிற்று

உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அ∴கு – மெய் தனித்து ஈறாயிற்று.

எ∴கு – குற்றிலுகர ஈறு - இது உகரத்துள் அடங்கினும் புணர்ச்சி கருத்தித் தனித்துக் கூறினார்.

**குறிப்பு**

**சிலவற்றிற்குச் சிறப்பு விதி**

குற்றுயிர் அளபின் ஈறாம் எகரம்

மெய்யொடேடு ஏலாது ஒந்நவ்வொடு ஆம் ஔக்

ககர வகரமோடு ஆகும் என்ப.

அ, இ, உ, எ, ஒ என்னும் குறிலின் அளபெடையிலே வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து ஈறாகும் எகரம் மெய்யோடு ஈறாகாது. ஒகரம் நகர மெய் ஒன்றுடன் மட்டும் ஈறாகும். ஔகாரங் ககர வகரங்கள் என்னும் இரண்டு மெய்களுடன் ஈறாகும்.

பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ , கோஒ, கௌஉ

நொ

கௌ, வௌ

**எழுத்தினது முதலும் ஈறும்**

நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே.

மெய்முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நின்ற வழியில் உயிர்மெய்க்கு மெய் முதலாகவும் உயிர் ஈறாகும் அமையும்.

**இடைநிலை மயக்கம்**

க ச த ப ஒழித்த வீரேழன் கூட்டம்

மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்

டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை

மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.

க, ச, த, ப என்னும் நான்கையும் நீக்கிய பதினான்கு மெய்களும் பிற மெய்களோடு கூடும் கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஆகும். ர,ழ என்னும் இரண்டனையும் நீக்கி மற்றைப் பதினாறு மெய்களும் தம்மோடு கூடும் கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கம் ஆகும். இவ் இரு வகை மயக்கமும் ஒரு மொழிக்கும் தொடர் மொழிக்கும் நடுவில் வரும். உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறை இல்லை, வேண்டியவாறே மயங்கும். இதனுள் கூட்டம் எனினும் மயக்கம் எனினும் ஒக்கும்.

இதனால் மெய்யுடன் மெய்மயங்கும் இடத்துக் க, ச, த, ப என்னும் நான்கும் தம்மொடு தாமே மயங்கும் என்பதும் ர, ழ என்னும் இரண்டும்

தம்மொடு பிறவே மயங்கும் என்பதும் ஒழிந்த பன்னிரண்டு மெய்யும் தம்மொடு தாமும் பிறவும் மயங்கும் என்பதும் பெறப்படும்.



உயிரும் மெய்யும் மயங்கல்:

தம்மொடு தாம் மயங்குவன – க, ச, த. ப – சுக்கு, கச்சு, பத்து, உப்பு

தம்மொடு பிற மயங்குவன – ர, ழ - சேர்தல், வாழ்தல்

தம்மொடு தாமும் பிறவும் மயங்குவன – ங, ஞ, ட, ண, ந, ம, ய, ல, வ, ள, ற, ன – அங்ஙனம், அங்கு, மஞ்ஞை, மஞ்சள்

**வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்பு விதி**

ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

ஙகரத்தின் முன் ககரமும் வகரத்தின் முன் யகரமும் மயங்கும்.

கங்கன் - ஙகரத்தின் முன் ககரமும் மயங்கியது,

தெவ் யாது - வகரத்தின் முன் யகரமும் மயங்கியது.

ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்.

ஞகர நகரங்களின் முன் அவற்றிற்கு இனமாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும் .

கஞ்சன் - சகரம் மயங்கியது

உரிஞ் யாது – யகரம் மயங்கியது.

கந்தன் - தகரம் மயங்கியது

பொருந் யாது - யகரம் மயங்கியது.

டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

டகர றகரங்களின் முன் க, ச, ப என்னும் மூன்று மெய்களும் மயங்கும்.

கட்கம் - ககரம் மயங்கியது.

கட்சி - சகரம் மயங்கியது.

திட்பம் - பகரம் மயங்கியது.

கற்க – ககரம் மயங்கியது.

கற்சிறார் - சகரம் மயங்கியது.

கற்ப - பகரம் மயங்கியது.

ண ன முன் னினங்கச வவ்வரும்.

ணகர னகரங்களின் முன், இனம் அவற்றிற்கு இனமாகிய டகர றகரங்களும், க ச ஞ ப ம ய வ வரும் இவ்வேழு மெய்களும் மயங்கும்.

விண்டு – டகரம் மயங்கியது.

வெண்கலம் - ககரம் மயங்கியது.

வெண்சோறு – சகரம் மயங்கியது.

வெண் ஞமலி – ஞமலி மயங்கியது

வெண்பல் - பகரம் மயங்கியது.

வெண்மலர் – மகரம் மயங்கியது.

மண் யாது – யகரம் மயங்கியது.

மண் வலிது – வகரம் மயங்கியது.

புன்றலை – றகரம் மயங்கியது.

புன்கண் - ககரம் மயங்கியது.

புன்செய் - சகரம் மயங்கியது.

புன்ஞமலி - பகரம் மயங்கியது.

புன்பயிர் - பகரம் மயங்கியது.

புன்மலர் - மகரம் மயங்கியது.

பொன் யாது - யகரம் மயங்கியது.

பொன் வலிது - வகரம் மயங்கியது.

மம்முன் ப ய வ மயங்கு மென்ப.

மகரத்தின் முன் ப, ய, வ என்னும் மூன்று மெய்களும் மயங்கும் என்று சொல்லுவர் புலவர் .

கம்பன் - பகரம் மயங்கியது.

கலம் யாது - யகரம் மயங்கியது

## குறிப்பு

கலம் வலிது - வகரம் மயங்கியது

யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

ய, ர, ழ என்னும் மூன்று மெய்களின் முன் மொழிக்கு முதலாக நின்ற பத்து மெய்களும் மயங்கும்.

குறிப்பு

வேய் கடிது – யகரத்தின் முன் ககரம் மயங்கியது.

வேர் கடிது - ரகரத்தின் முன் ககரம் மயங்கியது.

வீழ் கடிது - ழகரத்தின் முன் ககரம் மயங்கியது.

இவ்வாறே வேய், வேர், வீழ் என்பனவற்றை சிறிது,பெரிது, தீது, நீண்டது, மாண்டது, ஞான்றது, யாது, வலிது - இவற்றையும் அம் மூன்றுடன் கூட்டி எழுதுதல் வேண்டும்.

வேய்ங் குழல், ஆர்ங் கோடு, பாழ்ங் கிணறு என்பதாயும் வரும்.

லளமுன் கசப வயவொன் றும்மே.

லகர ளகரங் களின் முன் ககரம் முதலிய இவ் ஐந்தும் மயங்கும்.

வேல் கடிது - ககர மயக்கம்.

வாள் கடிது – ளகர மயக்கம்.

வேல் சிறிது – சகர மயக்கம்.

வாள் சிறிது - சகர மயக்கம்.

பெரிது, வலிது, யாது என்பனவற்றையும் கூட்டிச் சொல்லுதல் வேண்டும்.

**உடனிலை மெய்ம்மயக்கத்தின் சிறப்பு விதி**

ரழவல்லன தம்முற் றாமுட னிலையும்.

ரகர ழகரம் அல்லாத பதினாறு மெய்களும் தமக்கு முன் தாம் உடனின்று மயங்கும் .

பக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், அட்டு, அண்ணம், அத்து, அந்நீர், அப்பு, அம்மை, அய்யம், அல்லி, அவ்வை, அள்ளல்,அற்றம், அன்னை என வரும்.

தனிமெய்யுடன் தனிமெய்யாய் மயங்குவன இவை.

**மொழிக்கு உறுப்பாக மயங்காதவை:**

ய ர ழ வொற் றின்முன் க ச த ப ங ச ந ம

ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா.

ய, ர, ழ என்னும் மூன்று மெய்களும் இவற்றின்முன் மயங்கும் என்ற பத்து மெய்களுள் க, ச, த ப, ங, ஞ, ந, ம, முதலாகிய இவ்வெட்டு மெய்களும்,தனி மெய்யும் உயிர்மெய்யுமாகி மயங்குதல் அன்றியும், ஈரொற்றாயும் மயங்கும். ரகார ழகார மெய்கள் தனிக் குறில்கீழ் ஒற்றாக மயங்காது.

வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை

வேய்ச்சிறை, வேர்ச்சிறை, வீழ்ச்சிறை

வேய்த்தலை, வேர்த்தலை, வீழ்த்தலை

வேய்ப்புறம், வேர்ப்புறம், வீழ்ப்புறம்

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு

தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை

காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம்

வேய்ம்புறம், ஈர்ம்பணை, பாழ்ம்பதி எனவும் வரும்.

குறிப்பு

**செய்யுளில் ஈரொற்றாய் நிற்கும் எழுத்துக்கள்:**

லளமெய் திரிந்த னணமுன் மகாரம்

நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.

லகார ளகார ஒற்றுத் திரிந்த னகார ணகார முன்வரும் மகர ஒற்று முன் சொன்ன படியே குறுகி அந்த மெய்களுடனே ஈரொற்றுடன் பாட்டினுள் நிலையாகும்.

''திசையறி மீகானும் போன்ம்'' எனவும்,

''மயிலியன் மாதர் மருண்ம்'' எனவும் வரும்.

**முதனிலை இறுதிநிலை இடைநிலைகளுக்குப் புறனடை:**

தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்

இம்முறை மாறியு மியலு மென்ப.

தம்முடைய பெயர்களைச் சொல்லி நிலைமொழி வருமொழிகளாகப் புணர்க்கும் இடத்து மொழி முதலுக்கும் இடை நிலை மயக்கத்திற்கும் இப்படி விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய எல்லா

குறிப்பு

எழுத்துக்களும் முதலாகியும் மயங்கியும் வரும் என்று சொல்லுவர் புலவர்.

இப்படி எல்லா எழுத்துக்களும் தனித்தனி அதற்கு அதுவே முதலாம் எனவே, ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப் பட்டனவும் ஆகிய எல்லா எழுத்துக்களும் தனித்தனி அதற்கு அதுவே ஈறாம் எனத் தானே விளங்குதலால், ஈறும் என மிகைபடக் கூறாது ஒழிந்தார்.

அவற்றுள், லள∴கான் முன்னர் யவ்வும் தோன்றும்" இதிலே லகரம் முதலாகியும், கூனிறுதி ளகர மெய்யோடு மயங்கியும் வந்தது.

**பயிற்சி வினாக்கள்:**

**1.** பிறப்பின் பொது விதி குறித்து எழுதுக.

நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப

எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி

மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்

வெவ்வே றெழுத்தொலி யால்வரல் பிறப்பே.

குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியால், உள்ளே நின்ற ,உதானன்' என்னும் காற்றானது எழுப்ப எழுகின்ற செவிப்புலனாம் அணுத்திரள் மார்பும் கழுத்தும் தலையும் நாசியுமாகிய நான்கு இடத்தையும் பொருந்தி உதடும் நாக்கும் பல்லும் மேல் வாயும் ஆகிய நான்கனுடைய முயற்சிகளால் வேறு வேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல் அவற்றின் பிறப்பாம்.

2. உயிரளபெடை குறித்து எழுதுக.

இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்

அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

பாட்டில் ஓசை குறையின் மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்து ஏழும் அவ் ஓசையை நிறைக்கத் தம்தம் மாத்திரையின் மிக்கு ஒலிக்கும் அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு. அவற்றின் பின் அது அதற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும்.

''ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை'' - "ஓதல்'' என்பதில் ஓ என்னும் நெட்டெழுத்து மொழிக்கு முதலில் அளபெடுத்தது.

''உறாஅர்க் குறுநோய் உரைப்பாய். - "உறார்'' என்பதில் ஆ என்னும் நெட்டெழுத்து இடையில் அளபெடுத்தது.

குறிப்பு

‘‘அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப் பிற்கு நல்ல படாஅ பறை” -,படா’ என்பதில் ஆ என்னும் நெட்டெழுத்துக் கடையிலும் அளபெடுத்தது.

‘‘கடலைச் செறாஅஅய் வாழிய நெஞ்சு.” - “செறாய்’’ என்பதில் ஆ என்னும் நெட்டெழுத்து ஈரளபெடுத்து வந்தது.

செய்யுளோசை குன்றாவிடத்தும் இன்னிசை நிறைக்கவும் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு. இன்னிசை நிறைக்க வரும் அளபெடையாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இன்னிசை நிறைத்தற் பொருட்டு அளபெடுத்து வரும்.சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை ஆவது பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுத்து வபரும்.

கடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே

எடுப்பதூஉ மெல்லா மழை.”இதனுள் ,

“கெடுப்பதும்’’, “எடுப்பதும்’’ என நிற்கும் இடத்தும் செய்யுள் ஓசை குன்றாது எனினும் இன்னிசை நிறைத்தல் பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்து வந்தது.

உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்

வரனசைஇ யின்னு முளேன்.”

‘‘உரனசை’’, ‘‘வரனசை’’ என நிற்பினும் செய்யுள் ஓசை குன்றாது ஆயினும், விருப்பம் எனப் பொருள்படும் நசை என்னும் பெயர்ச்சொல், விரும்பி என வினை எச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு ,,நசைஇ’ என அளபெடுத்து அமைந்தது.

நெட்டெழுத்து ஏழும் மொழிக்கு முதல், இடை, கடை என்னும் மூன்றிடத்தும் அளபெடுக்கும் எனவே, உயிரளபெடை இருபத்தொன்று ஆகும். ஔகாரம் மொழிக்கு இடையிலும் இறுதியிலும் வாராமையால் அவ்விரண்டும் நீங்க நின்ற உயிரளபெடை பத்தொன்பது, அப்பத்தொன்பதோடு இன்னிசை நிறைக்க வரும் அளபெடை சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை என்னும் இரண்டும் கூட்ட, உயிரளபெடை இருபத்தொன்றாக அமையும்.

3. குற்றியலுகரத்தினை விளக்கி வரைக.

> நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடைத்
>
> தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
>
> அஃ்கும் பிறமேற் றொடரவும் பெறுமே.

குறிப்பு

தனி நெட.டெழுத்துகள் ஏழு, ஆய்தம் ஒன்று, சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கலாகிய உயிர் பதினொன்று, வல்லெழுத்து ஆறும் மெல்லெழுத்து ஆறும் வல்லெழுத்துக்களோடு தொடராத வகரம் நீங்கிய இடை எழுத்து ஐந்து ஆகிய முப்பத்தாறனுள் ஒன்றினானது ஈற்றுக்கு அயல் எழுத்தாக வர சொல்லின் இறுதியில் வல்லெழுத்துக்களுள் யதாயினும் ஒன்றன் மேல் ஏறி வரும் உகரமானது, தன் மாத்திரையில் குறுகும். இவற்றுள் ஆய்தத்தொடர் முதலிய ஐந்து தொடரும், வன்மை ஊர் உகரத்தை ஈற்று அயலெழுத்துத் தொடர்தலே அன்றிப் பிற எழுத்துக்களுள் ஒன்றும் பலவும் அவ் ஈற்று அயலெழுத்தின் மேலே தொடரவும் பெறும். பிறமேல் தொடரின் உயிர்த்தொடர் எனப்படும், உயிர் என்பது குறில் நெடில் இரண்டும் ஆகும்.

நாகு, காசு, நீறு - நெடில் தொடர்க் குற்றியலுகரம்.

எ.்.கு, க.்.சு, இருப.்.து - ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்.

வரகு, பலாசு, கயிறு, போவது, ஒன்பது, இறும்பூது - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

கொக்கு, கச்சு, பற்று, பிண்ணாக்கு, விளையாட்டு, குருத்து - வன்தொடர்க் குற்றியலுகரம்.

சங்கு, பஞ்சு, அம்பு, கன்று, பட்டாங்கு, சுண்ணாம்பு - மென்தொடர்க் குற்றியலுகரம்.

வெய்து, சால்பு, தெள்கு - இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

இங்கே ஈற்று அயலெழுத்தைக் கொண்டு குற்றியலுகரத்தை அறு வகையாகச் சொல்லியது, பின்னே புணரியலில் எடுத்து ஆளுதற் பொருட்டு என்க,இது முன்மொழிந்து கோடல் என்னும் உத்தி. மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால், நுந்தை என்னும் முறைப்பெயரின் முன் நின்ற நகர மெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரமும் குறுகும் என்பர் உரையாசிரியர்.

மெல்லின மெய்யின் மேலும் இடையின மெய்யின் மேலும் ஏறி நிற்கும் உகரமும், தனிக் குற்றெழுத்தினாலே தொடரப் பட்ட வல்லின மெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரமும் முற்றியலுகரமாம்.

4. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் குறித்து எழுதுக.

க, ச, த, ப என்னும் நான்கையும் நீக்கிய பதினான்கு மெய்களும் பிற மெய்களோடு கூடும் கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஆகும்.

ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

ஙகரத்தின் முன் ககரமும் வகரத்தின் முன் யகரமும் மயங்கும்.

கங்கன் - ஙகரத்தின் முன் ககரமும் மயங்கியது,

தெவ் யாது - வகரத்தின் முன் யகரமும் மயங்கியது.

ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்.

ஞகர நகரங்களின் முன் அவற்றிற்கு இனமாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும் .

கஞ்சன் - சகரம் மயங்கியது

உரிஞ் யாது – யகரம் மயங்கியது.

கந்தன் - தகரம் மயங்கியது

பொருந் யாது - யகரம் மயங்கியது.

டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

டகர றகரங்களின் முன் க, ச, ப என்னும் மூன்று மெய்களும் மயங்கும்.

கட்கம் - ககரம் மயங்கியது.

கட்சி - சகரம் மயங்கியது.

திட்பம் - பகரம் மயங்கியது.

கற்க – ககரம் மயங்கியது.

கற்சிறார் - சகரம் மயங்கியது.

கற்ப - பகரம் மயங்கியது.

ண ன முன் னினங்கச வவ்வரும்.

ணகர னகரங்களின் முன், இனம் அவற்றிற்கு இனமாகிய டகர றகரங்களும், க ச ஞ ப ம ய வ வரும் இவ்வேழு மெய்களும் மயங்கும்.

விண்டு – டகரம் மயங்கியது.

வெண்கலம் - ககரம் மயங்கியது.

வெண்சோறு – சகரம் மயங்கியது.

வெண் ஞமலி – ஞமலி மயங்கியது

## குறிப்பு

*Self-Instructional Material*

வெண்பல் - பகரம் மயங்கியது.

வெண்மலர் – மகரம் மயங்கியது.

மண் யாது – யகரம் மயங்கியது.

மண் வலிது – வகரம் மயங்கியது.

புன்றலை – றகரம் மயங்கியது.

புன்கண் - ககரம் மயங்கியது.

புன்செய் - சகரம் மயங்கியது.

புன்ஞமலி - பகரம் மயங்கியது.

புன்பயிர் - பகரம் மயங்கியது.

புன்மலர் - மகரம் மயங்கியது.

பொன் யாது - யகரம் மயங்கியது.

பொன் வலிது - வகரம் மயங்கியது.

மம்முன் ப ய வ மயங்கு மென்ப.

மகரத்தின் முன் ப, ய, வ என்னும் மூன்று மெய்களும் மயங்கும் என்று சொல்லுவர் புலவர் .

கம்பன் - பகரம் மயங்கியது.

கலம் யாது - யகரம் மயங்கியது

கலம் வலிது - வகரம் மயங்கியது

யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

ய, ர, ழ என்னும் மூன்று மெய்களின் முன் மொழிக்கு முதலாக நின்ற பத்து மெய்களும் மயங்கும்.

வேய் கடிது – யகரத்தின் முன் ககரம் மயங்கியது.

வேர் கடிது - ரகரத்தின் முன் ககரம் மயங்கியது.

வீழ் கடிது - ழகரத்தின் முன் ககரம் மயங்கியது.

இவ்வாறே வேய், வேர், வீழ் என்பனவற்றை சிறிது,பெரிது, தீது, நீண்டது, மாண்டது, ஞான்றது, யாது, வலிது - இவற்றையும் அம் மூன்றுடன் கூட்டி எழுதுதல் வேண்டும்.

குறிப்பு

வேய்ங் குழல், ஆர்ங் கோடு, பாழ்ங் கிணறு என்பதாயும் வரும்.

லளமுன் கசப வயவொன் றும்மே.

லகர ளகரங் களின் முன் ககரம் முதலிய இவ் ஐந்தும் மயங்கும்.

வேல் கடிது - ககர மயக்கம்.

வாள் கடிது – ளகர மயக்கம்.

வேல் சிறிது – சகர மயக்கம்.

வாள் சிறிது - சகர மயக்கம்.

பெரிது, வலிது, யாது என்பனவற்றையும் கூட்டிச் சொல்லுதல் வேண்டும்.

4. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் யாவை?

பன்னீ ருயிருங் க ச த ந ப ம வ ய
ஞ ங வீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்து உயிர் ஏறிய மெய்யெழுத்துக்களும் சொல்லுக்கு முதலாகும் .

அடை, ஆடை, இயல், ஈதல், உண்மை, ஊடல் எறி, ஏணி, ஐவர், ஒதி, ஓந்தி, ஔவியம் - பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வந்தது.

களி, சங்கம், தளி, நன்மை, பகை, மணம், வள்ளல், யவனர், ஞமலி, அங்ஙனம் - க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் பத்து உயிர் ஏறிய மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வந்தன.

உயிர் போலத் தனித்து முதலாக மாட்டாமையால், உயிர்மெய் என்றார் ஆசிரியர். இது இன்னது அல்லது இது என மொழிதல் என்னும் உத்தி .

சிறப்புவிதி:

உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்.

உ, ஊ, ஒ, ஓ, என்னும் நான்குமல்லாத எட்டு உயிர்களோடும் வகரமெய் மொழிக்கு முதலாய் வரும்.

வளி , வாளி , விளி , வீறு , வெளி , வேளை , வைகல் , வௌவு , என வரும்.

அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்.

அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரோடும் யகர மெய் மொழிக்கு முதலாகும்.

யவனர் , யானை , யுகம் , யூகி , யோகி , யௌவனம் எனவரும் .

அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல்.

குறிப்பு

அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரோடும் ஞகர மெய் மொழிக்கு முதலாகும் .

ஞமலி , ஞாலம் , ஞெகிழி , ஞொள்கிற்று என வரும் .

சுட்டியா வெகர வினாவழி யவ்வை

ஒட்டி ஙவ்வு முதலா கும்மே.

மூன்று சுட்டும் யா வினாவும் எகர வினாவுமாகிய இடைச்சொற்களின் பின், அகரத்தைச் சேர்ந்து ஙகர மெய்யும் மொழிக்கு முதலாகும்.

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் என வரும்.

ஙனம் என்பது இடத்தையும் தன்மையையும் உணர்த்தும் பல பொருள் ஒரு சொல்.

ஒரு விதத்தினாலே முதலாகையால், ஙவ்வும் என இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார் . முதல் ஆகாது என்பவருக்கு உடன்படுதலும் மறுத்தலும் ஆதலால், இது பிறர் தம் மதம் மேற் கொண்டு களைவு என்னும் மதம் ஆகும்.

## கூறு 8 : போலி – நன்னூலார் விதி

மொழியுள் ஓர் எழுத்து வர வேண்டிய இடத்தில் பிறிதோர் எழுத்து வந்து நின்று பொருள் மாறாமல் அமையுமானால் அது போலி எனப்படும்.

**மொழி யிறுதிப் போலி**

மகர விறுதி ய.்.றிணைப் பெயரின்

னகரமோ டுறழா நடப்பன வுளவே.

பால்பகா அ.்.றிணைப் பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகர மெய் னகர மெய்யோடு ஒத்து நடப்பவை உண்டு.

மகரம் னகரத்தோடு ஒத்து வருதலாவது பெயரின் இறுதியிலே மகரம் வருகின்ற இடத்து னகரம் வந்து நிற்பினும் வேற்றுமை இன்றி பொருள் வலருதலாகும். இம் மகரம் குறிலிணைக் கீழ் மகரம் ஆகும்.

அகம்-அகன்

நிலம்-நிலன்

இவ் இறுதிப்போலியை முன்னரே உணர்த்தியமையால் சுரும்பு-சுரும்பர், வண்டு-வண்டர் என மென்தொடர்க் குற்றியலுகரப் பெயர் இறுதி உகரம் அன்பு என்பதனோடு ஒத்து வருதலும்.

பந்தல்-பந்தர், சாம்பல்-சாம்பர் எனச் சில லகர மெய் ஈற்றுப் பெயரின் இறுதி லகர மெய் ரகர மெய்யோடு ஒத்து வருதலும் ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**மொழிமுதல் போலி - மொழி இடைப் போலி:**

அ ஐ முதலிடை ஒக்குஞ் சஞயமுன்.

சகர ஞகர யகரங்களுக்கு முன் வருமாயின் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் அகரமும் ஐகாரமும் வேறுபாடின்றி தம்முள் ஒத்து நடக்கும்.

பசல்-பைசல்

மஞ்சு-மைஞ்சு

மயல்-மையல்

அமச்சு - அமைச்சு

இலஞ்சி - இலைஞ்சி

அரயர் - அரையர் என வரும்.

**மொழி இடைப் போலி:**

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி

ஞ.்.கா னுறழும் என்மரும் உளரே.

சொல்லுக்கு நடுவே சில இடங்களில் ஐகாரத்தின் பின்னும் யகர மெய்யின் பின்னும் இயல்பாய் வரும் நகர மெய்யினோடு ஞகரமெய் வேறுபாடின்றி ஒத்து நடக்கும்.

மைந்நின்ற மைஞ்ஞின்ற,

ஐந்நூறு - ஐஞ்ஞூறு – ஐயின் பின் ஞகார நகரங்கள் போலியாயின.

செய்ந்நின்ற - செய்ஞ்ஞின்ற -

சேய்நலூர் - சேய்ஞலூர், - யவின் பின் ஞகார நகரங்கள் போலியாயின.

**குறிப்பு**

மண்யாத்த கோட்ட மழகளிறு – "மண்ஞாத்த கோட்ட மழகளிறு."

பொன்யாத்த தார் – "பொன்ஞாத்த தார். எனவும் வரும்.

**சந்தியக்கரம்: ( ஐ ஔ அமையும் முறை )**

குறிப்பு

அம்மு னிகரம் யகர மென்றிவை

எய்தி னையயொத் திசைக்கு மவ்வோ

டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

அகரத்தின்முன் இகரமும் யகரமும் என்று சொல்லப்பட்ட இவை தம்முள் ஒத்துப் பொருந்தினால் ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும். அகரத்தோடு உகரமும் வகர மெய்யும் தம்முள் ஒத்து ஒரு தன்மையனவாகப் பொருந்தினால் ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்.

யகர வகர மெய்கள் இடையில் வந்தமையும்.

மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாத தனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால் - அகரக் கூறும் இகரக் கூறும் தம்முள் ஒத்து எகரம் ஒலிக்கும், அகரக் கூறும் உகரக் கூறும் தம்முள் ஒத்து ஒகர மொலிக்கும் என்பதனையும் ஏற்றுக்கொள்க என்பார் உரையாசிரியர்.

ஐயர் – அய்யர்

ஔவை – அவ்வை

**எழுத்துச் சாரியைகள்:**

வேறாகி நிற்கும் இரண்டு மொழிகளுள் ஒன்றினைச் சார்ந்து நிற்பது சாரியை எனப்படும்.இச் சாரியை மொழிச்சாரியை, எழுத்துச் சாரியை என இரு வகைப்படும். எழுத்தை உலிக்கப் பயன்படுவது எழுத்துச் சாரியை எனப்படும்.

மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்

ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்

விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற.

மெய்கள் அகரச் சாரியையும் உயிர் நெடில்கள் காரச் சாரியையும் பெறும். உயிர்களுள் ஐகார ஔகாரங்கள் காரச் சாரியையுடனே கான் சாரியையும் பெறும். உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் காரம்,கான் என்னும் இரண்டுடனே கரச் சாரியையும் பெறும்.

மெய்க ளவ்வும் என்னாது அகரமும் என்றதனால், இப்படியே கரங் காரங் கான் வரின், அவை சாரியையாகிய, அகரத்தினது சாரியை எனக் கொள்க.

குற்றெழுத்தோடு கான் சாரியை புணரும் போது இடையே ஆய்தம் விரிந்தமையும்.

மெய்கள் சாரியை பெறாதும் உயிர்மெய் நெடில்கள் சாரியை பெற்றும் வருதலில்லை.

க, ங எனவும்,

ஆகாரம், ஐகாரம், ஔகாரம் எனவும்,

ஐகான், ஔகான் எனவும்,

அகாரம், அ..கான், அகரம், மகாரம்,

ம..கான், மகரம் எனவும் வரும்.

விகற்பத்தின் முடித்தல் என்னும் உத்தியால் மேல் விரிந்து முடிந்து கிடந்தனவற்றை விளக்கவேண்டி இங்கே தொகுத்து முடித்தலால்,இச் சூத்திரம் முடிந்தது முடித்தல் என்னும் உத்தியால் அமைந்தது ஆகும்.

**இவ் இயலுக்குப் புறனடை:**

மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே.

இவ்வெழுத்துக்கள் பதமாயினும் அப் பதம் தம்மோடும் உருபோடும் புணர்ந்தாலும் முன் சொல்லப் பட்ட அப்பத்திலக்கணத்தையும் உடையனவாகும்.

**பயிற்சி வினாக்கள்:**

1. மொழிமுதல் போலி - மொழி இடைப் போலி குறித்து எழுதுக.

அ ஐ முதலிடை ஒக்குஞ் சஞயமுன்.

சகர ஞகர யகரங்களுக்கு முன் வருமாயின் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் அகரமும் ஐகாரமும் வேறுபாடின்றி தம்முள் ஒத்து நடக்கும்.

பசல்-பைசல்

மஞ்சு-மைஞ்சு

மயல்-மையல்

அமச்சு - அமைச்சு

குறிப்பு

குறிப்பு

இலஞ்சி - இலைஞ்சி

அரயர் - அரையர் என வரும்.

2. சந்தியக்கரம் என்றால் என்ன?

அம்மு னிகரம் யகர மென்றிவை

எய்தி னையயொத் திசைக்கு மவ்வோ

டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

அகரத்தின்முன் இகரமும் யகரமும் என்று சொல்லப்பட்ட இவை தம்முள் ஒத்துப் பொருந்தினால் ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும். அகரத்தோடு உகரமும் வகர மெய்யும் தம்முள் ஒத்து ஒரு தன்மையனவாகப் பொருந்தினால் ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்.

யகர வகர மெய்கள் இடையில் வந்தமையும்.

மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாத தனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால் - அகரக் கூறும் இகரக் கூறும் தம்முள் ஒத்து எகரம் ஒலிக்கும், அகரக் கூறும் உகரக் கூறும் தம்முள் ஒத்து ஒகர மொலிக்கும் என்பதனையும் ஏற்றுக்கொள்க என்பார் உரையாசிரியர்.

3.எழுத்துச் சாரியைகள் - விளக்குக.

மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்

ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்

விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற.

மெய்கள் அகரச் சாரியையும் உயிர் நெடில்கள் காரச் சாரியையும் பெறும். உயிர்களுள் ஐகார ஔகாரங்கள் காரச் சாரியையுடனே கான் சாரியையும் பெறும். உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் காரம்,கான் என்னும் இரண்டுடனே கரச் சாரியையும் பெறும்.

மெய்க ளவ்வும் என்னாது அகரமும் என்றதனால், இப்படியே கரங் காரங் கான் வரின், அவை சாரியையாகிய, அகரத்தினது சாரியை எனக் கொள்க.

குற்றெழுத்தோடு கான் சாரியை புணரும் போது இடையே ஆய்தம் விரிந்தமையும்.

மெய்கள் சாரியை பெறாதும் உயிர்மெய் நெடில்கள் சாரியை பெற்றும் வருதலில்லை.

க, ங எனவும்,

ஆகாரம், ஐகாரம், ஔகாரம் எனவும்,

ஐகான், ஔகான் எனவும்,

அகாரம், அ∴கான், அகரம், மகாரம்,

ம∴கான், மகரம் எனவும் வரும்.

**குறிப்பு**

விகற்பத்தின் முடித்தல் என்னும் உத்தியால் மேல் விரிந்து முடிந்து கிடந்தனவற்றை விளக்கவேண்டி இங்கே தொகுத்து முடித்தலால்,இச் சூத்திரம் முடிந்தது முடித்தல் என்னும் உத்தியால் அமைந்தது ஆகும்.

**பிரிவு – 3 : பதவியல் - புணரியல்**

**கூறு 9 : நன்னூல் - பதவியல்**

**பதம் - வகை:**

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்

பதமாம் அதுபாகப் பதம் பகுபதம் என

இருபால் ஆகி இயலும் என்ப.

எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பிற பொருளைத் தருமாயின் அது பதம் எனப்படும். அது பகாப்பதம் எனவும் பகுபதமெனவும் இரண்டு வகையினை உடையதாகி நடக்கும்.

**ஓரெழுத்து ஒருமொழி:**

உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்

கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்

ஆகும் நெடில்:நொ,து ஆம்குறில் இரண்டோடு

ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின.

உயிர் எழுத்துகளில் ஆறு, மகர வரிசையில் ஆறு, தகர, பகர, நகர வரிசையில் போன்றவற்றில் ஐவ்வைந்தும் ககர, வகர, சகர வரிசை போன்றவற்றில் நந்நான்கும் யகர வரிசையில் ஒன்றும் ஆகிய நெட்டெழுத்தாலாகிய மொழி நாற்பதும், நொ ஆகிய குற்றெழுத்தால் ஆகிய மொழி இரண்டும் ஆகிய நாற்பத்திரண்டும் ஓரெழுத்தாலாகிய மொழிகள் ஆகும்.

குறிப்பு

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ – உயிர் வருக்கம் - 6

மா, மீ, மூ, மே, மை, மோ - மவ் வருக்கம். - 6

தா, த, தூ, தே, தை – தவ் வருக்கம். - 6

பா, பூ, பே, பை, போ – பவ் வருக்கம். - 5

நா, நீ, நே, நை, நோ – நவ் வருக்கம். - 5

கா, கூ, கை, கோ – கவ் வருக்கம். - 4

வா, வ, வை, வௌ – வவ் வருக்கம் - 4

சா, சீ, சே, சோ – சவ் வருக்கம் - 4

யா – யவ் வருக்கம். - 4

நொ, து - குற்றெழுத்தால் ஆகிய மொழி. - 2

----------
42
----------

ஊ- இறைச்சி, ஓ-மதகுநீர் தாங்கும் பலகை, பே - நுரை, நே - அன்பு, சோ - மதில், நோ - துன்பப்படு, து - உண் ஏ – அம்பு, மீ – மேல், மூ - முதுமை, மே – அன்பு, மோ –நுகர், தூ – துறவு, தே- தெய்வம், நே – நேயம், நை- நைதல், நோ – நோய், பே- நுரை, பை – அழகு, போ – ஏவல், கூ - கூவு, வை - கூர்மை, வௌ – கவர்தல், சீ – ஒளி, சே- எருமை, சோ – மதில், யா – யாவை, நொ – துன்பப்படு, து – உண்

இவை சிறப்பின எனவே, கு, கௌ, பீ, வே என்பனவும் வந்தமையும்.

**தொடர் எழுத்து ஒரு மொழி**

பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்

எழுத்தீ றாகத் தொடரும் என்ப

பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்து ஈறாகத் தொடரும். பகுபதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்து ஈறாகத் தொடரும் என்பர் சான்றோர்.

அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பனம், உத்திரட்டாதி எனவும்

கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் என்பதாய் வரும்.

குறிப்பு

**பகாபதம்:**

பகுபால் பயனற்று இடுகுறி யாகி

முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற

பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம்

பிரிக்கப்படும் காலத்து பகுதி விகுதி முதலாகிய பயனில்லாமல் காரணமின்றி இடப்பட்டதாய் காலந்தொட்டு ஒன்றாகி முடிந்து நடக்கின்ற பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய நான்கும் பகாப்பதங்களாகும்.

நிலம், நீர், நெருப்பு, காற்று - பெயர்ப் பகாப்பதம்.

நட, வா, உண், தின் - வினைப் பகாப்பதம்.

மன், கொல், போல், மற்று - இடைப் பகாப்பதம்.

உறு, கழி, நனி, தவ - உரிப் பகாப்பதம்.

**பகுபதம்:**

பொருளிடம் காலம் சினைகுணம் தொழிலின்

வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் காரணமாக வருகின்ற பெயர்ச்சொற்களும் தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் கொள்ளும் வினைச் சொற்களும் பகுபதங்களாகும்.

**பெயர்ச்சொற்கள்:**

பொன்னன் - பொருட்பெயர்ப் பகுபதம்.

அகத்தன - இடப்பெயர்ப் பகுபதம்.

ஆதிரையான் - காலப் பெயர்ப் பகுபதம்.

கண்ணண் - சினைப்பெயர்ப் பகுபதம்.

கரியன் - குணப்பெயர்ப் பகுபதம்.

ஊணன் - தொழிற்பெயர்ப் பகுபதம்.

**வினைச்சொற்கள்:**

நடந்தான் - நடக்கின்றான் - நடப்பான் - உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம்

நடந்த - நடக்கின்ற - நடக்கும் - உடன்பாட்டுத் தெரிநிலை வினை பெயரெச்சப் பகுபதம்.

நடந்து - நடக்க - நடக்கின் - உடன்பாட்டுத் தெரிநிலை வினை வினையெச்சப் பகுபதம்.

## குறிப்பு

நடந்திலன் - நடக்கின்றிலன் - நடவான் - எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம்.

நடவாத - எதிர்மறைத் தெரிநிலை வினை பெயரெச்சப் பகுபதம்.

நடவாது - நடவாமல் - எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம்.

பொன்னன் - ஊணன் - அற்று - இற்று - எற்று - உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்.

கரிய - பெரிய - உடன்பாட்டுக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம்.

பைய - மெல்ல - உடன்பாட்டுக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம்.

அல்லன் - இல்லன் - அன்று - இன்று -- எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம் .

அல்லாத , இல்லாத என்பன எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம் .

அன்றி - இன்றி - அல்லாமல் - இல்லாமல் - எதிர்மறைக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம்.

நடந்தான் - நடந்தவன் - குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

பொன்னன் - பொன்னவன் - குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

பெயர்ப் பகுபதம் பகுதி விகுதி இரண்டிலும் பொருட் சிறப்புடையதாய்க் காலம் கொள்ளாது வேற்றுமை உருபு ஏற்று வரும்.

வினைக் குறிப்பு முற்றுப் பகுபதம் பகுதியில் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமைஉருபு ஏலாது வரும்.

வினைக் குறிப்புமுற்றால் அணையும் பெயர்ப் பகுபதம் விகுதியில் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமை உருபு ஏற்று வரும் .இவையே இம் மூன்றுக்கும் வேறுபாடாம்.

பொன்னனை வணங்கினான்

சாத்தன் பண்டு பொன்னன்

குறிப்பு

பண்டு பொன்னனைக் கொணர்ந்தேன்

என வரும்.

தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமை உருபு ஏற்காது வரும், தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம் விகுதியில் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமை உருபு ஏற்று வரும். இவையே இவ் இரண்டிற்கும் வேறுபாடாம் .

சாத்தன் நடந்தான் , நடந்தானைத் தடுத்தேன் என வரும் .

எல்லாச் சொற்களையும் கூறுங்கால் பொருள் சிறக்குமிடத்து எழுத்தை எடுத்தும், அயலெழுத்தை நலிந்தும், மற்றை எழுத்துக்களைப் படுத்தும் கூறல் வேண்டும்.

மேற்கூறிய பெயர்ப் பகுபதங்களுள் அடங்காது வேறாய் வருவனவும் சில உண்டு. அவைமுறையே தொழிற்பெயர், பண்புப்பெயர், பிற பெயர் என்பதாம்.

நடத்தல், வருதல் உண்டல், சேறல்

செம்மை, கருமை

சோர்ந்தார்க்கொல்லி, உடுக்கை என்பனவாய் வரும் .

**பகுபத உறுப்புகள்:**

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறினும், பொருளமைதிக்கு ஏற்பனவற்றை நினைத்து அறிவுடையோர் கூட்டி முடிக்க எவ்வகைப் பட்ட பகுபதங்களும் முடியும்.

கூனி - கூன் + இ எனப் பகுதி விகுதியால் முடிந்தது.

உண்டான் - உண் + ட் + ஆன் என அவ்விரண்டுடன் இடைநிலை பெற்று முடிந்தது.

உண்டனன் - உண் + ட் + அன் + அன் என அம் மூன்றுடன் சாரியை பெற்று முடிந்தது.

பிடித்தனன் - பிடி + த் + த் + அன் + அன் என அந் நான்குடன் சந்தி பெற்று முடிந்தது

நடந்தனன் - நட+ த் + த் + அன் +அன் என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகர வல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

**பகுதி:**

குறிப்பு

தத்தம்,

பகாப்ப தங்களே பகுதி யாகும்.

பெயர்ப் பகுபதங்கள், வினைப் பகுபதங்கள் ஆகியவற்றின் முதலில் நிற்கின்ற பகாப்பதங்களே பகுதி ஆகும்.

பெயர்ப் பகுபதங்கட்கும் வினைக்குறிப்புப் பகுபதங்கட்கும் பெரும்பான்மையும் பெயர்ச்சொற்களும் சிறுபான்மை இடைச்சொற்களும் பகுதிகளாம்.

குழையன், அகத்தன்,ஆதிரையான்,சொல்லன்,செய்யன், கூத்தன் எனப் பெயர்ப் பகுபதங்கட்குக் குழை அகம், ஆதிரை,சொல், செம்மை, கூத்து என்னும் பொருளாதி அறுவகைப் பெயரும் பகுதியாய் வந்தன.

அவன், எவன், பிறன் எனப் பெயர்ப் பகுபதங்கட்கு இடைச் சொற்கள் பகுதியாய் வந்தன .

அற்று, இற்று, எற்று என வினைக்குறிப்பு முற்றுப் பகுபதங்கட்கு இடைச் சொற்கள் பகுதியாய் வந்தமைந்தன.

**பண்புப் பகுதிக்கு எய்தியதன்மேல் சிறப்புவிதி**

செம்மை சிறுமை சேய்மை தீமை

வெம்மை புதுமை மென்மை மேன்மை

திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்

இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.

செம்மை, சிறுமை, சேய்மை, தீமை, வெம்மை, புதுமை, மென்மை, மேன்மை, திண்மை, உண்மை, நுண்மை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும் இவை போல்வன பிறவும் பண்புப் பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலையையுடைய பதங்களாம்.

இவை எல்லாம் சொல் நிலையால் பகுபதமாயினும் மை விகுதிக்குப் பகுதிப் பொருளல்லது வேறு பொருள் இல்லாமையினால் பொருள் நிலையால் பகாப்பதமாம் என்பது அறிவித்தற்குப் பண்பிற் பகா என்றும், இவை மை விகுதியின்றி இயங்காமையினால் இவ் விகுதியையும்

பகுதியாகவே நிறுத்தி மேல் வரும் விகுதியோடு புணர்க்கப்படும் என்பது அறிவித்தற்கு நிலைப்பதம் என்றும் கூறினார் நன்னூலார்.

அருமை, எளிமை,

இளமை, முதுமை,

குறுமை, நெடுமை,

புலமை, மடமை

கிழமை, வறுமை என்பனவாய் வரும்.

**பண்புப் பகுதிக்கு எய்தியதன்மேல் சிறப்புவிதி**

ஈறு போதல் இடைஉ கரம் இய்யாதல்

ஆதி நீடல் அடிஅகரம் ஐயாதல்

தன்னொற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்

இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே.

இறுதியிலுள்ள மை விகுதி கெடுதல், நடுவில் நின்ற உகரம் இகரமாதல், முதலில் நின்ற குறில் நெடிலாதல், முதலில் நின்ற அகரம் ஐகாரமாதல், தன் மெய் நடுவே மிகுதல், முன்னின்ற மெய் வேறொரு மெய்யாதல், வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதல் இவை போல்வன பிறவும் அப்பண்பினுக்கு இயல்பாகும் .

நல்லன் - நன்மையின் மை விகுதி கெட்டது.

கரியன்-கருமைபின் மை விகுதி கெட்டு நடுவில் நின்ற உகரம் இகரமாயிற்று.

பாசி - பசுமையின் மை விகுதி கெட்டு முதல் நீண்டது.

பைந்தார் - பசுமையின் விகுதியும் நடுவில் நின்ற உயிர்மெய்யும் கெட்டு, வரும் எழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று.

வெற்றிலை - வெறுமையின் மை விகுதி கெட்டுத் தன்னொற்று இரட்டியது.

சேதாம்பல் - செம்மையின் மை விகுதி போய், ஆதி நீண்டு, முன்னின்ற மகர மெய் தகர மெய்யாகத் திரிந்தது.

**தெரிநிலைவினைப் பகுதிக்கு சிறப்புவிதி:**

நடவா மடிசீ விடுகூ வேவை

குறிப்பு

நொப்போ வெளஉரிஞ் உண்பொருந் திரும்தின்

தேய்பார் செல்வவ் வாழ்கேள் அ.ஃகென்று

எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்

செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே

## குறிப்பு

நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வௌ, உரிஞ், உண், பொருந் திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அ.ஃகு ஆகியவற்றை முதனிலையாகப் பொருந்திய இருபத்து மூன்றாகும் உயிரும் மெய்யும் குற்றியலுகரமுமாகிய ஈற்றையுடைய இவை முதலாகிய வாய்பாடுகளெல்லாம், செய் என்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும் மற்றை வினைப் பகாப்பதங்களாகிய பகுதியுமாம்.

விகற்பத்தின் முடித்தல் என்னும் உத்தியால் இருபத்து மூன்று ஈற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்ப்பாடுகளெல்லாம் இப்பொது வாய்பாட்டில் அடங்கும் என்பார் முடிந்தது முடித்தல் என்னும் உத்தியால் செய்யெனவும் கூறினார்.

செய்யென் வினைப் பகாப்பதம் என்ற அளவிலே செய்யென் ஏவல் பகாப்பதமும் அடங்குமாயினும் நட, வா முதலிய முதனிலைகளே ஏவல் பொருளுணர்த்தாது ஆய் விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்தும் என்று அறிவித்தற்கு வேறு கூறினார்.

ஏவற் பகுதி:

நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய், அ.ஃகாய் எனவும்

நடமின், வம்மின், உண்மின், தின்மின், அ.ஃகுமின் எனவும் வரும்.

முன்னிலை ஏவல் ஒருமை வினைச்சொற்கள் ஆய் என்னும் விகுதி குன்றி நட, வா, உண், தின், அ.ஃகு என நிற்கும். நிற்பினும் விகுதியோடு புணர்ந்தவைகளேயாம். இப்படி விகுதி புணர்ந்து கெட்டு நிற்கும் சொற்கள் இன்னும் பல உண்டு. அவையெல்லாம் பின் காட்டப்படும்.

உயிரீற்று தெரிநிலை வினைப்பகுதிகள்:

நடந்தான், (அ )

பார்தான் ( ஆ )

இடித்தான் ( இ )

சீத்தான் (ஈ )

கூவினான் ( ஊ )

வெந்தான் ( எ )

ஏவினான் ( ஏ )

நொந்தான் (ஒ )

போயினான் ( ஓ )

வௌவினான் ( ஔ )

மெய்யீற்று வினைப்பகுதிகள்:

உரிஞினான் ( உரிஞ் )

உண்டான், ( உண் )

பொருநினான் ( பொருந் )

திருமினான் ( திரும் )

தின்றான் ( தின் )

தேய்த்தான் ( தேய் )

பார்த்தான் ( பார் )

சென்றான் ( செல் )

வவ்வினான் ( வவ் )

வாழ்ந்தான் ( வாழ் )

கேட்டான் ( கேள் )

அ∴கினான் ( அ∴கு )

இத் தெரிநிலைவினைப் பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழுதான், உண்டான் எனச் சில இயல் பாதல் அன்றியும்,

செல் - சேறல் - முதல் நீண்டது.

தா - தந்தான் - தனிநெடில் குறுகல்.

சா - செத்தான் - முதல் ஆகாரம் எகரமாதல்.

கொணா - கொணர்ந்தான் - முதனிலை அயல் எழுத்துக் குறுகி ரகர மெய் விரிந்தது.

## குறிப்பு

விரவு - விராவினான் - நடுக்குறில் நீண்டது.

முழுகு - முழுகினான் , மூழ்கினான் - இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தது.

வா - வருகிறான் - தனி நெடில் குருகி ஒருயிர் மெய் விரிந்தும் அமைந்தது.

கல் - கற்றான் - ஈற்று மெய் வரு மெய்யாகத் திரிந்தது.

செல் - சென்றான் - ஈற்று மெய் வரும் எழுத்திற்கு இனமாகத் திரிந்தும் இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்.

கா, சா, தா - இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் எனவும்,

கல், நில், புல், சொல் - இவை கற்றான், நின்றான், புல்லினான் சொன்னான் எனவும் ,

ஒரு நிகராகிய பகுதிகள் பல விதமாக விகாரப்படுதலால், அவை எல்லாம் தனித்தனி சொல்லப் புகின் விரியும் ஆதலால் செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்துச் செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமும் கொண்டு அமைத்துக் கொள்க என்பார் உரையாசிரியர்.

தெரிநிலைவினைப் பகுபதங்களுக்கு, நட வா, முதலிய வினைச் சொற்களே அன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாய் வரும்.

சித்திரித்தான், கடைக்கணித்தான் என்பவற்றில் முறையே சித்திரம், கடைக்கண் என்னும் பெயர்சொற்கள் பகுதியாயின.

பொன்போன்றான், புலி நிகர்த்தான் என்பவற்றில் முறையே போல், நிகர் என்னும் இடைச்சொற்கள் பகுதியாயின.

சான்றான், மாண்டான் என்பவற்றில் முறையே சால், மாண் என்னும் உரிச்சொற்கள் பகுதியாயின.

**ஏவற் பகுதிக்கு எய்தியதன்மேல் சிறப்புவிதி:**

செய்யென் வினைவழி விப்பி தனிவரின்

செய்விஎன் ஏவல் இணையின் ஏவல்.

செய் என்னும் வாய்பாட்டு முதனிலைத் தனி வினையின் பின் விவ் விகுதியாயினும் பிவ் விகுதியாயினும் தனித்து வருமாயின் செய் என்னும் ஏவலின்மேல் ஓர் ஏவலாய்ச் செய்வி என்னும் வாய்பாட்டு ஏவற்

பகுதியாம் அவ்வினையின் பின் இவ் விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின் செய்விப்பி என்னும் வாய்பாட்டு ஏவற் பகுதியாம்.

நடப்பியாய், நடப்பிப்பியாய், வருவியாய், வருவிப்பியாய் என வரும்.

சிறுபான்மை உரையில் கோடல் என்னும் உத்தியால் கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு விகுதிகளுள் ஒன்று பெற்றும் சில பகுதிகள் விகாரப்பட்டும் அப்படி வரும் எனக் கொள்க.

குறிப்பு

போ-போக்கு, பாய்-பாய்ச்சு, உருள்-உருட்டு,

நட-நடத்து, எழு-எழுப்பு, துயில்-துயிற்று எனவும்,

இயங்கு-இயக்கு, திருந்து-திருத்து, தோன்று

தோற்று, ஆடு-ஆட்டு, தேறு-தேற்று

உருகு-உருக்கு எனவும் வரும்.

**வினைப் பகுதிக்குப் புறனடை:**

விளம்பிய பகுதிவே றாதலும் விதியே

ஏவற் பகுதி வேறாதல் போல் அதன் பின்னே சொல்லப்பட்ட மற்றை வினைப் பகுதிகள், வேறு வேறுபடுதலும் விதியேயாகும்.

நடத்தினான், நடப்பித்தான், நடத்துவிப்பித்தான் என வரும்.

**விகுதி:**

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார்

அ ஆ குடுதுறு என்ஏன் அல்அன்

அம்ஆம் எம்ஏம் ஓம்மொடு உம்ஊர்

கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்

ஈயர் கயவு என்பவும் பிறவும்

வினையின் விகுதி பெயரினும் சிலவே.

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், பம்மார், அ, ஆ,கு,டு,து, று, என்,ஏன், அல்,அன்,அம்,ஆம், எம்,ஏம், ஓம், உம், ஊர், க, ட, த, ற, ஐ,ஆய், இம்,மின், இர்,ஈர் ஈயர் கயவு என்பன முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும் இவை போல்வன பிறவும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களின் விகுதிகளாகும். பெயர்ப் பகுபதங்களிலும் இவற்றுள் சில விகுதிகளாகும்.

குறிப்பு

உம் ஊர் க ட த ற - உம் என்பது ஏறிய க, ட, த, ற, ஒற்றுக்கள் . அவை கும், டும் தும், றும் என்பன. அன் விகுதி தன்மைக்கு எதிரது போற்றல் என்னும் உத்தியால் சேர்க்கப்பட்டது ஆகலின், வலியுறுத்தற்குப் பின்னும் கூறினார்.

நடந்தனன், நடந்தான் - ஆண்பாற் படர்க்கை.

நடத்தனள், நடந்தாள் - பெண்பாற் படர்க்கை.

நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார் - பல்லோர் படர்க்கை

நடந்தன, நடவா - பலவின் படர்க்கை.

நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன் - ஒருமைத் தன்மை.

நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு - இவை ஒன்றன் படரக்கை.

நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம் நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறும் - தன்மைப் பன்மை.

நடந்தனை, நடந்தாய், நடத்தி - ஒருமை முன்னிலை.

நடமின், நடந்தனிர், நடந்தீர் - பன்மை முன்னிலை.

நிலீயர், நடக்க, வாழிய - வியங்கோள்.

நடக்கும் - செய்யும் என்னும் முற்று .

பிறவும் என்றதனால் மறால், அழேல், சொல்லிக் காண் என ஆல், ஏல், காண் முதலிய விகுதிகளும் வரும்.

வினைக் குறிப்பு முற்றுக்கள் குறிப்பாகக் காலங்காட்டுவன ஆதலால், இவ் விகுதிகளுள்ளே தாமே காலங்காட்டும் விகுதிகள் ஒழித்து ஒழிந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ டு, து று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஒம், ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் இருபத்திரண்டு விகுதிகளோடு வரும்.

கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியன, குறுந்தாட்டு, கரிது, குழையிற்று, கரியென், கரியேன், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம், கரியை, கரியாய், வில்லி, கரியிர், கரியீர் என வரும்.

பெயரினும் சில என்றதனால், இவ் விகுதிகளுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, து இ, என்னும் பத்தோடு மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ் என்னும் பதின்மூன்றும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

குறிப்பு

குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, பொன்னி, வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ் என வரும்.

இன்னும் வினையின் விகுதி பெயரினும் சில என்றதனாலும் , பிறவும் என்றதனாலும் , பல வகைப்பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் இவ் விகுதிகளுள் அடங்கியும் அடங்காதும் வரும் விகுதிகள் எல்லாம் கொள்ளப்படும்.

தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள்அ, உம், என்னும் இரண்டுமாம் செய்த, செய்கின்ற, செய்யும் என வரும்.

குறிப்புவினைப் பெயரெச்ச விகுதிஅ ஒன்றேயாம். உம் விகுதி இடைநிலை ஏலாது தானே எதிர்காலம் காட்டலால் குறிப்புவினைப் பெயரெச்சத்துக்கு வாராது. கரிய என வரும்.

தெரிநிலை வினையெச்ச விகுதிகள் உ, இ, ய, பு, ஆ, ஊ, என அ, இன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், எனும் கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வழி, இடத்து, உம், மல், மை, மே என்னும் இருபத்தெட்டும் பிறவுமாம். இவற்றுள் இறுதியில் கூறிய மல், மை, மே என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறையில் வரும்.

நடந்து, ஓடி, போய், உண்குபு, உண்ணா, உண்ணூ, உண்ணென, உண்ண, உண்ணின், உண்டால், உண்டக்கால், உண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உண்டானேனும், உணற்கு, உண்ணிய, உண்ணியர், வருவான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி செய்தவிடத்து , காண்டலும் , உண்ணாமல், உண்ணாமை, உண்ணாமே என வரும்.

குறிப்பு வினையெச்ச விகுதிகள்அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்னும் ஒன்பதும் பிறவுமாம்.

மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து என வரும்.

தொழிற்பெயர் விகுதிகள்தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்னும் பத்தொன்பதும் பிறவுமாம்.

நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, தோற்றரவு, வாரானை, நடவாமை, பாய்த்து என வரும்.

மை விகுதி, செய்தமை, செய்கின்றமை என இறந்தகால இடைநிலை நிகழ்கால இடைநிலைகளோடு கூடியும் வரும்.

துவ் விகுதி, அவர் செய்தது, செய்கின்றது, செய்வது என முக்கால இடைநிலைகளோடு கூடியும் வரும்.

பண்புப்பெயர் விகுதிகள்மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர் என்னும் பத்தும் பிறவுமாம்.

## குறிப்பு

நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர் என வரும்.

பிறவினை விகுதிகள்வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் எட்டுமாம்.

செய்வி, நடப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு, துயிற்று என வரும்.

கரை, தேய் என வரும் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதல் நிலைகள், சிறுபான்மை இவ் விகுதி வேண்டாது.

கரைத்தான், தேய்த்தான்; கரைத்திலன், தேய்த்திலன், கரைக்கின்றான், தேய்க்கின்றான்; கரைக்கின்றிலன், தேய்க்கின்றிலன், கரைப்பான், தேய்ப்பான், கரைக்கான், தேய்க்கான் எனப் பிறவினைப் பொருளைத் தரும்போது, வல்லெழுத்துமிக்கும்.

கரைந்தான், கரைந்திலன், கரைகிறான், கரைகின்றிலன், கரைவான், கரையான் எனத் தன்வினைப் பொருளைத் தரும்போது, வல்லெழுத்து மிகாதும் வரும்.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற்பொருளையும் செயப்படுபொருளையும் கருவிப்பொருளையும் உணர்த்தும்.

அலரி, பறவை, எச்சம் என்பன வினைமுதற் பொருளை உணர்த்தின.

ஊருணி, தொடை, தொல்காப்பியம் என்பன செயப்படு பொருளை உணர்த்தின.

மண்வெட்டி, பார்வை, நோக்கம் என்பன கருவிப் பொருளை உணர்த்தின.

விடு, ஒழி விகுதிகள் துணிவுப் பொருளை உணர்த்தும்.

செய்துவிட்டான், செய்தொழிந்தான் எனவரும்.

கொள் விகுதிவினைப்பயன் வினைமுதலைச் சென்று அடைதலாகிய தற்பொருட்டுப் பொருளை உணர்த்தும்.

அடித்துக்கொண்டான் என வரும்.

படு, உண் விகுதிகள்செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தும்.

கட்டப்பட்டான், கட்டுண்டான் என வரும்.

மை வகுதிதன்மைப்பொருள் உணர்த்தும்.

பொன்மை, ஆண்மை என வரும்.

இரு, இடு என்பன தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் வரும்.

எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான் என வரும்.

முன்னிலை ஏவல் ஒருமை ஆய் விகுதியும், பெயரெச்ச விகுதியும், தொழிற்பெயர் விகுதியும் வினை முதற் பொருளை உணர்த்தும் இகர விகுதியும், செயப்படு பொருளை உணர்த்தும் ஐ விகுதியும், பகுதியோடு புணர்ந்து பின்கெடுதலும் உண்டு. கெடினும் புணர்ந்து நின்றாற் போலவே தம் பொருளை உணர்த்தும்.

நீ நட, நீ நடப்பி, நீ செல் என்பனவற்றில் ஆய் விகுதி புணர்ந்து கெட்டது.

கொல் களிறு, ஓடாக் குதிரை என்பனவற்றில் பெயரெச்ச விகுதிகள் புணர்ந்து கெட்டன.

அடி, கேடு, இடையீடு என்பனவற்றில் தல் என்னும் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டது.

காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை என்பவைகளிலே வினைமுதற் பொருள் உணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்டது.

ஊண், தீன், கோள் என்பவைகளிலே செயப்படு பொருள் உணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து கெட்டது.

சிறுபான்மை வரிப்புனைபந்து என்பதில், வரிந்து என்னும் வினையெச்ச விகுதியும், கொள்வாரும் கள்வருநேர் என்பதில் நேர்வர் என்னும் முற்று விகுதியும் கெட்டு வந்தன.

குறிப்பு

**இடைநிலை**

**பெயரிடைநிலை:**

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலில்

பகுதி விகுதி பகுத்திடை நின்றதை

வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனலே.

அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியத்தைப் கண்டு அவ் இலக்கியத்தின் அமைதியே இலக்கணமாகச் சொல்லுதல் வேண்டும்.

ஆதலால் முன் சொல்லப்பட்ட பகுதியையும் பிரித்து நடுவில் நின்றதை வினையாலணையும் பெயர் அல்லாத பெயர்களுக்கு இடைநிலை என்று சொல்வர்.



அறிஞன், வினைஞன், கவிஞன், என்பன ஞகர இடைநிலை பெற்றன.

ஓதுவான், பாடுவான் என்பன வகர இடைநிலை பெற்றன.

இடைச்சி, வலைச்சி, புலைச்சி என்பன சகர இடைநிலை பெற்றன.

வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி என்பன தகர இடைநிலை பெற்றன.

செட்டிச்சி, தச்சிச்சி என்பன இச் இடைநிலை பெற்றன.

**இறந்தகாலவினை இடைநிலை:**

தடற ஒற்று இன்னே ஐம்பான் மூவிடத்து

இறந்த காலந் தரும்தொழில் இடைநிலை.

தகர டகர றகர மெய்களும், ஐம்பால் மூவிடங்களிலும் இறந்த காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும்.

நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது,

நடந்தன, நடந்தேன், நடந்தோம், நடந்தாய்,

நடந்தீர்.

எனவும்,

உண்டான் எனவும்,

சென்றான் எனவும்,

உறங்கினான் எனவும் வரும்.

சிறுபான்மை இன் இடைநிலை எஞ்சியது எனக் கடை குறைந்தும், போனது என முதல் குறைந்தும் வரும் .

**நிகழ்காலவினை இடைநிலை:**

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்

ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை.

ஆநின்று, கின்று, கிறு என்பன ஐம்பால் மூவிடங்களிலும் நிகழ்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும்.

நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான் என வரும் .இவை போன்று ஏனைய பாலிடங்களிலும் அமையும்.

**குறிப்பு**

**எதிர்காலவினை இடைநிலை**

பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது

இசைவினை இடைநிலை யாம்இவை சிலஇல.

பகர மெய்யும் வகர மெய்யும் ஐம்பால் மூவிடங்களிலும் எதிர்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும். இம் முக்கால இடைநிலைகளும் சிலமுற்று வினையெச்சவினைகட்கு இலவாம் .

நடப்பான், வருவான் என வரும்.

இவைபோன்று பிற பால் இடங்களிலும் வரும்.

**காலம்காட்டும் விகுதி:**

றவ்வொடு உகர வும்மைநிகழ்பு அல்லவும்

தவ்வொடு இறப்பு எதிர்வும் டவ்வொடு

கழிவும் கவ்வோடு எதிர்வும் மின்ஏவல்

வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்

செலவொடு வரவும் செய்யும்நிகழ்பு எதிர்வும்

எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே.

றகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் காட்டும்.தகரமெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தி வரும். டகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தைக் காட்டும். ககர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் எதிர் காலத்தைக் காட்டும். மின் விகுதியும் மற்றை முன்னிலை ஏவல் விகுதிகளும் வியங்கோள் விகுதிகளும் இகர விகுதியும் மார் விகுதியும், எதிர்காலத்தை உணர்த்தும். பகர விகுதி இறந்தகாலத்தையும், எதிர்காலத்தையும் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்று விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் எதிர்மறை ஆகார விகுதி மூன்று காலத்தையும் ஏற்று வரும்.

குறிப்பு

.சென்று, சென்றும் என்பன சென்றேன், சென்றோம் என்பதாய் இறந்தகாலம் காட்டின.

சேறு , சேறும் என்பன செல்வேன், செல்வேம் என்பதாய் எதிர்காலம் காட்டின

வந்து, வந்தும் என்பன வந்தேன், வந்தேம் என்பதாய் இறந்தகாலம் காட்டின.

வருது, வருதும் என்பன வருவேன், வருவேம் என்பதாய் எதிர்காலம் காட்டின.

உண்டு, உண்டும் என்பன உண்டேன், உண்டேம் என்பதாய் இறந்தகாலம் காட்டின.

உண்கு, உண்கும் என்பன உண்பேன், உண்பேம் என்பதாய் எதிர்காலம் காட்டின.

உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய் என மின், ஈர், உம், ஆய் என்னும் ஏவல் விகுதிகளும்.

உண்க, வாழிய, வாழியர் எனக் க, இய, இயர் என்னும் வியங்கோள் விகுதிகளும்,

சேறி என இகர விகுதியும்,

உண்மார் என மார் விகுதியும் எதிர்காலம் காட்டின.

சேறி என்பது செல்வாய் எனவும் உண்மார் என்பது உண்பார் எனவும் பொருள்படும்.

உண்ப என்பது உண்டார் எனவும் உண்பார் எனவும் பொருள்பட்டு இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டின.

உண்ணும் என்னும் செய்யுமென் வாய்பாட்டு முற்று நிகழ்காலமும் எதிர்காலமும் காட்டிற்று.

உண்ணா என்னும் எதிர்மறை முக்காலமும் காட்டிற்று.

இகர விகுதி எழுத்துப்பேறாய் வரும் தகர மெய்யின் மேல் ஏறி வரும், அவ்விகுதி சென்றி, செல்லாநின்றி என இறந்த கால இடைநிலை, நிகழ்கால இடைநிலைகளோடு கூடி வரும் போது அவை காலங்காட்டால் ஆற்றான் காலங் காட்டாது நிற்கும்.

இவை சிலவில என்றவைகளுள்ளே, காலம்காட்டும் விகுதிகளை மாத்திரம் சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிற

**குறிப்பு**

இடைநிலையையும் சொல்லாமையால், அவை சிறுபான்மையின வந்த இடங்களில் கண்டுகொள்க என்று ஆயிற்று. அவை வருமாறு :-

கு, டு, று, என்னும் மூன்றுயிர்மெய் ஈற்றுச் சில குறிலிணைப் பகுதிகள் தம் ஒற்று இரட்டி இறந்தகாலம் காட்டும்.

புக்கான், நக்கான் எனவும்,

தொட்டான், விட்டான் எனவும்

உற்றான், பெற்றான் எனவும் வரும்.

யகர இடைநிலை இறந்தகாலமும், ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இரண்டு இடை நிலைகளும் நிகழ்காலமும்காட்டும்.

போயது எனவும்,

உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான் எனவும் வரும்.

இசின் என்பது இறந்தகால இடைநிலையாயும், மகர மெய்யும் மன் என்பதும் எதிர்கால இடைநிலைகளாயும் செய்யுளில் வரும்.

என்றிசினோர் எனவும்,

என்மர், என்மனார் எனவும் வரும்.

**வடமொழி ஆக்கம்:**

இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்
அல்லா அச்சுஜ வருக்கம் முதல் ஈறு
யவ்வாதி நான்மை ளவ்வாகு ஜஜம்
பொதுவெழுத்து ஒழிந்தநால் ஏழும் திரியும்.

ஆரியமொழியுள் சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும், இடையில் நின்ற நான்கும் ஈற்றில் நின்ற இரண்டும் ஒழிந்து நின்ற அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் பத்தும் அல்லென்று வழங்கும் மெய் முப்பத்தேழுள்ளும் க, ச, ட, த, ப என்னும் ஐந்து வருக்கங்களின் முதலில் நின்ற க, ச, ட, த, ப என்னும் ஐந்தும், ஈற்றில் நின்ற ங, ஞ, ண, ந, ம என்னும் ஐந்தும் ய, ர, ல, வ என்னும் நான்கும் ளவ்வும் ஆகிய இருபத்தைந்து எழுத்துக்களும் இவையன்றி மேலே உயிருள் ஒழிந்த ஆறும் ஐந்து வருக்கங்களினும் இடைகளில் ஒழிந்த பதினைந்தும் முப்பதாம் மெய் முதலிய எட்டனுள் ளகரம் ஒழிந்த ஏழுமாகிய இருபத்தெட்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழிலே தமக்கேற்ற பொது எழுத்துக்களாய்த் திரிந்து வரும்.

சிறப்பெழுத்துத் திரியுமென வரையறை கூறவே, பொதுவெழுத்து இயல்பாயும் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பதும் கூறினார் ஆயிற்று.

ஆரியத்துள் உயிரை அச்சு, சுரம் எனவும், மெய்யை அல், வியஞ்சனம் எனவும் கூறுவர்.

குறிப்பு

**தற்சமம்:**

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது எழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்சமம் எனப்படும்.

அமலம், கமலம், காரணம், குங்குமம். - இவை பொது எழுத்தாலாகிய தற்சம மொழி.

**தற்பவம்:**

ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்தாலும் பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்பவம் எனப்படும்.

சுகி, போகி, சுத்தி - இவை சிறப்பெழுத்தாலாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் தற்பவ மொழி.

அரன், செபம், ஞானம், அரி - இவை பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் தற்பவ மொழி.

**ஆரிய மொழி வடமொழிஆதற்குச் சிறப்பு விதி**

அவற்றுள்

ஏழாம் உயிர் இய்யும் இருவும் ஐவருக்கத்து

இடையில் மூன்றும் அவ்வம் முதலும்

எட்டே யவ்வு முப்பது சயவும்

மேலொன்று சடவும் இரண்டு சதவும்

மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்

ஆஈறு ஐயும் ஈஈறு இகரமும் .

ஆரிய எழுத்தின் ஏழாம் உயிராகிய ,ரு' தமிழில் இகரமாகவும் இருவாகவும் திரியும்.

ஐந்து வருக்கங்களிலும் இடைநின்ற மும்மூன்று எழுத்துகளும் அவ்வவ் வருக்கத்தின் முதலெழுத்தாகத் திரியும்.

குறிப்பு

எட்டாம் மெய்யாகிய ஜகாரம் மொழியிடையில் யகரமாகவும் திரியும்.

முப்பதாம் மெய்யாகிய ,ச' ,எழுத்து மொழி முதலில் சகரமாகவும் இடையில் யகரமாகவும் திரியும்.

முப்பத்தோராம் மெய்யாகிய (ஷ) எழுத்து மொழி முதலிற் சகரமாகவும் இடையிலுங் கடையிலும் டகரமாகவும் திரியும்.

முப்பத்திரண்டாம் மெய்யாகிய (ஸ) எழுத்து மொழி முதலில் சகரமாகவும் இடையில் தகரமாகவும் திரியும்.

முப்பத்து மூன்றாம் மெய்யாகிய (ஹ) எழுத்து மொழி முதலில் அகரமாகவும் இடையிலும் கடையிலும் கரமாகவும் திரியும்.

பொது எழுத்துக்களுள்ளே மொழி இறுதி ஆகாரம் ஐகாரமாகத் திரியும்.

மொழி இறுதி ஈ காரம் இகரமாகத் திரியும் .

**எழாம் உயிர் எழுத்து 'ரு' (ர்) இ, இரு ஆதல்.**

ர்ஷபம் - இடபம் எனவும்,

மிர்கம் - மிருகம் எனவும்,

ஏழாம் உயிர் இகரமும் இருவுமாயிற்று.

**க, ச, ட, த,ப எழுத்துகள் ஆகியவை முததெலழுத்தாதல்:**

நகம், நாகம், மேகம் - நகம், நாகம், மேகம்

**எட்டாம் மெய் 'ஜ' யகரம் ஆதல்**

பங்கஜம் - பங்கயம்

**ஐந்து வருக்கத்திலும் இடைநின்ற மும்மூன்று எழுத்தும் அவ்வவ் வருக்கத்தின் முதல் எழுத்தாதல்:**

சலவாதி, விசயம் சருச்சரை எனவும்,

பீடம், சடம், கூடம் எனவும்,

தலம், தினம், தரை எனவும்,

பலம், பந்தம், பாரம் எனவும்.

ஐந்து வருக்கத்திலும் இடைநின்ற மும்மூன்று எழுத்தும் அவ்வவ் வருக்கத்தின் முதல் எழுத்தாயின.

**முப்பதாம் மெய் முதலில் சகரமும் இடையில் சகரமும் யகரமும் ஆதல்:**

சங்கரன் எனவும்,

பாசம், தேயம் எனவும்,

முப்பதாம் மெய் முதலில் சகரமும் இடையில் சகரமும் யகரமும் ஆயிற்று.

குறிப்பு

**முப்பத்தோராம் மெய் முதலிற் சகரமும் இடையிலும் கடையிலும் டகரமும் ஆதல்:**

சண்முகன் எனவும்,

விடம், பாடை எனவும்,

முப்பத்தோராம் மெய் முதலிற் சகரமும் இடையிலும் கடையிலும் டகரமும் ஆயிற்று.

**முப்பத்திரண்டாம் மெய் முதலில் சகரமும் இடையில் சகரமும் தகரமும் ஆதல்:**

சபை எனவும்,

வாசம், மாதம்

முப்பத்திரண்டாம் மெய் முதலில் சகரமும் இடையில் சகரமும் தகரமும் ஆயிற்று.

**முப்பத்து மூன்றாம் மெய் முதலில் அகரமும் இடையிலும் கடையிலும் ககரமும் ஆதல்:**

அரன் எனவும்,

மோகம், மகி

முப்பத்து மூன்றாம் மெய் முதலில் அகரமும் இடையிலும் கடையிலும் ககரமும் ஆயிற்று.

**முப்பத்தைந்தாம் மெய் மொழியிடையில் இரண்டு ககரம் ஆதல்:**

பக்கம் - முப்பத்தைந்தாம் மெய் மொழியிடையில் இரண்டு ககரம் ஆயிற்று.

**ஆகார ஈறு ஐகார ஈறு ஆதல்:**

மாலை - ஆகார ஈறு ஐகார ஈறு ஆயிற்று.

**ஈகார ஈறு இகர ஈறாதல்:**

புரி என ஈகார ஈறு இகர ஈறாயிற்று.

உரையிற்கோடலால், கீரம் என முப்பத்தைந்தாம் மெய் மொழி முதலில் ஒரு ககரமும் ஆகும் எனக் கொள்க.

முப்பத்து மூன்றாம் மெய் மொழிக்கு முதலில் அகர மாகத் திரியும் என்றல் பொருந்தாது; கெடும் என்றலே பொருந்தும், அரன், ஆடகம், இமம், ஏரம்பன், ஓமம், ஔத்திரி என வரும். இவைகளிலே கார மெய் கெட, அம் மெய் மேல் ஏறி நின்ற உயிர் நிற்றல் காண்க.

குறிப்பு

**ஆரியமொழி வடமொழியாதற்குச் சிறப்பு விதி**

ரவ்விற்கு அம்முதல் ஆம்முக் குறிலும்

லவ்விற்கு இம்முதல் இரண்டும் யவ்விற்கு

இய்யும் மொழிமுதல் ஆகிமுன் வருமே.

தம்மில் மொழிமுதல் வாராது என விலக்கப்பட்ட மெய்களை மொழி முதலாகக் கொண்ட சமக்கிருதச் சொற்களில் ரகத்திற்கு அ, இ, உ என்னும் மூன்று குற்றெழுத்துக்களில் ஒன்றும், லகரத்திற்கு இ, உ என்னும் குற்றெழுத்துகள் இரண்டில் ஒன்றும் யகரத்திற்கு இகரமும் அவ் எழுத்துக்களை முதலிலுடைய வடமொழிகளுக்கு முதலாகி அம்மூன்று எழுத்துக்களுக்கும் முன்னே வரும்.

**அ, இ, உ வரல்:**

ரங்கன் - அரங்கம்,

ராமன் - இராமன்,

ரோமம் - உரோமம்

லாபம் - இலாபம்,

லோபம் உலோபம்

யக்கன் - இயக்கன் எனவும் வரும் .

இணைந்தியல் காலை யரலக்கு இகரமும்

மவ்வக்கு உகரமு நகரக்கு அகரமும்

மிசைவரும் ரவ்வழி உவ்வும் ஆம்பிற.

ஆரிய மொழியுள் இரண்டெழுத்து இணைந்து ஓரெழுத்தைப்போல நடக்கும் போது ம் - பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு இகாரமும் மகர வகரங்களுக்கு உகாரமும் நகரத்திற்கு அகாரமும் , மேலே வந்து வடமொழிகளாகும் இணைந்து முன்னின்ற ரகரத்திற்குப் பின் உகாரமும் வரும் .

குறிப்பு

தியாகம், வாக்கியம், கிரமம், வக்கிரம், கிலேசம், சுக்கிலம் எனவும்,

பதுமம், பக்குவம், எனவும்,

அரதனம் எனவும்,

அருத்தம் எனவும் வரும்.

பிற என்றதனால் சத்தி, கட்சி, காப்பியம், பருப்பதம் இவை முதலாகிய திரிபும், தூலம், அத்தம், ஆதித்தன் இவை முதலாகிய கேடும் மற்றும் விகாரத்தால் வருவனவும் கொள்ளப்படும்.

**தமிழ் எழுத்தில் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும்**

றனழ எ ஒவ்வும் உயிர்மெய்யும் உயிரளபு

அல்லாச் சார்பும் தமிழ்பிற பொதுவே.

முதலும் சார்புமாகிய தமிழ் எழுத்து நாற்பதுகளிலே றகர னகர ழகர எகர ஒகரங்கள் ஐந்தும் , உயிர்மெய்யும் உயிரளபெடையும் அல்லாத சார்பெழுத்து எட்டும் தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம். ஒழிந்த இருபத்தேழு எழுத்துக்களும் பொது எழுத்துக்களாம்.

**பயிற்சி வினாக்கள்:**

**1.** ஓரெழுத்து ஒருமொழி என்பதனை விளக்குக.

உயிர்மவி லாறுந் தபநவி லைந்துங்

கவசவி னாலும் யவ்வி லொன்று

மாகு நெடினொது வாங்குறி லிரண்டோ

டோரெழுத்தியல் பத மாறேழ் சிறப்பின.

உயிர் வருக்கம், மவ் வருக்கம் போன்றவற்றில் அவ்வாறும் தவ் வருக்கம், பவ் வருக்கம், நவ் வருக்கம் போன்றவற்றில் ஐவ்வைந்தும் கவ் வருக்கம், வவ் வருக்கம், சவ் வருக்கம் போன்றவற்றில் நந்நான்கும் யவ் வருக்கத்தில் ஒன்றும் ஆகிய நெட்டெழுத்தாலாகிய மொழி நாற்பதும், நொவ்வுந் துவ்வும் ஆகும் குற்றெழுத்தாலாகிய மொழி இரண்டும் ஆகிய நாற்பத்திரண்டும் ஓரெழுத்தாலாகிய மொழிகள் ஆகும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ – உயிர் வருக்கம்.

மா, மீ, மூ, மே, மை, மோ - மவ் வருக்கம்.

தா, த, தூ, தே, தை – தவ் வருக்கம்.

பா, பூ, பே, பை, போ – பவ் வருக்கம்.

நா, நீ, நே, நை, நோ – நவ் வருக்கம்.

கா, கூ, கை, கோ – கவ் வருக்கம்.

வா, வ, வை, வௌ – வவ் வருக்கம்

சா, சீ, சே, சோ – சவ் வருக்கம்

யா – யவ் வருக்கம்.

நொ, து - குற்றெழுத்தால் ஆகிய மொழி.

ஊ- இறைச்சி, ஓ-மதகுநீர் தாங்கும் பலகை, பே - நுரை, நே - அன்பு, சோ - மதில், நோ - துன்பப்படு, து - உண்.

இவை சிறப்பின எனவே, கு, கௌ, பீ, வே என்பனவும் வந்தமையும்.

**2.** பகுபத உறுப்புகளை விவரி.

பகுதி விகுதி யிடைநிலை சாரியை

சந்தி விகார மாறினு மேற்பவை

முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறினும், பொருளமைதிக்கு ஏற்பனவற்றை நினைத்து அறிவுடையோர் கூட்டி முடிக்க எவ்வகைப் பட்ட பகுபதங்களும் முடியும்.

கூனி என்பது கூன் + இ எனப் பகுதி விகுதியால் முடிந்தது.

உண்டான் என்பது உண் + ட் + ஆன் என அவ்விரண்டுடன் இடைநிலை பெற்று முடிந்தது.

உண்டனன் என்பது உண் + ட் + அன் + அன் என அம் மூன்றுடன் சாரியை பெற்று முடிந்தது.

பிடித்தனன் என்பது பிடி + த் + த் + அன் + அன் என அந் நான்குடன் சந்தி பெற்று முடிந்தது

நடந்தனன் என்பது நட+ த் + த் + அன் +அன் என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகர வல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

3. காலம்காட்டும் விகுதிகளை விளக்கி வரைக.

குறிப்பு

குறிப்பு

றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவுந்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

றகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் காட்டும்.தகரமெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தி வரும். டகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தைக் காட்டும். ககர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் எதிர் காலத்தைக் காட்டும். மின் விகுதியும் மற்றை முன்னிலை ஏவல் விகுதிகளும் வியங்கோள் விகுதிகளும் இகர விகுதியும் மார் விகுதியும், எதிர்காலத்தை உணர்த்தும். பகர விகுதி இறந்தகாலத்தையும், எதிர்காலத்தையும் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்று விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் எதிர்மறை ஆகார விகுதி மூன்று காலத்தையும் ஏற்று வரும்.

.சென்று, சென்றும் என்பன  சென்றேன், சென்றோம் எனப் பொருள்பட்டு இறந்தகாலம் காட்டின.

சேறு , சேறும் என்பன  செல்வேன், செல்வேம் எனப் பொருள்பட்டு எதிர்காலம் காட்டின

வந்து, வந்தும் என்பன  வந்தேன், வந்தேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலம் காட்டின.

வருது, வருதும் என்பன வருவேன், வருவேம் எனப் பொருள்பட்டு எதிர்காலம் காட்டின.

உண்டு, உண்டும் என்பன  உண்டேன், உண்டேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலம் காட்டின.

உண்கு, உண்கும் என்பன  உண்பேன், உண்பேம் எனப் பொருள்பட்டு எதிர்காலம் காட்டின.

உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய் என மின், ஈர், உம், ஆய் என்னும் ஏவல் விகுதிகளும்.

உண்க, வாழிய, வாழியர் எனக் க, இய, இயர் என்னும் வியங்கோள் விகுதிகளும்,

சேறி என இகர விகுதியும்,

உண்மார் என மார் விகுதியும் எதிர்காலம் காட்டின.

சேறி என்பது செல்வாய் எனவும் உண்மார் என்பது உண்பார் எனவும் பொருள்படும்.

உண்ப என்பது உண்டார் எனவும் உண்பார் எனவும் பொருள்பட்டு இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டின.

உண்ணும் என்னும் செய்யுமென் வாய்பாட்டு முற்று நிகழ்காலமும் எதிர்காலமும் காட்டிற்று.

உண்ணா என்னும் எதிர்மறை முக்காலமும் காட்டிற்று.

இகர விகுதி எழுத்துப்பேறாய் வரும் தகர மெய்யின் மேல் ஏறி வரும், அவ்விகுதி சென்றி, செல்லாநின்றி என இறந்த கால இடைநிலை, நிகழ்கால இடைநிலைகளோடு கூடி வரும் போது அவை காலங்காட்டால் ஆற்றான் காலங் காட்டாது நிற்கும்.

இவை சிலவில என்றவைகளுள்ளே, காலம்காட்டும் விகுதிகளை மாத்திரம் சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிற இடைநிலையையும் சொல்லாமையால், அவை சிறுபான்மையின வந்த இடங்களில் கண்டுகொள்க என்று ஆயிற்று. அவை வருமாறு :-

கு, டு, று, என்னும் மூன்றுயிர்மெய் ஈற்றுச் சில குறிலிணைப் பகுதிகள் தம் ஒற்று இரட்டி இறந்தகாலம் காட்டும்.

புக்கான், நக்கான் எனவும்,

தொட்டான், விட்டான் எனவும்

உற்றான், பெற்றான் எனவும் வரும்.

யகர இடைநிலை இறந்தகாலமும், ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இரண்டு இடை நிலைகளும் நிகழ்காலமும்காட்டும்.

போயது எனவும்,

உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான் எனவும் வரும்.

இசின் என்பது இறந்தகால இடைநிலையாயும், மகர மெய்யும் மன் என்பதும் எதிர்கால இடைநிலைகளாயும் செய்யுளில் வரும்.

என்றிசினோர் எனவும்,

என்மர், என்மனார் எனவும் வரும்.

குறிப்பு

**குறிப்பு**

4. நிகழ்காலவினை இடைநிலைகளைச் சுட்டியுரைக்க.

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்

ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

ஆநின்று, கின்று, கிறு என்பன ஐம்பால் மூவிடங்களிலும் நிகழ்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும்.

நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான் என வரும் .

இவை போன்று ஏனைய பாலிடங்களிலும் அமையும்.

5. வடமொழி ஆக்கத்தினை விளக்குக.

இடையி னான்கு மீற்றி லிரண்டும்

அல்லா வச்சை வருக்கமுத லீறி

யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்

பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும்.

ஆரியமொழியுள் சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும், இடையில் நின்ற நான்கும் ஈற்றில் நின்ற இரண்டும் ஒழிந்து நின்ற அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் பத்தும் அல்லென்று வழங்கும் மெய் முப்பத்தேழுள்ளும் க, ச, ட, த, ப என்னும் ஐந்து வருக்கங்களின் முதலில் நின்ற க, ச, ட, த, ப என்னும் ஐந்தும், ஈற்றில் நின்ற ங, ஞ, ண, ந, ம என்னும் ஐந்தும் ய, ர, ல, வ என்னும் நான்கும் ளவ்வும் ஆகிய இருபத்தைந்து எழுத்துக்களும் இவையன்றி மேலே உயிருள் ஒழிந்த ஆறும் ஐந்து வருக்கங்களினும் இடைகளில் ஒழிந்த பதினைந்தும் முப்பதாம் மெய் முதலிய எட்டனுள் ளகரம் ஒழிந்த ஏழுமாகிய இருபத்தெட்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழிலே தமக்கேற்ற பொது எழுத்துக்களாய்த் திரிந்து வரும்.

சிறப்பெழுத்துத் திரியுமென வரையறை கூறவே, பொதுவெழுத்து இயல்பாயும் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பதும் கூறினார் ஆயிற்று.

ஆரியத்துள் உயிரை அச்சு, சுரம் எனவும், மெய்யை அல், வியஞ்சனம் எனவும் கூறுவர்.

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது எழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்சமம் எனப்படும்.

அமலம், கமலம், காரணம், குங்குமம். - இவை பொது எழுத்தாலாகிய தற்சம மொழி.

ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்தாலும் பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்பவம் எனப்படும்.

சுகி, போகி, சுத்தி - இவை சிறப்பெழுத்தாலாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் தற்பவ மொழி.

அரன், செபம், ஞானம், அரி - இவை பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் தற்பவ மொழி.

**குறிப்பு**

## கூறு 10 : நன்னூல் - உயிரீற்றுப் புணரியல்:

**புணர்ச்சியின் இலக்கணம்:**

மெய்உயிர் முதல்ஈ றாம்இரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே.

மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாக உடைய பகாப்பதம் பகுபதம் என்னும் இரண்டு பதங்களும் நிலைமொழியாக நிற்கும்.அவற்றுள் ஒன்றை முதலாக உடைய வருமொழியோடு அல்வழிப் பொருளினாலேனும் வேற்றுமைப் பொருளிலோ இயல்பாகவும் வேற்றுமை அடைந்தும் புணர்வது புணர்ச்சி எனப்படும்.

மெய்யுயிர் முதலீறாம் எனவே, மெய்ம் முதல் மெய்யீறு, உயிர்முதல் உயிரீறு, மெய்ம் முதல் உயிரீறு, உயிர்முதல் மெய்யீறு என நால் வகைப்படும்.

அணி – உயிர் முதல் ( அ ) உயரீறு ( ண் + இ )

அணில் - உயிர்முதல் ( அ ) மெய்யீறு ( ல் )

மணி – மெய்ம்முதல் ( ம் + அ ) உயிரீறு ( ண் + இ )

கரம் -- மெய்முதல் (ம் + அ ) மெய்யீறு ( ம் )

புணர்ச்சி முதல், ஈற்றுச் சொல்வகைகள் நான்கு வகைப்படும்.

உயிர் முன் உயிர் – மணி ( ண் + இ ) அழைத்தான் - மணியழைத்தான்

குறிப்பு

உயிர் முன் மெய் --- அணி ( ண் + இ ) தந்தான் -- அணி தந்தான்

மெய் முன் உயிர் --- ஆல் இலை – ஆலிலை

மெய் முன் மெய் ---- மரம் ( வ் + ஈ ) வீழ்ந்தது – மரம் வீழ்ந்தது.

மொழி இயல்பால் புணர்ச்சி நான்கு வகைப்படும்.

பெயர் முன் பெயர் – சாத்தன் + கை – சாத்தன் கை

பெயர் முன் வினை --- சாத்தன் + உண்டான் -- சாத்தன் உண்டான்

வினை முன் பெயர் -- வந்தான் + சாத்தன் --- வந்தான் சாத்தன்

வினை முன் வினை ---- வந்தான் + போனான் -- வந்தான் போனான்

**அல்வழி வேற்றுமை:**

வேற்றுமை ஐம்முதல் ஆறாம் அல்வழி

தொழில்பண்பு உவமை உம்மை அன்மொழி

எழுவாய் விளிஈர் எச்சம்முற்று இடையுரி

தழுவு தொடர்அடுக்கு எனஈர் ஏழே .

வேற்றுமைப் புணர்ச்சி ஐ, ஆல், கு, இன்,அது, கண் என்னும் ஆறுஉருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி ஆகும்.அல்வழிப் புணர்ச்சி வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை, எழுவாய்த் தொடர், விளித்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொல்தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத் தொடர் போன்றன புணர்ந்து வரும் புணர்ச்சி ஆகும்.

**வேற்றுமை**

| வேற்றுமைத்தொகை | வேற்றுமைவிரி |
|---|---|
| நிலங்கடந்தான் | நிலத்தைக் கடந்தான். |
| கல்லெறிந்தான் | கல்லா லெறிந்தான் |
| கொற்றன் மகன் | கொற்றனுக்கு மகன் |

குறிப்பு

| | |
|---|---|
| மலை வீழருவி | மலையின் வீழருவி |
| சாத்தன் கை | சாத்தனது கை |
| குன்றக் கூகை | குன்றத்தின்கட் கூகை |

**அல்வழி**

**தொகைநிலைத்தொடர்**

கொல்யானை - வினைத்தொகை

கருங்குதிரை - பண்புத் தொகை

சாரைப்பாம்பு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

மதிமுகம் - உவமைத்தொகை

இராப்பகல் - உம்மைத் தொகை

பொற்றொடி - அன்மொழித்தொகை

**தொகா நிலைத்தொடர்**

சாத்தன் வந்தான் - எழுவாய்த் தொடர்

சாத்தா வா விளித் தொடர்

வந்தசாத்தன் பெயரெச்சத் தொடர்

வந்து போனான் - வினையெச்சத் தொடர்

வந்தான் சாத்தன் - தெரிநிலை வினைமுற்றுத்தொடர்

பெரியன் சாத்தன் - குறிப்பு வினைமுற்றுத்தொடர்

மற்றொன்று - இடைச்சொற்றொடர்

நனிபேதை - உரிச்சொற்றொடர்

பாம்பு பாம்பு - அடுக்குத் தொடர்

தழுவு தொடர் ஆறும் பதினான்கும் எனக் கூறவே, அவ்விரு வழியிலும் தழாத்தொடரும் சில உள என்பது வெளிப்பட்டு நிற்கும்.

கைக்களிறு என்பது கையை உடைய களிறு என விரிக்கப்படுதலால், கையென்பது களிறு என்பதைத் தழுவாது தொடர்ந்தது. இது தழாத்தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சி.

சுரையாழ அம்மி மிதப்ப என்பது சுரை மிதப்ப அம்மி யாழ எனக் கூட்டப்படுதலால், சுரை என்பது ஆழ என்பதையும் அம்மி என்பது மிதப்ப

என்பதையும் தழுவாது தொடர்ந்தன; இவை தழாத் தொடராகிய அல்வழிப் புணர்ச்சி. தழாத்தொடராவது நிலைமொழியானது வருமொழியைப்பொருள் பொருத்த முறத் தழுவாத தொடர் . பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர் தழுவுதொடர் .

**இயல்புப் புணர்ச்சி**

விகாரம் அனைத்து மேவலது இயல்பே.

மேல் வரும் விகார வகையனைத்தும் மேவலது இயல்பாகும்.

பொன்+ மலை – பொன்மலை

புகழ் + அழகிது - புகழழகிது

ஒளி + மணி - ஒளிமணி

**விகாரப் புணர்ச்சி**

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்

மூன்று மொழிமூ விடத்து மாகும்.

எழுத்தாயினும் சாரியையாயினும் தோன்றல், வேறு படுதல், கெடுதல் என்பன முன் சொல்லப்பெற்ற விகாரமாகும். இம் மூவகை விகாரமும் நிலைமொழி வருமொழிகளுடைய முதல், இடை, கடை என்னும் மூன்றிடத்தும் ஏற்றபடி வரும்.

பூ + கொடி = பூங்கொடி - வருமொழி முதலில் மெய் தோன்றிற்று.

பல் + தலை = ப.்.றலை - வருமொழி முதலிலும் நிலைமொழி ஈற்றிலும் உள்ள மெய்கள் திரிந்தன.

நிலம் + வலயம் = நிலவலயம் - நிலைமொழி ஈற்று மெய் கெட்டது.

ஆறு + பத்து =அறுபது - நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழி இடை ஒற்றுக் கெட்டது.

பல + பொருள் = பல்பொருள் - நிலைமொழி ஈற்றுயிர் கெட்டது.

நாழி + உரி = நாடுரி - நிலைமொழி ஈற்றுயிர் மெய் கெட்டு டகர மெய் தோன்றிற்று.

தமிழ் + பிள்ளை = தமிழ்ப்பிள்ளை - நிலைமொழி ஈற்றில் சாரியை தோன்றிற்று.

பனை + காய் = பனங்காய் - நிலைமொழி ஈற்றுயிர் கெட்டுச் சாரியை தோன்றிற்று.

**செய்யுள் விகாரம்**

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்

விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

மெல்லொற்றை வல்லொற்று ஆக்கலும் வல்லொற்றை மெல்லொற்று ஆக்கலும் குற்றெழுத்தை நெட்டெழுத்து ஆக்கலும் நெட்டெழுத்தைக் குற்றெழுத்து ஆக்கலும் இல்லாத எழுத்தை வருவித்தலும் உள்ள எழுத்தை நீக்கலும் செய்யுளிடத்து அடி, தொடை முதலானவைகளை நோக்கி அமைக்க வேண்டும் இடத்து வருவனவாகும்.

## குறிப்பு

குறுத்தாட் பூதம் - இங்கே குறுந்தாள் என்பது குறுத்தாள் என வலிந்து நின்றது.

தண்டையின் இனக்கிளி - இங்கே தட்டை என்பது தண்டை என மெலிந்து நின்றது.

போத்தறார் புல்லறி வினார் - இங்கே பொத்தறார் என்பது போத்தறார் என நீண்டு நின்றது.

நன்றென்றேன் தியேன் - இங்கே தீயேன் என்பது தியேன் எனக் குறுகி நின்றது .

சிறியிலை வெதிரி நெல்விளை யும்மே - இங்கே விளையுமே என்பது விளையும்மே என மகர மெய்விரிந்து நின்றது.

சிறிய இலை என்பது சிறியிலை என யகர உயிர்மெய் தொக்கு நின்றது.

**குறைச்சொற்கள்:**

செய்யுளில் ெறற்கள் மழுமையாக நில்லாமல் அசை, சீர். தளை ஆகியவற்றிற்காகக் குறைந்து வரும்.இவ்வாறு வருவன குறைச் சொற்கள் எனப்படும்.

ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

ஒரு சொல் முதல், இடை, கடை என்னும் மூன்றிடத்துள் ஓரிடத்துக் குறைந்து வருதல் செய்யுள் விகாரமாம்.

மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி - இங்கே தாமரை என்பது மரை என முதற் குறைந்து நின்றது.

வேதின வெரிநின் ஓதி முதுபோத்து - இங்கே ஓந்தி என்பது ஓதி என இடைக் குறைந்து நின்றது.

நீலுண் துகிலிகை கடுப்ப - இங்கே நீலம் என்பது நீல் எனக் கடைக் குறைந்து நின்றது

**குறிப்பு**

உரையிற்கோடலால், விதி இன்றி வருவனவாகிய புணர்ச்சியில் விகாரங்களும் கொள்ளப்படும். அவை தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலைமாறுதல் என்பனவாம்.

யாது - யாவது - இது தோன்றல்.

மாகி-மாசி,

உயர்திணை மேல - உயர்திணை மேன - இவை திரிதல்.

யாவர் - யார்,

யார் - ஆர்,

யானை - ஆனை,

யாடு - ஆடு,

யாறு - ஆறு - இவை கெடுதல்.

பொழுது - போழ்து,

பெயர் - பேர் - இவை நீளல்.

வைசாகி - வைகாசி,

மிஞிறு - ஞிமிறு,

தசை - சதை - இவை எழுத்து நிலைமாறுதல்.

கண்மீ மீகண்,

இல்வாய் = வாயில்,

நகர்ப்புறம் = புறநகர் -- இவை சொல் நிலை மாறுதல்.

**புணர்ச்சி விகாரத்தில் வருவதோர் ஐயம் ஒழித்தல்**

ஒருபுணர்க்கு இரண்டு மூன்றும் உறப்பெறும்.

ஒரு புணர்ச்சிக்கு ஒன்றே அன்றி இரண்டு மூன்றும் வரப் பெறும்.

யானை + கோடு யானைக்கோடு - ஒரு விகாரம்.

நிலம் + பனை  நிலப்பனை - இரண்டு விகாரம்.

பனை + காய்  பனங்காய் - மூன்று விகாரம்.

**பொதுப் புணர்ச்சி**

**எல்லா ஈற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்:**

குறிப்பு

எண்மூ எழுத்தீற்று எவ்வகை மொழிக்கும்

முன்வரு ஞ ந ம ய வக்கள் இயல்பும்

குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி

மிகலுமாம் ண ள ன ல வழிநத் திரியும் .

இயல்பினாலும் விதியினாலும் இருபத்துநான்கு எழுத்தையும் ஈறாகவுடைய பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், திசைச்சொல், வடசொல் என்னும் பலவகைப்பட்ட சொற்களுக்கும் முன்னே வரும் ஞகர, நகர, மகர, யகர, வகரங்கள் அல்வழி, வேற்றுமை இரண்டிலும் இயல்பாகும். குறிலை அடுத்த யகரத்தின் முன்னும் ஓரெழுத்தொருமொழியாகிய உயிர், உயிர்மெய் என்னும் ஐகாரமே நொவ்வே துவ்வே என்பவைகளுக்கு முன் வரும் ஞகார, நகார, மகாரங்கள் பிற சொற்களின் முன் இயல்பாதல் அன்றி மிக்கு முடிதலும் ஆகும். ண, ள, ன, லக்களின் முன் வரும் நகரம் பிற ஈற்றின் முன் இயல்பாதலன்றித் திரியும்.

விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண்,பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எ ஃ.கு என்னும் நிலை மொழிகளோடு , அல்வழிப் புணர்சியில் சான்றாக ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என்னும் வருமொழிகளையும், வேற்றுமைப் புணர்ச்சியில் சான்றாக ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என்னும் வருமொழிகளையும் புணர்த்துக் கொள்ளல் வேண்டும்.

**அல்வழி**

விள + ஞான்றது - விள ஞான்றது

விள+ நீண்டது -- விள நீண்டது

விள+ மாண்டது - விளமாண்டது

விள +யாது - விள யாது

விள +வலிது - விள வலிது

**வேற்றுமை**

விள+ ஞாற்சி - விள ஞாற்சி

விள+ நீட்சி - விள நீட்சி

குறிப்பு

விள +மாட்சி - விள மாட்சி

விள +யாப்பு - விள யாப்பு

விள +வன்மை - விள வன்மை

என எல்லா ஈற்றின் முன்னும் ஞ, ந, ம, ய, வக்கள் இயல்பாயின.

உரிஞ் + ஞான்றது = உரிஞ்ஞான்றது,

பொருந் + ஞான்றது = பொருஞ்ஞான்றது,

வேல் + ஞான்றது = வேன்ஞான்றது,

வாள் + ஞான்றது =வாண் ஞான்றது ,

மரம் + ஞான்றது = மரஞான்றது என நிலைமொழி ஈறுகள் விகாரப்படுதல் அவ்வவ் ஈற்றுச் சிறப்பு விதிகளில் காண்க.

| **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| மெய்ஞ் + ஞான்றது | மெய்ஞ் ஞாற்சி |
| மெய்ந் + நீண்டது | மெய்ந் நீட்சி |
| மெய்ம் + மாண்டது | மெய்ம் மாட்சி |
| கைஞ் + ஞான்றது | கைஞ் ஞாற்சி |
| கைந் + நீண்டது | கைந் நீட்சி |
| கைம் + மாண்டது | கைம் மாட்சி |

**வேற்றுமை**

மெய்ஞ் + ஞாற்சி - மெய்ஞ் + ஞாற்சி

மெய்ந் + நீட்சி - மெய்ந் + நீட்சி

மெய்ம் + மாட்சி - மெய்ம் + மாட்சி

கைஞ் + ஞாற்சி - கைஞ் + ஞாற்சி

குறிப்பு

கைந் + நீட்சி - கைந் + நீட்சி

கைம் + மாட்சி - கைம் + மாட்சி

எனக் குறில் முன்னின்ற யகரத்தின் முன்னும் தனி ஐம் முன்னும் மெலி மிகுந்து நின்றன.

நொ, து, முன் மெலி மிகலுமாம் என்ற எச்ச உம்மையால், அவ் விரண்டன் முன்னும் இடை எழுத்து மிகலுமாம் என்றாராயிற்று .

நொ + ஞெள்ளா = நொஞ்ஞெள்ளா

து + ஞெள்ளா = துஞ்ஞெள்ளா

நொ + நாகா = நொந்நாகா

து + நாகா = துந்நாகா

நொ + மாடா = நொம்மாடா

து + மாடா = தும்மாடா

நொ + யவனா = நொய்யவனா

து + யவனா = துய்யவனா

நொ + வளவா = நொவ்வளவா

து + வளவா = துவ்வளவா

இவை வினைச்சொற்கள் ஆதலால், அல்வழியிலே மிகுந்தன.

**பொதுப்பெயர் உயர்திணைப்பெயர் ஈறு:**

பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்

வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன்

வன்மை மிகாசில விகாரமாம் உயர்திணை.

உயர்திணை அ.்.றிணை இரண்டுக்கும் பொதுவாய் பொதுப் பெயர்களுக்கும் உயர் திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள் வல்லெழுத்து முதல் மொழிகள் வரின் இயல்பாகும். உயிரையும் யகர ரகர மெய்களையும் ஈறாகவுடைய அவ்விருவகைப் பெயர்களுக்கும் முன் வரும் வல்லெழுத்துக்கள் மிகாது.மெய்யீறும் உயிரீறுமாகிய உயர்திணைப் பெயர்களுள் சில பெயர்கள் நாற்கணங்களோடும் புணரும் இடத்து நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுதலும் உடையனவாகும்.

குறிப்பு

நாற்கணமாவன : - வன்கனம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பனவாம்.

.சாத்தன், கொற்றன், ஆண் இவற்றின் முன் குறிது, சிறிது, தீது, பெரிது, குறியன், சிறியன், தீயன்,பெரியன் கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து சாத்தன்குறிது, சாத்தன்குறியன் , சாத்தன்கை என முறையே கூட்டிப் பொதுபெயர் ஈற்று னகர ணகர மெய் இரு வழியும் இயல்பாயிற்று.

ஊரன், அவன் இவற்றின் முன் குறியன், சிறியன், தீயன் பெரியன் கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, ஊரன்குறியன், ஊரன்கை என முறையே கூட்டி, உயர்திணைப் பெயர்ஈற்று னகர மெய் இருவழியும் இயல்பாயிற்று.

தோன்றல் வேள் இவற்றின் முன் குறியன், சிறியன், பெரியன் கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, தோன்றல்குறியன், தோன்றல்கை என முறையே கூட்டி உயர் திணைப் பெயர்ஈற்று லகர ள கர மெய் இரு வழியும் இயல்பாயிற்று.

தோன்றல் + தீயன் = தோன்றறீயன்

தோன்றல் + தலை = தோன்றறலை எனவும் ,

வேள் + தீயன் = வேடீயன்

வேள் + தலை = வேடலை எனவும், லகர ளகர மெய் தகரம் வருமிடத்துக் கெடுதல் மயக்க விதி இன்மைப்பற்றி ஆகும்.

சாத்தி, கொற்றி, தாய் இவற்றின் முன் குறிது, சிறிது, தீது, பெரிது; குறியள், சிறியள்,தீயள், பெரியள் செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, சாத்திகுறிது, சாத்திகுறியள், சாத்திகை என முறையே கூட்டிப் பொதுப்பெயர் ஈற்று உயிர் யகர முன் வலி இருவழியும் இயல்பாயிற்று.

நம்பி, விடலை இவற்றின் முன், குறியன், சிறியன், தீயன், பெரியன், கை, செவி. தலை, புறம் இவற்றையும், அவர் ஒருவர் இவற்றின் முன், குறியர், சிறியர், தீயர், பெரியர், கை, செவி, தலை, புறம் இவற்றையும் வருவித்து, நம்பிகுறியன், நம்பிகை, அவர்குறியர், அவர்கை என முறையே கூட்டி , உயர்திணைப் பெயர்ஈற்று உயிர் ரகரமுன் வலி இருவழியும் இயல்பாயிற்று.

கபிலன் + பரணன் = கபிலபரணர்,

வடுகன் + நாதன் = வடுகநாதன்,

அரசன் + வள்ளல் = அரசவள்ளல் இவை ஈறு கெட்டு இயல்பாய் முடிந்தன.

ஆசீவகர் + பள்ளி = ஆசீவகப்பள்ளி

வாணிகர் + தெரு = வாணிகத்தெரு இவை ஈறு கெட்டு , வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிந்தன .

குறிப்பு

குமரன் + கோட்டம் = குமரகோட்டம், குமரக்கோட்டம்,

வாசுதேவன் + கோட்டம் = வாசுதேவகோட்டம், வாசுதேவக் கோட்டம் இவை ஈறு கெட்டு , வருமொழி வல்லெழுத்து இயல்பாயும் மிக்கும் முடிந்தது.

பார்ப்பான் + கன்னி = பார்ப்பனக்கன்னி - இது ஈற்றயல் குறுகி, அகரச்சாரியைப் பெற்று, வருமொழி வல்லெழுத்து மிக்கும் முடிந்தது.

வேளாளன் + பிள்ளை = வேளாண்பிள்ளை என நிலைமொழி ஈற்று அன் கெட்டு ளகரமெய் ணகர மெய்யாகத் திரிந்து முடிந்தது.

மக்கள் + பண்பு = மக்கட் பண்பு

மக்கள் + சுட்டு = மக்கட்சுட்டு என நிலைமொழி ஈற்று மெய்திரிந்து முடிந்தது.

**வினாப்பெயர் விளிப்பெயர் முன் வல்லினம்**

ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி யியல்பே .

ஆ, ஏ, ஓ என்னும் மூன்று ஈற்று வினா முன்னும், யா என்னும் வினாப் பெயர் முன்னும், உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயர் முன்னும், வலி இயல்பு ஆகும்.

நம்பியா கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும், உண்கா, கொற்றா, சாத்தா தேவா, பூதா, எனவும் ஈற்று வினா .முன் வலி இயல்பாயிற்று.

உண்கு + ஆ = உண்கா - உண்பேனா இறுதி ஏகார ஓகார வினாக்களுக்கு உதாரணம் - இடைச்சொல்லேயோ ” என்னும் சிறப்புச் சூத்திரத்தில் பெறப்படும் . யா குறியன, சிறியன, தீயன பெரியன என யா வினா முன் வலி இயல்பாதல் காண்க .

நம்பி, நம்பீ;

விடலை விடலாய்,

கிள்ளை, கிள்ளாய்

தாய், தாயே - இவற்றின் முன் கொள், செல், தா, போ இவற்றை வருவித்து, நம்பி கொள், நம்பி செல், நம்பி தா நம்பி போ என முறையே கூட்டி, விளிப்பெயர் முன் வலி இயல்பாயிற்று.

**முன்னிலைவினை ஏவல்வினை முன் வல்லினம்**

குறிப்பு

ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை

ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே .

உயிரையும் ய, ர, ழ என்னும் மூன்று மெய்களையும் இறுதியாக உடைய முன்னிலை வினை முன்னும், ஏவல் வினை முன்னும், வரும் க, ச, த, பக்கள் இயல்புடனே விகற்பமாம்.

முன்னிலைவினை என்றது, தன்மைவினை படர்க்கை வினைகளுக்கு இனமாய், முன் நின்றான் தொழிலையுணர்த்தும் வினையை ஏவல்வினை யென்றது, இனமின்றி முன்னிலை ஒன்றற்கே உரியதாய், முன்நின்றானைத் தொழிற்படுத்தும் வினையை ஆகும்.

விகற்பம் என்பது ஒருகால் இயல்பாயும் ஒருகால் விகாரமாயும் புணர்வது ஆகும்.

உண்டி, உண்டனை, உண்டாய் எனவும்

உண்டனிர், உண்டீர் எனவும், நிறுத்தி,

சாத்தா, கொற்றா, தேவா, பூதா எனவும்,

சாத்தரே, கொற்றரே, தேவரே, பூதரே

எனவும் வருவித்து,

உண்டி சாத்தா, உண்டனிர் சாத்தரே

எனக் கூட்ட ஆவி, ய, ர இறுதி முன்னிலை வினை முன் இயல்பாயிற்று.

கொணா, எறி, விடு ஆய், சேர், தாழ் என நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா என வருவித்து, கொணா சாத்தா என முறையே கூட்டி, ஆவி, ய, ர, ழ இறுதி ஏவல்வினைமுன் இயல்பாதல் காண்க.

நட கொற்றா, நடக் கொற்றா,

எய் கொற்றா, எய்க் கொற்றா என ஏவல்வினை முன் விகற்பித்து வந்தது.

**உயிர் ஈற்றுச் சிறப்புப் புணர்ச்சி**

**உயிர் முன் உயிர் புணர்தல்**

இ ஈ ஐவழி யவ்வு மேனை

உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் இருமையும்

உயிர்வரின் உடம்படு மெய்யென்று ஆகும் .

இகர ஈகார ஐகாரங்களின் முன்னே யகரமும் ஆ, ஆ, உ, ஊ, ஒ ,ஓ ,ஔ என்னும் இவ் ஏழுயிர்களின் முன்னே வகரமும், ஏகாரத்தின் முன்னே யகரமும் வகரமும், உயிர் முதன் மொழி வரின் உடம்படுமெய் என்று வரப்பெறும்.

உடம்படுமெய் என்பது, நிலைமொழி ஈற்றினும், வருமொழி முதலினும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய் ஆகும்.

குறிப்பு

மணி + அழகிது - மணியழகிது,

தீ + அழகிது -தீயழகிது

பனை + அழகிது –பனையழகிது - இ, ஈ, ஐ ம் முன் இரு வழியும் யகரம் வந்தது.

விள + அழகிது –விளவழகிது

பாலா + அழகிது –பலாவழகிது

பூ + அழகிது – பூவழகிது

நொ + அழகிது – நொவழகிது

கோ + அழகிது – கோவழகிது

கௌ + அழகிது – கௌவழகிது - மற்றை உயிர்களின் முன், இரு வழியும் வகரம் வந்தது.

அவனே + அழகன் = அவனே யழகன் என இடைச் சொல்லாகிய ஏ முன் யகரமும்,

ஏ + எலாம் = ஏவெலாம்,

சே + உழுதது = சேவுழுதது என ஒரெழுத்தொருமொழியாகிய உயிர் , உயிர்மெய் என்னும் ஏமுன் வகரமும்,

சே + அடி = சேயடி , சேவடி எனச் செம்மை என்னும் பண்புப் பெயரின் விகாரமாகிய சே முன் யகரமும் வகரமும் வந்தமைந்தன.

**வினாச் சுட்டின் முன் நாற்கணமும் புணர்தல்**

குறிப்பு

எகர வினாமுச் சுட்டின் முன்னர்

உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்

பிறவரின் அவையும் தூக்கிற் சுட்டு

நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே .

எகர வினா இடைச்சொல்லின் முன்னும் அ, இ, உ என்னும் சுட்டுச் சொல்லின் முன்னும், உயிரும் யகரமும் வரின் வகரம் வரும். யகர மொழிந்த மெய்கள் அந்த மெய்கள் மிக்கு வரும்.

எவ் வணி, எவ் யானை; அவ் வணி, அவ் யானை. இவ் வணி, இவ் யானை; உவ்வணி, உவ் யானை என எகர வினா முச்சுட்டின் முன் உயிரும் யகரமும் வர, வகரம் தோன்றுதல் காண்க.

எக் குதிரை, எச் சேனை, எத் தண்டு, எப் படை, எஞ் ஞாலம், எந் நாடு, எம் மனை, எவ் வளை, எங்ஙனம் என யகர மொழிந்த மெய்கள் வர, அவ்வந்த மெய்கள் தோன்றுதல் காண்க. ஒழிந்த 3. ஆஇடை - ஆயிடைத்தமிழ் கூறுநல் லுலகத்து எனச் சுட்டு நீண்ட விடத்து யாகரம் தோன்றுதல் காண்க.

நெறி என்றமையால் யாங்ஙனம் என யாவினா முன்னும் , ஆங்ஙனம் , ஈங்ஙனம் , ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகர மிகுதலும்,

ஈது எனவும், ஆங்கு, ஈங்கு, ஊங்கு எனவும்,ஆண்டு, ஈண்டு எனவும் சுட்டுப்பெயர் நீளலும்,

விண்வத்துக் கொட்கும் எனவும், “செல்வுழிச் செல்க” எனவும் , “சார்வுழிச் சார்ந்த தகையள்” எனவும், மெய்யீற்றின் முன் உயிர் வர , இப்படி உடம்படுமெய் அல்லாத வகரம் பெறுதலும் கொள்ளப்படும்.

**குற்றியலுகர, சில முற்றியலுகரத்தின் முன் உயிரும் யகரமும் புணர்தல்**

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

யவ்வரின் இய்யாம் முற்றும்அற்று ஓரோவழி .

குற்றியலுகரம் உயிர் முதன் மொழி வந்தால் தனக்கு இடமாகிய மெய்யை விட்டுக் கெடும். யகரம் முதன் மொழி வந்தால் அது இகரமாகத் திரியும். முற்றியலுகரம் வந்தால் அவவிரு விதியையும் பெறும்.

நாகு, எ∴கு, வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு இவற்றின் முன், அரிது, அருமை முதலிய உயிர் முதன் மொழிகளை வருவித்து, நா கரிது, நா கருமை எனக் கூட்டி, இரு வழியும் உயிர் வரக் குற்றியலுகரம் தான் ஏறி நின்ற வல்லின மெய்யை விட்டுக் கெட்டது.

நாகு முதலியவற்றின் முன், யாது, யாப்பு என வருவித்து நாகி யாது, நாகி யாப்பு எனக் கூட்டி இரு வழியும் யகரம் வரக் குற்றியலுகரம் இகரமாகத் திரிந்தது.

கதவு + அழகிது = கதவழகிது ;

கதவு + யாது = கதவி யாது எனவும் ,

அது + ஐ = அதை எனவும் முற்றியலுகரம் ஒரோரிடத்து அவ்விரு விதியும் பெற்று நிற்றல் உண்டு.

குறிப்பு

**உயிர் ஈற்று முன் வல்லினம்:**

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்

க ச த ப மிகும்வித வாதன மன்னே .

இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின் முன் வரும் க, ச, த, பக்கள் பெரும்பாலும் மிகும். பின் சிறப்பு விதியில் சொல்லாதவைகளுள் அவை அமையும்.

ஆடூஉக் குறியன், நம்பிக் கொற்றன் எனவும்

ஆடூஉக் கை, செட்டித் தெரு எனவும்

உயர்திணைப் பெயர் முன் இருவழியும் வல்லெழுத்து மிக்கன.

சாத்திப்பெண் எனப் பொதுப்பெயர் முன் அல் வழியில் வல்லெழுத்து மிக்கது.

விளக்குறிது, தாராக் கடிது, தீப் பெரிது, வடுத்தீது, கொக்குக் கடிது, கொண்மூக் கரிது, சேச் சிறிது, சோப்பெரிது எனவும்

ஒற்றைக் கை, வட்டக் கல், தாழக் கோல் எனவும் அ.்.றிணைப்பெயர் முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கன.

விளக்கோடு, பாலாக்காய், கிளிச்சிறை, தீக்கடுமை, கடுக்காய், கொக்குக் கால், வண்டுக் கால், கொண் மூக்குழாம், சேக்கொம்பு, தினைத் தாள், சோப்பெருமை என அ.்.றிணைப் பெயர் முன் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கன .

ஆடிக் கொண்டான், ஆடாக் கொண்டான், ஆடூஉக்கொண்டான், ஆடெனக் கொண்டான், ஆடக் கொண்டான். உண்பாக்குச் சென்றான், பூத்துக் காய்த்தது, பொள்ளெனப் பரந்தது, சாலப் பகைத்தது எனவும், இருளின்றிக் கண்டார், பொருளன்றிக் காணார் எனவும், தெரிநிலை வினையெச்சத்தின் முன்னும் குறிப்பு வினையெச்சத்தின் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

கூவிற்றுக் கோழி எனவும், குண்டுகட்டுக் களிறு எனவும் தெரிநிலை வினைமுற்றின் முன்னும் குறிப்பு வினைமுற்றின் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

ஆங்கக் கொண்டான், இனிச் செய்வேன், மற்றைத் தெரு என இடைச் சொல்லின் முன் வல்லெழுத்து மிக்கன.

தவப்பெரியன், கடிக்கமலம், பணைத்தோள் என உரிச்சொல்லின் முன் வல்லெழுத்துமிக்கன.

சொன்றிக் குழிசி எனத் திசைச்சொல் முன்னும், கங்கைச் சடை என வடசொல் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

**உயிர் ஈற்று மரப் பெயர் முன் வல்லினம் புணர்தல்**

மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து

வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே .

வேற்றுமையில் உயிரீற்றுச் சில மரப் பெயர்களுக்கு முன் மேற்கூறிய பொது விதியால் வரும் வல்லெழுத்து மிகாது அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்து மிகப்பெறு வனவும் சில உளவாம்

விள + காய் = விளங்காய்

கள + கனி = களங்கனி

மா + துளிர் = மாந்துளிர்

காயா + பூ = காயாம்பூ என வரும்.

**அகர ஈற்றுச் சிறப்புவிதி**

செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்

பெயரின் எச்சம்முற்று ஆறன் உருபே

அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே .

செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்ச வினையும் பல வகைப்பட்ட பெயரெச்ச வினையும், பல வகைப்பட்ட முற்று வினையும் ஆறாம் வேற்றுமை அகர உருபும் அஃறிணைப் பன்மைப் பெயரும் அம்ம என்னும் உரையசை இடைச்சொல்லும் ஆகிய அகர ஈற்றுச் சொற்கள் ஆகிய ஆறன் முன்னும் வல்லெழுத்துக்கள் இயல்பாம்.

முதலிலும் ஈற்றிலும் அகர ஈற்றுச் சொல் வைத்தமையால், இடை நின்றனவும் அகர ஈற்றுச் சொற்கள் என்பது பெற்றாம்.

பல் வகைப் பெயரெச்சம் என்றது, வினையடி நான்கினும் பிறந்த பெயரெச்சங்களை பல் வகை முற்றென்றது, வினையடி நான்கினும் பிறந்த முற்று வினைகளை . வினையடி நான்காவன :இயல்பாகிய வினையடி ஒன்றும், மற்றைப் பெயர், இடை, உரி அடியாகப் பிறந்த செயற்கை வினையடி மூன்றுமாம் .

குறிப்பு

உண்ணிய கொண்டான், சென்றான், தந்தான், போயினான் - செய்யிய என்னும் வினையெச்சம் முன் இயல்பாயின

உண்ட, உண்ணாநின்ற, உண்ணாத,

கடைக்கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கறுவிய, அமரிய,

திண்ணென்ற, பொன்போன்ற, சான்ற, உற்ற என்பன போன்ற வரும் நால்வகைத் தெரிநிலைப் பெயரெச்ச வினை முன் இயல்பாயின.

அமர்முகத்த, கடுங்கண்ண, சிறிய, பெரிய, உள, இல, பல, சில, பொன்னன்ன, கடிய என வரும் மூவகை வினைக்குறிப்புப் பெயர் எச்சம் முன் இயல்பாயின.

உண்ட குதிரை, உண்ட செந்நாய், உண்ட தகர் உண்ட பன்றி என வரும் பல்வகைப் பெயரெச்சம் முன் இயல்பாயின.

குறிப்புவினை, இயற்கை வினையடி ஏலாமையால், மூவகை ஆயிற்று.

உண்டன, உண்ணா நின்றன, உண்பன, உண்ணாதன என்னும் தெரிநிலை வினைமுற்று முன் இயல்பாயின.

அமர்முகத்தன, கரியன என்னும் குறிப்பு வினைமுற்று முன் இயல்பாயின.

உண்டன குதிரை, உண்டன செந் நாய் எனக்கூட்டி , முற்று முன் இயல்பாயின.

இனி மேற்காட்டிய பெயரெச்ச வினைகட்கும், அன் பெறாத அகர ஈற்றுப் பல்வகை முற்று வினைகட்கும், பொருள் வேறுபாடு அன்றிச் சொல் வேறுபாடு இன்மையால், அவையே உதாரணமாகக் கொள்க.

வாழ்க கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வியங்கோள் முற்றின் முன் இயல்பாயின.

வாழிய என்பதனோடும் இப்படியே கூட்டுக . முற்று முன் இயல்பாம் எனவே இவ் வினைமுற்று வினையெச்சமாகியும் குறிப்புமுற்று ஈரெச்சம் ஆகியும் நின்றபோது வரும் வல்லினம் இயல்பாதலும் கொள்க .

உண்ட, கண்டன, இது உண்டு கண்டன எனப் பொருள்படுவதால், வினைமுற்று வினையெச்சமாயிற்று.

அமர்முகத்த கலக்கின - இது அமர்முகத்தவாகிக் கலக்கின எனப் பொருள்படுவதால் குறிப்புமுற்று வினை யெச்சமாயிற்று .

அமர்முகத்த குதிரை வந்தன - இது அமர்முகத்தனவாகிய குதிரை வந்தன எனப் பொருள்படுவதால் குறிப்பு முற்றுப் பெயரெச்சம் ஆயிற்று.

குறிப்பு

இவற்றின் முன் வல்லினம் இயல்பாதல்:

தன கைகள், செவிகள் , தாள்கள், பதங்கள் என ஆறன் உருபின் முன் இயல்பாயின .

பல குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் எனவும் ,

பல கொடுத்தான், செய்தான், தந்தான், பெற்றான் - அ.்.றிணைப் பன்மைப்பெயர் முன் இரு வழியும் இயல்பாயின.

அம்ம கொற்றா, சாத்தா, தேவா, பூதா என உரையசை இடைச்சொல் முன் இயல்பாயின . **வாழிய:**

வாழிய என்பத ஈற்றின் உயிர்மெய்

ஏகலு முரித்து அ.்.து ஏகினும் இயல்பே .

வாழிய என்னும் வியங்கோள் முற்றினுடைய இறுதியிலுள்ள யகர உயிர்மெய் குறைதலும் உரித்தாகும். அவ் உயிர்மெய் குறைந்து, இகர ஈறாய் நின்றாலும் வல்லினம் பொது விதியினாலே மிகாது சிறப்பு விதியில் கூறிய இயல்பேயாகும்.

ஆ வாழி, அந்தணர் வாழி என ஈற்றுயிர்மெய் குறைந்தது .

வாழி கொற்றா, சாத்தா, தேவா, பூதா என ஈற்றுயிர் மெய் குறைந்த இடத்தும் வல்லினம் இயல்பாயின .

**சாவ:**

சாவஎன் மொழியீற்று உயிர்மெய்சா தலும்விதி .

„சாவ' என்னும் செய என் எச்சவினைச் சொல்லினுடைய இறுதியில் உள்ள வகர உயிர்மெய் கெட்டுப் புணர்தலும் விதியாகும்.

சாவ + குத்தினான் - சாக் குத்தினான் எனவரும். .இப்புணர்ச்சி சாவக் குத்தினான் என்னும் புணர்ச்சி போல் சிறந்ததாய் அமையாமையால் சாதலும் விதி என்றார்.

**பலசில**

பலசில எனும்இவை தம்முன் தாம்வரின்

குறிப்பு

இயல்பு மிகலும் அகரம் ஏக

லகரம் றகரம் ஆகலும் பிறவரின்

அகரம் விகற்பம் ஆகலும் உளபிற.

பல, சில என்னும் இவ்விரு சொல்லும் தமக்கு முன்னே தாம் வருமாயின் இயல்பாதலும் மிகுதலும் அகரம் கெட லகரம் றகரமாகத் திரிதலும் உண்டு. இவற்றின் முன் பிற மொழிகளுள் யாதாயினும் ஒன்றுவரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உண்டாம்.

பலபல, சிலசில என இயல்பாயின.

பலப்பல, சிலச்சில என மிக்கன.

பற்பல, சிற்சில என அகரம்கெட லகரம் றகரமாயிற்று.

பலகலை, பல்கலை; பலசாலை, பல்சாலை, பலதாழிசை, பஃறாழிசை: பலபடை, பல்படை; பலஞானம், பன்ஞானம்; பலநாள், பன்னாள்; பலமணி, பன்மணி; பலவளை, பல்வளை; பலயாழ் பல்யாழ்; பலவணி, பல்லணி; பலவாயம், பல்லாயம் எனப் பிற வர அகரம் விகற்பம் ஆயிற்று.

பிற என்ற மிகையினாலே, பல்பல சில்சில என அகரம் கெட லகரம் றகரம் ஆகாது ஒரோ இடத்து அருகி வருதலும், இன்னும் , அகர ஈற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவும் கொள்க. **ஆகார வீற்றுச் சிறப்புவிதி**

அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா.

அல்வழியில் ஆவும், மாவும் ஆகிய இருபெயரும், மியா என்னும் முன்னிலை அசை இடைச்சொல்லும், ஆகார ஈற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை முற்று வினையும் ஆகியவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாகும் .

ஆ குறிது, மா குறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழியில் ஆவு மாவுமாகிய இரு பெயர் முன்னும் வலி இயல்பாயின .

கேண்மியா கொற்றா, சாத்தா, தேவா, பூதா என மியா என்னும் முன்னிலை அசை இடைச்சொல் முன் வலி இயல்பாயின.

உண்ணா குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் என ஆகார ஈற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை முற்று வினை முன் வலி இயல்பாயின.

உண்ணாக் குதிரைகள் எனப் பொது விதியால் மிகுமாயின், தகர ஈறு குறைந்த எதிர்மறைப் பெயரெச்சமாம் எனக் கொள்க .

ஆமா என்ற மாத்திரமே காட்டுப்பசு எனவும் பொருள் பட இரட்டுற மொழிந்தமையால், ஆமா என்னும் பெயர் முன்னும் வலிமிகாது அமைந்தது.

ஆமா குறிது, சிறிது, தீது, பெரிது எனவரும் .

குறிப்பு

முற்று முன்மிகா" எனவே, வினையாலணையும் பெயர் முன்னும், அவ்வினைமுற்று வினையெச்சமாயவற்றின் முன்னும் அவ்வாறு மிகாது.

உண்ணா கிடந்தன, சென்றன, தந்தன, போயின என வரும் . இங்கே, உண்ணா என்றது வினையாலணையும் பெயராயின் உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன எனவும்,

வினைமுற்று வினையெச்சாமாயின் உண்ணாதனவாய்க் கிடந்தன எனவும் பொருள்படும்.

உண்ணாக் கிடந்தன எனப் பொதுவிதியால் மிகுமாயின், உண்டு எனப் பொருள்படும் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமும், உண்ணாது எனப் பொருள்படும் துவ்வீறு குறைந்த செய்யா என்னும் எதிர்மறை வினையெச்சமுமாம் எனக் கொள்க .

**செய்யுளில் ஆகார ஈற்றுச் சொற்புணர்ச்சி:**

குறியதன் கீழ்ஆக் குறுகலு அதனோடு

உகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின்

குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் அகரம் ஆதலும் அவ் அகரம் ஆதலுடனே உகரம் பெறுதலும் அவ்விரண்டும் இன்றித் தன்னியல்பில் நிற்றலுமாகிய மூன்று விதியும் செய்யுள் இடத்து ஆகும்.

நிலவிரி கானல்வாய் நின்று - நிலா - குறுகல்

மருவினென் செய்யுமோ நிலவு - நிலா - குறுகலோடு உகரம் ஏற்றல் .

நிலாவணங்கு வெண்மணல் மேனின்று - இயல்பு .

செய்யுளில் இம் மூன்றுமாம் எனவே, வழக்கில் இரண்டும் ஒன்றுமாம் என்றார் ஆயிற்று . உதித்தது நிலவு, உதித்தது நிலா, கண்டேன் கனவு, கண்டேன் கனா எனக் குறுகுதலோடு உகரம் ஏற்றலும் தன்னியல்புமாகிய இரண்டும் வந்தன.

தரா, மிடா எனத் தன்னியல்யு ஒன்றுமாய் நின்றன.

''ஆக் குறுகலும் அதனோடு உகரம் ஏற்றலுமாம்'' என்றது எய்தாதன எய்துவித்தல் இயல்புமாம் என்றது அவ்விடத்து வருவதோர் ஐயம் அறுத்தல்.

குறிப்பு

**இகர ஈற்றுச் சிறப்புவிதி**

அன்றி இன்றியென் வினையெஞ்சு இகரம்

தொடர்பினுள் உகரம் ஆய்வரின் இயல்பே.

அன்றி, இன்றி என்னும் வினையெச்சக் குறிப்புச் சொற்களின் ஈற்றில் உள்ள இகரம், செய்யுளில் உகரமாய்த் திரிந்து வரின் வரும் க, ச, த, பக்கள் பொதுவிதியால் மிகாது இயல்பாகும்.

வாளன்று பிடியா வன்கணாடவர் - வாள், அன்றி

விண்ணின்று பொய்ப்பின் - விண், இன்றி

உகர மாகத் திரியாவிடின் வாளன்றிப் பிடியா, விண்ணின்றிப் பொய்ப்பின் என வல்லெழுத்து மிகும்.

**உரி – நாழி**

உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய்கெட

மருவும் டகர உரியின் வழியே

யகரவுயிர் மெய்யாம் ஏற்பன வரினே.

உரி என்னும் அளவுப்பெயர் வரின், நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றிலுள்ள ழகரத்தின் மேல் ஏறிய இகரவுயிர் மெய் நீங்க டகர மெய் வரும. உரி என்னும் அளவுப்பெயரின் பின் யகர உயிர் மெய் அவ் உயிர்மெய் வருவதற்கு ஏற்ற வருமொழிகள் வருமாயின் வந்தமையும்.

நாழி + உரி = நாடுரி என நாழியின் ஈற்றுயிர் மெய் கெட்டு டகரந் தோன்றிற்று ; இது நாவுரி என இக்காலத்து மருவிற்று .

உரி + உப்பு = உரியவுப்பு, உரியபயறு, உரியமிளகு, உரிய வரகு என உரியின் பின் யகர உயிர்மெய் வந்தது.

ஏற்பன வரின் எனவே, ஏலாதன வரின் உரியரிசி, உரியாழாக்கு, உரியெண்ணெய் எனப் பொதுவிதி பெறுதல் கொள்க.

ஆழாக்கு இரண்டு கொண்டது உழக்கு ; உழக் கிரண்டு கொண்டது உரி, உரி இரண்டு கொண்டது நாழி.

**இகர வீற்றுச் சிறப்புவிதி**

சுவைப்புளி முன்இன மென்மையுந் தோன்றும்

அறு சுவையுள் ஒன்றை உணர்த்துகின்ற புளி என்னும் பெயர் முன் வரும் வல்லெழுத்துக்கள் மிகுதலன்றி அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துக்களும் ஒரோவிடத்து மிகும்.

புளிங்கறி, புளிஞ்சோறு, புளிந்தயிர், புளிம்பாளிதம் என வரும்.

**குறிப்பு**

புளிப்பாகிய கறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும் விரிக்கப்படுதலால், இரு வழிக்கும் இவையே உதாரணமாம் என்க.

மென்மையும் என்ற இறந்தது தழீஇய இழிவு சிறப்பும்மையால், புளிக்கறி எனப் பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகலே சிறப்புடைத்து எனக் கொள்க.

**இகர ஐகார ஈற்றுச் சிறப்புவிதி**

அல்வழி இ ஐம் முன்னர் ஆயின்

இயல்பு மிகலும் விகற்ப முமாகும்.

இகர, ஐகார ஈற்றஃறிணைப் பெயர் முன் வல்லினம் அல்வழியினிடத்து வருமாயின் இயல்பாதலும் பொது விதியான் மிகுதலும் ஒருகால் மிகாமையும் ஒருகால் மிகுதலும் ஆகிய விகற்பமும் தோன்றும்.

இயல்பு எழுவாய்த்தொடர் உம்மைத்தொகைகளிலும் மிகுதி பண்புத்தொகை, உவமைத்தொகைகளிலும் விகற்பம் சில பெயர்முன் எழுவாய்த் தொடரிலும் கொள்ளப்படும்.

பருத்தி குறிது, யானை கரிது என எழுவாய்த் தொடரிலும் பரணிகார்த்திகை, யானைகுதிரை என உம்மைத் தொகையிலும் வலி இயல்பாயின.

மாசித்திங்கள், சாரைப்பாம்பு எனப் பண்புத்தொகையிலும், காவிக்கண், பனைக்கை என உவமைத்தொகையிலும் வலி மிக்கன.

கிளி குறிது, கிளிக் குறிது, தினை குறிது, தினைக் குறிது என எழுவாய்த் தொடரில் விகற்பித்தன.

இயல்பு என்றது "இயல்பினும் விதியினும்" என்னும் சூத்திரத்தால் எய்தியது ஒருவழி விலக்கல் மிகல் என்றது எய்தியது இகந்துபடாமைக் காத்தல் விகற்பம் என்றது எய்தியது விலக்கலுடன் விலக்காமை .

**ஈகார வீற்றுச் சிறப்புவிதி**

ஆமுன் பகரஈ அனைத்தும் வரக்குறுகும்

மேலன வல்வழி இயல்பா கும்மே.

ஆ என்னும் பெயர் முன் நின்ற பகர ஈகாரம் இரு வழியும் நாற்கணமும் வரின் குறுகும். அல்வழியில் மேலன இயல்பு ஆகும்.

பகரவீ என்றது இடக்கரடக்கல் வரும் சூத்திரத்தில் பவ்வீ என்பதும் அது, இடக்கர் என்பது சபையிலே சொல்லத்தகாத சொல். இடக்கர், அவையல்கிளவி என்பன ஒரு பொருட் சொற்கள். இடக்கரடக்கல் என்பது சொல்லத்தகாத சொல்லை அவ் வாய்பாடு மறைத்துப் பிற வாய்பாட்டால் சொல்லல்.

ஆப்பி யரிது, ஆப்பி குளிரும், ஆப்பி நன்று, ஆப்பி வலிது எனவும்,

ஆப்பி யருமை, ஆப்பி குளிர்ச்சி, ஆப்பி நன்மை, ஆப்பி வன்மை எனவும் வரும்.

ஆ முன் பகரவீ அனைத்தும் வரக்குறுகும்'' என்றது எய்தாதது எய்வித்தல் ; அ∴து எய்திய வழி வரும் வல்லினம் "அல்வழியில் இயல்பாகும்'' என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியது. இகந்துபடாமைக் காத்தல்.

**ஈகார ஈற்று ஓரெழுத்து மொழிப்புணர்ச்சி:**

பவ்வீ நீமீ முன்னர் அல்வழி

இயல்பாம் வலிமெலி மிகலுமாம் ஈக்கே.

பகர மெய்யின் மேல் ஏறி நின்ற ஈகார ஈற்று இடக்கர்ப் பெயரும் நீ என்னும் முன்னிலைப் பெயரும் மீ என்னும் மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயருமாகிய இம்மூன்றன் முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும். இவற்றுள்ளே மீ என்னும் சொற்கு முன் வல்லெழுத்து மிகுதலும் ஆகும் மெல்லெழுத்து மிகுதலும் ஆகும்.

பீ குறிது, சிறிது, தீது, பெரிது எனவும்,

நீ குறியை, சிறியை, தீயை, பெரியை எனவும்,

மீகண் எனவும் இயல்பாயின.

மீக்கூற்று, மீக்கோள் என எய்தியதிகந்து

படாமல் வலி மிக்கது.

மீந்தோல் என மெலி மிக்கது.

மீகண் என்பது, கண்ணினது மேலிடம் எனப் பொருள் தந்து நிறகுமாயினும், வருமொழி நிலைமொழியாக மாறி நின்றதனால், இலக்கணப்போலியாய், அல்வழி ஆயிற்று.

குறிப்பு

மீக்கூற் றென்பது புகழ் ; அது மேலாய சொல்லால் பிறந்தது எனப் பொருள்படும் . மீக்கோள் என்பது மேல் போர்வை ; அது சரீரத்தின்மேல் கொள்ளப்படுவது எனப் பொருள்படும். மீந்தோல் என்பது மேற்றொல் ; இது இக்காலத்துப் பீந்தோல் என மருவிற்று.

## குறிப்பு

நீஎன்னும் பொதுப்பெயர், அவ்வழியிலே நீ என்றும் வேற்றுமையிலே நின் என்றும் நிற்கையினாலே, “பொதுப்பெயருயர் திணைப் பெயர்“ என்னும் சூத்திரத்துள் அடங்கவில்லை.

பவ்வீ, நீ, மீ, முன்னர் அல்வழி யியல்பாம் என்றது ஒருவழி இயல்பினும் விதியினும் என்னும் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்; மீக்கு முன் வலி மிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்தியது இகந்துபடாமைக் காத்தல்; மீக்கு முன் மெலி மிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

**முற்றுகர ஈற்றுச் சிறப்புவிதி**

மூன்றான் உருபெண் வினைத்தொகை சுட்டூஈறு

ஆகும் உகரம் முன்னர் இயல்பாம்.

மூன்றாம் வேற்றுமை யுருபிற்கும் ஆறாம் வேற்றுமை உருபிற்கும் இயல்பாயும் விகாரமாயும் வரும் எண்ணிற்கும் வினைத்தொகைக்கும் சுட்டுப் பெயருக்கும், ஈறாகிய முற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

சாத்தனொடு கொண்டான், சென்றான் , தந்தான், போயினான் என மூன்றாம் வேற்றுமை உருபின் முன் இயல்பாயின.

சாத்தனது கை, செவி, தலை, புறம் என ஆறாம் வேற்றுமை உருபின் முன் இயல்பாயின.

ஒரு கை, செவி, தலை, புறம் என எண்ணுப்பெயர் முன் இயல்பாயின. இரு, அறு, எழு, ஏழு , என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக, ஏழு என்பது இயல்பாய எண்ணுப் பெயர் , மற்றவை

விகார எண்ணுப்பெயர்.

அடுகளிறு,சேனை, தானை, படை என வினைத் தொகை முன் இயல்பாயின.

தரு, புகு, தெறு, எழு, விரவு முதலியவற்றோடும் இப்படியே ஒட்டுக.

அது குறிது, சிறிது, தீது, பெரிது எனவும்,

அது கண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான் எனவும் சுட்டுப்பெயர் முன் இரு வழியும் இயல்பாயின.

குறிப்பு

இது, உது என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக.

உது காண், உதுக் காண் என விகற்பித்து வருவது "இயல்பின் விகாரமும்'' என்னும் இரண்டாம் வேற்றுமைப் புறனடைச் சூத்திரத்தில் "அன்ன பிறவும்'' என்பதனால் அமையும். இது "இயல்பினும் விதியினும்" என்னும் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

**அது என்பதன் சிறப்பு விதி:**

அதுமுன் வரும்அன்று ஆன்றாம் தூக்கின்.

அது என்னும் சுட்டுப்பெயர் முன் வரும் அன்று என்னும் வினைக் குறிப்பு முற்று பாட்டினிடத்து முதல் நீளும்.

அது + அன்று = அதான்று என வரும்.

ஆன்றேயாம் என இயல்பை விலக்காமையால், அதுவன்று, அதன்று எனவும் வரும்.

**குற்றுகர ஈற்றுச் சிறப்பு விதி:**

வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி.

வன்தொடர் ஒழிந்த ஐந்து குற்றியலுகர ஈற்றின் முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும்.

நாகு கடிது, எஃது சிறிது, வரகு தீது, குரங்கு பெரிது, தெள்கு கொடிது எனவும்

ஏகு கால், அஃகு பிணி, பெருகு தனம், ஓங்கு குலம், எய்து பொருள் எனவும், சேறு கொற்றா , வருது சாத்தா, வந்து தேவா, செய்து பூதா எனவும்,

பொருது சென்றான், அறிந்து தந்தான், எய்து கொன்றான் எனவும் அல்வழியில் இயல்பாயின.

ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றுகர ஈற் றிடைச் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

அங்குக் கொண்டான், இங்குக் கொண்டான், ஊங்குக் கொண்டான், எங்குக் கெண்டான், ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக் கொண்டான், யாங்குக் கொண்டான், யாண்டுக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

**குற்றுகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி:**

குறிப்பு

இடைத்தொடர் ஆய்தத் தொடரொற்று இடையின்

மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை

இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் முன்னும் ஒற்று இடையே மிகாத நெடில்தொடர் முன்னும் ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் வேற்றுமையில் இயல்பாம்.

தெள்கு கால், சிறை, தலை, புறம் - இடைத்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் வலி இயல்பாயின.

எ∴கு கடுமை, சிறுமை, தீமை, பெருமை - ஆய்தத் தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

நாகு கால், செவி, தலை புறம் - ஒற்றிடையே மிகாத நெடில்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

வரகு கதிர், சோறு, தாள், பதர் - ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

ஒற்றிடையே மிகும் நெடில்தொடர் உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் வரும் சூத்திரத்தால் கூறப்படும்; அவற்றின்முன் வரும் வல்லினம் மிகும்.

**புணர்ச்சியில் ஓற்று இரட்டும்:**

நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்

டறவொற்று இரட்டும் வேற்றுமை மிகவே .

நெடில்தொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றுயலுகர மொழிகளுள் அவ்வுகரப் பற்றுக் கோடாகிய வல்லொற்று ஆறனுள் டகர, றகரம் என்னும் இரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் .

வரும் எழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமும் அமையும்.

ஆடு + கால் = ஆட்டுக்கால்

பாறு + கால் = பாற்றுக்கால்

முருடு+ கால் = முருட்டுக்கால்

முயிறு + கால் = முயிற்றுக்கால் என வரும் .

செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், காப்பு, வன்மை, அடி என்பனவற்றையும் ஒட்டி , வேற்றுமையிலே ட, ற வொற்று இரட்டும்.

இவ்விரண்டு ஒற்றும் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் எனவே , சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும் சிறுபான்மை அல்வழியில்

இரட்டுதலும் , சிறு பான்மை இரு வழியும் பிற ஒற்று இரட்டுதலும் உண்டு.

காவிரி புரக்கும் நாடு கிழவோனே

“காடக மிறந்தார்க்கே நாடுமென் மனனே காண் “

“கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை “

என்பவனவற்றுள், நாடு கிழவோன், காடகம், மிடறணியல் என வேற்றுமையிலே ட, ற ஒற் று இரட்டா வாயின.

காடு + அரண் = காட்டரண்

ஏறு + ஏனம் = ஏற்றேனம்

வரடு + ஆடு = வரட்டாடு,

குருடு + கோழி = குருட்டுக்கோழி

வெளிறு + பனை = வெளிற்றுப்பனை என அல்வழியிலே ட, ற ஒற்று இரட்டின.

வெருகு + கண் = வெருக்குக்கண்

எருது + கால் = எருத்துக்கால் எனவும் ;

எருது + மாடு = எருத்து மாடு எனவும் இரு வழியும் பிற ஒற்று இரட்டி வந்தன.

**மென்தொடர் குற்றியலுகரப் புணர்ச்சி:**

மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்

தம்மின வன்றொடர் ஆகா மன்னே

மென்தொடர்க் குற்றியலுகர மொழிகளுள்ளே சில மொழிகள் வேற்றுமையிலே தமக்கு இனமாகிய வன்றொடர்க் குற்றியலுகர, மொழிகளாக ஆகாமல் ஒழிந்தன பெரும்பாலனவை ஆகும்.

வரும் எழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் அமையும்.

மருந்து + பை = மருத்துப்பை

சுரும்பு + நாண் = சுருப்புநாண்

கரும்பு + வில் = கருப்புவில்

குறிப்பு

குறிப்பு

கன்று + ஆ = கற்றா - என வரும்.

வண்டுக்கால், பந்துத்திரட்சி முதலியன எல்லாம் வன்தொடரா ஆகாதன.

**உகர ஈறு ஐகாரச் சாரியை பெறுதல்:**

ஐஈற்று உடைக்குற் றுகரமும் உளவெ.

ஐகாரச் சாரியையை இறுதியிலே பெற்று வரும் மென்தொடர்க் குற்றியலுகர மொழிகளும் சில உளவாம்.

மேலைச் சூத்திரத்தைச் சார வைத்தமையால், இதுவும் மென்தொடர் என்பது பெற்றாம். வரும் எழுத்தைச் சொல்லாமையால், நாற்கனமும் வரும்.

பண்டு + காலம் = பண்டைக்காலம்,

இன்று + நாள்˙ = இற்றை நாள்

அன்று + கூலி = அற்றைக் கூலி,

இன்று + நலம் = இற்றை நலம் என இருவழியும் வரும்.

மேலைச் சூத்திரத்தைச் சார வைத்தாரேனும்“ ஐயீற்றுடைக் குற்றுகரம் எனப் பொதுப்படக் கூறினமையால்,

நேற்று + பொழுது = நேற்றைப்பொழுது எனவும்,

நேற்று+ கூலி = நேற்றைக் கூலி எனவும் இருவழியும் வன்தொடர் ஐகாரச் சாரியை பெறுதலும் ,

ஐயீற்றுடைக் குற்றுகரம் என உடைமை ஆக்கிக் கூறினமையால், வருமொழி நோக்காது,

ஒன்று-ஒற்றை, இரண்டு-இரட்டை என ஒரு மொழியாக நின்று ஐகாரம் பெறுதலும்,

ஓராண்டு-ஓராட்டை, ஈராண்டு-ஈராட்டை எனத் தொடர்மொழியாக நின்று ஐகாரம் பெறுதலும் கொள்க.

**திசைப்பெயர் புணர்ச்சி:**

திசையொடு திசையும் பிறவும் சேரின்

நிலையீறறு் உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்

றகரம் னலவாத் திரிதலும் ஆ ம்பிற .

திசைப் பெயரோடு திசைப்பெயரும் பிற பெயர்களும் புணருமிடத்து நிலைமொழி ஈற்றிலே நின்ற உயிர்மெய்யும் அதன்மேல் நின்ற ககர மெய்யும் கெடுதலும் அவ்விடத்து நின்ற றகரமெய் னகர மெய்யாகவும் திரிதலும் ஆகும்.

பிற என்ற மிகையினாலே, திசைப்பெயரோடு திசைப்பெயர் புணரும்போது நிலைமொழி பெருந்திசை வருமொழி கோணத்திசை எனவும், நிலைமொழியாய் நிற்பன வடக்கும் தெற்குமே எனவும், தெற்கு என்பதன் றகரம் னகரமாகவும் மேற்கு என்பதன் றகரம் லகரமாகவும் திரியும் எனவும், மேற்கு என்பதன் றகரந் தகரம் வரும் வழித் திரியாது எனவும் , கிழக்கு என்பதன் ழகரத்து அகரம் கெட்டு முதல் நீண்டே வரும் எனவும் கொள்க .

குறிப்பு

வடக்கு - வடமேற்கு, வடதிசை, வடபால்

வடமலை, வடவேங்கடம் எனவும்,

தெற்கு - தென்கிழக்கு, தென்மேற்கு, தென்குமரி,

தென்மலை, தென்வீதி எனவும்,

மேற்கு - மேல்கடல், மேனாடு, மேல்வீதி,

மேற்றிசை எனவும்,

குடக்கு- குடதிசை, குடகடல், குடநாடு எனவும்,

குணக்கு - குணதிசை, குணகடல் எனவும் வரும் .

பிற என்றமையால்

கீழைக்குளம், கீழைச்சேரி, மேலைக்குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும்,

வடக்கூர், வடக்குமலை; தெற்கூர், தெற்குமலை என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும் , பெருந்திசையோடு பெருந்திசை புணரும்போது,

தெற்குவடக்கு, வடக்குத்தெற்கு, கிழக்குமேற்கு மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலும் உண்டு.

வடகிழக்கு என்பது வடக்கும் கிழக்கும் ஆயதோர் கோணம் என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை . வடதிசை என்பது வடக்காகிய திசை எனப் பண்புத்தொகை . வடமலை என்பது வடக்கின் கண் மலை என ஏழாம் வேற்றுமைத்தொகை . தெற்கு வடக்கு என்பது தெற்கும் வடக்கும் என உம்மைத்தொகை

குறிப்பு

**தெங்கு சிறப்பு விதி:**

தெங்குநீணடு ஈற்றுஉயிர் மெய்கெடும் காய்வரின்.

காய் என்னும் சொல் வருமாயின் தெங்கு என்னும் நிலைமொழி முதல் நீண்டு ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும்.

தெங்கு+ காய் = தேங்காய் என வரும் .

கெட்டே புணரும் என்னாமையால் தெங்கங்காய் என வருவதும் உண்டு.

**குற்றியலுகர எண்ணுப் புணர்ச்சி:**

ஒன்று முதல் பத்து ஈறாகிய எண்ணுப் பெயர்களுள் ஏழ் என்பது நீங்கலாகிய பிற எண்ணுப் பெயர்கள் அனைத்தும் குற்றியலுகர எண்ணுப்பெயர்கள் ஆகும். இவை நிலைமொழியாக நின்று புணரும்போது அடையும் மாற்றங்களே எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி என்பதாகும்.

**எண், நிறை, அளவுப்பெயர்ப் புணர்ச்சி:**

எண்ணிறை அளவும் பிறவும் எய்தின்

ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ணுள்

முதல்ஈர் எண்முதல் நீளும் மூன்றுஆறு

ஏழ்குறு கும் ஆறு ஏழ்அல் லவற்றின்

ஈற்றுயிர் மெய்யும் ஏழன் உயிரும்

ஏகும் ஏற்புழி என்மனார் புலவர் .

எண்ணுப் பெயரும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும் பிற பெயர்களும் வரின், நிலை மொழியாக நின்ற ஒன்று முதல் எட்டு ஈறாக உள்ள எண்களுள் முதலிலுள்ள இரண்டு எண்களினும் முதலில் குறில் நீளும். மூன்று, ஆறு, ஏழு ஆகிய எண்களின் முதலில் நின்ற நெடில் குறுகும். ஆறும் ஏழும் அல்லாத ஆறு எண்களினுடைய இறுதியிலுள்ள உயிர்மெய்களும் ஏழனுடைய இறுதியிலுள்ள உயிரும் கெடும் ஏற்கும் இடங்களில் என்பர் புலவர் .

இச்சூத்திரத்துள் கூறிய விகாரமும், இப்புணர்ச்சி முற்ற முடித்தற்குப் பின் ஐந்து சூத்திரத்தால் கூறும் விகாரமும் , பண்புத்தொகைக்கே உரியனவாம் .

ஏற்புழி என்றதனால், முதலிரண்டு எண்ணும் முதல் நீள்வது உயிர் வரும் வழி என்பதனையும், மெய் வரும் வழி நீளா என்பதனையும், மூன்றும் ஆறும் ஏழும் முதல் குறுகுவது மெய் வரும் வழி என்பதனையும், உயிர் வரும் வழிக் குறுகா என்பதனையும் ஆறும் ஏழும் அல்லாதவைகளின்

ஈற்று உயிர்மெய் கெடுவது நாற் கணமும் வரும் வழி என்பதனையும் ஏழு என்பதன் ஈற்றுயிர் கெடுவது முதல், குறுகா வழி என்பதனையும் அறியமுடிகிறது.

ஏழு என்பது, முற்றியலுகர ஈறாயினும், ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல் என்னும் உத்தியால் இங்கே சொல்லப்பட்டது .

ஆறு + பத்து = அறுபது, அறுகழஞ்சு, அறுநாழி, அறுவட்டி என நெடு முதல் குறுகி முடிந்தது.

ஏழு + பத்து = எழுபது, ஏழுகழஞ்சு, எழுநாழி, எழுவகை என ஏழு நெடு முதல் குறுகி முடிந்தது.

ஏழு + கடல் = ஏழ்கடல் என ஏழன் ஈற்றுயிர் கெட்டது .

ஏழாயிரம் என உயிர் வருமிடத்து உகரம் கெடுதல் “ முற்றுமற் றொரோவழி “ என்பதனால் கொள்க .

இன்னும், ஏற்புழி என்றதனால், ஒன்று முதல் எட்டு ஈறாகும் எண்ணுள், இரண்டு முதலியன, இரண்டு கழஞ்சு, மூன்று படி, நான்கு பொருள், ஐந்து பூதம், ஆறு குணம், ஏழு கடல், எட்டுக் கோடி எனப் பொதுவிதியால் முடிதலும் ‘‘ஒன்று தேரினானொருவன் கூற்றமே’’ எனச் சிறுபான்மை ஒன்றும் அங்ஙனம் முடிதலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**ஒன்று, இரண்டு:**

ஒன்றன் புள்ளி ரகர மாக

இரண்டன் ஒற்றுயிர் ஏகஉவ் வருமே .

ஈற்று உயிர்மெய் கெட நின்ற ஒன்று என்னும் எண்ணினது னகர மெய் ரகர மெய்யாக, இரண்டு என்னும் எண்ணினது ணகர மெய்யும் ரகரத்தை ஊர்ந்து நின்ற அகர உயிரும் கெட அவ்விரண்டு ரகர மெய் மேலும் உகரமும் வரும்.

ஏற்புழி என்றதனால், ரகர மெய் உகரம் பெறுவது மெய்வரின் மட்டுமே என்பதனையும், உயிர் வரின் உகரம் பெறா என்பதனையும் அறிய முடிகிறது.

ஒருபது, இருபது, ஒருகழஞ்சு, இருகழஞ்சு, ஒருநாழி, இருநாழி, ஒருவகை, இருவகை எனவும்,

குறிப்பு

ஓரொன்று, ஈரொன்று, ஓரெடை, ஈரெடை, ஓருழக்கு,ஈருழக்கு, ஓரிலை,ஈரிலை எனவும் வரும். இன்னும், ஏற்புழி என்றதனால், ஆயிரம் வரு மிடத்து, ஓராயிரம், ஈராயிரம் என முடிதலே அன்றி, ஓராயிரம், ஈராயிரம் என முதல் நீளாது முடிதலும், யகரம் வருமிடத்து ஒரு யானை, இரு யானை என முடித்தலே அன்றி, ஓர் யானை, ஈர் யானை என உகரம் பெறாது முதல் நீண்டு முடிதலும் உண்டாம்.

**மூன்று எண்ணுப்பெயர்:**

மூன்றனுறுப்பு அழிவும் வந்தது மாகும் .

இறுதி உயிர்மெய் கெட நின்ற மூன்று என்னும் எண்ணினது னகர மெய் கெடுதலும் வரும் மெய்யாகத் திரிதலும் உண்டாம்.

ஏற்புழி என்றதனால், னகர மெய் கெடுவது உயிர் வருமிடத்து மட்டும் என்பது வெளிப்போந்து நிற்கும்.

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு எனவும் ,

முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, முந்நூல், முவ்வட்டி எனவும் வரும்.

இன்னும், ஏற்புழி என்றதனால், வகரம் வருமிடத்து முவ்வட்டி என முடிதலே யன்றி, மூவட்டி என முதல் குறுகாது னகர மெய் கெட்டு முடிதலும், யகரம் வருமிடத்து முவ்யானை என னகர மெய் வகர மெய்யாகத் திரிந்து முடிதலும் கொள்ளப்படும்.

**நான்கு எண்ணுப்பெயர்:**

நான்கன் மெய்யே லறஆ கும்மே.

இறுதி உயிர்மெய் கெட நின்ற நான்கு என்னும் எண்ணினது னகர மெய் லகர மெய்யாகவும் றகர மெய்யாகவும் திரியும்.

ஏற்புழி என்றதனால், னகர மெய் லகரமாகத் திரிவது உயிரும் இடையினமும் வரும் இடத்தெனவும், றகரமாகத் திரிவது வல்லினம் வருமிடத்து எனவும் மெல்லினம் வருமிடத்து னகர ஈற்றுப் புணர்ச்சி போல் முடியும் எனவும் கொள்ளப்படும்.

நாலொன்று, நாலெடை, நாலுழக்கு, நாலடி எனவும் ,

நால்வட்டி எனவும்,

நாற்பது, நாற்கழஞ்சு எனவும்.

நான்மணி, நானாழி எனவும் வரும்.

**ஐந்து எண்ணுப்பெயர்:**

ஐந்தன் ஒற்று அடைவது இனமும் கேடும்.

இறுதி உயிர்மெய் கெட நின்ற ஐந்து என்னும் எண்ணினது நகர மெய் வரும் மெய்யாகத் திரிதலும் வரும் மெய்க்கு இனமாகத் திரிதலும் கெடுதலும் உண்டு.

ஏற்புழி என்றதனால், நகர மெய் வரும் மெய்யாகத் திரிவது மெல்லினம் வரும் இடத்து என்பதனையும், இனமாகத் திரிவது வல்லினம் வரும் இடத்து என்பதனையும், கெடுவது உயிரும் இடையினமும் வருமிடத்து என்பதனையும் அறியமுடிகிறது.

குறிப்பு

ஐம்மூன்று, ஐஞ்ஞாண் எனவும்,

ஐம்பது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐம்பொறி எனவும்,

ஐயொன்று எனவும்,

ஐவட்டி எனவும் வரும்.

**எட்டு எண்ணுப்பெயர்:**

எட்டன் உடம்புணவ் ஆகும் என்ப.

இறுதி உயிர்மெய் கெட நின்ற எட்டு என்னும் எண்ணினது டகர மெய் , நாற்கணமும் வர ணகர மெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர்.

எண்பது, எண்கழஞ்சு, எண்கலம், எண்குணம்

எனவும்,

எண்ணாழி எனவும்,

எண்வகை எனவும்,

எண்ணைந்து எனவும் வரும்.

**ஒன்பது எண்ணுப்பெயர்:**

ஒன்பா னொடுபத்து நூறும் ஒன்றின்

முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு

தகர நிறீஇப்ப.ஃ.து அகற்றி னவ்வை

நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

ஒன்பதுடன் பத்து, நூறு என்பன வந்து புணருமாயின் முன்னதாகிய நிலை மொழியினின்றும் மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும் முறையே நூறு எனவும் ஆயிரம் எனவும் திரித்தல் வேண்டும். பின் நிலைமொழி முதலிலுள்ள ஒகர உயிரோடு தகர

மெய்யை அதற்கு ஆதாரமாக நிறுத்தி அந்நிலைமொழி இறுதியிலுள்ள ப.்.தைக் கெடுத்து அம் மொழி முதற்கு அயல் நின்ற னகர மெய்யை முறையே ணகர மெய்யாகவும் ளகர மெய் யாகவும் திரிப்பது முறையாகும்.

**குறிப்பு**

ஒன்பது + பத்து = ஒன்பது நூறு = தொன்பது நூறு = தொன் நூறு = தொண்நூறு = தொண்ணூறு.

ஒன்பது + நூறு = ஒன்பது ஆயிரம் = தொன்பது ஆயிரம் = தொன் ஆயிரம் = தொள் ஆயிரம் = தொள்ளாயிரம்.

ப.்.தகற்றி என்பதனோடு பொருந்த ஒன்ப.்.தனோடு என்னாது ஒன்பானோடு என்றமையால், ஒன்பது நின்று புணரினும் இவ்விதியே வந்தமையும்.

**ஒன்று முதல் எட்டு எண்ணுப்பெயர்:**

முதஇரு நான்காம் எண்முனர்ப் பத்தின்

இடையொற்று ஏகல் ஆய்தம் ஆகல்

என இரு விதியும் ஏற்கும் என்ப

ஒன்று முதலாகிய எட்டு எண்களின் முன்னும் வரும் பத்தென்னும் எண்ணினது நடு நின்ற தகர மெய் கெடுதலும் தகரம் நின்ற இடத்து அது கெட ஆய்தம் வருதலும் என்னும் இவ்விரண்டு விதியும் பொருந்தும்.

ஒருபது, ஒருப.்.து, இருபது, இருப.்.து, முப்பது, முப்ப.்.து, நாற்பது, நாற்ப.்.து, ஐம்பது, ஐம்ப.்.து, அறுபது, அறுப.்.து, எழுபது, எழுப.்.து, எண்பது, எண்ப.்.து என வரும்.

**ஒருப.்.து முதல் எட்டு எண்ணுப்பெயர்:**

ஒருப.்.து ஆதிமுன் ஒன்று முதல் ஒன்பான்

எண்ணும் அவையூர் பிறவும் எய்தின்

ஆய்தம் அழியஆண்டு ஆகும் தவ்வே.

ஒருப.்.து முதலாகிய எட்டு எண்களின் முன்னும் ஒன்று முதலாகிய ஒன்பது எண்களும் அவ்வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்து புணருமாயின் நிலை மொழியிலே நின்ற ஆய்தம் கெட இயல்பாகிய தகரம் அவ்வாய்தம் நின்ற இடத்து வரும்.

ஒருபத்தொன்று, இருபத்தொன்றே காலேயரைக்கால், முப்பத்தொரு கழஞ்சு, எண்பத்தெண் கலனே தூணி, எண்பத்தொன்பதி யாண்டு என வரும், மற்றவைகளும் இப்படியே.

**ஒன்று முதல் பத்தாயிரம் கோடி எண்ணுப்பெயர்:**

ஒன்றுமுதல் ஈரைந்து ஆயிரம் கோடி

எண்ணிறை அளவும் பிறவரின் பத்தின்

ஈற்றுஉயிர் மெய்கெடுத்து இன்னும் இற்றும்

ஏற்பது ஏற்கும் ஒன்பதும் இனைத்தே

ஒன்று முதலிய பத்தும் ஆயிரமும் கோடியுமாகிய எண்ணுப் பெயரும் நிறைப் பெயரும் அளவுப் பெயரும் பிற பெயரும் வந்து புணருமாயின் நிலைமொழியாகிய பத்தினது இறுதியிலுள்ள தகர உயிர் மெய்யை அழித்து இன் சாரியை ஆயினும் இற்றுச் சாரியை ஆயினும் அவ்விடத்திற்கு வந்து நிற்கும். ஒன்பது என்னும் நிலை மொழியும் இப்படியே எண்ணுப் பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று நிற்கப்பெறும்.

பதினொன்று, பதின்மூன்று, பதினாயிரம், பதின்கழஞ்சு, பதின்கலன், பதின்மடங்கு எனவும்,

பதிற்றொன்று , பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுக்கோடி, பதிற்றுத்தூணி, எனவும்,

ஒன்பதினாயிரம், ஒன்பதின் கழஞ்சு, ஒன்பதின் கலம், ஒன்பதின் மடங்கு எனவும்,

ஒன்பதிற்றொன்று ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுக்குறுணி எனவும் வரும்.

ஏற்ப தேற்கும் என்றமையால், பத்துக்கோடி, ஒன்பது கோடி எனப் பொதுவிதிப்படியே முடிந்து நிற்றலும் ஏற்கப்படும்.

இரண்டு முன்வரின் பத்தின்ஈற்று உயிர்மெய்

கரந்திட ஒற்று னவ் ஆகும் என்ப

இரண்டு என்பது முன் வருமாயின் பத்தென்னும் நிலைமொழியானது ஈற்றிலுள்ள தகர உயிர்மெய் கெட தகர மெய் னகர மெய்யாகத் திரியும்.

பன்னிரண்டு என வரும்.

**ஒன்பது நீங்கலாகிய எண்ணுப்பெயர்:**

ஒன்பது ஒழித்தஎண் ஒன்பதும் இரட்டின்

முன்னதின் முன்னல ஓட உயிர்வரின்

## குறிப்பு

*Self-Instructional Material*

வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல்நெறி

ஒன்பது என்னும் எண் ஒன்றினை ஒழித்து நின்ற ஒன்று முதல் பத்து ஈறாகிய ஒன்பது எண்ணினையும் இரட்டித்துச் சொல்லின் நிலைமொழியினது முதலெழுத்து அல்லாதவைகள் எல்லாம் கெட உயிர் முதலான எண் வரின் வகர மெய்யும் ,மெய் முதலான எண் வரின் வந்த மெய்யும் மிகுதல் முறையாம்.

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து என வரும்.

**ஊகார ஈற்றுச் சிறப்புவிதி**

**பூப்பெயர்ப் புணர்ச்சி:**

பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்.

பூ என்னும் பல பொருள் பெயர்ச்சொல்லின் முன் வல்லினம் வரின் பொது விதியால் மிகுதலே அன்றி அவற்றிற்கு இனமாகிய மெல்லினமும் மிகும்.

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை என வரும்.

**ஏகார ஓகார வீற்றுச் சிறப்புவிதி**

இடைச்சொல் ஏஓ முன்வரின் இயல்பே.

இடைச்சொல் லாகிய ஆறு ஏகாரத்தின் முன்னும் எட்டு ஓகாரத்தின் முன்னும் வல்லினம் வரின் மிகாது இயல்பாகும்.

அவனே கொண்டான் என்பது பிரிநிலையும், வினாவும், ஈற்றசையும், தேற்றமுமாகும்.

“ஏயே தனையென்றோரிருடி வினவ” - இசை நிறை.

அவனோ கொண்டான் என்பது ஒழியிசை முதலிய எட்டுமாம்.

ஏ ஓ முன் வரின் இயல்பு என்றது “இயல்பினும் விதியினும்” என்னும் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

**ஐகார வீற்றுச் சிறப்புவிதி**

வேற்றுமை ஆயின் ஐகான் இறுமொழி

ஈற்றுஅழி வோடும்அம் மேற்பவும் உளவே.

ஐகார ஈற்றுச் சொற்கள் வேற்றுமைக்கண் வருமாயின் ஈற்று ஐகாரம் கெடுதலுடனே அம்முச் சாரியை பெற்று முடிவனவும் சில உள.

அழிவோடும் என்றமையால், அழியாமையோடும் அம் ஏற்பவும் உள என்பது தெரியவரும். வருமெழுத்துச் சொல்லாமையால், நாற்கணத்துள் வரும் என்பது தெளிவுறும்.

வழுதுணை + காய் = வழுதுணங்காய்,

தாழை + பூ = தாழம்பூ,

ஆவிரை + வேர் = ஆவிரம்வேர் என ஈற்று ஐகாரம் கெட்டு அம்முச் சாரியை வந்தன.

புன்னை + கானல் = புன்னையங்கானல்,

முல்லை + புறவம் = முல்லையம்புறவம் - ஈற்று ஐகாரங் கெடாமல் அம்முச் சாரியை பெற்றன.

குறிப்பு

**பனைமுன் கொடி:**

பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்

ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்

அட்டுஉறின் ஐகெட்டுஅந் நீள்வுமாம் வேற்றுமை.

பனை என்னும் பெயர் முன், கொடி என்னும் பெயர் வருமாயின் வந்தது மிகும். க, ச, த பக்கள் வருமாயின் நிலைமொழி ஈற்று ஐகாரங் கெட்டு அம்முப் பெறும். திரள் என்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுந்தும் ஐ போய் அம்முப் பெற்றும் விகற்பிக்கும். அட்டு என்னும் பெயர் வருமாயின் ஐகாரங் கெட்டு வரு மொழி அகரம் ஆகாரம் ஆகும். இவை எல்லாம் வேற்றுமைக்கண் வரும்.

பனை+கொடி = பனைக்கொடி

பனை + காய் = பனங்காய், செறும்பு, தூண், பழம், எனவும்,

பனை + திரள் =பனந்திரள் எனவும்,

பனை+ அட்டு = பனாட்டு எனவும் வரும்.

**பயிற்சி வினாக்கள்:**

1. பலசில என்பன எவ்வாறு புணரும்?

பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்

இயல்பு மிகலு மகர மேக

லகரம் றகர மாகலும் பிறவரின்

அகரம் விகற்ப மாகலு முளபிற.

பல, சில என்னும் இவ்விரு சொல்லும் தமக்கு முன்னே தாம் வருமாயின் இயல்பாதலும் மிகுதலும் அகரம் கெட லகரம் றகரமாகத் திரிதலும் உண்டு. இவற்றின் முன் பிற மொழிகளுள் யாதாயினும் ஒன்றுவரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உண்டாம்.

குறிப்பு

பலபல, சிலசில என இயல்பாயின.

பலப்பல, சிலச்சில என மிக்கன.

பற்பல, சிற்சில என அகரம்கெட லகரம் றகரமாயிற்று.

பலகலை, பல்கலை; பலசாலை, பல்சாலை, பலதாழிசை, ப.்.றாழிசை: பலபடை, பல்படை; பலஞானம், பன்ஞானம்; பலநாள், பன்னாள்; பலமணி, பன்மணி; பலவளை, பல்வளை; பலயாழ் பல்யாழ்; பலவணி, பல்லணி; பலவாயம், பல்லாயம் எனப் பிற வர அகரம் விகற்பம் ஆயிற்று.

பிற என்ற மிகையினாலே, பல்பல சில்சில என அகரம் கெட லகரம் றகரம் ஆகாது ஒரோ இடத்து அருகி வருதலும், இன்னும் , அகர ஈற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவும் கொள்க.

2. வாழிய என்பது புணருமாற்றை விளக்குக.

வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்

ஏகலு முரித்த.். தேகினு மியல்பே .

வாழிய என்னும் வியங்கோள் முற்றினுடைய இறுதியிலுள்ள யகர உயிர்மெய் குறைதலும் உரித்தாகும். அவ் உயிர்மெய் குறைந்து , இகர ஈறாய் நின்றாலும் வல்லினம் பொது விதியினாலே மிகாது சிறப்பு விதியில் கூறிய இயல்பேயாம் .

ஆ வாழி, அந்தணர் வாழி என ஈற்றுயிர்மெய் குறைந்தது .

வாழி கொற்றா, சாத்தா, தேவா, பூதா என ஈற்றுயிர் மெய் குறைந்த இடத்தும் வல்லினம் இயல்பாயின.

3.ஒன்பது எண்ணுப்பெயர் புணர்ச்சியை விளக்குக.

ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்

முன்னதி னேனைய முரணி யொவ்வொடு

தகர நிறீஇப்ப.். தகற்றி னவ்வை

நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

ஒன்பதுடன் பத்து, நூறு என்பன வந்து புணருமாயின் முன்னதாகிய நிலை மொழியினின்றும் மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும் முறையே நூறு எனவும் ஆயிரம் எனவும் திரித்தல் வேண்டும். பின் நிலைமொழி முதலிலுள்ள ஒகர உயிரோடு தகர மெய்யை அதற்கு ஆதாரமாக நிறுத்தி அந்நிலைமொழி இறுதியிலுள்ள ப.்.தைக் கெடுத்து அம் மொழி முதற்கு அயல் நின்ற னகர மெய்யை முறையே ணகர மெய்யாகவும் ளகர மெய் யாகவும் திரிப்பது முறையாகும்.

குறிப்பு

ஒன்பது + பத்து = ஒன்பது நூறு = தொன்பது நூறு = தொன் நூறு = தொண்நூறு = தொண்ணூறு.

ஒன்பது + நூறு = ஒன்பது ஆயிரம் = தொன்பது ஆயிரம் = தொன் ஆயிரம் = தொள் ஆயிரம் = தொள்ளாயிரம்.

ப.்.தகற்றி என்பதனோடு பொருந்த ஒன்ப.்.தனோடு என்னாது ஒன்பானோடு என்றமையால், ஒன்பது நின்று புணரினும் இவ்விதியே வந்தமையும்.

4. உரி – நாழி- புணர்ச்சி விதி தருக.

உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகரவுயிர் மெய்யா மேற்பன வரினே.

உரி என்னும் அளவுப்பெயர் வரின், நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றிலுள்ள ழகரத்தின் மேல் ஏறிய இகரவுயிர் மெய் நீங்க டகர மெய் வரும. உரி என்னும் அளவுப்பெயரின் பின் யகர உயிர் மெய் அவ் உயிர்மெய் வருவதற்கு ஏற்ற வருமொழிகள் வருமாயின் வந்தமையும்.

நாழி + உரி = நாடுரி என நாழியின் ஈற்றுயிர் மெய் கெட்டு டகரந் தோன்றிற்று ; இது நாவுரி என இக்காலத்து மருவிற்று .

உரி + உப்பு = உரியவுப்பு, உரியபயறு, உரியமிளகு, உரிய வரகு என உரியின் பின் யகர உயிர்மெய் வந்தது.

ஏற்பன வரின் எனவே, ஏலாதன வரின் உரியரிசி, உரியாழாக்கு, உரியெண்ணெய் எனப் பொதுவிதி பெறுதல் கொள்க.

ஆழாக்கு இரண்டு கொண்டது உழக்கு; உழக் கிரண்டு கொண்டது உரி, உரி இரண்டு கொண்டது நாழி.

வரின் நாழியின் ஈற்றுயிர்மெய் கெட டகர மருவும் என்றது "இ ஈ ஐ வழி" என்னும் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி

வகுத்தல் ; "உயிரின் வழி யகர வுயிர் மெய்யாம் ஏற்பன வரின் என்றது எய்தாதது எய்துவித்தல்.

5. திசைப்பெயர் புணர்ச்சியினை விவரி?



திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்

நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்

றகரம் னலவாத் திரிதலு மாம்பிற .

திசைப் பெயரோடு திசைப்பெயரும் பிற பெயர்களும் புணருமிடத்து நிலைமொழி ஈற்றிலே நின்ற உயிர்மெய்யும் அதன்மேல் நின்ற ககர மெய்யும் கெடுதலும் அவ்விடத்து நின்ற றகரமெய் னகர மெய்யாகவும் திரிதலும் ஆகும்.

பிற என்ற மிகையினாலே, திசைப்பெயரோடு திசைப்பெயர் புணரும்போது நிலைமொழி பெருந்திசை வருமொழி கோணத்திசை எனவும், நிலைமொழியாய் நிற்பன வடக்கும் தெற்குமே எனவும், தெற்கு என்பதன் றகரம் னகரமாகவும் மேற்கு என்பதன் றகரம் லகரமாகவும் திரியும் எனவும், மேற்கு என்பதன் றகரந் தகரம் வரும் வழித் திரியாது எனவும் , கிழக்கு என்பதன் ழகரத்து அகரம் கெட்டு முதல் நீண்டே வரும் எனவும் கொள்க .

வடக்கு - வடமேற்கு, வடதிசை, வடபால்

வடமலை, வடவேங்கடம் எனவும்,

தெற்கு - தென்கிழக்கு, தென்மேற்கு, தென்குமரி,

தென்மலை, தென்வீதி எனவும்,

மேற்கு - மேல்கடல், மேனாடு, மேல்வீதி,

மேற்றிசை எனவும்,

குடக்கு- குடதிசை, குடகடல், குடநாடு எனவும்,

குணக்கு - குணதிசை, குணகடல் எனவும் வரும் .

பிற என்றமையால்

கீழைக்குளம், கீழைச்சேரி, மேலைக்குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும்,

வடக்கூர், வடக்குமலை; தெற்கூர், தெற்குமலை என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும் , பெருந்திசையோடு பெருந்திசை புணரும்போது,

தெற்குவடக்கு, வடக்குத்தெற்கு, கிழக்குமேற்கு மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலும் உண்டு.

வடகிழக்கு என்பது வடக்கும் கிழக்கும் ஆயதோர் கோணம் என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை . வடதிசை என்பது வடக்காகிய திசை எனப் பண்புத்தொகை . வடமலை என்பது வடக்கின் கண் மலை என ஏழாம் வேற்றுமைத்தொகை . தெற்கு வடக்கு என்பது தெற்கும் வடக்கும் என உம்மைத்தொகை .

குறிப்பு

## கூறு 11 : மெய்யீற்றுப் புணரியல்

**மெய் ஈற்றின் முன் உயிர்**

உடன்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யின் மேல் வரு மொழி முதல் உயிர் வந்து ஒன்றுபட்டு இணங்கி நிற்பது இயல்பு புணர்ச்சியேயாம்.

தோன்றல் + அழகன் = தோன்றலழகன்

உரிஞ் + அழகிது = உரிஞுழகிது

புகழ் + அழகிது = புகழழகிது எனவும்,

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான் எனவும் வரும்.

தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும் .

தனிக் குற்றெழுத்தின் முன் நின்ற மெய், வரு மொழியில் உயிர் வரின் இரட்டித்து நிற்கும்.

மண் + அரிது = மண்ணரிது

பொன் + அரிது = பொன்னரிது எனவும்,

மண் + அகம் = மண்ணகம்

பொன் + ஒளி = பொன்னொளி எனவும் வரும்.

**மெய்யீற்றின்முன் மெய்**

தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரந்

துன்னும் என்று துணிநரும் உளரே.

தன்னை ஒழிந்த ஞ, ண, ந, ம, ன, ர, ல, வ, ழ, ள என்னும் பத்து மெய்களின் முன் யகரம் வந்தால் இகரச் சாரியையைத் தன்முன் பொருந்தும் என்று அரிதிற் கொள்வாரும் உளர்

குறிப்பு

வேளி யாவன்,
மண்ணி யாது எனவும்,
வேளி யானை,
மண்ணி யானை எனவும் வரும்.
துணிநரும் என்ற எதிர்மறையாய இழிவுசிறப்பு உம்மையால், வேள் யாவன், மண் யாது எனப் பொதுவிதி பெறும் என்பாரும் உளர்.
ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்

ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின்

உவ்வுறு மேவ லுறாசில சில்வழி.

ஞ, ண, ந, ம, ல, வ, ள, ன என்னும் எட்டு மெய்களும் இறுதியாகிய முதல் நிலைத் தொழிற் பெயர்களும் ஏவல் வினைகளும் யகர மொழிந்த மெய்கள் வருமாயின் பெரும்பாலும் உகரச் சாரியையை இறுதிக்கண் பொருந்தும். சில ஏவல் வினைகள் சிலவிடங்களிலே அவ் உகரச் சாரியையைப் பொருந்தாது.

உரிஞ்க்கடிது, உண்ணுக்கடிது, பொருநுக்கடிது, திருமுக்கடிது, தின்னுக்கடிது, நீண்டது, வலிது

கடுமை, நீட்சி வன்மை எனத் தொழிற்பெயர்கள் இரு வழியும் உகரம் பெற்றன.

உரிஞுகொற்றா, உண்ணு கொற்றா, பொருநு கொற்றா, திருமுகொற்றா, தின்னுகொற்றா, நாகா வளவா என ஏவல் வினை உகரம் பெற்றன. மற்றவையும் இவ்வாறே ஆகும்.

உகரச் சாரியை பெற்றும் பெறாதும் வரும் ஏவல் வினைகள் ண,ன,ல,ள என்னும் நான்கு ஈற்றனவுமாம். வரலாறு :- உண் கொற்றா, தின் சாத்தா , வெல் பூதா, துள் வளவா என வரும் .

ஞ,ந,ம,வ என்னும் நான்கு ஈறும் உகரம் பெற்றே வரும். இது ஏய்தாதது எய்துவித்தல் .

நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை.

நகரம் இறுதியாகிய முதல்நிலைத் தொழிற்பெயருக்கு உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையுமாகும் வேற்றுமைக்கண்

பொருநக் கடுமை, நன்மை, வன்மை என வரும்.

**ணகர னகர வீறு**

ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்

இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்

கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

குறிப்பு

ண கார னகாரங்கள் வேற்றுமைக்கண் வல்லினம் வந்தால் முறையே டகரமும் றகரமும் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பும் ஆகும். அல்வழியில் அனைத்து மெய் வரினும் இயல்பு ஆகும்.

சிறுகண் + களிறு = சிறுகட்களிறு

பொன் + தகடு = பொற்றகடு என வேற்றுமையிலே வல்லினம் வர,ண,னக்கள் திரிந்து வந்தன.

மண்ஞாற்சி, பொன்ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என வேற்றுமையிலே மெல்லினமும் இடையினமும் வர ண, னக்கள் இயல்பாயின .

மண்கடிது, பொன்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என அல்வழியிலே மூவினமும் வர ண, னக்கள் இயல்பாயின .

குறிலணை வில்லா ணனக்கள் வந்த

நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

தனிக் குறில் ஒன்றையும் சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகார னகார மெய்கள் வருமொழிக்கு முதலாக வந்த நகரம் மயக்க விதி இல்லாமையினாலே திரிந்த இடத்து கெடுதலைப் பொருந்தும்.

தூண் + நன்று = தூணன்று

பசுமண் + நன்று = பசுமணன்று, நன்மை எனவும் ணகரம் இரு வழியும் கெட்டது .

அரசன் + நல்லன் = அரசனல்லன்

செம்பொன் + நன்று = செம்பொனன்று, நன்மை எனவும் னகரம் இரு வழியும் கெட்டது.

குறிப்பு

**சாதிப்பெயர்:**

சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி

இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற

டவ்வா கலுமா மல்வழி யும்மே.

சாதி பற்றி வரும் பெயர்களுக்கும் திரள் பற்றி வரும் பெயர்களுக்கும் பரண், கவண் என்னும் பெயர்களுக்கும் இறுதி ணகரம் வேற்றுமைக்கு இயல்பு ஆகும். வேற்றுமைகண்ணும் வல்லினம் வரின் இயல்பாகும். உணவுக்குரிய எள்ளின் திரிசொல்லாகிய எண் என்னும் பெயருக்கும், சாணென்னும் நீட்டல் அளவைப் பெயருக்கும் இறுதி ணகரம் அவ்வழிகண்ணும் வல்லினம் வரின் திரிந்து டகர மாதலும் பொருந்தும்.

பாண்குடி, உமண்குடி எனவும்,

அமண்குடி எனவும்,

பரண்கால் எனவும்,

எண் + கடிது = எட்கடிது ,

சாண் + கோல் = சாட்கோல் என அவ்வழியிலும் திரிந்தது .

டவ்வாகலுமாம் என்ற உம்மையால், எண்கடிது, சாண்கோல் என இயல்பாதலே சிறப்பாம். பிற என்ற மிகையால் வேற்றுமையில், பாணக்குடி என அகரச் சாரியை பெறுதலும், அட்டுண்டுழனி என்னும் இயல்பும், மட்குடம், மண்குடம் என்னும் உறழ்வும், இரு வழியிலும் இன்னும் ணகர ஈற்றுள் அடங்காதவை உண்டேல் அவையும் கொள்ளப்படும்.

**ன.்.கான் கிளைப்பெயர்:**

ன.்.கான் கிளைப்பெய ரியல்பு ம.்.கான்

அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே.

னகரத்தை இறுதியிலுடைய சாதிப்பெயர் வல்லினம் வர ஈறு திரியாது இயல்பாதலும் அகரச் சாரியை பெறுதலும் வேற்றுமைப் பொருள் புணர்ச்சிக்கண் ஆகும்.

எயின்குடி, எயினக்குடி, சேரி, தோட்டம், பாடி என வரும்.

‘‘:பொருட்கே’’ என்ற மிகையால் எயின மரபு, எயின வாழ்வு, எயினவணி

என மற்றைக் கணம் வரினும் அகரச் சாரியை பெறுதலும்,

எயினக் கன்னி, எயினப் பிள்ளை, எயின மன்னன் என அல்வழியில் அகரச் சாரியை பெறுதலும் உண்டாம்.

மீன் என்னும் மொழி இறுதி னகரம் வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின் றகரத்தோடு உறழ்ந்து வரும் .

மீன் + கண் = மீற்கண், செவி, தலை, புறம் என வரும்.

**குறிப்பு**

**தேன்:**

தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை

மேவி னிறுதி யழிவும் வலிவரின்

தேன் என்னும் சொல் மூவின மெய்களும் வரின் இறுதி னகர மெய் இயல்பாதலும் மெல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலே அன்றிக்கெடுதலும், வல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலே அன்றிக் கெட வந்த வல்லினமாவது , அதற்கினமாவது மிகுதலும் வேற்றுமை அல்வழி என்னும் இரு இடத்தும் ஆகும்.

தேன்கடிது, தேன்ஞான்றது, தேன்யாது எனவும்,

தேன்மொழி, தேமொழி எனவும்

தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு எனவும் அவ்வழியில் வந்தன.

தேன் கடுமை, தேன் மலிவு, தேன் யாப்பு எனவும்

தேன்மலர், தேமலர், எனவும் தேன்குடம், தேக்குடம், தேங்குடம் எனவும் வேற்றுமையில் வந்தன.

**எகின்:**

மரமல் லெகின்மொழி யியல்பு மகரம்

மருவ வலிமெலி மிகலு மாகும்.

மரம் அல்லாத அன்னப் பறவையை உணர்த்தும் எகின் என்னும் சொல் வேற்றுமையிலும் வல்லினம் வர இறுதி இயல்பாதலும் இரு வழியிலும் அகரச்சாரியை பொருந்த வரும் வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும் ஆகும் .

எகின்கால், சிறை, தலை,புறம் என வேற்றுமையிலும் இயல்பாயிற்று.

எகினப்புள், எகினம்புள் எனவும்

எகினக்கால், எகினங்கால் எனவும் இருவழியிலும் அகரம் வர மெலி மிகுந்தன.

அகரம் வருதற்கு வரும் எழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் வரும்.

**குறிப்பு**

எகின மாட்சி, எகின வாழ்க்கை, எகின வழகு என வரும்.

**குயின்:**

குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே.

குயின் என்னும் பெயரும் ஊன் என்னும் பெயரும் வேற்றுமையின் இடத்தும் இயல்பாகும் .

குயின் கடுமை, ஊன் கடுமை, சிறுமை, தீமை, பெருமை என வரும்.

**மின் - பின் - பன் - கன்:**

மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய

கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்

மின் பின் பன் கன் என்னும் நான்கு சொற்களும் முதல்நிலைத் தொழிற்பெயர் போல யகரம் அல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பொருந்தும். இவற்றுள் கன் என்னும் உகரச் சாரியையே அன்றி அகரச் சாரியையும் பெற்று வல்லினம் வந்தால் வரும் எழுத்தாவது அதற்கு இனமாவது மிகப் பெறும்.

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது, நன்று, வலிது எனவும்,

கடுமை நன்மை, வன்மை எனவும்,

கன்னத்தட்டு, கன்னந்தட்டு எனவும்,

கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு எனவும் அல்வழி வேற்றுமையில் முறையே வந்தன.

**தன்- என்:**

தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ

தன், என் என்னும் விகார மொழிகளுடைய இறுதியிலுள்ள னகர மெய், வல்லினம் வரின் பொது விதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதி ஏலாது இயல்பாதலுமாம் கொண்டு அமையும். நின் என்னும் விகாரமொழினது இறுதியிலுள்ள னகர மெய் வல்லினம் வரின் திரியாது இயல்பாகும்.

தன்பகை, தற்பகை, என்பகை, எற்பகை எனவும் நின்பகை எனவும் வரும் .

உறவே என்ற மிகையால், மின் பின் முதலியவை, மின்கடிது, மின்கடுமை என இருவழியும் சாரியை பெறுதலும் திரிதலும் இன்றி வருதலும் உண்டு.

மான் குளம்பு, அழன் கை, கான் கோழி, வான் சிறப்பு, அலவன் கால், கலுழன் சிறை என வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லப் பெறாதவைகள் இயல்பாதலும், வரிற் கொள்ளும் எனச் செயின் என்னும் வாய் பாட்டு வினையெச்சம் பொதுச்சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும் , இன்னும் னகர மெய் ஈற்றுள் அடங்காதவை இருந்தால் அவையும் கொள்

குறிப்பு

**மகரவீறு:**

மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்

வன்மைக் கினமாத் திரிபவு மாகும் .

மகர ஈற்றுச் சொற்கள் நாற்கணமும் வர இறுதியிலுள்ள மகர மெய் கெட விதி உயிர் ஈறாய் நின்று இயல்பு உயிர் ஈறு போலப் புணர்வனவும் வல்லினம் வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும் ஆகும்.

உயிர் ஈறு ஒத்தல் - உயிர் வரின் அவை உடம்படு மெய் பெறவும், வல்லினம் வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் அவை இயல்பாகவும் புணர்தல்.

மகர மெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக்கெடுவது வேற்றுமையிலும் அல்வழியிலே பண்புத்தொகை உவமைத் தொகைகளிலுமாம் எனவும்,மெல்லினம் வரக்கெடுவது இருவழியிலுமாம் எனவும் கொள்க .

மகர மெய் வல்லினம் வரக் கெடாது இன மெல்லெழுத்தாகத் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை இரண்டும் ஒழித்து ஒழிந்த அவ்வழிப் புணர்ச்சியிலாம் எனவும், வினையாலணையும் பெயர் இறுதி மகரமும் , தனிக்குறிலைச் சார்ந்த மகரமும், வேற்றுமையிலும் வல்லினம் வரின் கெடாது இன எழுத்தாகத் திரியும் எனவும் கொள்க

மரம் + அடி = மரவடி

மரம் + வேர் = மரவேர்

மரம் + கோடு = மரக்கோடு என வேற்றுமையிலும்

வட்டம் + ஆழி = வட்டவாழி

வட்டம் + வடிவம் = வட்டவடிவம்

வட்டம் + கல் = வட்டக்கல் எனப் பண்புத்தொகையிலும்

பவளம் + இதழ் = பவளவிதழ்

பவளம் + வாய் = பவளவாய்

## குறிப்பு

கமலம் + கண் = கமலக்கண் என உவமைத் தொகையிலும் உயிரும் இடையினமும் வல்லினமும் வர ஈறு கெட்டு உயிரீறு போல் முடிந்தன .

மரம் + நார் = மரநார் எனவும் ,

மரம் + நீண்டது = மரநீண்டது,

வட்டம் + நேமி = வட்டநேமி எனவும் மெல்லினம் வர ஈறு கெட்டு உயிரீறு போல் முடிந்தன .

நாம் + கடியம் = நாங்கடியம்

நிலம் + தீ = நிலந்தீ,

உண்ணும் + சோறு = உண்ணுஞ்சோறு,

உண்டனம் + சிறியேம் = உண்டனஞ்சிறியேம்,

பூதனும் + தேவனும் = பூதனுந்தேவனும் என அல்வழிக்கண் எழுவாய்த்தொடர் முதலியவற்றில் வல்லினம் வர ஈறு திரிந்து முடிந்தது .

சிறியேம் + கை = சிறியேங்கை எனவும்

நம் + கை = நங்கை எனவும், வினையாலணையும் பெயர் இறுதி மகரமும் தனிக் குறிலைச் சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் வல்லினம் வரத் திரிந்து முடிந்தன .

வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்

அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள .

வேற்றுமைக்கண் மகர இறுதி கெட வல்லினமானது அவற்றிற்கு இனமாவது மிகுதலும் அல்வழிக்கண் உயிரும் இடையினமும் வரின் கெடாது இயல்பாதலும் உளவாம் .

மகரமெய் உயிரும் இடையினமும் வர இயல்பாவது பண்புத்தொகை உவமைத்தொகை இரண்டும் ஒழித்து ஒழிந்த அல்வழிப் புணர்ச்சியில் ஆகும்.

குளம் + கரை = குளக்கரை, குளங்கரை என வேற்றுமையில் ஈறு கெட்டு உறழ்ந்தது .

மரமடைந்தது, மரம் வலிது எனவும், வலம் இடம், நிலம் வானம் எனவும், உண்ணும் உணவு ஆளும் வளவன் எனவும், உண்டன மடியேம், உண்டனம் யாம் எனவும், அரசனும் அமைச்சனும், புலியும் யானையும் எனவும், எழுவாய்த்தொடர் முதலியன அல்வழியில் உயிரும் இடையினமும் வர ஈறு கெடாது இயல்பாக முடிந்தது.

குறிப்பு

வினையாலணையும் பெயர் இறுதிமகரமும் தனிக்குறிலைச் சார்ந்த மகரமும், சிறியே மன்பு, சிரியேம் வாழ்வு எனவும், நம் மன்பு, நம் வாழ்வு எனவும், வேற்றுமையிலும் உயிரும் இடையினமும், வர இயல்பாகும்.

நுந்தம்

எம்நம் மீறா மவ்வரு ஞநவே .

நும், தம, எம், நம் என்னும் நான்கு விகார மொழிகளுக்கும் இறுதியாகிய மகர மெய் வரும் ஞகர நகரங்களாகத் திரியும்.

நுஞ்ஞாண், நுந்நூல், தஞ்ஞாண், தந்நூல், எஞ்ஞாண், எந்நூல், நஞ்ஞாண், நந்நூல், என வரும்.

ஞ, ன வரின்அவையாகத் திரியும் எனவே, ஒழிந்த மகரம் வரின், நும்மணி என இயல்பாம். என்பது தெளிவாம்.

**அகம் முன் செவி – கை:**

அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.

அகம் என்னும் இடப்பெயர் முன் செவி, கை என்னும் சினைப் பெயர்கள் வந்தால் நிலைமொழி இறுதி மகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலேயன்றி அதன் நடு நின்ற ககர மெய்யும் அதன் மேல் ஏறிய அகர உயிரும் கெடும் .

அகம் + செவி = அஞ்செவி,

அகம் + கை = அங்கை எனவரும் .

கெட்டே வரும் என்னாமையால், அகஞ்செவி, அகங்கை என வருவனவும் கொள்க .

**ஈம் - கம்:**

ஈமுங்,

கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்

முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

ஈம், கம், உரும் என்னும் மூன்று சொல்லும் வேற்றுமை அல்வழி என்னும் இருவழியும் முதல்நிலைத் தொழிற்பெயர் போல யகரம் அல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பெற்று முடியும். இவற்றுள்ளே முதற்கண் நின்ற ஈமும் கம்மும் வேற்றுமைக்கண் உகரச்சாரியை அன்றி அகரச்சாரியையும் பெறும் .

குறிப்பு

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது நீண்டது, வலிது எனவும்

கடுமை, நீட்சி, வன்மை எனவும், ஈமக்குடம், கம்மக்குடம் எனவும் வரும்.

**யரழ ஈறு:**

யரழ முன்னர்க் கசதப வல்வழி

இயல்பு மிகலு மாகும் வேற்றுமை

மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.

யகர ரகர ழகர மெய்களின் முன் ககர , சகர , தகர பகரங்கள் வரின் அல்வழியில் இயல்பாதலும் மிகுதலும் வேற்றுமையில் மிகுதலும் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் விதியாகும்.

அல்வழி இயல்பு மிகுதி இரண்டனுள் இயல்பு எழுவாத்தொடர் உம்மைத்தொகை வினைத்தொகைகளிலும் மிகுதி பண்புத்தொகை உவமைத்தொகைகளிலும் கொள்ளப்படும். யகர ஈற்று வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகும் ; ரகர ஈற்று வினையெச்சத்தின் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

வேய்குறிது, வேர்சிறிது, யாழ்பெரிது எனவும்,

பேய் பூதம், நீர்கனல், இகழ்புகழ் எனவும்,

செய்கடன்,தேர்பொருள், வீழ்ப்புனல் எனவும்

உண்ணியர் போவான் எனவும் எழுவாய்த்தொடர் முதலியவற்றில் இயல்பாயின.

மெய்க்கீர்த்தி, கார்ப்பருவம், பூழ்ப்பறவை எனவும்,

வேய்த்தோள், கார்க்குழல், காழ்ப்படிவம் எனவும்,

போய்க்கொண்டான் எனவும் பண்புத்தொகை முதலியவற்றில் மிகுந்தன.

நாய்க்கால்,தேர்த்தலை, பூழ்ச்செவி என வேற்றுமையில் மிகுந்தன.

வேய்க்குழல், வேய்ங்குழல், ஆர்க்கோடு, ஆர்ங்கோடு எனவேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன.

மேல் என்ற மிகையால், வாய்புகுவதனினும் என வேற்றுமையில் இயல்பாதலும்,

பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகையில் உறழ்தலும்,

காய்+யாது =காயாது

நோய் + யானை = நோயானை எனத் தனிக்குறிலைச் சாராத யகரத்தின் முன் யகரம் வரின் இரு வழியும் நிலைமொழி இறுதி யகரங் கெடுதலும், இன்னும் அடங்காதவைகள் இருந்தால் அவைகளும் கொள்ளப்படும்.

**தமிழ்:**

தழிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே

தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

தமிழ் என்னும் சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக்கண் அகரச் சாரியை பொருந்தவும் பெறும் தாழ் என்னும் சொல்முன் கோல் என்னும் சொல் வந்துபொருந்துமாயின் அவ் அகரச்சாரியை பெறும்.

தமிழப்பிள்ளை, தமிழ நாயகன், தமிழ வளவன், தமிழ வரசன் எனவும்,

தாழக்கோல் எனவும் வரும்.

**கீழ்:**

கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்

கீழ் என்னும் சொல்லின்முன் வரும் வல்லினம் ஒருகால் இயல்பு ஆகியும் ஒருகால் மிக்கும் வரும் விகற்பத்தை உடையதாய் வரும்.

கீழ்குலம், கீழ்க்குலம்,

கீழ்சாதி, கீழ்ச்சாதி என வரும்.

**லகர ளகர வீறு**

லளவேற் றுமையிற் றடவு மல்வழி

அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி

மேவி னணவு மிடைவரி னியல்பும்

ஆகு மிருவழி யானு மென்ப.

குறிப்பு

லகர எகரமாகிய இரண்டு மெய் யீறுகளும் வல்லினம் வந்தால் வேற்றுமைக்கண் முறையே றகார. டகார மெய்களும் அல்வழிக்கண் றகார டகாரங்களுடனே உறழ்வனவும் ஆகும். இரு வழிக்கண்ணும் மெல்லினம் வந்தால் முறையே னகார ணகார மெய்களும் இடையினம் வந்தால் இயல்பும் ஆகும்.

**குறிப்பு**

கல் + குறை = கற்குறை,

முள் + குறை = முட்குறை என வல்லினம் வர வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

கல் + குறிது = கல்குறிது, கற்குறிது

முள் + குறிது = முள்குறிது, முட்குறிது என வல்லினம் வர அல்வழியில் ஒருகால் இயல்பாகியும் ஒருகால் திரிந்தும் உறழ்ந்தன .

கல் + மாண்டது = கன்மாண்டது,

முள் + மாண்டது = முண்மாண்டது எனவும்,

கல் + மாட்சி = கன்மாட்சி,

முள் + மாட்சி = முண்மாட்சி எனவும் மெல்லினம் வர இருவழியும் னகர ணகரமாகத் திரிந்தன

கல் + யாது = கல்யாது,

முள் + யாது = முள்யாது எனவும்,

கல் + யாப்பு = கல்யாப்பு,

முள் + யாப்பு = முள்யாப்பு எனவும் இடையினம் வர இரு வழியும் இயல்பாயின.

அல்வழி யவற்றோ டுறழ்வும் என்றாரேனும், இவற்றோடு மயங்காத தகரம் வரின், ஏற்புழிக்கோடலால் கற்றீது முட்டீது எனத் திரிபு ஒன்றுமே கொள்க என்பார் உரையாசிரியர்.

**தனிக்குறில்:**

குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்

ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

குறிப்பு

தனிக் குறிலின் பின் நின்ற லகர ளகர மெய்கள் அல்வழிக் கண்ணே தகரம் வருமாயின் றகர டகரங்களாகத் திரிதலே அன்றி ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும்.

கல் + தீது = க.ஃ.றீது,

முள் + தீது = மு.ஃ.டீது என வரும்.

குறில்செறி யாலள வல்வழி வந்த

தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்

வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்

இயல்புந் திரிபு மாவன வுளபிற.

தனிக் குறில் ஒன்றனையும் சாராத லகார ளகார மெய்கள் அல்வழிக்கண் வருமொழிக்கு முதலாய் வந்த தகரந் திரியும் இடத்துக் கெடுதலும் இரு வழிக்கண்ணும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரம் திரியும் இடத்துக்கெடுதலும் வல்லெழுத்து முதல்மொழி வந்தால் அல்வழிக்கண் உறழாது இயல்பாதலும் திரிதலும் வேற்றுமைக்கண்ணே திரியாது இயல்பாதலும் பொருந்துவன உள .

ல ள க்கள் அல்வழியில் வல்லினம் வர உறழாது இயல்பாவது எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை விளித்தொடர் வினைமுற்றுத்தொடர் வினைத்தொகைகளிலும் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை வினைசெச்சங்களிலும் எனக் கொள்க .

வேறீது, தோன்றல் + தீயன் = தோன்றறீயன்,

வாள் + தீது = வாடீது

,வேள் + தீயன் = வேடீயன் என அல்வழியிலே தகரம் திரியுமிடத்துக் கெட்டன.

தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன்,

வேள் + நல்லன் = வேணல்லன் எனவும்,

தோன்றல் + நன்மை = தோன்றனன்மை,

வேள் + நன்மை = வேணன்மை எனவும் இருவழியிலும் நகரம் திரியும் இடத்துக் கெட்டன.

கால் கடிது, மரங்கள் கடிய எனவும்,

கால்கை, பொருள் புகழ் எனவும்,

குறிப்பு

தோன்றல் கூறாய்,மக்காள் சொல்லீர் எனவும்,

உண்பல் சிறியேன், கேள் சாத்தா எனவும்,

கால் சுடர், அருள்குரு எனவும் அல்வழியிலே எழுவாய்த்தொடர் முதலியவற்றில் உறழாது இயல்பாயின .

வேற்படைக் குமரன், வாட்படைக் கையன் எனவும்,

வேற்கண், வாட்கண் எனவும், வந்தாற் கொள்ளும் வந்தக்காற்கொள்ளும் எனவும் அல்வழியிலே பண்புத்தொகை முதலியவற்றில் உறழாது திரிந்தன .

கால்குதித் தோடிக் கடல்புக மண்டி , வாள்போழ்ந் தட்ட நீள்கழன் மறவர் ” என வேற்றுமையிலே வலி வரத் திரியாது இயல்பாயின .

பிற என்ற மிகையால் , தோன்றறாள் , வேடோள் என, நிலைமொழி உயர்திணைப் பெயராயின் வேற்றுமையிலும் தகரம் திரியும் இடத்துக் கெடுதலும்,

காற்றுணை, தாட்டுணை எனவும்,பிறங்கற்றோள், வாட்டாரை எனவும் அல்வழியிலும் பண்புத்தொகை, உவமைத் தொகைகளில் கெடாமையும் கொள்ளப்படும்.

இன்னும் ,பிற’ என்ற மிகையால், தனிக் குறிலைச் சார்ந்த ல, ளக்களும், விற்படை எனவும் விற்புருவம் எனவும் பண்புத்தொகை, உவமைத்தொகைகளில் உறழாது திரிதலும்,

கொல்களிறு, கொள்பொருள் எனவும், நில் கொற்றா, கொள் பூதா எனவும் வினைத்தொகை வினைமுற்றுத் தொடர்களில் இயல்பாதலும் ஏற்கப்படும்.

**ல,ள ஈற்றுத் தொழிற்பெயர்:**

லளவிறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுறா

வலிவரி னல்வழி யியல்புமா வனவுள .

லகாரத்தை இறுதியாக உடைய விகுதி பெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தை இறுதியாக உடைய முதல்நிலை திரிந்த தொழிற்பெயரும் இரு வழியிலும் யகரம் அல்லாத மெய்கள் வந்தால் உகரம் பெறாது. வல்லினம் வந்தால் அல்வழிக்கண் உறழாது இயல்பு ஆவனவும் சில உள .

ஆடல்சிறந்தது, ஆடற்சிறந்தது; ஆடனன்று, ஆடல்வலிது எனவும்;

ஆடற்சிறப்பு, ஆடனன்மை ஆடல்வன்மை எனவும்;

கோள்கடிது, கோட்கடிது, கோணன்று, கோள்வலிது எனவும்;

கோட்கடுமை, கோணன்மை, கோள்வன்மை எனவும் இரு வழியும் உகரம் பெறாது பொதுவிதியான் முடிந்தன.

நடத்தல் கடிது, நடப்பித்தல் கடிது எனச் சில உறழாது அல்வழியில் இயல்பாயின.

இயல்பும் என்ற உம்மையால், பின்னல்கடிது, பின்னற்கடிது, உன்னல்கடிது, உன்னற்கடிது எனப் பொதுவிதியால் உறழ்தலே பெரும்பான்மை ஆகும்.

**குறிப்பு**

வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்

பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம் .

வல் என்னும் சூதாடு கருவிப் பெயர் யகரம் அல்லாத மெய்கள் வரின் முதல்நிலைத் தொழிற்பெயர் போல இரு வழியும் உகரச் சாரியை பெறும். பலகை, நாய் என்னும் இருபெயர் வரினும் பிற பெயர்கள் வரினும் வேற்றுமைக்கண் உகரச் சாரியையே அன்றி அகரச் சாரியையும் பெறும்.

வல்லுக்கடிது, நன்று, வலிது எனவும்,

வல்லுக்கடுமை, நன்மை, வன்மை, எனவும் இரு வழியும் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்றது

வல்லப்பலகை, நாய், புலி, குதிரை, எனவும்,

வல்லுப் பலகை, நாய், புலி, குதிரை, எனவும் வேற்றுமையில் அகரச் சாரியையும் உகரச் சாரியையும் பெற்றது.

**லகர ளகர வீறு**

நெல்லுஞ் செல்லும் கொல்லுஞ் சொல்லும்

அல்வழி யானும் றகர மாகும் .

நெல், செல், கொல், சொல் என்னும் நான்கு சொற்களின் ஈற்று லகர மெய் பொது விதியால் உறழாது அல்வழியில் வேற்றுமை போல றகர மெய்யாகத் திரியும்.

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

இல்லெ னின்மைச் சொற்கை யடைய

வன்மை விகற்பமு மாகா ரத்தொடு

வன்மை யாகலு மியல்பு மாகும் .

இன்மைப் பண்பை உணர்த்தி நிற்கும் இல் என்னும் சொல்லுக்கு ஐகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் விகற்பித்தலும் ஆகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் மிகலும் இவ்விரு விதியும் பெறாது இயல்பாதலும் பொருந்தும் .

குறிப்பு

இல்லைப்பொருள், ,இல்லைபொருள், இல்லாப்பொருள், இல்பொருள், ஞானம், வன்மை, அணி என வரும்.

**புள் - வள்:**

புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும்.

இவ்விரு சொற்களும் இரு வழியால் முடிதலே அன்றித் தொழிற்பெயர் போல உகரச் சாரியையும் பெற்றுப் புணரும்.

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது எனவும் .

புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை, நன்மை, வன்மை எனவும் வரும் .

**வகர ஈறு**

சுட்டு வகரமூ வினமுற முறையே

ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

அவ், இவ், உவ் என்னும் அ∴றிணைச் சுட்டுப்பெயர்கள் ஈற்று வகரமெய் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர முறையாக ஆய்தமும் வரும் மெல்லினமும் இயல்பும் ஆகும்.

அவ் + கடிய = அ∴கடிய,

இவ் + கடிய = இ∴கடிய

உவ் + கடிய = உ∴கடிய, என வல்லினம் வர ஆய்தமாகத் திரிந்தது.

அவ் + ஞானம் = அஞ்ஞானம்,

இவ் +ஞானம் = இஞ்ஞானம்,

உவ் +ஞானம் = உஞ்ஞானம், என மெல்லினம் வர வரும் எழுத்தாகத் திரிந்தது.

அவ் + யாவை = அவ்யாவை,

இவ் + யாவை = இவ்யாவை,

குறிப்பு

உவ் +யாவை = உவ்யாவை என இடையினம் வர இயல்பாயிற்று.

தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே

மவ்வரின் வ.்.கான் மவ்வு மாகும்.

தெவ் என்னும் பகையை உணர்த்தும் பெயர் யகரம் அல்லாத மெய்களோடு புணரும் இடத்துத் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்று முடியும். மகர மெய் வரின் உகரச் சாரியை பெறுதலேயன்றி ஒரோவிடத்து வகரமெய் மகர மெய்யாகத் திரியவும் பெறும்.

தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது எனவும் தெவ்வுக்கடுமை, தெவ்வுமாட்சி, தெவ்வுவலிமை எனவும் இருவழியும் உகரச் சாரியை பெற்றது.

தெவ்வுமன்னர், தெம்மன்னர் எனவும், தெவ்வுமுனை, தெம்முனை எனவும் இரு வழியும் மகர மெய் வர உகரச் சாரியை பெற்றும், மகர மெய்யாகத் திரிந்தும் வந்தது.

**வருமொழித் தகர நகரத் திரிபு**

னலமுன் றனவும் ணளமுண் டணவும்

னகர, லகரங்களின் முன் வருந் தகரம் றகரமாகும். அவற்றின்முன் வரும் நகரம் னகரமாகும். ணகர, ளகரங்களின் முன் வரும் தகரம் டகரமாம் அவற்றின் முன் நகரம் ணகரமாகும்.

பொன் +தீது = பொன்றீது,

கல் +தீது = கற்றீது

பொன் + நன்று = பொன்னன்று,

கல் + நன்று கன்னன்று எனவும் .

மண் +தீது = மண்டீது,

முள் +தீது = முட்டீது,

மண் +நன்று = மண்ணன்று,

முள் + நன்று = முண்ணன்று எனவும் அல்வழியிலே திரிந்தன.

பொற்றீமை, கற்றீமை, பொன்னன்மை, கன்னன்மை எனவும்,

மட்டீமை, முட்டீன்மை, மண்ணன்மை, முண்ணன்மை, எனவும் வேற்றுமையிலே திரிந்தன,

வேற்றுமைப் பொருள் புணர்ச்சியை உருபு புணர்ச்சியோடு மாட்டெறிதல்

உருபின் முடிபவை ஒக்குமப் பொருளினும்.

மேல் உருபுப் புணர்ச்சிக்கண் முடியும் முடிபுகள் அவ்வுருபின் பொருள் புணர்ச்சிக்கண்ணும் ஒத்து முடியும்.

குறிப்பு

உருபுப் புணர்ச்சியாவது வேற்றும்மை உருபு வெளிப்பட்டு நிற்பப் புணரும் புணர்ச்சி, உறிக்கட்டயிர் என்பது போல.

வேற்றுமைப் பொருள் புணர்ச்சியாவது வேற்றுமை உருபின்றி அவ் உருபினது பொருள்படப் புணரும் புணர்ச்சி உறித்தயிர் என்பது போல.

எல்லாவாற்றதும் என்பது உருபுப் புணர்ச்சி, எல்லாவற்றுக்கோடும் என்பது பொருட் புணர்ச்சி மேல் உருபு புணரியலில்,

எல்லா மென்ப திழிதிணை யாயின்

அற்றோ டுருபின் மேலும் முறுமே " (சூ. 245) என்ற விதிப்படி எல்லாவற்றதும் என்ற உருபுப் புணர்ச்சிக்கு அஃறிணைக்கண் அற்றும் உருபின் மேல் உம்மும் பெற்றாற் போல எல்லாவற்றுக் கோடும் என்னும் பொருள் புணர்ச்சிக்கும் பெற்றன. எல்லா நமதும் என்பது உருபு புணர்ச்சி; எல்லா நங்கையும் என்பது பொருள் புணர்ச்சி.

அன்றே னம்மிடை யடைந்தற் றாகும் " (சூ. 245) என்ற விதிப்படி எல்லா நமதும் என்னும் உருபு புணர்ச்சிக்கு உயர்திணைக்கண் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற் போல, நங்கையும் என்னும் பொருள் புணர்ச்சிக்கும் பெற்றன.

எல்லார் தமதும், எல்லீர் நுமதும் என்பன உருபு புணர்ச்சி; எல்லார் தங்கையும், எல்லீர் நுங்கையும் என்பன பொருள் புணர்ச்சி. மேல் உருபு புணரியலில், " எல்லாரு மெல்லீரு மென் பவற்றும்மை - தள்ளி நிரலே தம்நும் சாரப் - புல்லு முருபின் பின்ன ரும்மே " ( சூ. 246) என்ற விதிப்படி எல்லார் தமதும் எல்லீர் நுமதும் என்னும் உருபுப் புணர்ச்சிக்கு எல்லாரும் எல்லீரும் என்பவைகளின் இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி முறையே தம்முச் சாரியையும் நும்முச் சாரியையும் வந்து பொருந்த அவைகளினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னே வந்து புணர்ந்தாற்போல, எல்லார் தங்கையும் எல்லீர் நுங்கையும் என்னும் பொருள் புணர்ச்சிக்கும் முடிந்தன.

தனது, தமது, நமது என்பன உருபு புணர்ச்சி; தன்கை, தங்கை, நங்கை என்பன பொருள் புணர்ச்சி. மேல் உருபுப் புணரியலில்,

தான்தாம் நாம்முதல் குறுகும் " ( சூ. 247) என்ற விதிப்படி உருபுப் புணர்ச்சிக்குத் தான், தாம், நாம் என்பன முறையே தன், தம், நம் என விகாரப்பட்டால் போலப் பொருள் புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன.

எனது, எமது, நினது, நுமது என்பன உருபு புணர்ச்சி;

என்கை, எங்கை, நின்கை, நுங்கை என்பன பொருள் புணர்ச்சி.

யான் யாம் நீ நீர் என் நின் நும் ஆம் " (சூ. 247) என்ற விதிப்படி உருபுப் புணர்ச்சிக்கு யான் யாம் நீ நீர் என்பன முறையே என் எம் நின் நும் என விகாரப்பட்டால் போலப், பொருள் புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன

குறிப்பு

ஆனது, மானது, கோனது என்பன உருபுப் புணர்ச்சி; ஆன்கோடு, மான்கோடு, கோன் குணம் என்பன பொருட் புணர்ச்சி. மேல் உருபுப் புணரியலில்.

ஆமா கோனவ் வணையவும் பெறுமே" (சூ. 248) என்ற விதிப்படி உருபு புணர்ச்சிக்கு னகரச் சாரியை வந்தால் போலப் பொருள் புணர்ச்சிக் கும் வந்தது.

அவற்றது, இவற்றது, உவற்றது என்பன உருபுப் புணர்ச்சி; அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு என்பன பொருள் புணர்ச்சி. மேல் உருபு புணரியலில்,

வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே " (சூ.250) என்ற விதிப்படி உருபுப் புணர்ச்சிக்கு அற்றுச் சாரியை வந்தால் போலப் பொருள்புணர்ச்சிக்கும் வந்தது.

அதனது, இதனது, உதனது என்பன உருபு புணர்ச்சி; அதன்கோடு, இதன்கோடு, உதன் கோடு என்பன பொருட் புணர்ச்சி. மேல் உருபு புணரியலில்,

சுட்டின்முன் ஆய்தம் அன்வரிற் கெடுமே" (சூ. 251) என்ற விதிப்படி உருபு புணர்ச்சிக்கு அன் சாரியைப் பேறும் ஆய்தக் கேடும் வந்தால் போலப், பொருள் புணர்ச்சிக்கும் வந்தன.

**புணரியல்களுக்குப் புறனடை**

இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்

போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்

கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

இடைச்சொற்களுள்ளும் உரிச்சொற்களுள்ளும் வட சொற்களுள்ளும் உயிரீறும் ஒற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் இலக்கணப்போலி மொழிகளும் மரூஉ மொழிகளும் ,இரு வகை வழக்கிலும் நடக்கும் முறைமைக்குப் பொருந்துமாறு புணர்க்கை, அறிவுடையோர் எல்லார்க்கும் முறையாகும்.

மடவை மன்ற தடவு நிலைக்கொன்றை” என அகர ஈற்று இடைச்சொல் முன் வல்லெழுத்து மிகாது இயல்பாயிற்று.

ஆன்கன்று, மான்கன்று, வண்டின்கால், தேரின் செலவு, யாழின்புறம் என வேற்றுமைப் புணர்ச்சிக்கண் னகர ஈற்றுச்சாரியை இடைச்சொற்கள் திரியாது இயல்பாயின.

குறிப்பு

மழகளிறு, உறுபுனல் எனவும் கமஞ்சூல், தடஞ் செவி, தடந்தோள், கயந்தலை எனவும் உயிர் ஈற்று உரிச்சொல் முன் வல்லெழுத்து மிகாது இயல்பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன.

அளிகுலம், தனதடம், ஆதிபகவன் என உயிர் ஈற்று வடசொல் முன் வல்லெழுத்து மிகாது இயல்பாயின .

இல் முன் = முன்றில்,

பொது இல் = பொதியில் எனவரும் இலக்கணப்போலி மொழிகளும் ,

அருமருந்தன்ன பிள்ளை - அருமந்த பிள்ளை;

குணக்குள்ளது = குணாது ,

தெற்குள்ளது தெனாது ,

வடக்குள்ளது = வடாது ,

சோழ னாடு = சோணாடு ,

பாண்டியநாடு = பாண்டி நாடு ,

மலையமானாடு = மலாடு,

தொண்டை மானாடு = தொண்டை நாடு ,

தஞ்சாவூர் = தஞ்சை;

ஆற்றூர் = ஆறை ,

ஆதன்தந்தை = ஆந்தை ,

பூதன்தந்தை = பூந்தை ,

வடுகன் தந்தை = வடுகந்தை என வரும் மரூஉ மொழிகளும் நிலைமெழி வருமொழிகளுள் ஏற்கும் செய்கை அறிந்து முடித்துக்கொள்க மற்றவை களும் இப்படியே.

வடமொழித் தொகைப் பதங்கள், தமிழில் ஆங்காங்கு வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூல் புணர்ச்சியே பெறும். புணர்ச்சி எனினும் சந்தி

எனினும் ஒக்கும். அச்சந்தி, தீர்க்கசந்தி, குணசந்தி விருத்திசந்தி என மூவகைப்படும் .

(1) தீர்க்கசந்தி

1அ, ஆ வின் முன் அ, ஆ வரின், ஈறும் முதலுங் கெட, ஆ வொன்று தோன்றும் :-

பத + அம்புயம் = பதாம்புயம்

சிவ + ஆலயம் = சிவாலயம்

சேநா + அதிபதி = சேநாதிபதி

சதா + ஆநந்தம் = சதாநந்தம்

2. இ, ஈயின் முன் இ, ஈ வரின், ஈறும் முதலும் கெட, ஈ ஒன்று தோன்றும் : -

கிரி + இந்திரன் = கிரீந்திரன்

கிரி + ஈசன் = கிரீசன்

மகி + இந்திரன் = மகீந்திரன்

நதி + ஈசன் = நதீசன்

3. உ, ஊ வின் முன் உ, ஊ வரின், ஈறும் முதலும் கெட, ஊ ஒன்று தோன்றும் : -

குரு + உபதேசம் = குரூபதேசம்

மேரு + ஊர்த்துவம் = மேரூர்த்துவம்

வதூ + உத்துவாகம் = வதூத்துவாகம்

வதூ + ஊரு = வதூரு

(2) குணசந்தி

1. அ, ஆ முன் இ, ஈ வரின், ஈறும் முதலும் கெட, ஏ ஒன்று தோன்றும் :-

நர+இந்திரன் = நரேந்திரன்

சுர + ஈசன் = சுரேசன்



குறிப்பு

குறிப்பு

தரா +இந்திரன் = தரேந்திரன்

மக + ஈசன் = மகேசன்

2. அ, ஆ வின் முன் உ, ஊ வரின், ஈறும் முதலும் கெட, ஓ ஒன்று தோன்றும் : -

பாதூஉதகம் = பாதோதகம்

ஞான +ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்

கங்கா +உற்பத்தி = கங்கோற்பத்தி

தய +ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்

(3) விருத்திசந்தி

1. அ, ஆ வின் முன் ஏ, ஐ வரின், ஈறும் முதலும் கெட, ஐ ஒன்று தோன்றும் : -

லோகாஏகநாயகன் = லோகைகநாயகன்

சிவ +ஐக்கியம் = சிவைக்கியம்

தரா +ஏகவீரன் = தரைகவீரன்

மகா +ஐசுவரியம் = மகைசுவரியம்

2. அ, ஆ வின் முன் ஓ, ஔ வரின், ஈறும் முதலும் கெட, ஔ ஒன்று தோன்றும்.

கலச +ஓதனம் = கலசௌதனம்

திவ்விய +ஔடதம் = திவ்வியௌடதம்

கங்கா + ஓகம் = கங்கௌகம்

மகா +ஔதாரியம் = மகௌதாரியம்

**பயிற்சி வினாக்கள்:**

**1.** தேன் என்னும் சொல் எவ்வாறு புணரும்?

தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை

மேவி னிறுதி யழிவும் வலிவரின்

குறிப்பு

தேன் என்னும் சொல் மூவின மெய்களும் வரின் இறுதி னகர மெய் இயல்பாதலும் மெல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலே அன்றிக்கெடுதலும், வல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலே அன்றிக் கெட வந்த வல்லினமாவது , அதற்கினமாவது மிகுதலும் வேற்றுமை அல்வழி என்னும் இரு இடத்தும் ஆகும்.

தேன்கடிது, தேன்ஞான்றது, தேன்யாது எனவும்,

தேன்மொழி, தேமொழி எனவும்

தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு எனவும் அவ்வழியில் வந்தன.

தேன் கடுமை, தேன் மலிவு, தேன் யாப்பு எனவும்

தேன்மலர், தேமலர், எனவும் தேன்குடம், தேக்குடம், தேங்குடம் எனவும் வேற்றுமையில் வந்தன.

2. தமிழ் என்பது எவ்வாறு புணரும்?

தழிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே

தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

தமிழ் என்னும் சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக்கண் அகரச் சாரியை பொருந்தவும் பெறும் தாழ் என்னும் சொல்முன் கோல் என்னும் சொல் வந்துபொருந்துமாயின் அவ் அகரச்சாரியை பெறும்.

தமிழப்பிள்ளை, தமிழ நாயகன், தமிழ வளவன், தமிழ வரசன் எனவும்,

தாழக்கோல் எனவும் வரும்.

3.அகம் முன் செவி – கை – புணருமாற்றைச் சுட்டடியுரைக்க.

அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.

அகம் என்னும் இடப்பெயர் முன் செவி, கை என்னும் சினைப் பெயர்கள் வந்தால் நிலைமொழி இறுதி மகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலேயன்றி அதன் நடு நின்ற ககர மெய்யும் அதன் மேல் ஏறிய அகர உயிரும் கெடும் .

அகம் + செவி = அஞ்செவி, அகம் + கை = அங்கை எனவரும் .

கெட்டே வரும் என்னாமையால், அகஞ்செவி, அகங்கை என வருவனவும் கொள்க.

4. ல,ள ஈற்றுத் தொழிற்பெயர் புணர்ச்சியைத் தருக.

லளவிறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுறா

வலிவரி னல்வழி யியல்புமா வனவுள .

லகாரத்தை இறுதியாக உடைய விகுதி பெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தை இறுதியாக உடைய முதல்நிலை திரிந்த தொழிற்பெயரும் இரு வழியிலும் யகரம் அல்லாத மெய்கள் வந்தால் உகரம் பெறாது. வல்லினம் வந்தால் அல்வழிக்கண் உறழாது இயல்பு ஆவனவும் சில உள .

குறிப்பு

ஆடல்சிறந்தது, ஆடற்சிறந்தது; ஆடனன்று, ஆடல்வலிது எனவும்;

ஆடற்சிறப்பு, ஆடனன்மை ஆடல்வன்மை எனவும்;

கோள்கடிது, கோட்கடிது, கோணன்று, கோள்வலிது எனவும்;

கோட்கடுமை, கோணன்மை, கோள்வன்மை எனவும் இரு வழியும் உகரம் பெறாது பொதுவிதியான் முடிந்தன.

நடத்தல் கடிது, நடப்பித்தல் கடிது எனச் சில உறழாது அல்வழியில் இயல்பாயின.

இயல்பும் என்ற உம்மையால், பின்னல்கடிது, பின்னற்கடிது, உன்னல்கடிது, உன்னற்கடிது எனப் பொதுவிதியால் உறழ்தலே பெரும்பான்மை ஆகும்.

வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்

பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம் .

வல் என்னும் சூதாடு கருவிப் பெயர் யகரம் அல்லாத மெய்கள் வரின் முதல்நிலைத் தொழிற்பெயர் போல இரு வழியும் உகரச் சாரியை பெறும். பலகை, நாய் என்னும் இருபெயர் வரினும் பிற பெயர்கள் வரினும் வேற்றுமைக்கண் உகரச் சாரியையே அன்றி அகரச் சாரியையும் பெறும்.

வல்லுக்கடிது, நன்று, வலிது எனவும்,

வல்லுக்கடுமை, நன்மை, வன்மை, எனவும் இரு வழியும் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்றது

வல்லப்பலகை, நாய், புலி, குதிரை, எனவும்,

வல்லுப் பலகை, நாய், புலி, குதிரை, எனவும் வேற்றுமையில் அகரச் சாரியையும் உகரச் சாரியையும் பெற்றது.

5. ன∴கான் கிளைப்பெயர் புணரும் விதத்தைத் தருக.

ன∴கான் கிளைப்பெயர் ரியல்பு ம∴கான்

அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே.

னகரத்தை இறுதியிலுடைய சாதிப்பெயர் வல்லினம் வர ஈறு திரியாது இயல்பாதலும் அகரச் சாரியை பெறுதலும் வேற்றுமைப் பொருள் புணர்ச்சிக்கண் ஆகும்.

எயின்குடி, எயினக்குடி, சேரி, தோட்டம், பாடி என வரும்.

":பொருட்கே" என்ற மிகையால் எயின மரபு, எயின வாழ்வு, எயினவணி

என மற்றைக் கணம் வரினும் அகரச் சாரியை பெறுதலும், எயினக் கன்னி, எயினப் பிள்ளை, எயின மன்னன் என அல்வழியில் அகரச் சாரியை பெறுதலும் உண்டாம்.

மீன் என்னும் மொழி இறுதி னகரம் வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின் றகரத்தோடு உறழ்ந்து வரும் .

மீன் + கண் = மீற்கண், செவி, தலை, புறம் என வரும்.

குறிப்பு

குறிப்பு

# பிரிவு – 4 :

## உருபு புணரியல் - மொழிப் பயிற்சி

### கூறு 12 : நன்னூல் - உருபு புணரியல் - நடைமுறைத் தமிழ்.

**1. எட்டு உருபுகளும் சாரும் இடவகை:**

ஒருவன் ஒருத்தி பலரொன்று பலவென

வருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்கு

உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே .

ஒருவனும் ஒருத்தியும் பலரும் ஒன்றும் பலவும் என்று கருத வரும் ஐந்து பெயரோடும் எழுவாய் வேற்றுமையான பெயர் முதல் விளி ஈறாக நின்ற எட்டு உருபு களையும் பெருக்க வேற்றுமை உருபுகள் நாற்பதாகும்.

நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என ஒருவன் என்னும் வாய்பாட்டு உயர் திணை ஆண்பால் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன . மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே ஒட்டுக .

**1. உருபுகள்**

**வேற்றுமை உருபுகள் வந்து நிற்கக் காரணமும் வரும் இடமும்**

பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே .

வேற்றுமை உருபுகள் தம் பொருளைக் கொடுக்க பெயர்க்குப் பின் வரும் .

நம்பி பெற்றான், நம்பியைப் பெற்றான், நம்பியாற் பெற்றான் என வரும்.

**ஐம் முதலிய ஆறு உருபும் நிலைமொழி வருமொழியோடு புணருமாறு**

ஒற்றுயிர் முதல் ஈற்று உருபுகள் புணர்ச்சியின்

ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு நின்று நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும்.அவ்வாறு புணரும் மெய்யையும் உயிரையும் முதலுமான ஈறுமாக உடைய ஐ முதலிய ஆறு உருபுகளும்

இடைச்சொல்லாகும்.ஆயினும் அவை இயல்பாகவும் விகாரமாகவும் புணரும் புணர்ச்சியில் மெய்யையும் உயிரையும் இறுதியாகக் கொண்ட பெயர்களின் புணர்ச்சி விதிகளைப் பெரும்பான்மை ஒத்து நிற்கும். சில பொழுது ஒத்து அமையாது.

நம்பிகண் வாழ்வு இங்கே ஆவி யரமுன் வன்மை மிகா" என்றும்" ணனவல் லினம் வரட் டறவும் பிறவரின் இயல்புமாகும் வேற்றுமைக்கு " என்றும் சொல்லியபடியே கண் உருபின் முதலும் ஈறும் இயல்பாயின .

குறிப்பு

உறிக்கட்டயிர் - இங்கே இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் என்றும் ணனவல் லினம்வரட் டறவும்" என்றும் சொல்லியபடியே . கண்ணுருபின் முதலும் ஈறும் விகாரமாயின .

பழிக்கஞ்சி - இங்கே இயல்யினும் விதியினும நின்ற உயிர் முன் க ச த ப மிகும் என்றும் முற்றுமற் றொரோவழி என்றும் சொல்லியபடியே , குவ் உருபின் முதலும் ஈறும் விகாரமாயின .

நம்பிக்குப் பிள்ளை - இங்கே ஆவி யரமுன் வன்மை மிகா " என்ற விதி ஒவ்வாமல் குவ் உருபின் முதல் வல்லொற்று மிக்கது .

**சாரியை**

பதமுன் விகுதியும் பதமு முருபும்

புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை

வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும் .

பதத்தின் முன் இறுதி நிலையாவது பதமாவது உருபாவது புணருமிடத் ஒரு சாரியையாயினும் பல சாரியையாயினும் வருதலும் வாராது ஒழிதலும் இவ்விரண்டுமாகிய விகற்பமும் ஆகும்.

நடந்தனன் எனவும்,

நடந்தான் எனவும்,

நடந்தன, நடந்த எனவும்,

விகுதிப் புணர்ச்சியுள் சாரியை வேண்டியும் வேண்டாதும், விகற்பித்தும் வந்தன.

புளியங்காய் எனவும்,

புளிக்கறி எனவும்,

நெல்லின் குப்பை, நெற்குப்பை எனவும் பதப் புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின .

அவற்றை எனவும், தன்னை எனவும், ஆனை, ஆவை எனவும் உருபு புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின .

ஆவினுக்கு, மரத்தினுக்கு - இவைகளிலே சாரியை பல வந்தன.

**சரியைகள்:**

குறிப்பு

அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்

தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன

இன்ன பிறவும் பொதுச்சா ரியையே .

அன் முதல் னகர மெய் ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழும் இவை போல் வன பிறவும் , விகுதி பதம் உருபு என்னும் மூன்று புணர்ச்சிகளிலும் தனி மொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியை ஆகும் .

அன் = ஒன்றன்கூட்டம்,

ஆன் - ஒருபாற்கு,

இன் - வண்டின் கால்,

அல் = தொடையல்,

அற்று = பலவற்றை,

இற்று = பதிற்றுப் பத்து,

அத்து - மரத்திலை,

அம் = மன்றம்,

தம் - எல்லார் தம்மையும்,

நம் = எல்லா நம்மையும்,

நும் = எல்லீர் நும்மையும்,

ஏ - கலனே தூணி,

அ = நடந்தது,

உ = சாத்தனுக்கு,

ஐ = ஏற்றை, கு = உய்குவை, என வரும்.

இன்ன பிறவும் என்றதனால்,

குறிப்பு

தன் = அவன்றனை,

தான் = அவன்றான்,

தாம் = அவர்தாம்,

ஆம் = புற்றாஞ் சோறு,

ஆ = இல்லாப்பொருள்,

து = செய்துகொண்டான் என்பனவும் , இன்னும் வருவன உளவாயின் அவையும் கொள்க .

**உருபுப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி**

எல்லா மென்ப திழிதிணை யாயின்

அற்றோ டுருபின் மேலும் முறுமே

அன்றே னம்மிடை யடைந்தற் றாகும் .

எல்லாம் என்னும் பொதுப் பெயர் அஃறிணையில் வரும்போது அதனோடு ஆறு உருபுகளும் புணரின் இடையிலே அற்றுச் சாரியையும் உருபின் மேல் முற்றும்மையும் பெறும். உயர் திணையில் வரும்போது இடையிலே நம்முச் சாரியை அடைந்து உருபின்மேல் முற்றும்மையும் பெறும் .

எல்லாவற்றையும், எல்லா நம்மையும் என வரும். மற்றை உருபுகளோடும் இப்படியே ஒட்டுக. எல்லாநம்மையும் = உயர்திணைத் தன்மைப் பன்மை.

எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை

தள்ளி நிரலே தம்நும் சாரப்

புல்லு முருபின் பின்ன ரும்மே .

ஆறு உருபும் புணரும் இடத்து எல்லாரும் எல்லீரும் என்னும் இரு பெயர்களினுடைய இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி முறையே தம்முச் சாரியையும் நும்முச் சாரியையும் அவை இருந்த இடங்களிலே பொருந்த அவற்றினாலே தள்ளப்பெற்ற முற்றும்மைகள் உருபுகளின் பின்னே வந்து அமையும்.

எல்லார்தம்மையும், எல்லாரையும்,

எல்லீர் நும்மையும், எல்லீரையும் எனவும் விகற்பித்து வந்தன . மற்றை உருபுகளோடும் இப்படியே வரும்.

குறிப்பு

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்கு உரிய தம்முச் சாரியை தன்மை முன்னிலைகளில் வருதல் ”ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே ” என்னும் வழுவமைதி .

தான் தாம் நாம் முதல் குறுகும் யான்யாம்

நீ நீர் என் எம் நின்நு மாம்பிற

குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல .

தான், தாம், நாம் என்னும் மூன்று பெயர்களும் உருபுகள் புணரும் இடத்து நெடு முதல் குறுகி முறையே தன், தம், நம் என வரும். யான், யாம், நீ, நீர் என்னும் நான்கு பெயர்களும் உருபுகள் புணரும் இடத்து முறையே என், எம், நின், நும், எனத்திரியும்.இவ் ஏழு பெயரோடு குவ்வுருபு புணருமிடத்து நடுவே அகரச் சாரியை வரும். குவ்வுருபின் அகரச் சாரியை வரினும் ஆறாம் வேற்றுமை உருபு உயிர்கள் வரினும் இவ்வேழு விகார மொழிகளின் இறுதியில் உள்ளனவாகிய தனிக் குறில் முன் ஒற்றுக்கள் இரட்டாது.

தான் + ஐ = தன்னை,

தாம் + ஐ = தம்மை,

நாம் + ஐ = நம்மை எனவும்,

யான் + ஐ = என்னை,

யாம் + ஐ = எம்மை,

நீ + ஐ = நின்னை,

நீர் + ஐ = நும்மை எனவும் வரும், ஒழிந்த உருபுகளோடும் இப்படியே அமையும்.

தனக்கு, தமக்கு எனக் கு உருபு புணருமிடத்து அகரச் சாரியை பெற்றன .

தனக்கு எனவும் , தனது , தனாது , தன எனவும் அகரச் சாரியையும் ஆறாம் வேற்றுமை உருபு உயிர்களும் வந்த இடத்தும் தனிக்குற்றொற்று இரட்டாவாயின.

பிற என்ற மிகையால் நீ, நீர், என்பன முறையே உன் , உம் , எனவும் திரிந்து வருதல்

ஆமா கோனவ் வணையவும் பெறுமே

ஆ என்னும் பசுவின் பெயரும் மா என்னும் விலங்கின் பொதுப் பெயரும் கோ என்னும் இறைவனை உணர்த்தி நிற்கும் பெயரும் உருபுகள்

புணரும் இடத்து னகரச் சாரியை பெறும் ஆனை, ஆவை, மானை, மாவை, கோனை, கோவை என விகற்பித்து வருதல் காண்க . மற்றை உருபுகளோடும் இப்படியே ஒட்டுக .

அணையவும் என்ற உம்மையால் குவ்வுருபு, புணரும்போது, ஆனுக்கு, மானுக்கு, கோனுக்கு என உகரச் சாரியையும் உடன்பெறுதலும் .

ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு என உகரச் சாரியை ஒன்றே பெறுதலும் ,

ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு, என இன் சாரியையும் உகரச் சாரியையும் உடன் பெறுதலும்,

ஆவினை, மாவினை, கோவினை, என இன் உருபு ஒழிந்த உருபுகள் புணரும்போது இன் சாரியை பெறுதலும் கொள்க .

இனி, இரட்டுற மொழிதலால், ஆமா என ஒரு சொல்லாய்க் காட்டுப் பசுவை உணர்த்தி நின்ற இடத்தும்,

ஆமானை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என இவ்விதிகள் பெறுதலும், அணையும் என்று ஒழியாது பெறும் என்றமையால் ஆன், மான், கோன், ஆமான் எனத் தனி மொழிக்கண்ணும் னகரச் சாரியை வருதலும் கொள்க .

குறிப்பு

ஒன்று முதலெட் டீறா மெண்ணூர்

பத்தின்முன் னான்வரிற் பவ்வொற் றொழியமேல்

எல்லா மோடு மொன்பது மிற்றே .

ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்களோடு புணர்ந்த பத்து என்னும் எண்முன் உருபுகள் புணரும் இடத்து ஆன் சாரியை வருமாயின் அந்தப் பத்து என்னும் எண்ணினது பகரமெய் ஒன்றுமே நிற்க அதன் மேலே நின்ற எல்லா எழுத்தும் கெடும். ஒன்பது என்னும் எண் முன்னும் உருபுகள் புணரும் இடத்து ஆன் சாரியை வரின் அதன் பகரமெய் நிற்க மேலே நின்ற எல்லா எழுத்தும் கெடும் .

ஒரு பானை, ஒரு பதை, ஒரு ப.்.தை எனவும் .

ஒன்பானை, ஒன்பதை, ஒன்ப.்.தை எனவும் .

விகற்பித்து வரும்.

ஒருபது, ஒருப.்.து என விகாரப்பட்டு வரும் பத்து என்பார், எண்ணூர் பத்து என்றார்.

ஆன் வருதலைப் பராமுகமாகச் சொன்னமையால், உகரச் சாரியை இன் சாரியைகளும் வேண்டிய இடத்து வரும் எனக் கொள்க .

குறிப்பு

வவ்விறு சுட்டிற் கற்றுறதல் வழியே .

வகர மெய் ஈற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும் உருபுகள் புணரும் இடத்து அற்றுச்சாரியை வருதல் முறையாம் .

அவற்றை, இவற்றை, உவற்றை என அற்றுச் சாரியை வேண்டியே வருதல் காண்க .

வழியே என்ற மிகையால் அவற்றினை, இவற்றினை, உவற்றினை என இன்சாரியை வருதலும் தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டாமையும் கொள்க .ஒழிந்த உருபுகளோடும் இப்படியே வரும்.

சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே .

சுட்டின் முன் ஆய்தம் - அ∴து , இ∴து , உ∴து என்னும் மூன்று சுட்டுப்பெயர்களுள் அம்மூன்று சுட்டெழுத்துக்களின் முன் நின்ற ஆய்தம் , அன் வரின் கெடும் - உருபுகள் புணரும் இடத்து அன் சாரியை வரின் கெடும் .

அ∴து + ஐ = அதனை, அ∴தை;

இ∴து + ஐ = இதனை, இ∴தை;

உ∴து + ஐ = உதனை, உ∴தை எனச் சாரியை விகற்பித்து வருதலும் வந்தவழி ஆய்தம் கொடுதலும் காண்க .

அன் சாரியை வருதலை நோக்கி ஆய்தம் கெட்ட வழி, அது, இது, உது என ஆய்தம் இல்லாச் சுட்டுப் பெயர்களாய்ப், பின்பு அன் சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப் பெயர்களுக்கும் இதுவேவிதிஎனக் கொள்க .

அன் வருதலைப் பராமுகமாகக் கூறாலால், குவ்வுருபு புணரும்போது அதற்கு என அன் சாரியை தனித்து வருதலே அன்றி அதனுக்கு என உகரச் சாரியையுடன் வருதலும் கொள்க .

அத்தி னகர மகரமுனை யில்லை .

அத்துச் சாரியையினது அகர உயிர் இயல்பினும் விதியினும் நின்ற அகர உயிர் ஈற்றின் முன் வரின் வகர வுடம்படுமெய் பெறாது கெடும் .

மக + அத்து + கை = மகத்துக்கை,

மர + அத்து + குறை = மரத்துக்குறை என இரண்டு அகர ஈற்றின் முன்னும் கெட்டது .

**சாரியைக்குப் புறனடை**

இதற்கிது சாரியை யெனினள வின்மையின்

விகுதியும் பதமு முருபும் பகுத்திடை

நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்

ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே .

குறிப்பு

விகுதி முதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியை என்று அளவு செய்து விகுதிப் புணர்ச்சியையும் பதப் புணர்ச்சியையும், உருபு புணர்ச்சியையும் கண்ட இடத்துப் பகுத்து , நடுவே நின்ற ஏகாரம் அகரம் முதலிய எழுத்துச் சாரியையினையும், அன், ஆன் முதலிய பதச் சாரியையினையும் இவ்விரண்டு சாரியையும் தோன்றாத இயல்பினையும் தெரிய அறிவித்தல் பெரியோரது கடனாகும்

ஆன நெய் தெளித்து நான நீவி என விதித்த பொருள் புணர்ச்சிக்கண் , உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும் என்ற மாட்டேற்றால் அமைந்த னகர மெய்ச் சாரியை அன்றி அகரச் சாரியையும் உடன் வந்தது .

இனி விதியாது ஒழிந்தவற்றின்கண், பாட்டின் பொருள் எனக் குற்றியலுகரத்திற்கு இன் சாரியை வந்தது .

தன் கை, என் கை எனச் சாரியை இன்றி இயல்பாக வந்தன .

**நான்கு புணர்ச்சிக்கும் புறனடை**

விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்

விகுதியும் பதமும் சாரியையும் உருபும் ஆகிய நான்கின் புணர்ச்சியின் இடத்தும் பொதுப்படச் சொல்லப்பட்ட விதிகளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என உய்த்துணர்ந்து எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ் விதியே அதற்குக் கொள்க

விகுதிப் புணர்ச்சியுள், “றவ்வொ டுகர வும்மை நிகழ் பல்லவும்” எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளது என்று நினைந்து, இவ்விகுதி வந்த இடத்தெல்லாம் இவ்விரண்டு காலமும் பொருந்தும் என்று கொள்ளற்க ; சென்று, சென்றும் என்ற இடத்து இறந்த காலமும், சேறு, சேறும் என்ற இடத்து எதிர் காலமும் பொருந்தும் என்று கொள்க .

பதப் புணர்ச்சியுள் அல்வழி இ ஐம் முன்னர் ஆயினியல்பு மிகலும் விகற்பமு மாகும் எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளது என்று நினைந்து ஆடி திங்கள், குவளைகண் என இயல்பாம் என்றும், பருத்திக்குறிது,

யானைக் குதிரை என மிகும் என்றும் கொள்ளற்க; பருத்திகுறிது என எழுவாய்க்கண்ணும், யானைகுதிரை என உம்மைத்தொகைக் கண்ணும்

குறிப்பு

இயல்பாம் எனவும் ஆடித்திங்கள் எனப் பண்புத்தொகை " கண்ணும் குவளைக்கண் என உவமைத் தொகைக்கண்ணும் மிகும் எனவும் கொள்க . சாரியைப் புணர்ச்சியுள் " பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை வருதலும் தவிர்தலும் விகற்பமுமாகும் " எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதி உள தென்று நினைந்து , நாட்டினி நீங்கினான் என இன் உருபிற்கு இன் சாரியை வருமென்றும் , நாட்டுக்கணிருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன் சாரியை வாராது என்றும் கொள்ளற்க ; நாட்டின்கணிருந்தான் எனக் கண் உருபிற்கு இன் சாரியை வருமென்றும் , நாட்டி னீங்கினான் என இன் னுருபிற்கு இன் சாரியை வாராது என்றும் கொள்க .

உருபு புணர்ச்சியுள், "ஒற்றுயிர் முதலீற்றுருபுகள் புணர்ச்சியி னொக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே" எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளது என்று நினைந்து, நம்பிக்கு என உயிரீற்று உயர்திணைப் பெயர் முன்வந்த குவ் வுருபு மிகாது என்றும், நம்பிக் கண் என மன் என்றமையால் கண் உருபு மிகும் என்றும் கொள்ளற்க; நம்பி கண் எனக் கண்ணுருபு மிகா தென்றும்; நம்பிக்கு எனக்குவ் வுருபு மன் என்றமையால் மிகும் என்றும் கொள்க.

**வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை**

இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்

உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்

விரவுப் பெயரின் விரிந்து நின்றும்

அன்ன பிறவு மாகுமை யுருபே

வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொது விதியோடு தானும் ஒருங்கு முடிதலே அன்றி அப்படி விதித்த இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும் உயர்திணைப் பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும் பொதுப் பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும் அவை போல்வன பிற வேறுபாடுகளாகியும் ,இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி வரும். வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப எனவும் மகட் கொடுத்தான்,

தலைவற்புகழ்ந்தான், தாய்க்கொலை, ஒன்னலர்ச் செகுத்தான், எனவும் இயல்பாக வேண்டிய இடத்து விகாரமாயிற்று .

கனி தின்றான், வரை பிளந்தான், பந்து தந்தான் எனவும், மண் சுமந்தான், பொன் கொடுத்தான் எனவும், காய் தின்றான், தேர் செய்தான், தமிழ் படித்தான் எனவும், பால் குடித்தான், வாள் பிடித்தான் எனவும், வரம் பெற்றான், செய முற்றான், மரம் வெட்டினான் எனவும் விகாரமாக வேண்டிய இடத்து இயல்பாயிற்று. இவ்விகாரத்து இயல்பு வருமொழி வினையாய இடத்தெனக் கொள்க .

குறிப்பு

வருமொழி வினையாகாது பெயரேயாக இரண்டனுருபும் பயனும் உடன்தொக்க தொகையிலே வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோடு ஒருங்கொத்து விகாரத்தில் விகாரமாகும். மண்கூடை , புண்கை என ணகர ஈறு இரண்டனுருபும் பயனும் உடன்தொக்க தொகையிலும் இயல்பாம் . மண்சுமந்தான் என்பது, மண்ணைச் சுமந்தான் என விரிதலால் இரண்டனுருபு மாத்திரம் தொக்க தொகை, மண்கூடை என்பது , மண்ணையுடைய கூடை என விரிதலால், உருபும்பயனும் உடன்தொக்க தொகை. கற்கறித்தான் , கட்குடத்தான் எனத்தனிக் குறிலைச் சார்ந்த லகர ளகரம் வருமொழி வினையாய இடத்தும் , வேற்றுமைப் பொதுவிதி ஏற்றல் காண்க .

நம்பியைக் கொணர்ந்தான், அரசனை வணங்கினான் என உயர்திணைப் பெயரிடத்தே விரிந்தது ஆடூஉ வறிசொல், மகடூஉ வறிசொல், பல்லோரறியுஞ்சொல், நான்முகற் றொழுது என உயர்திணைப் பெயரிடத்தே தொக்கது .

கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப் பெயரிடத்தே விரிந்த்து . ஆண் பெற்றாள் , பெண் பெற்றாள் எனப் பொதுப்பெயரிடத்தே தொக்கது .

அன்ன பிறவும் என்றதனால், தற்கொண்டான் எற்பணியாள் என உறழ வேண்டிய இடத்துத் திரிந்தே வருதலும், விளக்குறைத்தான் என இன மெல்லெழுத்து மிகவேண்டிய இடத்து வல்லெழுத்து மிகுதலும், மரங் குறைத்தான் என மவ்வீறு கெட்டு வல்லெழுத்து மிக வேண்டிய விடத்து மகரம் இன மெல்லெழுத்தாகத் திரிதலும், மாடு கொண்டான் , பயறு தின்றான் என ட,ற ஒற்றிரட்ட வேண்டிய இடத்து இரட்டாமையும், மருந்து தின்றான் என மென்றொடர் வன்றொடராக வேண்டிய இடத்து அங்ஙனம் ஆகாமையும் வேறொட்டான், தாடொழுதான் என லகர ளகரத் தகரம் வரத்திரிய வேண்டிய விடத்துக் கெடுதலும், குரிசிற்றடிந்தான், அவட்டொடர்ந்தான் என உயர்திணைக்கண் கெடாது திரிந்து நிற்றலும், பிறவும் கொள்க .

இன்னும், எண்ணின்கண் நின்ற இறந்தது தழீஇய இழிவு சிறப்பும்மைகளால், வேற்றுமைக்கென விதித்த பொது விதியோடு ஒருங்கு ஒத்து, தெள்கு பிடித்தான், எ.்.கு தொடுத்தான், நாகு கட்டினான், வரகு தந்தான் என இயல்பில் இயல்பாகியும், மகப் பெற்றான், பலாக் குறைத்தான், வடுப பெற்றான், சுக்குத் தின்றான், பூத் தொடுத்தான், சேப் பெற்றான் கோக்கறந்தான் என வருமொழி வினையாய விடத்தும் விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பாலன என்க.

**புறனடை**

புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்

றம்மி னாகிய தொழின்மொழி வரினே

வல்லினம் விகற்பமு மியல்பு மாகும் .

மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியுள் ஒற்றும் உயிரும் இறுதியாக நின்ற சொற்களின் முன் கருவி கருத்தா, உடன் இகழ்ச்சி என்பவற்றுட் கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களாகிய தொழிற் சொல் வந்தால் அவ்விடத்து வரும் வல்லினம் வேற்றுமைப் பொதுமுடிபு ஏலாது உறழ்ச்சியும் இயல்பும் ஆகும்.



பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்; சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான்; புலி கோட்பட்டான், புலிக்கோட்பட்டான் என வல்லினம் ஒருகால் மிகுந்தும் ஒருகால் இயல்பாயும் விகற்பித்தன .

பேய் பிடிக்கப்பட்டான், புலி கடிக்கப்பட்டான் என வல்லினம் இயல்பாயின.

உம்மையால் அராத் தீண்டப்பட்டான், சுறாப் பாயப்பட்டான் என வேற்றுமைப் பொதுவிதியால் மிக்கு முடிவனவே பெரும்பாலன என்க.

**எழுத்ததிகாரத்துக்குப் புறனடை**

இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்

விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்

இதற்கு இது முடிபு என்று இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றை எல்லாம் குறையாமல் தனித்தனி அளவு செய்து விதிக்கப் புகின் அதற்கு ஓர் அளவில்லாமையால் வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு வகுத்து விதி உரையாதனவற்றையும் கருதல் அளவையால் வகுத்து விதியுரைத்துக் கொள்க .

எழுத்தியலுள் மொழிமுதற் காரண மாமணுத்திரளொலி யெழுத்து ” என உரைத்தமையால், கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும் சட்டகம் போலச் செவிப்புல ஒலியை உட்கொளற்கு இடும் உருபாம்வடிவு எழுத்தே எனப் பிறர் கூறியவாறு இவ்வொலிவடிவைக் காட்டுதற்கு ஓர் கருவியாக எழுதிக்கொள்ளபட்டது வரிவடிவு எழுத்தெனச் கொள்க.

பதவியலுள் “அன், ஆன், அள், ஆள்” என்னும் சூத்திரத்திலே முறையே அன், ஆன் விகுதி ஆண்பாற்கு என உரைத்தமையால், பெருமாள் என்னும் பதம் பெருமையை உடையானென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்னும் பதத்தினது ஆன் விகுதி ஆள் விகுதியாக ஒரோ இடத்தே திரிந்து ஆண் பாலையே உணர்த்தி நின்றது எனக்கொள்க.

உயிரீற்றுப்புணரியலுள், “இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன் கசதப மிகும்” என்று சொன்னமையால், “ஙனவல் லினம்வரட் டறவும்” என்று இடத்து டகரமும் வல்லினம் ஆதலின் மிகுந்தது எனக்கொள்க.

மெய்யீற்றுப் புணரியலுள் ‘‘நும் தம் எம் நம் மீறா மவ்வரு ஞநவே” என உரைத்தமையால் , அம் என்னும் சொல் இறுதி மகரமும் குற்றொற்று ஆதலின் தன்னொடு மயங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம் என அழகினது நலம் என்னும் பொருளதாய் வரும் எனக் கொள்க.

குறிப்பு

உருபு புணரியலுள் ‘‘வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே” என உரைத்தமையால் , அது போலும் வினாவும் எவற்றை என அற்றுச் சாரியை பெறுமெனவும், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை உரைத்தமையால், ஏழாம் வேற்றுமையும் வரைபாய் வருடை ‘‘மண்புகுந்தும் விண் பறந்து மாலுமயனுங் காணா வொருபொருள் என வேற்றுமைப் பொதுவிதி ஏலாது சிறுபான்மை வரும் எனவும் கொள்க .இன்னும், இவ் ஐந்து இயலுள்ளும் வகுத்துரையாத வற்றை எல்லாம் துன்பப்படாது இதுவே இடமாக முடித்துக் கொள்க.

**பயிற்சி வினாக்கள்:**

1. சாரியை என்றால் என்ன?

பதமுன் விகுதியும் பதமு முருபும்

புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை

வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும் .

பதத்தின் முன் இறுதி நிலையாவது பதமாவது உருபாவது புணருமிடத் ஒரு சாரியையாயினும் பல சாரியையாயினும் வருதலும் வாராது ஒழிதலும் இவ்விரண்டுமாகிய விகற்பமும் ஆகும்.

நடந்தனன் எனவும், நடந்தான் எனவும், நடந்தன, நடந்த எனவும், விகுதிப் புணர்ச்சியுள் சாரியை வேண்டியும் வேண்டாதும், விகற்பித்தும் வந்தன.

புளியங்காய் எனவும், புளிக்கறி எனவும், நெல்லின் குப்பை, நெற்குப்பை எனவும் பதப் புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின .அவற்றை எனவும், தன்னை எனவும், ஆனை, ஆவை எனவும் உருபு புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின .ஆவினுக்கு, மரத்தினுக்கு - இவைகளிலே சாரியை பல வந்தன.

2. சரியைகள் குறித்து எழுதுக.

அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்

தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன

இன்ன பிறவும் பொதுச்சா ரியையே

குறிப்பு

அன் முதல் னகர மெய் ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழும் இவை போல் வன பிறவும் , விகுதி பதம் உருபு என்னும் மூன்று புணர்ச்சிகளிலும் தனி மொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியை ஆகும் .

அன் = ஒன்றன்கூட்டம், ஆன் - ஒருபாற்கு, இன் - வண்டின் கால், அல் = தொடையல், அற்று = பலவற்றை, இற்று = பதிற்றுப் பத்து, அத்து - மரத்திலை, அம் = மன்றம், தம் - எல்லார் தம்மையும், நம் = எல்லா நம்மையும், நும் = எல்லீர் நும்மையும், ஏ - கலனே தூணி, அ = நடந்தது, உ = சாத்தனுக்கு, ஐ = ஏற்றை, கு = உய்குவை,

இன்ன பிறவும் என்றதனால், தன் = அவன்றனை, தான் = அவன்றான், தாம் = அவர்தாம், ஆம் = புற்றாஞ் சோறு, ஆ = இல்லாப்பொருள், து = செய்துகொண்டான் என்பனவும் , இன்னும் வருவன உளவாயின் அவையும் கொள்க.

3. ஒன்று முதல் எட்டு ஈற்றின் முன் பத்து எவ்வாறு புணரும்?

ஒன்று முதலெட் டீறா மெண்ணூர்

பத்தின்முன் னான்வரிற் பவ்வொற் றொழியமேல்

எல்லா மோடு மொன்பது மிற்றே .

ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்களோடு புணர்ந்த பத்து என்னும் எண்முன் உருபுகள் புணரும் இடத்து ஆன் சாரியை வருமாயின் அந்தப் பத்து என்னும் எண்ணினது பகரமெய் ஒன்றுமே நிற்க அதன் மேலே நின்ற எல்லா எழுத்தும் கெடும். ஒன்பது என்னும் எண் முன்னும் உருபுகள் புணரும் இடத்து ஆன் சாரியை வரின் அதன் பகரமெய் நிற்க மேலே நின்ற எல்லா எழுத்தும் கெடும் .

ஒரு பானை, ஒரு பதை, ஒரு ப.்.தை எனவும் .

ஒன்பானை, ஒன்பதை, ஒன்ப.்.தை எனவும் .

விகற்பித்து வரும்.

ஒருபது, ஒருப.்.து என விகாரப்பட்டு வரும் பத்து என்பார், எண்ணூர் பத்து என்றார்.

ஆன் வருதலைப் பராமுகமாகச் சொன்னமையால், உகரச் சாரியை இன் சாரியைகளும் வேண்டிய இடத்து வரும் எனக் கொள்க .

## கூறு 13 :

## மொழிப் பயிற்சி – பிழையற எழுதுதல் -

### ( ஒற்றுப் பிழை, தொடர் பிழை, பொருள் மயக்கம் முதலியன இல்லாமை )

குறிப்பு

**மொழிப்பயிற்சி**

1. எழுத்து பற்றிய விளக்கம்
2. முதலெழுத்துகள், சார்பெழுத்துக்கள்
3. சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்கள்
4. மொழி முதல் எழுத்துக்கள்
5. மொழி இறுதி எழுத்துகள்
6. கிரந்த எழுத்துக்கள்
7. வல்லினம் மிகும் இடங்கள்
8. வல்லினம் மிகா இடங்கள்

**எழுத்துபற்றிய விளக்கம்**

மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்தது முதல் சார்பு என இரு வகைத்தே'

என்னும் நன்னூல் நூற்பா மொழிக்கு இலக்கணம் தருகிறது. மொழிக்கு முதற் காரணமாகவும் காதினால் கேட்கப்படும் ஒலி அணுத்திரளின் காரியமாகவும் எழுதப்படும் ஒலி எழுத்து எனப்படும்.

வாயினால் ஒலித்து, செவியினால் கேட்பது எழுத்தின் ஒலி வடிவம் ஆகும். ஓலி வடிவ எழுத்திற்குக் குறியீடாக எழுதப்படுவது வரி வடிவம் ஆகும்.

தமிழில் உயிரெழுத்துகள் 12, மெய்யெழுத்துக்கள் 18 சேர்ந்து முதலெழுத்துக்கள் 30 ஆகும். இவற்றுடன் உயிர்மெய் எழுத்துக்கள் 216, ஆய்த எழுத்து 1 ஆகியன சேர்ந்து, தமிழில் மொத்தம் 247 எழுத்துகள் ஆகும்.

**எழுத்துக்களின் வகைகள்**

தமிழ் எழுத்தங்கள் இரு வகைப்படும். அவை, முதலெழுத்துக்கள், சார்பெழுத்துக்கள் ஆகும்.

அட்டவணை வாயிலாக தமிழ் எழுத்துக்களின் வகைகளை அறியலாம்.

**முதலெழுத்துக்கள்**

மொழிக்கு அடிப்படையாக அதாவது முதலாக விளங்கும் எழுத்துக்கள்

குறிப்பு

ஷமுதலெழுத்தக்கள்' ஆகும். தமிழில் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் முதல் எழுத்தக்களாக அமைகின்றன.

ஆம்முதல் ஈறாது ஆவி கம் முதல் மெய்ம் மூவாறு என விளம்பினார் புலவர் என்னும் நன்னூல் நூற்பா அ' முதல் 12 உயிரெழுத்துக்கள், க முதல் ன வரை 18 மெய்யெழுத்துக்கள் என 30 எழுத்துக்கள் முதலெழுத்துகள் ஆகும். முதலெழுத்துக்களான உயிரும் மெய்யும் சேர்ந்து பிற எழுத்துக்கள் பிறக்கக் காரணமாவதால் அவை முதலெழுத்துக்கள் ஆகும்.

தொல்காப்பியர் அகரம் முதல் னகரம் இறுதியாக உள்ள உயிரும் மெய்யுமாகிய 30 எழுத்துக்களும் முதல் எழுத்துக்கள் என்கிறார். தொல்காப்பியத்தின் வழிநூலான நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர்.

உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே' என்கிறார். உயிரிருந்தால் உடல் இயங்கும்உயிரெழுத்துக்கள்

இணைந்தால்தான் மெய்யெழுத்துகள் இயங்கும். உயிர் (ஆவி), மெய் (உடம்பு) என்று எழுத்துக்களுக்கு அறிவியல் அடிப்படையில் பெயரிடப்பட்டுள்ளது.

இவ் அட்டவணை வாயிலாக முதலெழுத்தின் வகையினை விளங்கிக் கொள்ளலாம்.

**உயிரெழுத்து (12)**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, என்னும் 12 எழுத்துக்களும் உயிரெழுத்துக்களாகும். இவற்றை இரு வகைகளாகக் கொள்ளலாம். அவை, குறில், நெடில் என்று பிரிக்கப்படும்.

1.குறில் - - அ, இ, உ, எ, ஒ, (ஒரு மாத்திரை அளவு ஒலிப்பன)

2..நெடில் - ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ (இரு மாத்திரை அளவு ஒலிப்பன)

என்பனவாகும். இவை மொழிக்கு உயிராக (ஆவி) திகழ்வதால் உயிர் எழுத்துக்கள் ஆகும்.

**மெய்யெழுத்து ( 18 )**

இவை உடம்பு, உறுப்பு, ஒற்று, புள்ளியெழுத்துக்கள் என அழைக்கப்படும். க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டு மெய்யெழுத்துக்களாகும் இவை அரை மாத்திரையாக ஒலிக்கும்.

குறிப்பு

இவற்றுள், வல்லொலியாக ஒலிப்பவை வல்லினம் ஆகும். மெல்லொலியாக ஒலிப்பவை மெல்லினம் ஆகும். இரண்டிற்கும் இடைப்பட்ட ஒலியுடன் ஒலிப்பவை இடையினம் ஆகும். இவ்வாறு ஒலிக்கும் தன்மையால் மெய்யெழுத்துக்கள் மூவகைப்படும். அவை,

1. வல்லினம் (6)-க், ச், ட், த், ப், ற்,
2. இடையினம் (6) - ய், ர், ல், வ், ழ், ள்
3. மெல்லினம் (6) - ங்,ஞ், ண், ந், ம், ன் - என்பனவாகும்.

என்பனவாகும்.

**இனவெழுத்துக்கள்:**

பிறப்பாலும் முயற்சியாலும் வடிவாலும் ஒத்த எழுத்துக்களை இன எழுத்துக்கள் என்பர். உயிரெழுத்துக்களில் .அ, ஆ , இ, ஈ, உ, ஊ, ஏ, ஏ, ஐ, இ, ஓ, ஓ, ஔ, உ என்பன இனம் ஆகும்.

மெய்யெழுத்துக்களில் க், . ச், ட், த், ந், ப், ற என்னும் வல்லெழுத்திற்கு இனமான மெல்லெழுத்துகள் ங, ஞ, ண, ந, ம, ன என்பது ஆகும்.

ய் ர் ல் வ் ழ் ள் - என்பனவற்றிற்கு அவ்வெழுத்துக்களே இனமாகும்.

**சார்பெழுத்து**

தனித்து இயங்கும் ஆற்றலின்றி முதல் எழுத்துக்களான உயிர், மெய்யெழுத்துக்களை சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்து எனப்படும்.

முப்பது முதலெழுத்துக்களும் மொழியில் வரும்போது பல்வேறு வகையாகத் திரிந்து ஒலிக்கின்றன. எழுத்துக்கள் ஒன்றொடன்று சேரும்போதும் எழுத்துகளின் ஒலி நீளும் போதும்

எழுத்துகளின் ஒலி குறையும் போதும் ஏற்படும் ஒலித் திரிபிற்கேற்ப உருவாகும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் ஆகும். எனவே, உயிரும் மெய்யும் ‘தனிநிலை எழுத்து’ என்றும் அவற்றைச் சார்ந்து வரும் எழுத்து ‘சார்பெழுத்து’ என்றும் கொள்ளப்படும்.

குறிப்பு

**சார்பெழுத்தின் வகைகள்**

தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆயுதம் என்னும் மூவகை எழுத்துக்களை மட்டுமே சார்பெழுத்துக்கள் என்பார். நன்னூலார் 10 வகைகளைக் குறிப்பிடுகிறார். இதனை

'உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு அலிகிய இஉ ஐஔ மலிகான் தனிநிலை பத்தும் சாா;பெழுத்தாகும்' - என்னும் நூற்பா வாயிலாக அறியத் தருகிறார். அவை

1.உயிர்மெய்

2.ஆய்தம்

3.உயிரளபெடை

4.ஒற்றளபெடை

5.குற்றியலிகரம்

6. குற்றியலுகரம்

7. ஐகாரக் குறுக்கம்

8. ஔகாரக் குறுக்கம்

9. மகரக் குறுக்கம்

10. ஆய்தக் குறுக்கம் -

என்பனவாகும்.

**உயிர்மெய்**

மெய்யும் உயிரும் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்தாகும். உயிர் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்களுடன் கூடும்போது, மெய்யெழுத்துக்கள் தமக்குரிய புள்ளியை விட்டுவிடும் அவ்வாறு விட்ட வடிவமே தமக்குரிய வடிவமாக நிற்கும்.

எ.கா - க் + ஆ = கா, ச் + இ = சி, ப் + அ = ப உயிர்மெய்யெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களின் மாத்திரையினை இழந்து உயிரெழுத்துக்குரிய மாத்திரை கொண்டு ஒலிக்கும். மெய்யெழுத்துக்களுடன் உயிரெழுத்துக்கள் உயிரெழுத்துக்குரிய மாத்திரை கொண்டு ஒலிக்கும். மெய்யெழுத்துக்களுடன் உயிரெழுத்துக்கள் வரும்பொழுது உயிர்மெய்யாக மாறிவிடும். இதனை

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'

என்னும் நன்னூல் நூற்பா தெளிவுபடுத்தியது. 12 உயிரும் 18 மெய்யின் மேல் தனித் தனியே ஏறி வருவதால் 216 உயிர் மெய் எழுத்துக்கள் தோன்றுகின்றன.

குறிப்பு

**ஆய்தம்**

தமிழ் நெடுங்கணக்கில் ஆய்த எழுத்து உயிரெழுத்துக்களின் வரிசையில் இறுதி எழுத்தாக உள்ளது. இது தொல்காப்பியர் குறிப்பிடும் குற்றியலிகரம், குற்றியலுகரத்துடன் சார்பெழுத்தாகும் பெருமை பெற்றது. இ:து இரண்டன் மேல் ஒன்று அடுக்கிய புள்ளி வடிவமாக எழுதப்படுகிறது. இதன் வடிவம் ∴ என்பதாகும்.

இ:து உயிரெழுத்தும் இல்லை. மெய்யெழுத்தம் இல்லை.

உயிரெழுத்தோடும் மெய்யெழுத்தோடும் சேராமல் தனி நிலையாக நிற்பதால் இ:து தனிநிலை என்றும் அழைக்கப்படுவதுண்டு

எ.கா - அ:றிணை

இ:து மெய்யெழுத்தைப் போன்று அரை மாத்திரை அளவு உடையது. இமெய்யெழுத்தைப் போன்று உயிருடன் சேர்ந்து உயிர்மெய்யாக மாறுவதில்லை.

அடுத்துவரும் சொல் உயிராக வந்தால், அதன் முன்வரும் சுட்டு

ஆய்தம் பெற்று அமையும்.

எ.கா - அ:து எ:கு க:சு, ப:றி

**அளபெடை**

தமிழ் எழுத்துக்களை அதற்குரிய மாததிரை கால அளவிலிருந்து சூழலுக்கேற்ப நீட்டி ஒலிப்பது மொழி வழக்கில்இயல்பான நிகழ்வாகும். இவ்வாறு நீட்டி ஒலிக்கப்படும் எழுத்துகளுக்கு அளபெடை என பெயர். உயிர், மெய் எனும் இருவகை எழுத்துக்களும் அளபெடையாக வரும். இதன் அடிப்படையில் அளபெடையை இரு வகைப்படுத்தலாம்.

அவை, உயிரளபெடை, ஒற்றளபெடை என்பதாகும்.

**உயிரளபெடை**

செய்யுளில் சொல்லின் முதலிலும் இடையிலும் நிறகும் உயிர் நெடில் எழுத்துக்கள் ஏழும், தன் மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலிப்பது உயிரளபெடை ஆகும். ஒலிப்புக்

காலஅளவு நீண்டு வருவதால் அதாவது அளபெடுத்தால் அளபெடை எனப்படுகிறது.

அளபெடைக்கு அடையாளமாக, அளபெடுத்த நெடில் உயிருக்கு இனமான குறில் உயிர்கள் தொடர்ந்து வரும். இவ் உயிரளபெடை 21 ஆகும் என்கிறார் நன்னூலார்.

குறிப்பு

எ.கா - வரூஉம், மரூஉ, உண்பதூஉம்

உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை இன்னிசை அளபெடை, இசைநிறை (செய்யுளிசை) அளபெடை, சொல்லிசை அளபெடை என்பனவாகும்.

**இன்னிசை அளபெடை**

செய்யுளில் சீர், தளை உள்ளிட்ட யாப்பிலக்கணம் செம்மையாக அமைந்த போதிலும் இனிய ஓசை (இசை) தருவதற்காக குறில் நெடிலாக மாறி அளவெடுப்பது இன்னிசையளபெடை ஆகும்.

எ.கா - கொடுப்பதூஉம், எடுப்பதூஉம், படுப்பாதூஉம்

இதில் கொடுப்பதும், எடுப்பதும், படுப்பதும் என்னும் சொற்களே அளபெடுத்துள்ளன. இந்நிலைகளிலும் வெண்பாவிற்குரிய செப்பலோசை குன்றவில்லை. ஆயினும் இன்னிசையை நிறைக்கவே குறில் நெடிலாகி அளபெடுத்துள்ளது. எனவே இது இன்னிசை அளபெடை எனப்படும்.

**இசைநிறை (செய்யுளிசை) அளபெடை**

செய்யுளில் சீரும் தளையும் சிதையும் பொழுது, குன்றிய ஓசையை நிறைத்துச் செம்மையாக உயிர் நெட்டெழுத்து அளபெடுக்கும். செய்யுளிசை அல்லது இசைநிறை அளபெடை எனப்படுகிறது.

எ.கா - நசைஇ, அசைஇ, படாஅ, வராஅ, ஒரீஇ,

இவ்வளபெடை மூலம் ஓரசை சொற்கள் ஈரசை சொற்களாக மாறியிருப்பதைக் காணலாம்.

**சொல்லிசை அளபெடை**

செய்யுள் இலக்கணத்திற்கேற்ப ஒரு சீரின் அசைகளை மாற்றி அமைப்பதற்காக சொல்லிசை அளபெடை கையாளப்படுகிறது. அதாவது நேர் நேர் எனும் அசைகளுடைய ஒரு சீர் நேர் நிரை எனும் அசைகளுடைய சீராக மாறுவதற்கு உயிர் அளபெடுத்துண்டு.

இவ்வாறு சீரின் (சொல்லின்) தன்மை மாறுவதற்கு அளபெடுப்பதால் சொல்லிசையளபெடை எனப்படுகிறது.

எ.கா ஓஒதல், ஊஉதல், வாஅதம், மோஒகம்

ஒதல், ஊதல், வாதம், மோகம் முதலிய சொற்கள் அளபெடையாக வந்திருப்பதை உணர்ந்து சொல்லிசை அளபெடை என விளங்கிக் கொள்ளலாம்.

குறிப்பு

**ஒற்றளபெடை**

ஒற்றெழுத்துக்கள் அளபெடுத்து வருவது ஒற்றளபெடை ஆகும். செய்யுளில் இசை குன்றிய இடங்களில் இசையை ஏற்படுத்துவதற்காக ஒற்றெழுத்துகள் (மெய்) அளபெடுத்து வருவதுணடு;

. பேச்சு வழக்கிலும் இத்தகைய ஒற்றளபெடை பெருவழக்காக உள்ளது. இது ஒரு குறிலை அடுத்தும் இருகுறில்களை அடுத்தும் அமைந்து வரும்.

எ.கா - சங்ங்கு, முத்த்தம்

செல்ல்லம்

கண்ணு எல்ல்லம் தனிக்குறிலை அடுத்து ஒற்றளபெடை வந்துள்ளது.

எ.கா - இலங்ங்கு, எழுந்ந்து, படித்த்து, பழக்க்கம், வணக்கம் - இணை

குறில்களை அடுத்து ஒற்றளபெடை வந்துள்ளது.

ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் என்னும் 10 ஒற்றெழுத்துக்களும் அளபெடுக்கும். இவற்றுடன் ஆய்த எழுத்தும் அளபெடுக்கும். எனவே 11 எழுத்துகள் ஒற்றளபெடையாக வரும்.

எ.கா - எ∴கு, இ∴து,

நன்னூலார் ஒற்றளபெடை 42 என வரையறை செய்துள்ளார்.

**குற்றியலிகரம்**

யகரம் வரக் குறள் உத் திரி இகரமும் அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய'

என்னும் நூற்பா குற்றியலிகரத்தை விவரிக்கின்றது. நிலைமொழியில் குற்றியலுகரம் அமைந்து வருமொழியில் யகரம் முதலாக அமைந்த சொல் வரும் நிலையில் நிலைமொழியில் உள்ள

உகரம் இகரமாகி அதன் மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் ஆகும்.

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்

குறுகிய ஓசையை உடைய இகரம் என்பது இதன் பொருள். குற்றியலிகரம் 36 என பொதுப்படக் கூறினாலும், மியாவுடன் சேர்ந்து 37 என்பது நன்னூலின் கருத்தாகும்.

எ.கா நாகு + யாது = நாகியாது

பாடு + யார் = பாடியார்

கொக்கு + யான் = கொக்கியான் நந்து + யானை = நந்தியானை

'மியா' என்னும் அசைச் சொல்லில் மகரத்தின் மேலுள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும் என்கிறார் நன்னூலார்.

எ.கா: கேண் + மியா = கேண்மியா

பழங்காலத்தில் செய்யுள் வழக்கில் இருந்த குற்றியலிகரம் இன்று வழக்கில் இல்லை. யா என்னும் எழுத்தின் முன் இக்குற்றியலிகரம் தோன்றும்.

நாடு + யாது = நாடியாது

என ஒரே சொல்லாக ஒலிக்கும் போது இகரம் மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பதைத் தொல்காப்பியர் இனம் கண்டார். இது குற்றியலிகரமாக ஒலித்தால்தான் 'நாடு' என்றும் இல்லையெனில் 'நாடி' என்றும் பொருள் தரும்.

எனவே ஒலியாலும் பொருளாலும் வேறுபடும் இகரத்தைக் குற்றியலிகரமாக்கிச் சார்பெழுத்துக்களுள்ஒன்றாகக் கொண்டார் தொல்காப்பியர்.

**குற்றியலுகரம்**

'நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலி இடைத் தொடர்மொழி இறுதி வன்மை ஊர் உகரம் அலிகும் பிறமேல் தொடரவும் பெறுமே' என்னும் நன்னூல் நூற்பா குற்றியலுகரத்தை விவரிக்கிறது.

ஒரு சொல்லின் இறுதியில், க், ச், ட், த், ப், ற் என்னும் 6 வல்லின மெய்களில் ஏதேனும் ஒன்றின் மீது ஏறி வரும் உகரம் குற்றியலுகரம் ஆகும். எனவே கு, சு, டு, து, இயல்புடையன.

குறிப்பு

குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்

குறுகி ஒலிக்கும் உகரம் என்பது பொருளாகும். குறில் உகரத்திற்கு ஒரு மாத்திரை அளவாகும். குற்றியலுகரம் ஆகும் போது உகரம் ஒரு மாத்திரைக்கும் குறைந்து ஒலிக்கும். வல்லின உகரத்திற்கு முன் வரும் எழுத்துக்களாக.

தனி நெட்டெழுத்துக்கள் - 7

ஆய்தம் - 1

ஔ தவிர உயிர் - 11

வல்லினம் - 6

மெல்லினம் - 6

வ தவிர இடையினம் - 5

மொத்த 36 எழுத்துக்கள் வரும். இவற்றில் ஏதேனும் ஒன்று அமைந்து தொடர்ந்து வல்லின உகரம் வந்தால் அது குற்றியலுகரமாக ஒலிக்கும் என்பார் நன்னூலார். இக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை,

1. உயிர்த் தொடர் குற்றியலுகரம் - உயிரெழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்

எ.கா – வரகு. அரசு. அலகு. அருகு

2.நெடிற்றொடர் குற்றியலுகரம் - நெடில் எழுத்தைத் குற்றியலுகரம் அமையும்.

எ.கா - நாடு, காது, சோறு, யாது, பேசு

3.வன்றொடர் குற்றியலுகரம் - வல்லின எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்.

எ.கா - எட்டு, பத்து, பாக்கு, பேச்சு, கோப்பு, போற்று

4.மென்றொடர் குற்றியலுகரம் - மெல்லின எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்.

எ.கா - சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, செம்பு, என்று

5.இடைத்தொடர் குற்றியலுகரம் - இடையின எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்.

எ.கா- சால்பு, மார்பு

குறிப்பு

6.ஆய்தத் தொடர் குற்றியலுகரம்- ஆய்த எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்.

எ.கா - எ.்.கு, அ.்.து, க.்.சு

தொல்காப்பியர் ஓரிடத்தில் மொழிமுதல் குற்றியலுகரம் வரும் என்பார். எ.கா - நுந்தை

'முருக்கு' என்னும் சொல் முற்றியலுகரமாக ஒலிக்கும். இந்நிலையில் அது ஏவுதற்பொருளிலும், குற்றியலுகரமாக ஒலிக்கும் போது தின்பண்டப் பெயராகவும் வரும்.

ஒலி வேறுபாடும் பொருள் வேறுபாடும் புணர்ச்சி வேறுபாடும் வருவதால் குற்றியலுகரம் தனி எழுத்தாம் தன்மை பெறுபவை. இதனை உணர்ந்தே சார்பெழுத்தாக்கியுள்ளார் தொல்காப்பியர்.

**குறுக்கங்கள்**

எழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறுகி ஒலிப்பது குறுக்கம் ஆகும். இக்குறுக்கம் உயிரெழுத்துக்களிலும் மெய்யெழுத்துக்களிலும் ஆய்த எழுத்திலும் அமைவதுண்டு. உயிரெழுத்துக்களில் இ, உ, ஐ, ஔ, ஆகிய நான்கும் குறுகி ஒலிக்கும். இவற்றில் இகரக்குறுக்கம் குற்றியலிகரம் என்றும் உகரக்குறுக்கம் குற்றியலுகரம் என்றும் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள ஐ, ஔ இரண்டும் குறுக்கம் என விவரிக்கப்படுகிறது. அந்த வகையில் ஐகாரம் குறுகி ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் என்றும் ஔகாரம் குறுகி ஒலிப்பது ஔகாரக் குறுக்கம் என்றும் வழங்கப்படுகின்றது. மெய்யெழுத்துக்களில் 'ம்' மட்டுமே குறுகி ஒலிக்கும். எனவே அது மகரக்குறுக்கம் எனப்படுகிறது. ஆய்த எழுத்து குறுகி ஒலிப்பது ஆய்தக் குறுக்கம் ஆகும். இதனை

'தன் சுட்டு அளபு ஒழி ஐம்மூவலியும் நையும் ஔவும் முதல் அற்று ஆகும'.

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கிறது. இவற்றை சான்றுகளுடன் அறிவது அவசியம்.

**ஐகாரக் குறுக்கம்**

தன்னைக் குறித்தல். அளபெடுத்தல் என்னும் இரு இடங்களைத் தவிர ஐ என்னும் உயிர் நெட்டெழுத்து சொல்லின் முதல், இடை, கடை, ஆகிய மூவிடங்களில் வரும்பொழுது தனக்குரிய இரு மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிப்பது ஐகாரக் குறுக்கம் ஆகும்.

எ.கா -ஐயம், இடையர், யானை ஔகாரக் குறுக்கம்

குறிப்பு

தன்னைக் குறித்தல், அளபெடுத்தல் என்னும் இரு இடங்களைத் தவிர ஔ என்னும் உயிர் நெட்டெழுத்து, சொல்லின் முதலில் வரும்பொழுது தனககுரிய இரு மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும்.அவ்வாறு குறைந்து ஒலிப்பது ஔகாரக் குறுக்கம் ஆகும். ஔகாரம் என்பது மொழி முதலில் தான் வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

எ.கா - வௌவால், ஔவை, ஔடதம்

**மகரக் குறுக்கம்**

‘ண ன முன்னும் வகான் மிசையும் மக் குறுகும்’

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இக்குறுக்கத்தை அறியலாம். செய்யுளில் லகர ளகரங்கள் முறையே னகர ணகரமாகத் திரியும். அவற்றிற்குப் பக்கத்தில் வரும் ம் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து கால் மாத்திரையாக குறைந்து ஒலிக்கும். எனவே இது மகரக் குறுக்கம் எனப்படும்.

எ.கா: மனம், பணம், தினம், அன்னம், கன்னம், வண்ணம்

இவற்றிலுள்ள ‘ம்’ குறுகி ஒலித்து மகரக் குறுக்கமாக அமைந்துள்ளது.

**ஆய்தக்குறுக்கம்**

ல், ள் என்னும் எழுத்துக்கள் புணர்ச்சி இலக்கணத்தின்படி ஆய்த எழுத்தாகும். அவ்வாறு வரும் ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். எனவே இது ஆய்தக் குறுக்கம் எனப்படும்.

‘ல ள ஈற்று இயைபு இனம் ஆய்தம் அஃகும்’

என்னும் நன்னூல் நூற்பா இதனை விளக்குகிறது.

எ.கா - அஃது (அது), எஃகு (எகு), இஃது (இது)

**சுட்டெழுத்துக்கள்**

ஒரு பொருளைச் சுட்டிக் காட்டப் பயன்படும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள் எனப்படும். மொழியில், ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும் பொழுது எவ்விதக் குழப்பமும் ஏற்படாதவாறு சுட்டெழுத்துக்கள் முதன்மை வாய்ந்தவையாக உள்ளன.

‘அ இ உம் முதல் தனிவரின் சுட்டே’

**குறிப்பு**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விளக்குகிறது. தமிழில் அ இ உ ஆகிய மூன்று உயிரெழுத்துக்களும் ஒரு பொருளைச் சுட்டிக்காட்டப் பயன்படுகின்றன. அதனால் இவை மூன்றும் சுட்டெழுத்துக்கள் ஆகும். இவை அருகில் உள்ள பொருளையும் தொலைவில் உள்ள பொருளையும் தெளிவாகப் புரிந்துகொள்ளப் பயன்படுகின்றன. இவை சேய்மைச் சுட்டு, அண்மைச் சுட்டு, நடுச்சுட்டு எனும் மூன்று வகைப்படும் இதனை

சேய்மைச்சுட்டெழுத்து தொலைவில் உள்ள பொருளைச் சுட்டும். அதாவது படர்க்கையைக் குறி;க்கும்

எ.கா - அந்த, அவன், அது, அங்கு

அண்மைச் சுட்டெழுத்து : அருகிலுள்ள பொருளைச் சுட்டும். அதாவது

முன்னிலையைக் குறிக்கும்

எ.கா - இந்த, இவள், இது, இங்கு

இடைமை அல்லது நடுச் சுட்டெழுத்து: இடையில் அல்லது நேர் எதிர;ில் அல்லது உயரத்தில் உள்ள பொருளைச் சுட்டும்.

எ.கா -உன், உவன், உங்கள், உது, உனை

அ,இ, உ என்னும் மூவகை சுட்டெழுத்துக்களையும் அகச்சுட்டு, புறச்சுட்டு என இரு வகைகளில் அடக்கலாம்.

**அகச்சுட்டு**

அருகாமையில் இருக்கும் பொருட்களைச் சுட்டிக்காட்டப் பயன்படுவது அகச்சுட்டு ஆகும். முன்னிலையை உணர்ந்தும் அதாவது அண்மைச்சுட்டு நடுச்சுட்டு எழுத்துக்களான இ, உ, ஆகிய இரு சுட்டெழுத்துக்களும் அகச்சுட்டு என்னும் வகையில் அடங்கும்.

எ.கா- இவன், உவன், இது, உன், இங்கு, உன்னை

**புறச்சுட்டு**

புறத்திலிருக்கும் பொருட்களைச் சுட்டிக்காட்டப் பயன்படுவது புறச்சுட்டு ஆகும். படர்க்கையை உணர்த்தும் அதாவது சேய்மைச்சுட்டு எழுத்தான அ புறச்சுட்டு வகையில் அடங்கும்.

எ.கா- அக்கொற்றன், அவர்கள், அங்கு, அந்த

இதில் அகரம் புறத்தில் நின்று சுட்டுப் பொருளைத் தந்ததால் புறச்சுட்டு ஆகும். இடைமைச் சுட்டு தற்போது

வழக்கில் இல்லை. அதற்குப் பதிலாக அண்மைச்சுட்டு பயன்படுகிறது. இச்சுட்டெழுத்துக்கள் ஐம்பாலுக்கும் பொருந்தி வரும்.

எ.கா- அவன், அவள், அவர், அது, அவை

இவன், இவள், இவர், இது, இவை உவன், உவள், உவர், உது, உவை

சுட்டெழுத்துக்கள் அந்த, இந்த என திரிந்தும் வழங்கப்படுகின்றன.

எ.கா- அந்தப் பையன், இந்தப் பெண்

**வினாவெழுத்துக்கள்**

ஒரு மொழியில் வினாப்பொருளை உணர்த்தப் பயின்றுவரும் எழுத்துக்கள் வினாவெழுத்துக்களாகும். ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளில் வினாவை உணர்த்த வினா குறி பயன்படுத்தப்படுகிறது. தமிழ் மொழியில் வினாப் பொருளை உணர்த்த எழுத்துக்களே அமைந்துள்ளன. ஆதனால் தமிழில் வினாக்குறி பயனற்றதாகும். தமிழ் மொழியில் வினாப் பொருளை உணர்த்தும் எழுத்துக்கள் சொல்லின் முதலிலோ இறுதியிலோ அமைவதுண்டு. சில எழுத்துக்கள் முதலிலும் சில எழுத்துக்கள் இறுதியிலும் ஒரு எழுத்து இரு இடங்களிலும் அமைந்து வினாப் பொருளை உணர்த்த எழுத்துக்களே அமைந்துள்ளன. அதனால் தமிழில் வினாக்குறி பயனற்றதாகும். தமிழ் மொழியில் வினாப்பொருளை உணர்த்தும் எழுத்துக்கள் சொல்லின் முதலிலோ இறுதியிலோ அமைவதுண்டு. சில எழுத்துக்கள் முதலிலும் சில எழுத்துக்கள்இறுதியிலும் ஒரு எழுத்து இரு இடங்களிலும் அமைந்து வினாப் பொருளை உணர்த்தும். இதனை,

எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்

ஏ இருமையும் வினாவா கும்மே

என்னும் நன்னூல் நூற்பா தெளிவு படுத்துகிறது. அந்த வகையில் எ, யா, ஆ, ஓ, ஏ என்னும் ஐந்து எழுத்துக்களும் வினாவெழுத்துக்களாகும். இவற்றில் எ, யா என்னும் இரு எழுத்துக்களும் மொழிக்கு இரு எழுத்துக்களும் மொழிக்கு இறுதியிலும் ஏ என்னும் எழுத்து மொழிக்கு முதல் இறுதி எனும் இரு இடங்களிலும் பயின்று வரும்.

எ.கா எ - எவன் எங்கு எப்படி எதனால் எவ்வாறு

யா - யாவன் யாது யாங்கனம் யார் ஆ அவளா அன்பா வருமா நிற்குமா

குறிப்பு

*Self-Instructional Material*

ஓ -அதுவோ யாரோ ஏதற்கோ நீயோ ஏனோ ஏ ஏன் ஏது ஏவன் (மொழி முதலில்)

அவனே மனமே வருமே தகுமே (மொழி இறுதியில்) இது பெரும்பாலும் இலக்கிய வழக்கிலேயே உள்ளது.

குறிப்பு

**வினாக்கள்**

வினா எழுத்துக்களைக் கொண்டு உருவாகும் வினாக்கள் இரு வகைப்படும் அவை, அகவினா, புறவினா என்பனவாகும். வினா எழுத்துக்கள் அமைந்து வரும் தன்மைக்கேற்ப இவ்வகைப்பாடு அமைந்துள்ளது.

**அகவினா**

எ, யா என்னும் மொழி முதல் வினா எழுத்துக்கள் அமைந்து வரும் வினாச்சொற்களில் வினா எழுத்துக்களைத் தனியாகப் பிரித்தல் இயலாது.

இவை சொல்லின் அகத்துள் நின்று வினாப் பொருளைத் தருவதால் அகவினா எனப்படுகிறது.

எ.கா - எவன் எது என்ன யாவன் யாது யார்

**புறவினா**

ஆ, ஓ என்னும் மொழிஇறுதி வினா எழுத்துக்கள் அமைந்து வரும். வினாச்சொற்களில் வினா எழுத்துக்களைத் தனியாகப் பிரிக்கமுடியும். இவை சொல்லின் புறத்தே நின்று வினாப் பொருளைத் தருவதால், புறவினா எனப்படுகிறது.

எ.கா - அவனா (அவன் + ஆ) அவளோ (அவள் + ஓ)

**மொழி முதல் எழுத்துக்கள்**

‘பன்னீர் உயிரும் க ச த ந ப ம வ ய

ஞ ங ஈரைந்து உயிர; மெய்யும் மொழி முதல்

என்னும் நன்னூல் நூற்பா மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களை வரையறை செய்கிறது. அ முதல் ஔ வரை உள்ள பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க ச த ந ப ம வ ய ஞ ங என்னும் பத்து உயிர்மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

எ.கா - அணில், ஆடு, இலை, ஈக்கள், உரல், ஊசி, எறும்பு, ஏணி, ஐவர், ஒட்டகம், ஓணான், ஔவை

இவற்றில் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வந்துள்ளன.

எ.கா - கன்னி, சங்கு, தம்பி, நம்பி, பம்பரம், மலர், வயல், யானை, ஞாயிறு, ஙனம்.

இவற்றில் உயிர் ஏறிய மெய்கள் பத்தும் மொழிக்கு முதலில் வந்துள்ளன.

குறிப்பு

க ச த ந ப ம வ ய ஞ ங என்னும் பத்து மெய்களில் க், ச், த், ந், ப், ம், என்னும் ஆறு மெய்கள் மட்டுமே பன்னிரண்டு உயிரோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

எ.கா - காவல், சிலை, தீங்கு, நண்டு, பொன், மையல்.

வ் என்னும் மெய்யெழுத்து உ, ஊ, ஒ, ஓ, என்னும் நான்கு உயிரெழுத்துக்களுடன் சேர்ந்து வராது. எஞ்சிய எட்டு உயிரெத்துக்களுடன் சேர்ந்து வரும்.

எ.கா - வளி, வாளி, விறு, வெளி, வேளை, வைகல், வெளவல்

ய் என்னும் மெய்யெழுத்து, ஆ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துக்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

எ.கா - யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யெளவனம்

ஞ் என்னும் மெய்யெழுதது; அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரெழுத்துக்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்

எ.கா - ஞமளி, ஞாலம், ஞெகிழ், ஞொள்கிற்று

ங் என்னும் மெய்யெழுத்து, அ என்னும் உயிரெழுத்துடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும். அவ்வாறு வரும்பொழுது, அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களின் பின்னும், எ, யா என்னும் வினாவெழுத்துக்களின் பின்னுமே வரும்.

எ.கா - அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்.

மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள் தம் பெயரைச் சுட்டும் இடத்தில் மொழிக்கு முதலில் வரும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

**மொழி இறுதி எழுத்துக்கள்**

'ஆ வி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய் சாயும் உகரம் நாலாறும் ஈறே'

என்னும் நன்னூல் நூற்பா மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களை வரையறை செய்கிறது. தனித்தும் மெய்யுடன் சேர்ந்தும் வரும் பன்னிரண்டு உயிர்களும் ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினொரு மெய்களும் குற்றியலுகரமும் சேர்ந்து மொத்தம் 24 எழுத்துக்கள் மொழிக்கு ஈற்றெழுத்தாக வரும் என்பது நன்னூலார் கருத்தாகும்.

குறிப்பு

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வரும் இவை தனியாகவும் மெய்யெழுத்துக்களுடன் சேர்ந்தும் வரும்.

எ.கா - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ ஆகியன ஓரெழுத்து ஒருமொழிகள் ஆகும். இங்கு உயிர; தனியே மொழிக்கு இறுதியில் வந்துள்ளன.

எ.கா - விள (அ) பலா (ஆ) கரி (இ) தீ (ஈ) கடு (உ) பூ (ஊ) சேஎ

(எ) தே (ஏ) தை (ஐ) நொ (ஓ) போ (ஓ) கொ (ஔ) ஆகியனவும் ஓரெழுத்து ஒருமொழிகளே ஆனால் பன்னிரண்டு உயிரெழுத்துக்கள் மெய்யுடன் சேர்ந்து மொழி இறுதியில் வந்துள்ளன.

ஞ், ண், ந், த், ம், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் மெய்யெழுத்துக்கள் பதினொன்றும் (ங் நீங்கலாக) மொழிக்கு ஈறாக வரும்.

எ.கா - உரிஞ், கண், பொருந், வரம், மான், வேய், பார;, பால், தெவ், வீழ், வாள் குற்றியலுகரம் (வல்லின ஒன்றின் மீது ஏறிய உகரம் - கு, சு, டு, து, பு, று ) மொழிக்கு இறுதியில் வரும்.

எ.கா - பாக்கு, காசு, பாடு, காது, நேர்பு, போயிற்று

வல்லின ஒற்றெழுத்துக்கள் ஆறும் ங் இன்னும் ஒற்றெழுத்து மொழி இறுதியில் வராது. உயிர; 12, மெய் 11, குற்றியலுகரம் 1 ஆக 24 எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வரும்.

உயிர்க் குற்றெழுத்துக்களான அ, இ, உ, எ, ஓ - என்னும் ஐந்தும் உயிரளபெடைக்கு அடையாளமாக வரிவடிவில் தனித்து மொழிக்கு இறுதியில் நிற்கும்.

எ.கா - வராஅ, அசைஇ, கௌஉ, சேஎ, கோஓ

எ என்னும் உயிரெழுத்து, தானே தனித்து ஈறாக வருமே தவிர பிற

மெய்யெழுத்துடன் சேர்ந்து இறுதியில் வராது. எ.கா - சேஎ. தேஎ

ஓ என்னும் உயிரெழுத்து, ந் என்னும் மெய்யொற்றுடன் மட்டும் சேர்ந்து இறுதியில் வரும்.

எ.கா - நொ

ஔ என்னும் உயிரெழுத்து க், வ் என்னும் இரண்டு மெய்யெழுத்துக்களுடன் சேர்ந்து இறுதியில் வரும்.

எ.கா - கௌ, வௌ.

தொல்காப்பியர் உயிரெழுத்துக்கள் எல்லாம் மெய்களுடனும் சேர்ந்து இறுதியில் வராது என்கிறார்.

உ என்னும் உயிரெழுத்து ச் என்னும் மெய்யெழுத்துடன் சேர்ந்து இரு இடங்களில் மட்டும் இறுதியில் வரும்.

எ.கா - உசு, முசு

ப் என்னும் மெய்யெழுத்துடன் சேர்ந்து ஓர் இடத்தில மட்டும் இறுதியில் வரும்.

எ.கா - தபு,

இதனை அழுத்தமின்றி ஒலித்தால் சா என தன் வினையாகவும அழுத்தி ஒலித்தால் சாகச் செய் என பிறவினையாக வரும்.

எ என்னும் உயிரெழுத்து அளபெடையில் மட்டும் இறுதியில் வரும். இவ் எழுத்து ஞ் என்னும் மெய்யெழுத்துடன் சேர்ந்து இறுதியில் வராது.

எ.கா - சிரிதேஎ

ஓ என்னும் உயிரெழுத்து ந்,என்னும் மெய்யெழுத்துடன் மட்டும் இறுதியில் வரும்.

எ.கா - நொ

ஔ, என்னும் உயிரெழுத்து இரு இடங்களில் மட்டும் இறுதியில் வரும்.

எ.கா- கௌ, வௌ

ஞ், என்னும் மெய்யெழுத்து ஓரிடத்தில் மட்டும் இறுதியில் வரும் எ.கா -

குறிப்பு

குறிப்பு

எ கா :உரிஞ்

ந் என்னும் மெய்யெழுத்து இரு இடங்களில் மட்டும் இறுதியில் வரும். எ.கா

எ கா: - பொருந், வெரிந்

வ் என்னும் மெய்யெழுத்து நான்கு இடங்களில் மட்டும் இறுதியில் வரும்.

எ.கா - அவ், இவ், உவ், தெவ்

**வல்லினம் மிகும் இடங்கள்**

க், ச், த், ப் என்னும் நான்கு வல்லொற்று எழுத்துக்களும் தேவையான இடங்களில் மிகுந்து வரும். மிக வேண்டிய இடத்தில் மிகாவிடில் பொருட்பிழை ஏற்படும்.

எ.கா - பட்டு சட்டை உடுத்தினான் - பட்டுச்சட்டை உடுத்தினான்.

ச் எனும் வல்லினம் மிகுந்து வந்தால் அது பட்டுச் சேலை கட்டுவதைக் குறிக்கும். ச் எனும் வல்லினம் மிகாமல் இருந்தால் பட்டு எனும் பெண் சேலை கட்டினாள் என்னும் பொருளைக் குறிக்கும்.தேவையற்ற இடங்களில் ஒற்று மிகுவதால் பொருட்பிழை ஏற்படும்

எ.கா - வேலைத் தேடினான் (வேலை தேடினான்)

மாலைச் சூடினாள் (மாலை சூடினாள்)

அவற்றில் வல்லின ஒற்று மிகுந்து வரத் தேவையில்லை. எனினும் மிகுந்து வருமாயின், அது பிழையான பொருளைத் தரும் தொடராக அமையும்.

**வல்லினம் மிகும் இடங்கள்**

வலி என்பது வல்லெழுத்துக்கள் ஆகும். க, ச, ட, தா, ப, ற ஆகிய ஆறும் வல்லெழுத்துக்கள் ஆகும். இவற்றுள் மொழி முதல் வருவன க, ச, த, ப, எனும் நான்கு எழுத்துக்கள் மட்டுமே. வருமொழியின் முதல் எழுத்தாக க, ச, த, ப ஆகியவற்றில் ஓர் எழுத்து வந்து புணர்ந்தால் சில இடங்களில் வலி மிகும், சில இடங்களில் மிகாமலும் வரும். வலி மிகும் இடங்களை இங்கு காணலாம்.

1.அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களின் பின்னும் எ என்னும் வினா எழுத்தின் பின்னும் வல்லெழுத்து மிகும்.

எ.கா - அ + பள்ளி = அப்பள்ளி,

இ + காலம் = இக்காலம்

உ + பக்கம் = உட்பக்கம் எ + பொருள் = எப்பொருள்

குறிப்பு

2.அந்த, இந்த, எந்த அப்படி, இப்படி, எப்படி அவ்வகை, இவ்வகை, எவ்வகை அங்கு, இங்கு, எங்கு முதலிய சொற்களுக்குப் பின்னும் வலி மிகும்.

எ.கா - அந்த + பையன் = அந்தப்பையன்

இந்த + காடு = இந்தக்காடு

எந்த + பெண் = எந்தப்பெண்

அப்படி + பட்டவன் = அப்படிப்பட்டவன்

இப்படி +சொல்= இப்படிச்சொல்

எப்படி + கொன்றான் = எப்படிக்கொன்றான்

அவ்வகை + கொள்கை = அவ்வகைக்கொள்கை,

இவ்வகை + படும் = இவ்வகைப்படும்

எவ்வகை + பொருள் = எவ்வகைப்பொருள்,

அங்கு +சென்றான் = அங்குச்சென்றான்,

இங்கு + தங்கு = இங்குத்தங்கு

எங்கு + பார்த்தான் = எங்குப்பார்த்தான்.

3.இனி, தனி, மற்று ஆகிய சொற்களை அடுத்து வலி மிகும்.

எ.கா - இனி + பார்த்தான் = இனிப்பார்த்தான்,

தனி + சுற்று = தனிச்சுற்று

மற்று + சில = மற்றுச்சில

4.இரண்டு,நான்கு மற்றும் ஏழாம் வேற்றுமை உருபுகள் விரிந்து நிற்கையில் வலி மிகும்.

எ.கா - அவளை + கண்டேன் = அவளைக்கண்டேன்

குறிப்பு

மரத்திற்கு + தாவியது = மரத்திற்குத்தாவியது

மரத்திடை + பொந்து = மரத்திடைப்பொந்து

5.ஆறாம் வேற்றுமைத் தொகை அ.்.றிணைப் பெயர்களின் பின்னர் வல்லெழுத்து மிகும்.

எ.கா - யானை + கால் = யானைக்கால்

6.இரண்டு மூன்று ஐந்து மற்றும் ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையில் வலி மிகும்.

எ.கா - தயிர் + பானை = தயிர்ப்பானை,

ஓலை + பெட்டி = ஓலைப்பெட்டி

விழி + கனல் = விழிக்கனல்,

மலை + பாம்பு = மலைப்பாம்பு

7.ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வலி மிகும்.

எ.கா - கேளா + செவி = கேளாச்செவி

8.பண்புத்தொகையில் வலி மிகும்.

எ.கா – வெள்ளை + பசு = வெள்ளைப்பசு

9.இருபெயரொட்டுப் பண்பத்தொகையில் வலி மிகும்.

எ.கா - சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

10.ஓரெழுத்து ஒரு மொழியின் பின் வலி மிகும்.

எ.கா - தை + பொங்கல் = தைப்பொங்கல்,

பூ + காடு = பூக்காடு

11.வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வலி மிகும்.

எ.கா - எட்டு + தொகை = எட்டுத்தொகை,

பட்டு + சேலை = பட்டுச்சேலை

12. உவமைத்தொகை, அகர ஈற்று வினையெச்சம், இகர ஈற்று வினையெச்சம், அரை, பாதி, எட்டு, ஆகிய எண்ணுப் பெயர;களுக்குப் பின்னும் வலி மிகும்.

இவை தவிர பின்வரும் இடங்களிலும் வல்லினம் மிகும். உயிரீற்றின் முன் வல்லினம் வந்தால் அந்த வல்லினம் மிகும்.

எ.கா - பெட்டி + கடை = பெட்டிக்கடை,

13. வினையெச்சத்துக்கு முன் வல்லினம் மிகும்.

எ.கா - கூடி + குலவியது = கூடிக்குலவியது

14. இடைச் சொற்களின் முன் வல்லினம் மிகும்.

எ.கா - மற்றை + சொல் = மற்றைச்சொல்

15.உரிச்சொற்களின் முன் வல்லினம் மிகும்.

எ.கா - சால + சிறந்தது = சாலச்சிறந்தது

16.திசைச் சொல் முன் வல்லினம் மிகும்.

எ.கா - கிழக்கு + திசை = கிழக்குத்திசை

17.வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் மிகும்.

எ.கா - பாக்கு + பொடி = பாக்குப்பொடி

18.மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் மிகும்.

எ.கா - பஞ்சு + பொதி = பஞ்சுப்பொதி

19.உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களில் வரும் ட் ற் என்னும் ஒற்றுக்கள் வருமொழியுடன் புணரும்பொழுது ஒற்று இரட்டிக்கும்.

எ.கா - வீடு + பூனை = வீட்டுப்பூனை,

ஆறு + படுகை = ஆற்றுப்படுகை

20. விகாரப் புணர்ச்சியில் வலி மிகும்

எ.கா - வெள்ளி + குடம் = வெள்ளிக்குடம்

மரம் + கட்டை = மரக்கட்டை

21. மகர ஈற்றுச் சொற்களில் மகரம் கெட்டு ஒற்று மிகும்.

எ.கா - மனம் + கோவில் = மனக்கோவில்

**வல்லினம் மிகா இடங்கள்**

**குறிப்பு**

குறிப்பு

1.அது, இது எனும் சுட்டெழுத்துக்களின் பின்னும், எது, யாது எனும் வினாச் சொற்களின் பின்னும் வல்லெழுத்து மிகாது.

எ.கா - அது + பெரிது = அதுபெரிது,

இது + சிறிது = இதுசிறிது,

எது + பிடித்தது = எதுபிடித்தது,

யாது + செய்தான் = யாதுசெய்தான்

2.அவை, இவை, ஏவை, யாவை அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு அத்தனை, இத்தனை, எத்தனை, அவனா, அவனோ, அவனே, நிற்கும்படி, செய்யும்படி, சில, பல எனும் சொற்களுக்குப் பின் வலி மிகாது.

எ.கா - அவை + பார்த்தன = அவைபார்த்தன,

எவ்வளவு + காலம் = எவ்வளவுகாலம்

இத்தனை + பெரிய = இத்தனைபெரிய,

அவனே + செய்தான் = அவனேசெய்தான்

செய்யும்படி + சொன்னான் = செய்யும்படிச்சொன்னான்,

பல + தலை = பலதலை

3.மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைகளின் விரியில் வலி மிகாது.

எ.கா - மடத்தொடு + சேர்ந்தான் = மடத்தொடுசேர்ந்தான்

மரத்திலிருந்து + தாவும் = மரத்திலிருந்து தாவும்

புத்தரது + பீடிகை = புத்தரது பீடிகை

4.இரண்டாம், நான்காம் வேற்றுமைத்தொகைகளிலும் உயர்திணைப் பெயர்களின் பின்னும் வலி மிகாது.

எ.கா - கண்ணீர் + சிந்தினாள் = கண்ணீர் சிந்தினாள்

இராமன + தம்பி = இராமன் தம்பி

கோவலன் + கொலை = கோவலன் கொலை

5.வினைத்தொகை, உம்மைத் தொகைகளில் வலி மிகாது.

எ.கா - ஊறு + காய் = ஊறுகாய்,

திருவளர் + செல்வி = திருவளர் செல்வி

இரவு + பகல் = இரவுபகல்,

6. எழுவாய்த் தொடர், விளித் தொடர் ஆகியவற்றில் வலி மிகாது.

எ.கா - புலி + பாய்ந்தது = புலி பாய்ந்தது,

அம்மா + பார் = அம்மா பார்

7.ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர்த்து பிற பெயரெச்சங்களின் பின் வலி மிகாது

எ.கா - சொன்ன + சொல் = சொன்ன சொல்,

கற்ற + கல்வி = கற்ற கல்வி

வந்த + பெண் = வந்த பெண்

8.வினைத் தொகை நீங்கலாக வன்தொடர;க் குற்றியலுகரம் தவிர்த்த பிற குற்றியலுகரத்தின் பின் வலி மிகாது.

எ.கா - காசு + செலவு = காசுசெலவு,

செய்து + பார் = செய்துபார்

நின்று + போ = நின்றுபோ,

கொட்டு + பறை = கொட்டு பறை

9.ஆ, மா எனும் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பின் வலி மிகாது.

எ.கா - ஆ + கொம்பு = ஆ கொம்பு,

மா + பெரிது = மா பெரிது

10.எட்டு, பத்து தவிர்த்த சில எண்ணுப் பெயர்களின் பின் வலி மிகாது.

எ.கா - இரண்டு + தலை = இரண்டு தலை,

நான்கு + கால் = நான்குகால்

ஏழு + கிணறு = ஏழு கிணறு,

ஆறு + தலை = ஆறுதலை

11.அல்வழிப் புணர்ச்சியில் ஷஆ' முன் வலி மிகாது.

குறிப்பு

எ.கா - ஆ + புதிது = ஆ புதிது,

ஆ + பெரிது = ஆ பெரிது

12.செய்யிய' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் முன் வலி மிகாது.

குறிப்பு

எ.கா - உண்ணிய + கொண்டான் = உண்ணிய கொண்டான்

13.பெயரெச்சத்தின்முன் வலி மிகாது.

எ.கா - வந்த + பையன் = வந்த பையன்,

படித்த + பிள்ளை = படித்த பிள்ளை

14.வினைமுற்றின்முன் வலி மிகாது

எ.கா - பாடின + பிள்ளைகள் = பாடின பிள்ளைகள்,

15. வியங்கோள் வினைமுற்றில் வலி மிகாது

எ.கா - வாழ்க + கண்ணா = வாழ்க கண்ணா

16.பல' என்னும் சொல்முன் வலி மிகாது.

எ.கா - பல + பார்த்தான் = பல பார்த்தான

17.ஓடு' என்னும் மூன்றாம் வேற்றுமை முன் வலி மிகாது

எ.கா - அவனொடு + போனாள் = அவனொடு போனாள்

18.மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் அல்வழிப் புணர்ச்சியில் வலி மிகாது.

எ.கா - பாம்பு + கொடியது = பாம்பு கொடியது

19.ஏ' கார ஈற்றின் முன் வலி மிகாது.

எ.கா - அவனே + கொன்றான் = அவனே கொன்றான்

20.ஓ கார ஈற்றின் முன் வலி மிகாது.

எ.கா - அவளோ + கேட்டாள் = அவளோ கேட்டாள்

21.குற்றியலுகர வினையெச்சம் முன் வலி மிகாது

எ.கா - வந்து + பார்த்தான் = வந்து பார்த்தான்

**கிரந்த எழுத்துக்கள்**

வடமொழி எழுத்துக்களுக்கு கிரந்த எழுத்துக்கள் என பெயர். தொல்காப்பியர் காலத்திலேயே வடமொழிச் சொற்கள் தமிழில் புகுந்துவிட்டன. நன்னூலார் காலத்தில் இந்நிலை அதிகமாகியது. தமிழ்மொழியின் இனிய இயல்புக்கேற்ப வடமொழிச் சொற்கள் வந்து கலப்பதற்கு, மணிபிரவாளம் என்று பெயர். கிரந்த எழுத்துக்கள் தற்சமம், தற்பவம் என இரு வகைப்படும். இதனை என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம். தமிழில் ஜ, ஹ, ஸ, ஶ்ரீ ஆகிய வடமொழி எழுத்துக்கள் கிரந்த எழுத்துக்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

குறிப்பு

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ

எழுத்தொடு புணரந்த சொல்லா கும்மே (தொல்காப்பியர்)

என்னும் நூற்பா வடமொழி எழுத்துக்களைத் தமிழில் பயன்படுத்தும் பங்கினை விவரிக்கின்றது.

**தற்சமம்**

வடமொழி எழுத்துக்களை ஒலி மாறாமல் தமிழ் எழுத்துக்களால் எழுதப்படும் வழக்கு தற்சமம் எனப்படுகிறது. அதாவது தமிழிலும் வடமொழியிலும் உள்ள பொதுவான எழுத்தொலிகளை கொண்ட அதாவது ஒலிக்காக எழுத்துக்களை மாற்றத் தேவையில்லாத வடமொழி எழுத்துக்கள் அல்லது வடமொழிச் சொற்கள் தற்சமம் எனப்படுகிறது. தமிழிலும் வடமொழியிலும் சமமான ஒலிகளைக் கொண்ட எழுத்துக்களால் ஆன சொற்கள் தற்சமத்தில் அடங்கும்.

எ.கா - கமலம், கல்யாணம். யாகம், அர்ச்சனை, அலங்காரம்,

இவை வடமொழிச் சொற்கள். இவற்றில் எழுத்தொலி மாற்றப்பட்டமையால் இவை தற்சமம் ஆகும்.

**தற்பவம்**

வட மொழி ஒலிகளை மாற்றி தமிழ் எழுத்துக்களால் எழுதப்படுபவை தற்பவம் ஆகும். தமிழில் இல்லாத வடமொழியில் மாட்டும் உள்ள எழுத்தொலிகள் கொண்ட வடமொழிச் சொற்களில் அமைந்திருக்கும் வடமொழி மொழிகளை மாற்றி தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதப்படும் எழுத்துக்கள் அல்லது சொற்களே தற்பவம் எனப்படும். தமிழில் இல்லாத வடமொழி ஒலிகளுக்கு

ஈடாகப் பயன்படுத்தப்பட்ட தமிழ் ஒலிகள் சொற்கள் தற்பவத்தில் அடங்கும்.

எ.கா - வருடம், புட்பம், விடம், அரி, திருமதி, சண்முகம், சனாதிபதி, ஆக்கி, சரிகை, சேக்சுபியர், பங்கயம், சிவா, சரசுவதி, லட்சுமி, சக்தி

இவற்றில் வடமொழி ஒலி தமிழ் எழுத்தாக மாற்றப்பட்டிருப்பதால் இவை தற்பவம் ஆகும்.

**குறிப்பு**

கிரந்த எழுத்துக்களைப் பொருத்தவரை தற்சமம் தற்பவம் ஆகிய இரண்டிலுமே கிரந்த எழுத்துக்கள் வெளிப்படையாக இடம் பெறாது. ஆயினும் வடமொழி எழுத்துக்களை வெளிப்படையாகப் பயன்படுத்தும் வழக்கு இன்றும் காணப்படுகிறது. கிரந்த எழுத்து வழக்கில்

இவ்வெழுத்துக்களைத் தற்சமம் தற்பவம் என்னும் இரு வழக்கிலேயே அமைத்து எழுதுவது சிறப்புக்குரியது.

**பயிற்சி வினாக்கள்:**

1. வல்லினம் மிகும் இடங்கள் குறித்து விவரி

வலி என்பது வல்லெழுத்துக்கள் ஆகும். க, ச, ட, தா, ப, ற ஆகிய ஆறும் வல்லெழுத்துக்கள் ஆகும். இவற்றுள் மொழி முதல் வருவன க, ச, த, ப, எனும் நான்கு எழுத்துக்கள் மட்டுமே. வருமொழியின் முதல் எழுத்தாக க, ச, த, ப ஆகியவற்றில் ஓர் எழுத்து வந்து புணர்ந்தால் சில இடங்களில் வலி மிகும், சில இடங்களில் மிகாமலும் வரும். வலி மிகும் இடங்களை இங்கு காணலாம்.

1.அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களின் பின்னும் எ என்னும் வினா எழுத்தின் பின்னும் வல்லெழுத்து மிகும்.

எ.கா - அ + பள்ளி = அப்பள்ளி,

இ + காலம் = இக்காலம்

உ + பக்கம் = உட்பக்கம் எ + பொருள் = எப்பொருள்

2.அந்த, இந்த, எந்த அப்படி, இப்படி, எப்படி அவ்வகை, இவ்வகை, எவ்வகை அங்கு, இங்கு, எங்கு முதலிய சொற்களுக்குப் பின்னும் வலி மிகும்.

எ.கா - அந்த + பையன் = அந்தப்பையன்

இந்த + காடு = இந்தக்காடு

எந்த + பெண் = எந்தப்பெண்

அப்படி + பட்டவன் = அப்படிப்பட்டவன்

இப்படி +சொல்= இப்படிச்சொல்

எப்படி + கொன்றான் = எப்படிக்கொன்றான்

அவ்வகை + கொள்கை = அவ்வகைக்கொள்கை,

இவ்வகை + படும் = இவ்வகைப்படும்

எவ்வகை + பொருள் = எவ்வகைப்பொருள்,

அங்கு +சென்றான் = அங்குச்சென்றான்,

இங்கு + தங்கு = இங்குத்தங்கு

எங்கு + பார்த்தான் = எங்குப்பார்த்தான்.

3.இனி, தனி, மற்று ஆகிய சொற்களை அடுத்து வலி மிகும்.

எ.கா - இனி + பார;த்தான் = இனிப்பார்த்தான்,

தனி + சுற்று = தனிச்சுற்று

மற்று + சில = மற்றுச்சில

4.இரண்டு,நான்கு மற்றும் ஏழாம் வேற்றுமை உருபுகள் விரிந்து நிற்கையில் வலி மிகும்.

எ.கா - அவளை + கண்டேன் = அவளைக்கண்டேன்

மரத்திற்கு + தாவியது = மரத்திற்குத்தாவியது

மரத்திடை + பொந்து = மரத்திடைப்பொந்து

5.ஆறாம் வேற்றுமைத் தொகை அஃறிணைப் பெயர்களின் பின்னர் வல்லெழுத்து மிகும்.

எ.கா - யானை + கால் = யானைக்கால்

6.இரண்டு மூன்று ஐந்து மற்றும் ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையில் வலி மிகும்.

எ.கா - தயிர் + பானை = தயிர்ப்பானை,

ஓலை + பெட்டி = ஓலைப்பெட்டி

குறிப்பு

குறிப்பு

விழி + கனல் = விழிக்கனல்,

மலை + பாம்பு = மலைப்பாம்பு

7.ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வலி மிகும்.

எ.கா - கேளா + செவி = கேளாச்செவி

8.பண்புத்தொகையில் வலி மிகும்.

எ.கா – வெள்ளை + பசு = வெள;ளைப்பசு

9.இருபெயரொட்டுப் பண்பத்தொகையில் வலி மிகும்.

எ.கா - சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

10.ஓரெழுத்து ஒரு மொழியின் பின் வலி மிகும்.

எ.கா - தை + பொங்கல் = தைப்பொங்கல்,

பூ + காடு = பூக்காடு

11.வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வலி மிகும்.

எ.கா - எட்டு + தொகை = எட்டுத்தொகை,

பட்டு + சேலை = பட்டுச்சேலை

12. உவமைத்தொகை, அகர ஈற்று வினையெச்சம், இகர ஈற்று வினையெச்சம், அரை, பாதி, எட்டு, ஆகிய எண்ணுப் பெயர;களுக்குப் பின்னும் வலி மிகும்.

இவை தவிர பின்வரும் இடங்களிலும் வல்லினம் மிகும். உயிரீற்றின் முன் வல்லினம் வந்தால் அந்த வல்லினம் மிகும்.

எ.கா - பெட்டி + கடை = பெட்டிக்கடை,

13. வினையெச்சத்துக்கு முன் வல்லினம் மிகும்.

எ.கா - கூடி + குலவியது = கூடிக்குலவியது

14. இடைச் சொற்களின் முன் வல்லினம் மிகும்.

எ.கா - மற்றை + சொல் = மற்றைச்சொல்

15.உரிச்சொற்களின் முன் வல்லினம் மிகும்.

எ.கா - சால + சிறந்தது = சாலச்சிறந்தது

16.திசைச் சொல் முன் வல்லினம் மிகும்.

எ.கா - கிழக்கு + திசை = கிழக்குத்திசை

17.வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் மிகும்.

எ.கா - பாக்கு + பொடி = பாக்குப்பொடி

18.மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் மிகும்.

எ.கா - பஞ்சு + பொதி = பஞ்சுப்பொதி

19.உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களில் வரும் ட் ற் என்னும் ஒற்றுக்கள் வருமொழியுடன் புணரும்பொழுது ஒற்று இரட்டிக்கும்.

எ.கா - வீடு + பூனை = வீட்டுப்பூனை,

ஆறு + படுகை = ஆற்றுப்படுகை

20. விகாரப் புணர்ச்சியில் வலி மிகும்

எ.கா - வெள்ளி + குடம் = வெள்ளிக்குடம்

மரம் + கட்டை = மரக்கட்டை

21. மகர ஈற்றுச் சொற்களில் மகரம் கெட்டு ஒற்று மிகும்.

எ.கா - மனம் + கோவில் = மனக்கோவில்

2. வல்லினம் மிகா இடங்களை விளக்கி வரைக.

1.அது, இது எனும் சுட்டெழுத்துக்களின் பின்னும், எது, யாது எனும் வினாச் சொற்களின் பின்னும் வல்லெழுத்து மிகாது.

எ.கா - அது + பெரிது = அதுபெரிது,

இது + சிறிது = இதுசிறிது,

எது + பிடித்தது = எதுபிடித்தது,

யாது + செய்தான் = யாதுசெய்தான்

2.அவை, இவை, ஏவை, யாவை அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு அத்தனை, இத்தனை, எத்தனை, அவனா, அவனோ, அவனே, நிற்கும்படி, செய்யும்படி, சில, பல எனும் சொற்களுக்குப் பின் வலி மிகாது.

குறிப்பு

குறிப்பு

எ.கா - அவை + பார்த்தன = அவைபார்த்தன,

எவ்வளவு + காலம் = எவ்வளவுகாலம்

இத்தனை + பெரிய = இத்தனைபெரிய,

அவனே + செய்தான் = அவனேசெய்தான்

செய்யும்படி + சொன்னான் = செய்யும்படிச்சொன்னான்,

பல + தலை = பலதலை

3.மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைகளின் விரியில் வலி மிகாது.

எ.கா - மடத்தொடு + சேர்ந்தான் = மடத்தொடுசேர்ந்தான்

மரத்திலிருந்து + தாவும் = மரத்திலிருந்து தாவும்

புத்தரது + பீடிகை = புத்தரது பீடிகை

4.இரண்டாம், நான்காம் வேற்றுமைத்தொகைகளிலும் உயர்திணைப் பெயர்களின் பின்னும் வலி மிகாது.

எ.கா - கண்ணீர் + சிந்தினாள் = கண்ணீர் சிந்தினாள்

இராமன + தம்பி = இராமன் தம்பி

கோவலன் + கொலை = கோவலன் கொலை

5.வினைத்தொகை, உம்மைத் தொகைகளில் வலி மிகாது.

எ.கா - ஊறு + காய் = ஊறுகாய்,

திருவளர் + செல்வி = திருவளர் செல்வி

இரவு + பகல் = இரவுபகல்,

6. எழுவாய்த் தொடர், விளித் தொடர் ஆகியவற்றில் வலி மிகாது.

எ.கா - புலி + பாய்ந்தது = புலி பாய்ந்தது,

அம்மா + பார் = அம்மா பார்

7.ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர்த்து பிற பெயரெச்சங்களின் பின் வலி மிகாது

எ.கா - சொன்ன + சொல் = சொன்ன சொல்,

கற்ற + கல்வி = கற்ற கல்வி

குறிப்பு

வந்த + பெண் = வந்த பெண்

8.வினைத் தொகை நீங்கலாக வன்தொடர்க் குற்றியலுகரம் தவிர்த்த பிற குற்றியலுகரத்தின் பின் வலி மிகாது.

எ.கா - காசு + செலவு = காசுசெலவு,

செய்து + பார் = செய்துபார்

நின்று + போ = நின்றுபோ,

கொட்டு + பறை = கொட்டு பறை

9.ஆ, மா எனும் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பின் வலி மிகாது.

எ.கா - ஆ + கொம்பு = ஆ கொம்பு,

மா + பெரிது = மா பெரிது

10.எட்டு, பத்து தவிர்த்த சில எண்ணுப் பெயர்களின் பின் வலி மிகாது.

எ.கா - இரண்டு + தலை = இரண்டு தலை,

நான்கு + கால் = நான்குகால்

ஏழு + கிணறு = ஏழு கிணறு,

ஆறு + தலை = ஆறுதலை

11.அல்வழிப் புணர்ச்சியில் ஷஆ’ முன் வலி மிகாது.

எ.கா - ஆ + புதிது = ஆ புதிது,

ஆ + பெரிது = ஆ பெரிது

12.செய்யிய’ என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் முன் வலி மிகாது.

எ.கா - உண்ணிய + கொண்டான் = உண்ணிய கொண்டான்

13.பெயரெச்சத்தின்முன் வலி மிகாது.

எ.கா - வந்த + பையன் = வந்த பையன்,

படித்த + பிள்ளை = படித்த பிள்ளை

14.வினைமுற்றின்முன் வலி மிகாது

எ.கா - பாடின + பிள்ளைகள் = பாடின பிள்ளைகள்,

15. வியங்கோள் வினைமுற்றில் வலி மிகாது

எ.கா - வாழ்க + கண்ணா = வாழ்க கண்ணா

16.பல' என்னும் சொல்முன் வலி மிகாது.

எ.கா - பல + பார்த்தான் = பல பார்த்தான்

17. ஓடு' என்னும் மூன்றாம் வேற்றுமை முன் வலி மிகாது

எ.கா - அவனொடு + போனாள் = அவனொடு போனாள்

18. மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் அல்வழிப் புணர்ச்சியில் வலி மிகாது.

எ.கா - பாம்பு + கொடியது = பாம்பு கொடியது

19. ஏ' கார ஈற்றின் முன் வலி மிகாது.

எ.கா - அவனே + கொன்றான் = அவனே கொன்றான்

20.ஓ கார ஈற்றின் முன் வலி மிகாது.

எ.கா - அவளோ + கேட்டாள் = அவளோ கேட்டாள்

21.குற்றியலுகர வினையெச்சம் முன் வலி மிகாது

எ.கா - வந்து + பார்த்தான் = வந்து பார்த்தான்

3. தற்பவம் என்பதனை விளக்குக.

வட மொழி ஒலிகளை மாற்றி தமிழ் எழுத்துக்களால் எழுதப்படுபவை தற்பவம் ஆகும். தமிழில் இல்லாத வடமொழியில் மாட்டும் உள்ள எழுத்தொலிகள் கொண்ட வடமொழிச் சொற்களில் அமைந்திருக்கும் வடமொழி மொழிகளை மாற்றி தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதப்படும் எழுத்துக்கள் அல்லது சொற்களே தற்பவம் எனப்படும். தமிழில் இல்லாத வடமொழி ஒலிகளுக்கு

ஈடாக பயன்படுத்தப்பட்ட தமிழ் ஒலிகள் சொற்கள் தற்பவத்தில் அடங்கும்.

எ.கா - வருடம், புட்பம், விடம், அரி, திருமதி, சண்முகம், சனாதிபதி, ஆக்கி, சரிகை, சேக்சுபியர், பங்கயம், சிவா, சரசுவதி, லட்சுமி, சக்தி

இவற்றில் வடமொழி ஒலி தமிழ் எழுத்தாக மாற்றப்பட்டிருப்பதால் இவை தற்பவம் ஆகும்.

கிரந்த எழுத்துக்களைப் பொருத்தவரை தற்சமம் தற்பவம் ஆகிய இரண்டிலுமே கிரந்த எழுத்துக்கள் வெளிப்படையாக இடம் பெறாது. ஆயினும் வடமொழி எழுத்துக்களை வெளிப்படையாக பயன்படுத்தும் வழக்கு இன்றும் காணப்படுகிறது. கிரந்த எழுத்து வழக்கில்இவ்வெழுத்துக்களை தற்சமம் தற்பவம் என்னும் இரு வழக்கிலேயே அமைத்து எழுதுவது சிறப்புக்குரியது.

குறிப்பு

**கூறு**

## 14 – கடிதம் எழுதுதல் - வரவேற்பு மடல் எழுதுதல்

கடிதம் அல்லது திருமுகம் அல்லது மடல் (letter) எனப்படுவது இருவருக்கிடையே இடம்பெறும் எழுத்து தகவல் பரிமாற்றத்தைக் குறிக்கின்றது. தமிழில் இதை கடிதம் மூலமே அஞ்சல் இடம்பெறுகிறது.

இது உறவுகளுக்கிடையிலும் நண்பர்களுக்கு இடையிலும் தகவல் பரிமாற்றத்துக்கு உதவுகிறது. கடிதம் எழுதுவதானது மொழியின் இலக்கிய மற்றும் இலக்கண முறைகளைப் பாதுகாக்க உதவுகிறது. அதாவது எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான அறிவு வளர்க்கப்படுகிறது. தொடக்கத்தில் காகித வழி நேரடி பரிமாற்றமாக இருந்த இந்தத் தொடர்பு, இணையம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இணையம் ஊடாக மின்னஞ்சல் அனுப்புதல் பிரபலமடைவதால் வழக்கொழிந்துவருகிறது.

**பாட முன்னுரை**

கடிதம் வந்திருக்கிறது' என்றால் நாம் எல்லோருமே மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், கடிதம் எழுதவேண்டும்' என்பது நம்மில் பலருக்குக் கசப்பான ஒன்று. கடிதம் எழுதுவதை முடிந்தால் தவிர்க்க எண்ணுகிறோம். முடியாவிட்டால் ஒத்தி போடுகிறோம்.

உண்மையில் கடிதம் எழுதுவது எவ்வளவு முக்கியமானது எனச் சற்று எண்ணிப் பாருங்கள். கடிதத்தின் வாயிலாக நாம் நம் நண்பர்களுடன் பேசுகிறோம். நெடுந்தொலைவில் உள்ள குடும்பத்தினருடன் தொடர்பு கொள்கிறோம். புதிய வேலையில் சேர்கிறோம். வியாபாரம் செய்கிறோம்.

இப்படி எத்தனையோ!

குறிப்பு

கடிதத்தின் பயனைத் தெரிந்து கொண்டால், கடிதம் எழுத நாம் யாருமே தயங்க மாட்டோம். தெளிவான, சுவையான கடிதம் எழுதக் கற்றுக்கொண்டு விட்டால், உலகத்தில் பாதியை நீங்கள் விலைக்கு வாங்கிவிட்டதாக மகிழ்ச்சியடையலாம்!

கடிதம் - போல வரவேற்பிதழ் எழுதும் முறைகளையும் பதியும் நெறிகளையும் ஓரளவேனும் தெரிந்து கொள்வது அவசியம்.

**கடிதச் சிறப்பும்அமைப்பும்**

வாழ்க்கையில் முன்னுக்கு வந்த பலரது வரலாற்றை எடுத்துப் பாருங்கள்!

பெரும்பாலோர் கடிதம் எழுதுவதில் வல்லவராக இருப்பதைக் காண்பீர்கள்.

டாக்டர் மு.வ. வின் கடிதங்கள், ரசிகமணி கடிதங்கள், மறைமலையடிகள் கடிதங்கள், பாரதியின் கடிதங்கள் ஆகியவற்றை இலக்கியங்களென்றே சொல்லலாம். அது போன்றே ஆங்கிலத்தில் செஸ்டர் ∴பீல்டின் கடிதங்கள், டால்ஸ்டாயின் கடிதங்கள், பிளேட்டோவின் கடிதங்கள், ஜவஹர்லால் நேருவின் கடிதங்கள் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

கடிதம் எழுத்து மொழியின் மிகப் பழமையான வடிவம் தமிழ்இலக்கியங்களில் கடிதத்தை ஷஓலை', ஷதிருமுகம்', ஷமுடங்கல்' என்றெல்லாம் வழங்கியுள்ளனர். தற்போது வழக்கு மொழியில் கடிதத்தைக் ஷகடுதாசி' என்றும்

ஷகாயிதம்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

ஷஏதேனும் ஒரு செய்தியை ஒருவர் மற்றொருவருக்கு எழுதி அனுப்புவது' என்பது கடிதத்தின் இயல்பு. இவ்வியல்பு இன்றைய சிக்கலான சமுதாய அமைப்பில் புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளது. கடிதங்கள் பல்வேறு வகைகளையும், வடிவங்களையும் பெற்று, பலதரப்பட்ட பணிகளை ஆற்றி வருகின்றன. அவற்றைப் புரிந்து கொள்வது உங்களது அன்றாட வாழ்க்கைக்குப் பெரிதும் உதவும். உங்களது கருத்துப் பரிமாற்றத் திறனை வளர்த்துக் கொள்ளவும் பயன்படும்.

**பொன் விதிகள்**

“இன்று செய்யக் கூடியதை நாளைக்கு ஒத்தி போடாதீர்கள்” என்ற கூற்றுக், கடிதத்திற்கு முழுக்க முழுக்கப் பொருந்தும். திருமண வாழ்த்தோ, பிறந்தநாள் வாழ்த்தோ உரிய நேரத்தில் அனுப்பினால்தான் மதிப்பு. வேலைக்கு மனுப் போடுவதானாலும்,

பயணச்சீட்டை முன் பதிவு செய்வதானாலும் விரைவாக எழுதுவது நல்லது.

கடிதத்தைப் பேசுவது போல எழுதவேண்டும். நீங்கள் யாருக்குக் கடிதம் எழுதுகிறீர்களோ அவரைக் கண் முன்னால் கொண்டு வாருங்கள். அவருக்கு என்ன பிடிக்கும், அவரது பழக்க வழக்கங்கள் என்ன? பொழுது போக்குகள், விருப்பு வெறுப்புகள் யாவை? எதை, எப்படி எழுதினால் அவர் மகிழ்ச்சியடைவார்? என்றெல்லாம் யோசியுங்கள். பின் உங்களது இயல்பான பேச்சு நடையில் கடிதத்தை எழுதுங்கள்.

மேற்குறித்த இரண்டையும் கடிதத்தின் பொன் விதிகள் (Golden rules) எனலாம். ஒன்று உரிய காலத்தில் எழுதுங்கள்! (Be timely) மற்றது நீங்கள் நீங்களாக இருங்கள் (Be yourself).

குறிப்பு

**கடித அமைப்பு**

பொதுவாக எல்லாக் கடிதங்களிலும் 1. தலைப்பு, 2. விளி, 3. உடல்,

4. முடிப்பு, 5. கையெழுத்து ஆகிய ஐந்து பகுதிகள் உள்ளன.

தலைப்பில் எழுதுபவரின் முகவரி, தேதி ஆகியவை இடம் பெறுகின்றன. அடுத்த விளி' எனும் பகுதியில் அன்புள்ள …, அன்புடையீர், மதிப்பிற்குரிய அம்மையீர், மதிப்பிற்குரிய ஐயா என்பன கோன்ற தொடர்களைப் பயன்படுத்திக் கடிதம் யாருக்கு எழுதப்படுகிறதோ அவரை அழைப்பர். அதைத் தொடர்ந்த உடற் பகுதியில்தான் கடிதத்தில் கூற வேண்டிய செய்தி இடம் பெறும். முடிப்பில், அன்புடன், உங்கள், தங்கள் உண்மையுள்ள, இங்ஙனம் போன்ற சொற்கள் இடம்பெறுகின்றன. அதன்கீழ் கடிதம் எழுதுபவர், கையொப்பம்

இடுகிறார்.

இவ்வைந்தும் கடிதங்களில் காணப்படும் பொதுவான கூறுகள்.

சூழலுக்கும், தேவைக்கும் ஏற்ப இவற்றில் சில மாற்றங்கள் செய்யப்படலாம். கடிதங்களை எழுதும்போது உங்களது முழுக் கவனமும் அதில்இருக்க வேண்டும். எதை எழுதினாலும் தெளிவாக எழுதுங்கள். புரியும்படிசொல்லுங்கள். கூற நினைத்த எல்லாவற்றையும் சொல்லியாயிற்றா? சரிபார்த்துக் கொள்ளுங்கள். தகவல்களைச் சரியாகத் தவறின்றிச் சொல்லுங்கள். நாகரிகத்தோடும், மரியாதையோடும் எழுதுங்கள். நட்பு மனப்பான்மை உங்கள் கடிதம் முழுவதும் ஊடுருவி இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அடித்தல், திருத்தல் இல்லாமல் அழகாக எழுதுங்கள். இவ்வாறெல்லாம் கருத்துச் செலுத்தி நீங்கள்

கடிதங்களை வரைந்தால் - மற்றவர்கள் உங்களை மிக உயர்வாக மதிப்பார்கள்.

**கடிதத்தின் பயன்கள்**

கடிதம் பொதுவாக இரண்டு முக்கிய பணிகளைச் செய்கிறது.



1.நேருக்கு நேர் பேசாமலே தகவலைக் கூற உதவுகிறது.

2.தகவலை நிரந்தரமான வடிவில் பதிவு செய்ய உதவுகிறது.

கடிதத்தை அனுப்புபவர் தாம் கடிதம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக ஒரு நகல் வைத்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. அதே நேரத்தில் பெறுபவர் அனுப்புகின்றவரின் கருத்தைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்வதும் சாத்தியமாகின்றது.

பயிற்சி

கடிதத்தின் விதிகள் யாவை? அவற்றை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்களா?

(உரிய காலத்தில் எழுதுதல், யோசித்து இயல்பான தனக்கேயுரிய

நடையில் எழுதுதல் இரண்டும் பொன்விதிகளாகும்.)

**கடித வகைகள்**

தனிமனித உறவுகளை வலுப்படுத்தவும், அலுவலகங்களை செயல்படுத்தவும், வாணிகத்தை நடத்தவும் கடிதங்கள் பெருந்துணை புரிகின்றன. இவ்வடிப்படையில் கடிதங்களை வணிகக் கடிதங்கள் (Business letters), அலுவற் கடிதங்கள் (Official letters), உறவுக் கடிதங்கள் (Social letters) என மூன்று வகையாகப் பிரிக்கலாம். இம்மூவகையிலும் பல உட்பிரிவுகள் உள்ளன.

வணிகக் கடிதங்களை, தகவல் கடிதங்கள் (Information letters), விற்பனைக் கடிதங்கள் (Sales letters), பிரச்சினைக் கடிதங்கள் (Problem letters), நல்லெண்ணக் கடிதங்கள் (Goodwill letters) என நான்கு வகையாகப் பிரிப்பர்.

அலுவற் கடிதங்களில், மேற்குறிப்பு (Endorsement letters), அலுவலக ஆணை (Official order) என்பனபோன்ற 12 வகைகள் உள்ளன.

உறவுக் கடிதங்களைக் குடும்பக் கடிதங்கள் எனவும், நட்புக் கடிதங்கள்

எனவும் இருபெரும் பிரிவுகளாக்குவர்.

குறிப்பு

கடிதம்

| வணிகக் கடிதம் | அலுவற் கடிதம் | உறவுக் கடிதம் |
| --- | --- | --- |
| 1. தகவல் கடிதம் | 1. மேற்குறிப்பு | 1. குடும்பக் கடிதம் |
| 2. விற்பனைக் கடிதம் | 2. குறிப்பு மடல் | 2. நட்புக் கடிதம் |
| 3. பிரச்சினைக் கடிதம் | 3. அலுவலக ஆணை | |
| 4. நல்லெண்ணக் கடிதம் | 4. நேர்முக மடல் | |
| | 5. அலுவற் கடிதம் | |
| | 6. அலுவக - செயல்முறை | |
| | 7. அரசாணை | |
| | 8. நினைவூட்டு | |
| | 9. திரும்ப நினைவூட்டு | |
| | 10. அறிவிப்பு | |
| | 11. அறிவிக்கை | |
| | 12. அரசறிவிப்பு | |

வணிகக் கடிதம்

இன்று வணிகக் கடிதம் எழுதுவது தனியொரு கலையாகவே வளர்ந்து வருகிறது. இதழியல், உளவியல், விளம்பரம், மக்கள் தொடர்பு போன்ற பல்வேறு துறைகள் இக்கடிதங்களில் சங்கமம் ஆகின்றன. ஒரு தொழிலகத்தின் வெற்றியே அதன் கடிதத்தில்தான் அடங்கியிருக்கின்றது.

இதனால் சில தொழிற்சாலைகளில் கடிதம் எழுதுவதற்கென்றே வல்லுநர்கள் நியமிக்கப்படுகிறார்கள். சில சமயங்களில் தொழில் ரீதியான கடிதங்களை எழுத விளம்பர நிறுவனங்களை அணுகுவதும் உண்டு.

வணிகக் கடிதங்களை எழுதும்போது உங்கள் வணிக நோக்கம் புலப்படுமாறு எழுதுவதும் நல்லதல்ல. வாசகரை மனத்தில்கொண்டே உங்கள் கடிதத்தை எழுதுங்கள். சுருக்கமாகச் சொன்னால் உங்கள் கடிதத்தில் நான்', நாங்கள்' என்ற சொல்களை விட நீங்கள்', உங்கள்' என்ற சொற்களே மிகுதியாக இடம்பெறவேண்டும.

குறிப்பு

**சான்று**

ஏழு இனிய நிறங்களில் நாங்கள் நகச்சாயம் தயாரிக்கிறோம். ஏழு இனிய நிறங்களில் உங்களுக்கு நகச்சாயம் கிடைக்கிறது.

இதில் வலப்புறம் உள்ள வாக்கியமே வாசகர்பால் நீங்கள் கொண்டுள்ள பரிவைக் காட்டுகிறது.

எதிர்மறை வாக்கியங்களைவிட உடன்பாட்டு வாக்கியங்களே வணிகக் கடிதங்களுக்குப் பொருத்தமானவை

நீங்கள் கேட்டிருந்த சாமான்களை ஏப்ரல் 15க்கு முன்னால் அனுப்ப இயலாது. நீங்கள் கேட்டிருந்த சாமான்களை ஏப்ரல் 20க்குள் அனுப்பி விடுகிறோம்.

இதிலும் வலப்புறம் உள்ள உடன்பாட்டு வாக்கியமே பயன்படுதத் தகுந்தது.

உங்களது கடிதத்தில், மகிழ்ச்சி, நன்றி, இனிய, சுவையான, நல்ல, அழகான போன்ற சொற்கள் நிறைந்திருக்க வேண்டும். உங்கள் கடிதம் மலர்ந்த முகத்தோடு இருக்க வேண்டும; (Make your letters smile).உங்கள் கடிதம் உணர்ந்து அனுபவிக்கத் துாண்டுவதாக இருக்கவேண்டும்.

ஹார்லிக்ஸ் ரொட்டி விளம்பரத்தில் ஷகர கர மொறு மொறு' என்று

சொல்லும்போதே அந்த ரொட்டியைச் சுவைக்கத் தோன்றுகிறதல்லவா?

**வணிகக் கடித அமைப்பு**

வணிகக் கடிதத்தில், தலைப்பு (Heading) உள் முகவரி (Inside address), விளி (Salutation) உடல் (Body) முடிப்பு (Closing) கையொப்பம் (Signature) என்ற ஆறு பகுதிகள் அமைகின்றன. தலைப்பில் தேதி மட்டுமே நீங்கள் எழுத வேண்டியிருக்கும். ஏனெனில் அனுப்புநரின் முகவரி முதலானவை கடிதத்தலை (letter head)யில் இருக்குமல்லவா?

தலைப்பைத் தொடர்ந்து பெறுநரின் முகவரி தரப்பட வேண்டும். இதுதான்

ஷஉள்முகவரி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் அன்புள்ள . . . . அன்பார்ந்த . . . . என்றே விளிக்கும் முறை அமைகின்றது.

உடலில் கடிதத்தின் விவரங்கள் நிரல்படக் கூறப்படுகின்றன.

இறுதியில் உண்மையுள்ள, அன்புள்ள போன்ற முடிப்புத் தொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதன்பின் கையொப்பம் இட்டு கீழே அங்ஙனம் ஒப்பம் இடுபவரின் பெயர் தட்டச்சு செய்யப்படுகிறது.

குறிப்பு

**வணிகக் கடித வகைகள்**

வணிகக் கடிதங்களின் வகைகளான தகவல் கடிதங்கள், விற்பனைக் கடிதங்கள், பிரச்சினைக் கடிதங்கள், நல்லெண்ணக் கடிதங்கள் ஆகிய நான்கினையும் தனித்தனியே காணலாம்.

தகவல் கடிதங்கள்

ஏதாவது ஒரு தகவலைத் தருவதாகவோ, அதுபற்றி விசாரிப்பதாகவோ அமையும் கடிதங்களைத் தகவல் கடிதங்கள் என்பர்.

இத்தகைய கடிதங்களில் கடிதம் எழுதுவதற்கான காரணம் எடுத்த எடுப்பிலேயே கூறப்படுகிறது. இதனை நேரடி முறை (Direct approach) என்று வழங்குவர்.

சான்று

நீங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாங்கள் உற்பத்தி செய்யும் சலவைச் சோப்பின் மாதிரிகளை இத்துடன் அனுப்புகிறோம்.

கடிதம் எழுதுவதற்கான காரணத்தைத் தொடக்கத்தில் கூறவேண்டும் என்பது எல்லாக் கடிதங்களுக்கும் பொதுவான விதிதான். இருந்தபோதிலும் சிலவகையான கடிதங்களில் காரணத்தைச் சுற்றி வளைத்துக் கூற வேண்டியிருக்கும்.

புகார்கள் (Complaints), விற்பனைக் கடிதங்கள் (Sales letters) போன்றவற்றைப் படிக்கும்போதே அதிலுள்ள தகவல்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்ற எண்ணம் வாசிப்பவரிடம் உருவாதல் இயல்பு. ஆயின் தகவல் கடிதங்களில் இத்தகைய வாசகர் எதிர்ப்பு (Resistence)க்கு இடமில்லை. வாசிப்பவர் திறந்த மனத்துடன் கடிதத்தை அணுகுகிறார்.

நீங்கள் அடிக்கடி எழுத வேண்டியிருக்கும் வேலை விண்ணப்பங்கள்

இவ்வகையைச் சேர்ந்தவைதாம். இவ்வகைக் கடிதங்களில் நான்கு வகை விவரங்கள் குறிப்பிடத் தக்கவை.

1.முதலில் நிறுவன உரிமையினனரோடு ஒரு தொடர்பை நிலைநாட்டுங்கள். அதாவது இந்த வேலையைப் பற்றி உங்களுக்கு எவ்வாறு தெரிய வந்தது என்று கூறுங்கள். (விளம்பரம், கேள்விப்பட்டது.)

2. உரிமையாளரின் ஆவலைத் தூண்டி விடுங்கள். இதற்கு உங்களது வயது, தகுதி, அனுபவம் போன்ற விவரங்களைக் கூறவேண்டியிருக்கும்.



3. உரிமையாளரை நீங்கள் தகுதி உடையவர்தாம் என்று நம்பச் செய்யுங்கள். இதற்கு, உங்களது தகுதி தற்போதைய வேலைக்குப் பொருந்தி இருப்பதை நீங்கள் விளக்க வேண்டும்.

4. நேர்முகத் தேர்வு ஒன்றுக்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பக் கடிதம் இந்த விவரங்களை உள்ளடக்கியதாகும்.

தபால்பெட்டி எண்: 125, தினமணி

சென்னை - 600 002 மதிப்பிற்குரிய ஐயா,

2, பள்ளிவாசல் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

24.12.87.

தினமணி இதழில், நேற்று வெளிவந்த விளம்பரம் கண்டு இவ்விண்ணப்பத்தை அனுப்புகிறேன். தாங்கள் கேட்டுள்ள விற்பனை மேலாளருக்குள்ள தகுதிகள் எனக்கு இருப்பதாக நம்புகிறேன் எனக்கு இப்போது 28 வயது. எட்டு ஆண்டுகள் பல்வேறு விற்பனைப் பிரிவுகளில் பணியாற்றிய அனுபவம் எனக்குள்ளது.

நான் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் 1979இல் பி.காம்., பட்டம் படித்தவுடன், டி.வி.எஸ். நிறுவனத்தில் விற்பனைப் பிரிவில் வேலைக்கு அமர்ந்தேன். இரண்டாண்டுகளுக்குப்பின் மதுரை கோட்ஸ் நிறுவனத்தில் சேர்ந்து துணை விற்பனை மேலாளராக மூன்றாண்டுகள் பணியாற்றினேன். அதன்பின் துணை மேலாளராகவே ∴பென்னரில் சேர்ந்து கடந்து மூன்று வருடங்களாகப் பணியாற்றுகிறேன்.

எனது இந்த எட்டாண்டு கால அனுபவம் உங்களது நிறுவனத்தில் விற்பனை மேலாளராகப் பணியாற்றத் துணைபுரியும் என்று நம்புகிறேன். தங்களை நேரில் சந்திக்க வாய்ப்புக் கிடைக்குமானால் எனதுதகுதிகளை மேலும் விளக்கிக் கூறமுடியும் என்று நினைக்கிறேன். தங்களது சாதகமான கடிதத்தை எதிர்பார்க்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள,

இதே விண்ணப்பத்தை வேறு விதமாகவும் எழுதலாம். முதலில் விளம்பரத்தைக் கண்டு விண்ணப்பிப்பதாகவும், எட்டாண்டு அனுபவம் இருப்பதாகவும் குறிப்பிட்டு, பிற விவரங்களை இணைப்பாகச் சேர்க்கலாம்.

**குறிப்பு**

தபால்பெட்டி எண்: 125, தினமணி

சென்னை - 600 002 அன்புடையீர்,

2, பள்ளிவாசல் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

24.12. ஷ87.

தினமணி இதழில் நேற்று வெளிவந்த தங்களது விளம்பரம் கண்டு இவ்விண்ணப்பத்தை அனுப்புகிறேன். தாங்கள் கேட்டுள்ள விற்பனை மேலாளருக்குள்ள தகுதிகள் எனக்கு இருப்பதாக நம்புகிறேன். என்னைப் பற்றிய விவரங்களை இணைத்துள்ளேன்.

எனது தகுதிகள் தங்களுக்குத் திருப்தியளித்தால் தங்களுக்கு வசதியான நேரத்தில் தங்களை நேரில் சந்திக்க வாய்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்பு:

பெயர் :

முகவரி :

வயது :

கல்வித்தகுதி :

அனுபவம் :

அறிந்தவர்கள் :

**விற்பனைக் கடிதங்கள்**

விற்பனைக் கடிதங்கள் ஏதாவது பொருளை அல்லது ஒரு கருத்தை பிரச்சாரம் செய்வனவாக அமைவதால், வாசிப்பவர்கள் ஒரு எதிர்ப்பு மனப்பான்மையோடுதான் கடிதத்தைப் படிக்கிறார்கள். இந்த வாசகர் எதிர்ப்பைச் சமாளித்துப் பொருளை விலைபோக வைப்பதுதான கடிதத்தின் வேலை.

எனவே அதற்கிணங்கக் கடிதத்தின் அமைப்பும் மொழி நடையும் இருக்க வேண்டும்.

இத்தகைய கடிதங்களில், எடுத்த எடுப்பிலேயே தமது தயாரிப்பைப் பற்றிப் பெருமையாக எழுதினால் எடுபடாது. கடிதத்தை வாசிப்பவரை, மெதுவாக, அவருக்குத் தெரியாமல் பொருளை நோக்கி ஈர்க்க வேண்டும்.



இதற்கு இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஒன்று வாசிப்பவருக்கு விருப்பமான சில தகவல்களை முதலில் கூறி அதைத் தமது தயாரிப்போடு தொடர்பு படுத்துவது, மற்றொன்று வாசிப்பவரது அடிப்படையான சில மனித உணர்வுகளைத் தூண்டுமாறு தொடங்கி பின் தமது தயாரிப்பை அறிமுகம் செய்வது.

மனிதர்கள் பொதுவாகத் தங்களைப் பற்றி அக்கறை கொள்கிறார்கள்.

சிலர் தமது உடல் நலம் பற்றிக் கவலைப்படுகிறார்கள். வேறு சிலர் தங்களது தோற்றம் தவறாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இன்னும் சிலர் பணத்தை மிச்சம் பிடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். வேறு சிலர் நேரத்தை மிச்சம் பிடிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இவற்றில் ஏதோ ஒன்று உங்களது தயாரிப்பால் அவருக்குக் கிடைப்பதாக எழுதுவதுதான் முதல்வகை.

சான்று

1. உங்களது எரிவாயு சிலிண்டர் இருபதே நாட்களில் காலியாகிவிடுகிறது என்று கவலைபடுகிறீர்களா? அப்படியானால் இதைப் படியுங்கள்.

2. நீங்கள் ஒரு சிறு கூட்டத்தில் பேச வேண்டுமென்றாலும் தயங்குவீர்களா? தப்பித்துக் கொள்ளப் பார்ப்பீர்களா? அப்படியானால் உங்களுக்காகவே இக்கடிதம்.

இரக்கம்,அச்சம், அன்பு போன்ற உணர்வுகளைத் தூண்டுமாறு தாடங்குவது மற்றொரு வகை.

சான்று

உங்கள் அன்புக் குழந்தை சரியாகச் சாப்பிடவில்லை என்று வருத்தப்படுகிறீர்களா?

உங்கள் கவலை இதோ தீர்ந்தது.

பயிற்சி

விற்பனைக் கடிதத்தை எவ்வாறு தொடங்குவீர்கள்?

(படிப்பவரின் தேவையை நிறைவேற்றுவது போல, சிக்கலைத் தீர்ப்பது போல, இரக்கம் அன்பைத் தூண்டிவிடுமாறு தொடங்கவேண்டும். ஒரு சான்று எழுதுக.)

**பிரச்சினைக் கடிதங்கள்**

குறிப்பு

கடிதம் எழுதுபவர் அதைப் பெறுபவருக்குப் பிடிக்காத தகவல்களைக் கூறும் கடிதங்களைப் பிரச்சினைக் கடிதங்கள் என்பர். அவை ஏதாவது முறையீடாக இருக்கலாம் சலுகைகள் கேட்பதாக இருக்கலாம். கடன் கொடுத்ததைத் திரும்பக் கேட்பதாகவும் இருக்கலாம். இத்தகைய கடிதங்களில் மறைமுக அணுகுமுறை (Indirect approach) கடைப்பிடிக்கப்படவேண்டும்.

கடிதத்தின் முதல்பகுதி அதில் கூறப்படவிருக்கும் தகவலுக்கு வாசகரைத் தயார்ப்படுத்தவேண்டும். தவிர்க்க முடியாத நிலையில்தான் அந்தத் தகவலைக் கூற வேண்டியிருக்கிறது என்று இப்பகுதியில் கூறவேண்டும்.

சான்று

அ. தமிழ்நாட்டு மூலிகைகள் என்ற உங்களது கையெழுத்துப் படியை

படித்தேன். பயனுள்ள பல செய்திகளைச் சுவையாகத் தந்திருககிறீர்கள.;

ஆயின் நாங்கள் அண்மையில்தான் அதே தலைப்பில் ஒரு நூல் வெளியிட்டிருக்கிறோம். அதனால்தான் தங்களது கையெழுத்துப்படியைப் பிரசுரத்திற்கு ஏற்க இயலவில்லை.

ஆ. உங்களது தமிழ்நாட்டு மூலிகைகள் என்ற கையெழுத்துப்படியை வெளியீட்டுற்கு ஏற்க இயலாமைக்கு வருந்துகிறோம்.

இந்த இரண்டில் ல் மேலேயுள்ள கடிதம் (அ) வாசகரிடம் தகவலைப் பக்குவமாகத்

தெரிவிக்கிறது.

நாம் நேரில் பேசும்போது நமது முகபாவம், குரல், தொனி ஆகியவற்றின்

மூலம் கேட்பவரைப் புண்படுத்தாதவாறு தகவலைக் கூறமுடியும். ஆயின் கடிதத்தில் அத்தகைய வாய்ப்பு இல்லை. எனவே சொற்களை மிக மிகக் கவனமாகக் கையாளவேண்டும்.

செய்வினையைவிட செயப்பாட்டுவினையை இத்தகைய கடிதங்களில் பயன்படுத்தலாம்.

சான்று

உங்களது கடிதத்தோடு காசோலையை அனுப்பத்தவறிவிட்டீர்கள். உங்களது கடிதத்துடன் காசோலை காணப்படவில்லை. பிரச்சினைக் கடிதங்களுக்கு உடனடியாகப் பதில் அனுப்பிவிடவேண்டும். உங்கள் இயலாமையை அல்லது வருத்தத்தை காலம் தாழ்தீதித் தெரிவிப்பது பிரச்சினையை மேலும் மோசமாக்கும்.

பயிற்சி

நகரப் பேருந்து எண் 30 பி உங்களது நிறுத்தத்தில் அடிக்கடி நிற்காமலே போகிறது என்பது குறித்து போக்குவரத்துக் கழக மேலாளருக்குப் புகார் எழுதுக.

**நல்லெண்ணக் கடிதங்கள்**

சில சமயங்களில் வேறு எந்தக் காரியமுமின்றி, நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காகவே கடிதம் எழுதுவதுண்டு. நன்றி கூறும் கடிதங்கள், பாராட்டுத் தெரிவிக்கும் கடிதங்கள் போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவை. அதுபோன்றே பணியாளர்களின் நேர்மையைப் பாராட்டுதல், குறித்த பணியைக் குறித்த நேரத்தில் முடித்ததற்கு நன்றி கூறுதல் ஆகியவையும் இவற்றுள் அடங்கும்.

சான்று

அன்பார்ந்த திரு. சிவபாலன்,

எங்களது தலைமை மேலாளர் கடந்த வாரம் உங்கள் ஊருக்கு வந்திருந்த போது அவருக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்து அன்போடு உபசரித்தீர்கள் என்று சொன்னார். அதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அச்சமயத்தில் நீங்கள் அறிமுகம் செய்துவைத்த தொழிலதிபர்களுடன் எங்களுக்கு வியாபாரத் தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. அதற்கும் தனிப்பட்ட முறையில் நான் நன்றி கூறுகிறேன்.

உங்களது வேலைகளுக்கிடையே அவருக்காக நேரம் ஒதுக்கி, சிரமம் பாராமல் கவனித்துக் கொண்டதற்கு மிக்க நன்றி. அன்புடன்,

**அலுவல் கடிதங்கள்** (Official letters)

அரசு அலுவலகங்களில், ஒரு துறையிலிருந்து வேறொரு துறைக்கோ, அரு அலுவலகத்திலிருந்து மற்றொரு

அலுவலகத்திற்கோ, தனிப்பட்டவர்களுக்கோ அனுப்பப்படும் கடிதங்களை அலுவல் கடிதங்கள் என்பர்.

குறிப்பு (Note)

குறிப்பு

இக்கடிதங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று குறிப்பு (Note) எனப்படும். மற்றது, வரைவு எனப்படும். ஒரே அலுவலகத்திற்குள் ஒரு அலுவலரிடமிருந்து மற்றொருவருக்கு அனுப்பப்படுவது குறிப்பு எனப்படும்.

இக்குறிப்பு அலுவல்முறைக் குறிப்பு (Official note) என்றும், முறை சாராக் குறிப்பு (unofficial note) என்றும் இருவகைப்படுகிறது. ஒரு அலுவலகத்தில் அல்லது ஒரே துறையில் உள்ள இளநிலை உதவியாளர், உதவியர், பிரிவு அலுவலர் போன்ற பல்வேறு அலுவலர்களிடையே பரிமாறிக் கொள்ளப்படுவது அலுவல் முறைக் குறிப்பாகும்.

அரசுச் செயலகத்தில் (Secretariat) உள்துறை, சட்டத்துறை, நிதித்துறை, உணவுத்துறை ஆகிய பல்வேறு துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறையும் ஓர் அலுவலகமே. ஒரு துறை அலுவலகத்திலிருந்து இன்னொரு துறை அலுவலகத்திற்கு எழுதும்போது கடிதமாக (letter) எழுதவேண்டும் என்பதுதான் மரபு. அம்மரபிலிருந்து மாறி குறிப்பாக (note) எழுதும் பழக்கமும் நடைமுறையில் உள்ளது. இவ்வாறு முறைப்படி கடிதமாக வரையாமல், முறை சாரா வகையில் குறிப்பாக எழுதப்படும் இதையே, முறைசாராக் குறிப்பு (Unofficial letter) என்று வழங்குவர்.

ஒரு துறையின் கோப்பு, அப்படியே, அதன் மேலேயே எழுதப்பட்ட குறிப்புடன் இன்னொரு துறைக்கு அனுப்பப்படும். அத்துறை அதன்மேல் ஒரு குறிப்பு எழுதித் திரும்ப அனுப்பிவிடும். இங்ஙனம் ஒரு துறையில் எழுதப்படும் குறிப்புகளுமே முறைசாராக் குறிப்புகள்தாம்.

**பிரிப்புக் குறிப்பு** (Sectional note)

ஒரே கோப்பில் பல செய்திகள் பற்றித் தனித்தனியாக, அலுவல்முறைக் குறிப்பு அல்லது முறை சாராக் குறிப்பு எழுத நேரலாம். அப்போது ஒவ்வொரு செய்திக்கும் தனித்தனி பிரிவாக வகுத்துக்கொண்டு குறிப்பு எழுதுவது வழக்கம். இதனையே பிரிப்புக் குறிப்பு என்பர்.

வரைவு (draft)

ஒரு அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்திற்கு அனுப்புவதற்குரிய கடிதத்தை எழுதி மேலதிகாரிகளிடம் ஒப்புதல்

பெற்றபின்தான் அனுப்புவது வழக்கம். அலுவல் கடிதத்தின் இந்த முதல்நிலைதான் வரைவு எனப்படும்.

கடிதம் (Letters)

குறிப்பு

வரைவுகள் ஒப்புதல் பெற்றபின் கடிதமாக உருக்கொள்கின்றன. இக்கடிதங்களில் மேற்குறிப்பு, அலுவலக ஆணை, நேர்முகக் கடிதம், அலுவல்கடிதம், அலுவல் செயல்முறை, அரசாணை, நினைவூட்டு, திரும்ப நினைவூட்டு, அறிவிப்பு, அறிவிக்கை, அரசறிவிப்பு எனப் பலவகையுண்டு. அவை ஒவ்வொன்றையும் இங்குக் காணலாம்.

மேற்குறிப்பு (Endorsement)

ஒரு கடிதத்தின் மேல் எழுதப்படுவது மேற்குறிப்பு எனப்படும். ஒரு கடிதத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றோர் அலுவலகத்தில் இருக்கும்போதும், அக்கடிதத்திற்கான நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு மற்றோர் அலுவலகத்திற்கு உரியதாக இருக்கும்போதும், அக்கடிதத்தில் மேற்குறிப்பு எழுதி அனுப்புவர்.

சான்று

வணிகவரித்துறை

வணிகவரித்துறை அலுவலகம் மதுரை - 10

மேற்குறிப்பு எண் 3715Æ87-1Æஆ தேதி:

தக்க நடவடிக்கை எடுப்பதற்காக, விருதுநகர் இணை வணிகவரி அலுவலருக்கு மாற்றப்படுகிறது.

சாத்தப்பன் வணிகவரி அலுவலர்

பெறுநர்

இணை வணிக வரி அலுவலர் விருதுநகர்.

**குறிப்பு மடல்** (Memorandum)

இதுவும் விளி' இன்றி, குறிப்பு வடிவிலேயே எழுதப்படுவதாகும். கீழுள்ள அலுவலகங்களுக்கே குறிப்பு மடல் எழுதப்படும். ஒத்த அலுவலகங்களுக்கோ, மேலுள்ள அலுவலகங்களுக்கோ எழுதுவதில்லை.

சான்று

நடப்பு மடல் எண்: தேதி:

. . . ஆட்சியர் அலுவலகம்

குறிப்பு மடல்

பொருள்: பார்வை:

பல தடைவ நினைவூட்டியும், வட்டாசியர் பலர் தங்களது அறிக்கைகளை, இன்னும் அனுப்பவில்லை. உடனடியாகக் கவனித்துத் தாமதமின்றி அனுப்ப வேண்டியது.

(ஆணைப்படி)

(கையெழுத்து)

பெறுநர்:

தவறிய வட்டாட்சியர்கள்.

தலைமைப் பொறுப்பாளர்

அலுவலக ஆணை (Office order)

ஓர் அலுவலகத்துக்குள்ளேயே பணியாளர்களை அமர்த்துதல் (appointment), மாற்றுதல் (transfer), விடுப்பளித்தல் (leave) போன்றவற்றிற்கு அலுவலக ஆணை பயன்படுகிறது. இதுவும் குறிப்பு வடிவிலேயே எழுதப்படுகிறது.

சான்று

. . . . துறை

அலுவலக ஆணை எண்: தேதி:

பொருள்: பார்வை:

கண்காணிப்பாளர் திருமதி பொற்செல்வி விடுப்பிலிருந்து பணிக்குத் திரும்பியதால் மாற்றுக் கண்காணிப்பாளர் திரு. இராகவன் 6.12.'87 முதல் உதவியர் பணிக்குத் திருப்பப்படுகிறார்.

**நேர்முகக் கடிதம்** (Demi Official Letter)

(கையொப்பம்) தலைமைப் பொறியாளர்

இது கிட்டத்தட்ட அலுவல் முறைக் கடிதம் போலவே அமையும். ஐயா, அன்புடையீர் என்பவை போன்ற விளியுடன் தொடங்கி, நேர்முகமாக உரையாடுவது போல இக்கடிதம் அமையும்.

இக்கடிதத்தில் பெறுபவரின் முகவரி கையொப்பத்திற் கீழேஇடம்பெறும்.மேலேஎழுதப்படுவதில்லை.

இத்தகைய கடிதம் மேல் அலுவலகத்திற்கும் அனுப்பப்படும். கீழ் அலுவலகத்திற்கும் அனுப்பப்படும்.

குறிப்பு

சான்று:

அனுப்புநர்:

திரு. வேல்முருகன் பாசன கண்காணிப்புப் பொறியாளர்

தலைமைப் பொறியாளர் அலுவலகம்,

பாசனத்துறை.

தேதி:

நே. மு. ம. எண்: பொருள்:

பார்வை:

அன்புள்ள கண்ணப்பன்,

. . . .

. . . .

பெறுநர்: ப கண்ணப்பன்,

பொறியாளர், மதுரை - 2

அலுவல் கடிதம்

தங்கள் உண்மையுள்ள, (கையொப்பம்) வேல்முருகன்

ஓர் அலுவலகத்திலிருந்து மற்றோர் அலுவலகத்திற்குக் கடித வடிவில் எழுதப்படுவது அலுவல் கடிதமாகும். இதில் அனுப்புநர், பெறுநர் முகவரிகள் கடிதத்தின் தொடக்கத்தில் தரப்படுகின்றன.

பின் மரபு வழிப்படி ஐயா, மதிப்பிற்குரிய ஐயா என்ற விளித் தொடர்கள் பயன்படுதத்ப்படுகின்றன. அதற்குப் பிறகு பொருள் பார்வை ஆகிய விவரங்கள் அளிக்கப்படுகின்றன. பின்னர் கடித விவரம் கூறப்படுகிறது. இறுதியில் உண்மையுள்ள என்றவாறு முடிவு பெறுகின்றது.

குறிப்பு

சான்று

மடல் எண்: 515-அ-1Æ87-2

அனுப்புநர் பெறுநர் ஐயா, பொருள்: பார்வை:

16.12.'87 அன்று காலை 11 மணிக்கு நடைபெறபிருந்த ஆய்வுக் குழுக்கூட்டம் 26.12.'87 அன்று காலை 11.30 மணிக்கு ஒத்திபோடப் பட்டுள்ளது என்பதை ஆணைப்படி தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள
(கையொப்பம்)

பதவி (Designation)

இக்கடிதங்களில் அனுப்புபவரின் பெயரும், பதவியும், முகவரியும் இடம்பெறும். பெறுநர் பதவி, முகவரி ஆகியவை மட்டுமே குறிப்பிடப்படுகின்றன. பெயர் குறிக்கப்படுவதில்லை. ஏனெனில், சில சமயங்களில் கடிதம் சென்று சேரும்போது பொறுப்பில் இருப்பவர் மாற்றலாகிவிடக்கூடும்.

அலுவலகச் செயல்முறை (Official Proceedings)

ஓர் அலுவலகத்தில் செயல்முறைக்கு இக்கடிதங்கள் துணைபுரிகின்றன.

இது மேலதிகாரி ஒருவர் ஆணையிடுவதாகவோ, ஏற்கனவே எடுத்த நடவடிக்கையை உறுதி செய்வதாகவோ அமையும். இது குறிப்பிட்ட ஒருவருக்கு எழுதப்படாததால், ஷவிளி' அமைப்பு தொடக்கத்தில் இடம் பெறாது. பெறுநரின் முகவரி கடிதத்தில் இறுதியில் தரப்படுகிறது.

சான்று:

மாவட்ட ஆட்சியர் அலுவலகச் செயல்முறை முன்னிலை: திரு. மாதவன், ஆட்சியர்

பொருள்: பார்வை:

தேதி:

ஆணை:

மக்கள் வட்டம் பூம்பட்டியில் அரசு ஆணை எண் 25 E 5 - இல் ஒரு மின் உந்து (Electric Motor) அமைக்க திரு. மாறனுக்கு இசைவளிக்கப்படுகிறது. மின் உந்தின் பரித்திறன் 5க்கு மேல் செல்லக்கூடாது.

(கையொப்பம்) மாதவன்

ஆட்சியர்

**குறிப்பு**

பெறுநர்

. . . . . . .

. . . . . . .

. . . . . . .

**நினைவூட்டு** (Reminder)

இது அனுப்பப்பெறும் அலுவலகத்தைப் பொறுத்து குறிப்பு மடல் வடிவிலோ, நேர்முகக் கடித வடிவிலோ, அலுவல்கடித வடிவிலோ அமையும். கீழுள்ள அலுவலகங்களுக்கு குறிப்பு மடலும், மேலுள்ள அலுவலகங்களுக்கு கடித வடிவும் பயன்படும். குறிப்பிட்ட அலுவலரின் நேர்முகக் கவனத்தை ஈர்க்க வேண்டிய நிலையில் நேர்முகக் கடிதம் எழுதப்படும்.

**விடைதரு நினைவூட்டு** (Exchange reminder)

நினைவூட்டு எழுதப்படும் தாளிலேயே விடையளிக்க இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

இத்தகைய படிவம் திரும்ப நினைவூட்டு எனப்படும்.

சான்று:

. . . . . . . துறை

நினைவூட்டுப் பகுதி விடைப்பகுதி

பொருள்: பொருள்:

என் நிலையிலுள்ளது? …நிலையிலுள்ளது விடை எப்போது வரும்? விடை … ல் வரும் அலுவலகம்: அலுவலகம்:

(கையொப்பம்) (கையொப்பம்) அலுவல் பெயர் அலுவல் பெயர்

குறிப்பு

Designation

அறிவிப்பும் அறிவிக்கையும் (Notice and Notification) ஒருவருக்கோ ஒரு வகையானவருக்கோ ஒரு செய்தியைத் தெரிவிப்பது

**அறிவிப்பு** (Notice) ஒரு செய்தியைப் பலரும் அறிந்துகொள்ளுமாறு வெளியிடுவது

**அறிவிக்கை (**Notification)

சான்றுகள்:

அறிவிப்பு (Notice) ஏல அறிவிப்பு

இவ்வலுவலகத்திலுள்ள பழுதுபட்ட நாற்காலிகள், மேசைகள், தட்டச்சு எந்திரங்கள் ஆகியவை மாலை 4 மணிக்க இவ்வலுவலக முற்றத்தில் எல்லாரும் அறிய ஏலம் விடப்படும். ஏலம் கேட்க விரும்புவோர் முன்கூட்டியே ரூ. 10Æ- பிணையம் கட்டித் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். உச்ச கேள்வி கேட்பவருக்கு ஏலம் விடப் பெற்றதும் அவர் முழுத்தொகையும் கட்டிப் பொருள்களை எடுத்துக் கொள்ளவேண்டும்.

சாமான்கள்:

1. மேசைகள்

2. நாற்காலிகள்

3. தட்டச்சுப் பொறிகள்

அலுவலகப் பெயர் :

இடம் :

நாள் :

சான்று:

அறிவிக்கை (Notification)

மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை

(கையொப்பம்) அலுவல்பெயர் (Designation)

குறிப்பு

. . . . .ல் முடியும் காலாண்டில், மணிக்குடி மாவட்டத்தில் நிலவிய தானிய அங்காடி சராசரி விலைப்பட்டியல்.

தமிழ்நாடு பயிரிடும் விவசாயிகள் பற்றிய சட்டம் 1956-12(1) பிரிவின்படி, மணிக்குடி மாவட்டத்தில் . . . . ல் முடியும் காலாண்டு காலத்தில் பின்வரும் உணவுத் தானியங்களின் விலை அறிவிக்கப்பெறலாகிறது.

தானியம் எடை, விலை

1.

2.

3.

**உறவுக் கடிதங்கள்** (Social Letters)

உறவுக் கடிதங்களில் நண்பருக்கு எழுதும் கடிதங்களும், குடும்பத்தினருக்கு எழுதும் கடிதங்களும் அடங்கும் என ஏற்கனவே பார்த்தோம். இவற்றில் குடும்பக் கடிதங்கள் சொந்தப் பிரச்சினைகளைப் பற்றியே பெரும்பாலும் அமைவதால் அவற்றை இங்கு விவாதிக்க வேண்டியதில்லை. நண்பர்க்கு எழுதப்படும் கடிதங்களில் ஒரு சிலவற்றை மட்டும் பார்க்கலாம்.

இவ்வகைக் கடிதங்கள் உணர்வுப் பரிமாறல்களாக அமைகின்றன.

உண்மையான அன்பும், பரிவும் வெளிப்படுவதற்கு இவ்வகைக் கடிதங்கள் உதவுகின்றன. நற்செய்திகளை அறிந்து மகிழ்ச்சியோ பாராட்டோ தெரிவித்தல்

துக்கச் செய்தி கேட்டு வருத்தம் தெரிவித்தல் போன்றவை எல்லாம் இக்கடித வகையில் அடங்குகின்றன.

மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டு பாராட்டுவதாய் இக் கடிதம் அமையும்.

சான்று

அன்புள்ள மதிபாலா,

இன்றுதான் உனக்குக் குழந்தை பிறந்துள்ள நற்செய்தியை சுவாமி சொன்னான். உங்கள் இருவருக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுக்கள். குழந்தை யாரைப்போல் இருக்கிறாள். அவளுக்கு

என்ன பெயர் வைத்திருக்கிறாய்? உன்னையும் குழந்தையையும் பார்க்க ஆவலுடன் இருக்கிறேன். உன் கணவர் மகிழ்ச்சியல் பூரித்துப் போயிருப்பார். அவருக்கு எங்கள் அன்பைத் தெரிவி.

அன்பு சேகர்,

துக்கச் செய்தி கேட்டு வருத்தம் தெரிவித்தல் போன்றவை எல்லாம் இக்கடித வகையில் அடங்குகின்றன.

உன் தந்தை காலமாகிவிட்டார் என்று கேள்விப்பட்டேன். நீ எத்தகைய சோகத்தில் இருப்பாய் என்று எனக்கு புரிகிறது. நான் என்ன சொல்லியும் உனது வருத்தத்தை மாற்ற முடியாது. காலம் மட்டுமே உன் கவலையை மாற்றவல்லது. எனினும், உன் தந்தை முழுமையாக வாழ்ந்தார்É அவரது கடமைகளை எல்லாம் முடித்துவிட்டார் என்று எண்ணித்தான் நீ மனம் தேறவேண்டும். தேறித்தான் ஆகவேண்டும் சேகர்! நான் ஏதாவது உதவி செய்யவேண்டுமா? அப்படியென்றால் தயங்காது உடனே கூறு.

**வரவேற்பிதழ்:** ஒரு விழாவிற்கு சிறப்புடைய மனிதர்களை விருந்தனர்களாக அழைக்கும் பொழுது அவர்களுக்கு வாசித்தளிக்கப்படும் மடலே வரவேற்பிதழ் என்று அழைக்கப்படும்.அதில் தொடர்படைய நபர் குறித்த தன விவரங்கள் சுட்டப்படுவதுடன் அவர் வாழ்நாளில் செய்த அரும்பணிகளும் சுட்டியுரைக்கப்படும். மேலும் அந்த நபர் அழைக்கப்பட்டிருக்கும் விழவிற்கும் அவருக்குமான தொடர்பு எடுத்துரைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய நபர் இதுவரைக்கும் பெற்றிருக்கும் பட்டங்கள் அத்தகைய பட்டங்கள் பெறுவதற்கான அமைந்த சூழல்கள் போன்றவை தெளிவாக எடுத்துரைக்கப்படுவதும் உண்டு.

அத்தகைய வரவேற்பிதழ்கள் வரவேற்பு அளிக்கும் மக்களின் தாய்மொழியில் அமைதல் நலம். வரவேற்கப்படும் நபர் பிறமொழியைச்சேர்ந்தவர் ஆயினும் அவர்க்கும் வரவேற்பு அளிப்பவரின் தாய்மொழியில் வழங்கி அதனை வரவேற்கப்படுபவரின் தாய்மொழியில் மொழிபெயர்த்துக் கூறலாம்.இதற்குச் சான்றாய் மகாத்மாவின் வாழ்வில் நடந்த நிகழ்வு ஒன்றினை விளக்கலாம்.மகாத்மா காந்தி ஒருமுறை மயிலாடுதுறைக்கு வந்திருந்தபோது அப்பகுதி மக்கள் அவர்க்கு வரவேற்பிதழ் ஒன்று வழங்கினர். அதனைக் கண்ட காந்தியடிகள் வரவேற்பிதழ் ஆங்கில மொழியில் இருப்பதைப் பார்க்கிறேன். நீங்கள் உங்கள் நாட்டு மொழிகளைக் கொன்று அவற்றின் சமாதியின்மேல் ஆங்கிலத்தை நிலவச் செய்வீர்கள் ஆயின் நன்னெறியில் சுதேசியத்தை வளர்ப்பவர்கள் ஆக மாட்டீர்கள் என்று சொல்லுவேன்.எனக்குத் தமிழ் தெரியாது என்று நீங்கள் உணர்ந்தால் அம்மொழியை எனக்குக் கற்பிக்கவும் அதைப் பயிலுமாறு என்னைக் கேட்கவும்

குறிப்பு

*Self-Instructional Material*

வேண்டும்.அவ்வினிய மொழியில் வரவேற்பிதழை அளித்து அதை மொழிபெயர்த்து எனக்கு உணர்த்தியிருப்பீர்கள் ஆயின் உங்கள் கடனை ஒருவாறு ஆற்றியவர்கள் ஆவீர்கள் என்று குறிப்பிடுகிறார். எனவே வரவேற்பிதழை இயன்றவரை அவரவர் தாய்மொழியிலே வழங்கலே சிறப்புடைத்தாம்.



**பயிற்சி வினாக்கள்:**

1. கடிதத்தின் பயன்கள் யாவை?

கடிதம் பொதுவாக இரண்டு முக்கிய பணிகளைச் செய்கிறது.

1.நேருக்கு நேர் பேசாமலே தகவலைக் கூற உதவுகிறது.

2.தகவலை நிரந்தரமான வடிவில் பதிவு செய்ய உதவுகிறது.

கடிதத்தை அனுப்புபவர் தாம் கடிதம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக ஒரு நகல் வைத்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. அதே நேரத்தில் பெறுபவர் அனுப்புகின்றவரின் கருத்தைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்வதும் சாத்தியமாகின்றது.

2. பிரிப்புக் குறிப்பு (Sectional note) வரைவு (draft) என்றால் என்ன?

ஒரே கோப்பில் பல செய்திகள் பற்றித் தனித்தனியாக, அலுவல்முறைக் குறிப்பு அல்லது முறை சாராக் குறிப்பு எழுத நேரலாம். அப்போது ஒவ்வொரு செய்திக்கும் தனித்தனி பிரிவாக வகுத்துக்கொண்டு குறிப்பு எழுதுவது வழக்கம். இதனையே பிரிப்புக் குறிப்பு என்பர்.

வரைவு (draft)

ஒரு அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்திற்கு அனுப்புவதற்குரிய கடிதத்தை எழுதி மேலதிகாரிகளிடம் ஒப்புதல் பெற்றபின்தான் அனுப்புவது வழக்கம். அலுவல் கடிதத்தின் இந்த முதல்நிலைதான் வரைவு எனப்படும்.

3. மேற்குறிப்பு (Endorsement) என்பதனை விளக்குக.

ஒரு கடிதத்தின் மேல் எழுதப்படுவது மேற்குறிப்பு எனப்படும். ஒரு கடிதத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றோர் அலுவலகத்தில் இருக்கும்போதும், அக்கடிதத்திற்கான நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு மற்றோர் அலுவலகத்திற்கு உரியதாக இருக்கும்போதும், அக்கடிதத்தில் மேற்குறிப்பு எழுதி அனுப்புவர்.

குறிப்பு

4. அலுவல் கடிதங்கள் (Official letters) – விவரி.

அரசு அலுவலகங்களில், ஒரு துறையிலிருந்து வேறொரு துறைக்கோ, அரு அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்திற்கோ, தனிப்பட்டவர்களுக்கோ அனுப்பப்படும் கடிதங்களை அலுவல் கடிதங்கள் என்பர்.

இக்கடிதங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று குறிப்பு (ழேவந) எனப்படும். மற்றது, வரைவு எனப்படும். ஒரே அலுவலகத்திற்குள் ஒரு அலுவலரிடமிருந்து மற்றொருவருக்கு அனுப்பப்படுவது குறிப்பு எனப்படும்.

இக்குறிப்பு அலுவல்முறைக் குறிப்பு (Official note) என்றும், முறை சாராக் குறிப்பு (unofficial note) என்றும் இருவகைப்படுகிறது. ஒரு அலுவலகத்தில் அல்லது ஒரே துறையில் உள்ள இளநிலை உதவியாளர், உதவியர், பிரிவு அலுவலர் போன்ற பல்வேறு அலுவலர்களிடையே பரிமாறிக் கொள்ளப்படுவது அலுவல் முறைக் குறிப்பாகும்.

அரசுச் செயலகத்தில் (Secretariat) உள்துறை, சட்டத்துறை, நிதித்துறை, உணவுத்துறை ஆகிய பல்வேறு துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறையும் ஓர் அலுவலகமே. ஒரு துறை அலுவலகத்திலிருந்து இன்னொரு துறை அலுவலகத்திற்கு எழுதும்போது கடிதமாக (letter) எழுதவேண்டும் என்பதுதான் மரபு. அமம் ரபிலிருந்து மாறி குறிப்பாக (note) எழுதும் பழக்கமும் நடைமுறையில் உள்ளது. இவ்வாறு முறைப்படி கடிதமாக வரையாமல், முறை சாரா வகையில் குறிப்பாக எழுதப்படும் இதையே, முறைசாராக் குறிப்பு (Unofficial letter) என்று வழங்குவர்.

ஒரு துறையின் கோப்பு, அப்படியே, அதன் மேலேயே எழுதப்பட்ட குறிப்புடன் இன்னொரு துறைக்கு அனுப்பப்படும். அத்துறை அதன்மேல் ஒரு குறிப்பு எழுதித் திரும்ப அனுப்பிவிடும். இங்ஙனம் ஒரு துறையில் எழுதப்படும் குறிப்புகளுமே முறைசாராக் குறிப்புகள்தாம்.

5. வரவேற்பிதழ் குறித்து விளக்கியுரை.

ஒரு விழாவிற்கு சிறப்புடைய மனிதர்களை விருந்தனர்களாக அழைக்கும் பொழுது அவர்களுக்கு வாசித்தளிக்கப்படும் மடலே வரவேற்பிதழ் என்று அழைக்கப்படும்.அதில் தொடர்படைய நபர் குறித்த தன விவரங்கள் சுட்டப்படுவதுடன் அவர் வாழ்நாளில் செய்த அரும்பணிகளும் சுட்டியுரைக்கப்படும்.

மேலும் அந்த நபர் அழைக்கப்பட்டிருக்கும் விழவிற்கும் அவருக்குமான தொடர்பு எடுத்துரைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய நபர்

இதுவரைக்கும் பெற்றிருக்கும் பட்டங்கள் அத்தகைய பட்டங்கள் பெறுவதற்கான அமைந்த சூழல்கள் போன்றவை தெளிவாக எடுத்துரைக்கப்படுவதும் உண்டு. இத்தகைய வரவேற்பிதழ்கள் வரவேற்பு அளிக்கும் மக்களின் தாய்மொழியில் அமைதல் நலம்.

குறிப்பு

**மாதிரி வினாத்தாள் - I**

**அழகப்பா பல்கலைக்கழகம்**

**தொலைதூரக் கல்வி இயக்ககம்**

**பி.லிட் -தமிழ் - முதலாமாண்டு – முதற்பருவம்**

**தாள் - 10712 - இலக்கணம் - நன்னூல் - எழுத்து**

**காலம்: 3மணி** **மொத்த மதிப்பெண்: 75**

**பகுதி – அ**

**I.அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக: ( 10 X 2 = 20 )**

**1.** நன்னூல் யாருடைய அவையில் அரங்கேற்றப்பட்டது**?**

**2.**பாயிரத்தின் வகைகள் யாவை?

3.சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?

4. ஓரெழுத்து ஒரு மொழி என்றால் என்ன?

5.இதழ் இயையப் பிறக்கும் எழுத்துகள் யாவை?

6.மரப்பெயர் புணர்ச்சி எவ்வாறு அமையும்?

7.மாத்திரை என்பதனை சுட்டியுரைக்க.

8.வாழிய என்னும் சொல் எவ்வாறு புணரும்?

9. பனை முன் அட்டு புணருமாற்றை குறிப்பிடுக.

9. வரைவு (draft) - விளக்கம் தருக.

10. விடைதரு நினைவூட்டு (Exchange reminder) எவ்வாறு அமைந்திருக்கும்?

குறிப்பு

பகுதி – ஆ

**II.ஒருபக்க அளவில் விடை தருக:** **( 5 X 5 = 25 )**

**11.** ( அ ) நூலின் வகைகளை விளக்குக

( அல்லது )

(ஆ ) மாணாக்கர் ஆகாதவர் யாவர்?

**12 (அ)** உயிரெழுத்துகளின் பிறப்பு குறித்து எழுதுக.

( அல்லது )

(ஆ) உயிர்முன் உயிர் வந்து புணருமாற்றைப் புலப்படுத்துக.

13 ( அ) உருபுபுணரியல் காட்டும் பொதுச் சாரியைகளைச் சான்று காட்டி எழுதுக.

( அல்லது )

(ஆ ) ஊகார, ஐகார வீற்றுச் சொற்கள் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களை விளக்குக.

14 ( அ ) பதங்களில் அமையும் இடைநிலைகளை எடுத்துரைக்க.

( அல்லது )

(ஆ ) விகாரப் புணர்ச்சியினை விளக்குக.

15 ( அ ) திசைப்பெயர் புணர்ச்சி குறித்து எழுதுக.

( அல்லது )

(ஆ ) தமிழ் என்னும் சொல் எவ்வாறு புணரும்? சான்று காட்டி நிறுவுக.

பகுதி - இ **( 3 X 10 = 30 )**

**III. எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக:**

16. நல்லாசிரியரின் இலக்கணத்தை விரித்தெழுதுக.

17. எழுத்துகளின் பிறப்பு குறித்து விவரி

18. பதவியல் கூறும் செய்திகளைப் பட்டியலிடுக.

19. லகர,ளகர, ழகர வீற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுத்தெழுதுக.

20. அலுவலகக் கடிதம் எழுதும் முறையைச் சான்றுகளுடன் விவரி.

**மாதிரி வினாத்தாள் - II**

**அழகப்பா பல்கலைக்கழகம்**

**தொலைதூரக் கல்வி இயக்ககம்**

**பி.லிட் -தமிழ் - முதலாமாண்டு – முதற்பருவம்**

**தாள் - 10712 - இலக்கணம் - நன்னூல் - எழுத்து**

**காலம்: 3மணி** **மொத்த மதிப்பெண்: 75**

**பகுதி – அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக: ( 10 X 2 = 20 )**

**1.** நன்னூலின் ஆசிரியர் யார்**?**

**2.** வழி நூல் என்றால் என்ன?

3.படலம் - சுட்டியுரை

4. தொடர் மொழி என்பதனைக் குறிப்பிடுக.?

5. வினா எழுத்துகள் யாவை?

6. பூப்பெயர் புணர்ச்சி எவ்வாறு அமையும்?

7.நிகழ்காலம் உணர்த்தும் இழைடநிலைகளைத் தருக.

8.பதம் என்றால் என்ன?

9. நாடுரி – புணர்ச்சி விதி குறித்தெழுதுக..

9. அகம் **+** கை **-** புணர்ச்சியைச் சுட்டுக.

10. கடிதத்தின் பயன் யாது?

பகுதி – ஆ

**II.ஒருபக்க அளவில் விடை தருக: ( 5 X 5 = 25 )**

11. ( அ ) நூலிற்குத் தேவையான பத்துவகை அழகுகளை விளக்குக.

( அல்லது )

(ஆ )பாடங்கேட்டலின் வரலாற்றைத் தருக.

12 (அ) எழுத்துகளின் பொதுப் பிறப்பு குறித்து எழுதுக.

( அல்லது )

(ஆ) அகர ஈற்றுப் புணர்ச்சியைப் புலப்படுத்துக.

13 ( அ)வேற்றுநிலை மெய்மயக்கம் என்பதனைச் சான்று காட்டி எழுதுக.

( அல்லது )

(ஆ ) போலி என்பதனை விளக்குக.

14 ( அ ) வடமொழியாக்கம் - எடுத்துரைக்க.

( அல்லது )

(ஆ ) பல சில என்பன எவ்வாறு புணரும்? விளக்குக.

15 ( அ ) தேன், எகின், குயின் - புணர்ச்சி விதிகளைத் தருக.

( அல்லது )

(ஆ ) பனை முன் கொடி புணருமாற்றைச் சான்று காட்டி நிறுவுக.

குறிப்பு

பகுதி - இ **( 3 X 10 = 30 )**

**III. எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக:**

16. முப்பத்திரண்டு உத்திகளை விரித்தெழுதுக.
17. மொழி இறுதி எழுத்துகள் குறித்து விவரி
18. உயிரீற்றுப் புணரியல் செய்திகளைப் தொகுத்துரைக்க
19. எண்ணுப் பெயர் புணர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.
20. கடிதங்களின் வகைகளைச் சான்றுகளுடன் விவரி.